அமரர் கல்கியின்

ஏட்டிக்குப் போட்டி

விலை

அமரர் கல்கியின்

ஏட்டிக்குப் போட்டி

பதிப்பாசிரியர்

திருமதி **எஸ். கௌமாரீஸ்வரி,** M.A., M.L.I.S.,

சாரதா பதிப்பகம்

G-4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
☎ **044-2844 3791 / 2811 4402 / 94440 82232**
மின் அஞ்சல் : gowranoolangadi@yahoo.co.in

முதற்பதிப்பு	:	ஏப்ரல் - 2000
5ஆம் பதிப்பு	:	பிப்ரவரி - 2006
பதிப்பாசிரியர்	:	**எஸ். கௌமாரீஸ்வரி** M.A., M.L.I.S.,
© உரிமை	:	பதிப்பகத்திற்கே
விலை	:	ரூ. **35/-**
ஒளி அச்சு	:	**நம் பிராசஸ், ☏ 24331808**

அச்சிட்டோர்: கிரியேட்டிவ் ஆப்செட், சென்னை-34. ☏ 8235435

அம்மாவுக்கு...

உள்ளே உள்ளவை...

		பக்கம்
முன்னுரை	...	5
ஆசிரியர் முகவுரை	...	9
கல்கி பிறந்த தமிழ்நாடு	...	13
ஏட்டிக்குப் போட்டி	...	18
பூரி யாத்திரை	...	24
இரவல் படிப்பு	...	34
தலைகீழ் பாடம்	...	42
சட்டம் ஒரு கழுதை	...	50
வாக்கு வேட்டை	...	55
ஆரம்ப ஆசிரியர்	...	63
என் பெயர்	...	71
ஜீவரசம்	...	75
ராகு காலம்	...	87
பாரதியின் நகைச்சுவை	...	93
குழந்தைகள் மகாநாடு	...	101
இருப்பதா? இறப்பதா?	...	113
நாடகம்	...	121
பொறாமைப்படு	...	129
மதிப்புரை	...	136
பகல் தூக்கம்	...	146

முன்னுரை

(ஸ்ரீ. டி.கே. சிதம்பரநாத முதலியார்)

பதினாறு வருஷத்திற்கு முன்னால் தமிழ் நாட்டிலே பலரும், (ஆசிரியர் பெற்றோர் எல்லாருமே) இளைஞரைப் பார்த்து, ''படி, படி! ஏதாவது ஒரு புஸ்தகத்தைப் படிக்கக் கூடாதா?'' என்று சதா சொல்லிக் கொண்டும் அதட்டிக் கொண்டும் இருப்பார்கள்.

ஆனால் அப்படி அதட்டிக் கொண்டிருப்பவர்கள் தாங்கள் படிப்பார்களோ என்றால் அது மட்டும் கிடையாது. ''நீங்கள் படித்துக் கொண்டிருக்கவில்லையே'' என்று கேட்டால் ''அது வேறு காரியம்; 'இளமையிற் கல்' என்றுதானே சொல்லியிருக்கிறது!'' என்று கூறிச் சமாளிப்பார்கள்.

அந்த முதியோருக்கும் இளைஞருக்கும் நம்முடைய அனுதாபம் உரியதே.

புஸ்தகம் என்றால் அப்போதெல்லாம் பிரம்பும் கையுமாய் உபாத்தியாயர் வந்து காட்சி அளிப்பதாய் இருக்கும். வயசானவர்களுக்கும் பள்ளிக்கூடம் விட்டபாடாய் இராது பாட புஸ்தசமாகவே இருக்கும்.

வாசகர்களாகிய நாங்கள், அப்பாவிகள், என்ன செய்ய? தமிழ்ப் புஸ்தகத்தின் அருகில் அணுகுவதே இல்லை. அரை குறையாய்ப் பொருள் விளங்கும் ஆஞ்கிலக் கட்டுரைகளை வாசித்து ஏதோ கொஞ்சம் அனுபவிக்கப் பார்ப்போம்.

மேல்நாட்டாரது வாழ்க்கை எப்படி எல்லாமோ இருக்கும். அவர்களுடைய உடை ரொம்ப ரொம்ப அழகு என்று வர்ணிப்பார்கள். நம்முடைய கண்ணுக்கு அந்த அழகு ஒன்றும் புலப்படாது. அவர்கள் உண்ணும் ஆகார வகைகளைக் கேட்டாலோ, ஒரு காத தூரம் ஓடவேண்டியது தான்!

இந்த நிலையில், மேல் நாட்டார் எழுதியுள்ள இலக்கிய கட்டுரைகளையும் ஹாஸ்யக் கட்டுரைகளையும் வாசித்து அனுபவிப்பது நமக்குக் கஷ்டமான காரியம் என்று சொன்னால் குற்றம் இல்லை. அவமானமோ, இல்லவே இல்லை.

இலக்கிய அனுபவங்கள் இப்படி இருந்த போதிலும், ஆங்கிலம் கற்ற சிலர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். ''தமிழில் ஏதோ பாடல் வேண்டுமானால் எழுதலாமே

ஒழிய நல்ல மாதிரியாக வசனம் எழுத முடியாது. நயமோ, ரஸமோ, ஹாஸ்யமோ இவற்றுக்கும் தமிழ் வசனத்துக்கும் வெகுதூரம்'' என்கிற முடிவுக்கு வந்தே விட்டார்கள்.

அவர்களுக்குத் தக்க பதில் சொல்லித் தமிழ் வசனத்தில் நம்பிக்கை உண்டாக்குவது முடியாத காரியமாய்ப் போய் விட்டது. மணிக்கணக்காக, மாசக்கணக்காகவே தர்க்கம் நடக்கும்.

''தமிழ் வசனம் ஒன்றிலும் குறைந்ததில்லை. வேகத்துக் கும் வளத்துக்கும் தமிழ் வசனமே எடுத்துக் காட்டு. அதோடு ஒப்பிட வேண்டுமானால் தற்காலத்து ஆங்கிலத்தையும் ஜெர்மன் பாஷையையும் தான் ஒப்பிடலாம்'' என்ற டாக்டர் வின்ஸ்லோ தமது தமிழ் அகராதியின் முகவுரையில் எழுதி யிருப்பதைச் சொல்லிப் பார்த்தோம்; பலிக்கவில்லை.

''தமிழ் வசனம் என்றால், தலைவலிதான்!'' என்று தீர்ப்பு சொல்லிவிட்டார்கள்.

அப்படிப்பட்ட நிலைமையில்தான் (1930ஆம் வருஷத் தில்) ''ஏட்டிக்குப் போட்டி'' என்ற புஸ்தகம் கைக்கு வந்தது.

புத்தகத்தின் ஆசிரியர்: ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) என்று கண்டிருந்தது. பெயர் ஏதோ தெரிந்தது; ஊர் தெரியவில்லை. வேறு விவரம் ஒன்றுமே தெரியவில்லை. ஆசிரியரைப் பற்றித் தெரியாததால் குற்றம் ஒன்றும் இல்லை, அதைப் பற்றிக் கவலையும் இல்லை.

முதல் கட்டுரையை வாசிக்க ஆரம்பித்தேன். வாசிக்க வாசிக்க அதிசயந்தான் அதிகரித்தது. பாராவுக்கு மேல் பாரா கும்மாளம் போட்டுக்கொண்டு ஓடிற்று, ''அடடா! தமிழ் பாஷை இத்தனை விளையாட்டையும் பாவத்தையும் எங்கே தான் ஒளித்து வைத்திருந்தது!'' என்று வியக்க வேண்டியிருந் தது. டாக்டர் வின்ஸ்லோ எப்படி இந்த உண்மையைக் கண்டாரோ என்று திகைக்க வேண்டியிருந்தது. அந்த வேளையில் ஆனந்தத்துக்கு இடமில்லை; அதிசயமானது ஆனந்தத்தை முழங்கையால் இடித்துத் தள்ளிவிட்டது.

முதல் கட்டுரையை மூன்று தடவை வாசித்து அனுப வித்த பிறகுதான் அடுத்துள்ள கட்டுரைகளுக்குப் போக முடிந்தது.

கையாண்டுள்ள விஷயங்கள் எத்தனையோ ரகங்களைச் சேர்ந்தவை. சகுனம் நாள் நக்ஷத்திரம் பார்க்கிற காரியம் நம்மை என்ன கேலிக்கெல்லாமோ உள்ளாக்குவதுண்டு. அந்தச் சமயங்களில் நமக்கு எரிச்சல் வரும்! கோபம் வரும்.

வேண்டாத காரியங்களை அந்தக் கோபத்தினால் செய்து விடுவோம். பிறகு மனம் வருந்தவும் செய்வோம். ஆனால் ''ஏட்டிக்குப் போட்டி'' என்னும் முதலாவது கட்டுரை இருக்கிறதே, அதை வாசித்து விட்டால் சகுனம் நாள் நக்ஷத்திரம் பார்ப்பதைப் பற்றி எரிச்சல் கோபம் ஒன்றும் வராது; சிரிப்புத்தான் பொங்கிக் கொண்டு வரும்.

தமது கட்டுரையால் ஒரு பிரயோசனமும் இல்லை என்று சொல்கிறார் ஆசிரியர். ஆனால் கோபம் வராமல் சிரிக்கப் பண்ணி விடுவதைக் காட்டிலுமா இருக்கிறது வேறு பிரயோசனம்?

பூரி யாத்திரை செய்தார் ஆசிரியர்; ஒரே ஒரு தடவை தான். ஆனால் எத்தனை தடவை வேண்டுமானாலும் அந்த ரஸமான யாத்திரையைச் செய்யலாம் நாம். பணச்செலவு இல்லை. கோயில் 'பண்டாக்'களுக்குப் பயப்பட இல்லை. மடக்கி மடக்கிக் கட்டுரையை வாசிக்க வேண்டும். அவ்வள வேதான்.

நாம் தினந்தோறும் எத்தனையோ வகை ஆசாமிக ளோடு பழகிக் கொண்டுதான் இருக்கிறோம். அயோக்கியர் கள், யோக்கியர்கள், மிருகங்கள், சாதுக்கள் ஆகிய பலவ கைப்பட்ட மக்களோடும் பழக வேண்டியிருக்கிறது. இஷ் டப்படி நம்மை விட்டு விட்டால் அவர்கள் யாரோடும் நாம் நெருங்க மாட்டோம். ஆனால் ஆசிரியர் அறிமுகப் படுத்தியவுடன் அவர்கள் எல்லாருமே நமக்கு உவந்தவர்கள் ஆகிவிடுகிறார்கள். அவர்களுடன் சல்லாபம் செய்து உற வாட ஆசை உண்டாகி விடுகிறது. இப்படிச் செய்கிற காரியம் இலக்கிய ரஸவாதத்தைச் சேர்ந்தது.

வஸ்தாது வேணு, ஹெட்கான்ஸ்டேபிள் வீராசாமிப் பிள்ளை, ஓவர்சியர் சம்பந்தம் பிள்ளை, அவருடைய 'ஆப்த நண்பர்' உடையார், எல்லாரும் நமக்கு வேண்டியவர்கள் ஆகிவிட்டார்கள்.

தமிழ் பாஷையின் மூலமாக நமக்குப் பல வீரர்களும் சாதுக்களும் உறவினர் ஆகிவிட்டார்கள். பல தொந்தரவான விஷயங்களும் நமக்கு உவந்தவை ஆகிவிட்டன.

கல்கி ஆசிரியரது தமிழில் இப்போது நம்பிக்கை உண்டாகி விட்டது நம்மவருக்கு. எந்த விஷயத்தை ஆசிரியர் கையாண்டாலும், தமிழர்கள், (ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர் கூட) தைரியமாய் உறுதி கொண்டு படித்து அனுபவிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஒரு மாமாங்கத்துக்குள்ளே உலகத்தில் வேறு எங்குமே நிகழ்ந்திராத காரியம் நடந்துவிட்டது. தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ் பாஷை மூன்றுமாகச் சேர்ந்து நம்மை என்ன பாடெல்லாமோ படுத்துகின்றன; குலுங்கக் குலுங்கக் கூத்தாடிக் களிக்கச் செய்கின்றன.

தமிழ் நாட்டின் கலையும் பண்பாடும் ஆசிரியர் கல்கியினால் அபூர்வமான விளக்கம் பெற்றிருக்கின்றன. நடனம், சங்கீதம், நாடகம், கவிப்புலமை எல்லாவற்றிலும் சிறந்து விளங்குகிறது தமிழ்நாடு. அக்கம் பக்கத்து நாடுகளில் உள்ளவர்களும் தமிழ்ப் பண்பாட்டை அங்கீகரித்து வியக்க ஆரம்பித்து விட்டார்கள்.

எல்லாம் தமிழ் பாஷை செய்து சாதித்த காரியந்தான். தமிழ் பாஷைக்குக் கருவியாக வாய்ந்தவர் ஆசிரியர் கல்கி.

தமிழும் கல்கியும் வாழ்க!

21-1-47

ஆசிரியர் முகவுரை

ஒரு காலத்தில் நான் நல்ல எழுத்தாளனாகயிருந்தேன்! (அதாவது சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு) அந்தக் காலத்தில் என கையெழுத்து முத்து முத்தாகவும் மணி மணியாகவும் இருக்கும். கண்ணிலே ஒத்திக் கொள்ளும்படி இருக்கும். கண்ணிலே ஒத்திக் கொண்டால், கண்ணுக்காவது எழுத்துக்காவது ஒரு கெடுதலும் நேராதென்று உறுதியாகச் சொல்லலாம்.

உண்மையில், நமது தமிழ்நாட்டுத் தலைவர் ராஜாஜி அவர்கள் முதன் முதலில் என்னிடம் அபிமானம் கொண்டது என்னுடைய கையெழுத்துக்காகத் தான். புகழ்பெற்ற 1923ஆம் வருஷத்தில் நான் எழுதிய ஒரு அரசியல் துண்டுப் பிரசுரத்தை ராஜாஜி பார்த்து விட்டு, ''இவருடைய கையெழுத்து வெகு நன்றாயிருக்கிறது!'' என்று சொன்னார். (ராஜாஜி என் கையெழுத்தைப் புகழ்ந்ததினாலேயே தான் 1923ஆம் ஆண்டு புகழ் பெற்றதாயிற்று என்று சொல்லவும் வேண்டுமோ? வேண்டாம்! வேண்டாம்!) ராஜாஜியின் அந்தப் பாராட்டுதலை நான் சென்ற இருபத்து நான்கு வருஷ காலமாக மறவாமல் பாராட்டிப் போற்றி வந்திருக்கிறேன். ஏனெனில் அதற்குப் பிறகு எத்தனையோ தடவை ராஜாஜி என்னுடைய கையெழுத்தைப் பார்க்கும் படி நேர்ந்திருந்தும் ஒரு தடவையாவது '''நன்றாயிருக்கிறது!'' என்று பாராட்டியிருக்க வேண்டுமே! கிடையவே கிடையாது!

அப்படி நான் நல்ல எழுத்தாளனாயிருந்த காலத்தில் என்னுடைய எழுத்து எல்லாருக்கும் புரியும் படியாகவும் இருந்தது. தனித்தனியாகவும் கோணல் மாணல் இல்லாமலும் முத்துக் கோத்தது மாதிரி இருந்தது. அப்புறம் நான் பத்திரிகைகளுக்குக் கட்டுரையும் கதையும் எழுத ஆரம்பித்தேன். வந்தது வினை! வரவரக் கையெழுத்தின் அழகு குறைந்து வந்ததோடு மற்றவர்களுக்கு விளங்குவதும் கஷ்டமாகி வந்தது. கடைசியில்...

ராபர்ட் பிரௌனிங் என்னும் பிரசித்தி பெற்ற ஆங்கிலக் கவிஞரைப் பெற்றி ஒரு சம்பவம் கேள்விப்பட்டிருப்பீர்கள். பிறருக்குப் பொருள் விளங்காதபடி கவிதைகள் எழுதுவதில் ராபர்ட் பிரௌனிங் மிகப் பிரசித்தி வாய்ந்தவர். அவருடைய கவிதைகளை எலிஸபெத் என்னும் மற்றொரு

கவிதா மணி பெரிதும் காதலித்தாள். பரஸ்பரம் கவிதைகள் மூலமாகவே அவர்களுக்குள் காதலும் வளர்ந்து வந்தது. எலிஸபெத் நோய்ப்பட்டிருக்கிறாள் என்று அறிந்து ராபர்ட் பிரௌனிங் அந்தக் கவியரசியைப் பார்க்கச் சென்றார். அவரைக் கண்ட எலிஸபெத் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தாள். மகிழ்ச்சிக்கு முக்கிய காரணம். புதிதாக வெளியான ராபர்ட் பிரௌனிங் கவிதை ஒன்றுக்கு அவரி டமே பொருள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணந்தான்.

பொருள் விளங்காத கவிதையை அவரிடம் கொடுத்து, ''இதற்கு என்ன அர்த்தம்? கொஞ்சம் சொல்லுங்கள்!'' என்றாள் எலிஸபெத். பிரௌனிங் குதூகலம் அடைந்தார். தாம் எழுதிய கவிதைக்குத் தாமே பொருள் சொல்லக் கூடிய சந்தர்ப்பம்-அதுவும் தாம் காதலித்த கவியரசிக்குச் சொல்லக் கூடிய சந்தர்ப்பம்-இலேசில் கிடைக்கக் கூடியதா? முதல் தடவை முகமலர்ச்சியுடன் படித்தவர் இரண்டாவது முறை முகச் சிணுக்கத்துடன் படித்தார். மூன்றாந்தடவை புரு வத்தை நெறித்தக் கொண்டு படித்தார். பிறகு எலிஸபெத் தைப் பார்த்துச் சொன்னார். ''கண்மணி! இந்தக் கவிதைக்கு அர்த்தம் தெரிந்தவர்கள் ஒரு காலத்திலே இரண்டு பேர் இருந்தார்கள். அவர்கள் ராபர்ட் பிரௌனிங்கும் கடவுளும் இப்போதோ, ஒரே ஒருவருக்குத் தான் இந்தக் கவிதைக்குப் பொருள் தெரியும். அவர் கடவுள் தான்!''

இதைக் கேட்டதும் எலிஸபெத் குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். அதிலிருந்து அவளுடைய உடம்பு குணமாயிற்று. விரைவிலேயே அவர்களுடைய காதலும் பரிபூரணமாயிற்று.

நல்லது. ராபர்ட் பிரௌனிங்கின் கவிதைக்கு நேர்ந்த கதி கடைசியாக என் கையெழுத்துக்கும் நேர்ந்தது. அதாவது எனக்கும் அச்சுக்கோக்கும் கம்பாஸிடருக்கும் மட்டுமே என்னுடைய எழுத்து வெகு காலம் வரையில் புரிவதாயிருந் தது இப்போதோ நான் எழுதிய எழுத்தை என்னாலேயே வாசிக்க முடியாது. கம்பாஸிடர் ஒருவருக்கு மட்டும் தான் அது புரியும். அந்த மகான் வாழ்க!

அத்தகைய அழகான பழைய காலத்தில், அதாவது என் கையெழுத்து அவ்வளவு அழகாக இருந்த காலத்தில், ஏற்கனவே சொல்லியபடி பத்திரிகைகளுக்கு நான் எழுதத் தொடங்கினேன்! (அப்பேர்ப்பட்ட தர்மபுத்திரரையும், நளம காராஜனையுமே தலையெழுத்து விடவில்லையே? என்னை விட்டு விடுமா? ஆகவே, பத்திரிகைகளுக்கு எழுதத்

தொடங்கினேன்) சின்னஞ்சிறிய 'தமிழ்த்தேனீ' குறிப்புகள், நெடிய பெரிய 'அகஸ்தியர்' சிறுகதைகள், பொருள் பொதிந்த அழகான கட்டுரைகள், பொருள் இல்லாத உயரமான கட்டுரைகள், ஹாஸ்யரஸம் ததும்பிய வாட்ட சாட்டமான கட்டுரைகள், சோகரஸத்தினால் இளைத்து மெலிந்த கட்டுரைகள், மொழி பெயர்ப்புகள், தழுவர்கள் - இப்படியாக என் அழகான கையெழுத்தை நாசமாக்குவ தற்கு என்னென்ன வழிகள் உண்டோ; அவ்வளவையும் கையாண்டேன்! கடைசியாகத் தொடர் கதைகளும் எழுத ஆரம்பித்தேன்! அவ்வளவு தான்! என் அழகான திவ்யமான, கையெழுத்து அடியோடு சர்வ நாசத்தை அடைந்து! வந்தே மாதரம்! ஜெய் ஹிந்த்!

இந்த ''ஏட்டிக்குப் போட்டி'' என்கிற புத்தகத்தைப் பற்றி எனக்குத் தெரிந்த (ஒருவேளை எனக்கு மட்டுமே தெரிந்த ஒரு மிக நல்ல அம்சம் என்னவென்றால் நான் ஏறக்குறைய நல்ல எழுத்தாளனாக இருந்த காலத்தில், அதாவது என் கையெழுத்து சுமாராக அழகாக இருந்த நாட்களில், இந்தப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் எழுதப் பட்டன என்பது தான்!

1927-ம் ஆண்டில் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் சேரும் சமயத்தில் ''ஏட்டிக்குப் போட்டி'' என்னும் கட்டு ரையை எழுதினேன். அப்போது என் கையெழுத்து ரொம்ப வும் திவ்யமாயிருந்தது. இந்தக் காலத்துக் கையெழுத்துப் பத்திரிகைகளுக்குக் கூடக் கட்டுரை எழுதக் கூடிய தகுதியு டன் இருந்தது? பின்னர், உப்பு சத்தியாக்கிரஹ இயக்கம் நடந்த 1930ஆம் ஆண்டில் சிறைப்படும் வரையில் நான் எழுதிய கட்டுரைகள் இந்த நூலில் அடங்கியிருக்கின்றன. எனவே அவை சுமாராக ஓரளவு நன்றாகத் தான் இருக்க வேண்டும்.

மேலே சொன்ன நம்பிக்கையினாலேதான் தமிழ்ப் பண்ணை சின்ன அண்ணாமலை அவர்கள் ''ஏட்டிக்குப் போட்டியின் இரண்டாம் பதிப்பு வெளியிடுகிறேன்'' என்று சொன்னபோது, ''சரி; செய்யுங்கள்!'' என்று அனுமதி கொடுத்தேன். ''ஆனால் புத்தகத்தை முழுவதும் அச்சிட்ட பிறகு என்னிடம் கொண்டு வாருங்கள். இரண்டாம் பதிப்புக் காகத் திருத்திக் கொடுக்கும்படி தயவு செய்து என்னைக் கேட்க வேண்டாம்'' என்று நிபந்தனை விதித்தேன்.

ஏனெனில் திருத்துகிற விஷயத்தில், (அதிலும் நான் எழுதியதைத் திருத்துகிற விஷயத்தில்) எனக்கு எப்போதுமே

அடங்காத ஆசை உண்டு. சத்திய சோதனை என்னும் மகாத்மா காந்தியின் சுய சரிதத்தை 'நவசக்தி' பத்திரிகைக்காக மொழி பெயர்த்தேன். அப்போது மூன்று 'புரூப்'களில் மூன்று தடவை திருத்தினேன். புத்தகமாய்ப் போடுவதற்கு முன் ஒரு தடவை திருத்திக் கொடுத்தேன். அப்புறம் புத்தகத்தின் 'புரூப்' கேட்டு வாங்கி இன்னும் மூன்று தடவை திருத்தினேன்! ''சத்திய சோதனை''யை அச்சிட்ட அச்சுக்கூடக்காரர் சத்தியமாக இனிமேல் இந்த ஆசிரியரின் புத்தகத்தை அச்சிடுவதில்லை'' என்று சத்தியம் செய்து விட்டார்!

''பார்த்திபன் கனவு'' கதையை கல்கி அச்சுக் கூடத்தில் புத்தகமாக அச்சிடுவதற்குள்ளே ஒன்பது தடவை திருத்தினேன். அதன் பேரில் மானேஜரும் அச்சுக்கூட ஃபோர்மேனும் ''தமிழ்ப் பண்ணைப் புத்தகங்கள் ரொம்ப ரொம்ப நன்றாக வெளியாகின்றன. உங்கள் புத்தகங்களைத் தமிழ்ப் பண்ணைக்கே கொடுத்து விடலாமே!'' என்று சிபாரிசு செய்யத் தொடங்கினார்கள்.

இந்த ஞாபகமெல்லாம் இருந்தபடியால்தான், ''தயவு செய்து ''ஏட்டிக்குப் போட்டி''யைத் திருத்துவதற்கு என்னிடம் கொடுக்க வேண்டாம்; திருத்த ஆரம்பித்தால் ஒரு வேளை பழைய நல்ல எழுத்து ஒன்று கூட அதில் இல்லாமற் போய் விடலாம்'' என்றேன் ஸ்ரீ சின்ன அண்ணாமலையும் அப்படியே செய்து அச்சிட்ட பக்கங்களை மொத்தமாக என்னிடம் கொண்டுவந்து கொடுத்திருக்கிறார்.

பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், ஏன், ஒரு மாதிரி நன்றாய்த் தானிருப்பதாகத் தோன்றுகிறது!

இதற்குமேல் நேயர்களாகிய உங்களுக்கும், இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ள அழகான, அதிசயமான, மகத்தான, பிரமாதமான, அபூர்வமான (எல்லாவற்றிற்கும் மேலே) மிக மிகத் தெளிவான அச்சு எழுத்துக்கும் இடையில் இடைஞ்சலாக நிற்பதற்கும் எனக்கு இஷ்டமில்லை ''இஷ்டம் இருந்தாலும் இடம் இல்லை!'' என்று நண்பர் சின்ன அண்ணாமலை சொல்லுகிறார்.

சரியான பேச்சு, அழகான வார்த்தை.

ரா. கிருஷ்ணமூர்த்தி
25-1-1947 (கல்கி)

கல்கி பிறந்த தமிழ்நாடு

சின்ன அண்ணாமலை

ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்கள் சிறு பையனாக இருந்தபோது, அவர் பிறந்த தேசமானது அவருடைய சேவையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது என்ற விஷயமே அவருக்குத் தெரியாமலிருந்ததாம். அப்போதெல்லாம் அவர் மனதறிந்து தேசத்திற்காக ஒருவித சேவையும் செய்வதில்லையாம். ஒரு தடவை செய்ய முயன்ற சேவையும் விபரீதமாக முடிந்ததாம்.

அந்தக் காலத்தில் ஒரு நாள் தேசம் அவருடைய பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலிருந்த பாழுங் கிணற்றில் விழுந்து விட்டதாம்! முழுகுவதற்கு வேண்டிய தண்ணீர் இல்லாமல் தேசம் தத்தளித்துக் கொண்டிருந்தபோது பக்கத்திலிருந்த தேச பக்தர்கள் கல்கியைப் பார்த்து, ''அப்பா! தேசத்தைக் காப்பாற்ற ஒரு துரும்பையாவது நீ எடுத்துப் போடக் கூடாதா'' என்று சொன்னார்களாம்.

''துரும்பு என்னத்திற்கு? கல்லைத் தூக்கியே போடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு ஒரு கல்லைத் தூக்கிக் கல்கி போட்டாராம். உடனே, தேசம் அந்த நாலு விரற்கடைத் தண்ணீரில் தலைகீழாக அமிழ்ந்து பிராணனை விட்டுவிட்டதாம்!

இதன் பலனாகக் கல்கியின் தகப்பானால் ஒரு வராகன் தண்டம் கொடுக்கும்படி ஆயிற்றாம். தகப்பானிடம் மூன்றரை ரூபாய் வாங்கிக் கொண்டுபோய் புதிய இந்தியா தேசப்படம் ஒன்று வாங்கிவந்து பள்ளிக்கூடத்துச் சுவரில் மாட்டிய பிறகுதான் உபாத்தியாயர் அவரைப் பெஞ்சி மேலேயிருந்து கீழே இறக்கினாராம்.

அதற்குப் பிறகு வெகுகாலம் வரையில் தேசம் என்றாலே கல்கி வெறுப்புக் கொணடிருந்தாராம். அப்புறம் ஒரு நாள் தற்செயலாக ''தேசத்திற்கே உழைக்க ஜென்மம் எடுத்தோம்'' என்ற பாட்டை அவர் கேட்க நேர்ந்ததாம். உடனே ஜன்ம தேசத்திற்கு உழைக்க வேண்டுமென்ற ஆசை அவரைத் தீவிரமாகப் பற்றிக் கொண்டதாம்.

மேல்சட்டை, மேல்வேஷ்டி, எல்லாவற்றையும் கழற்றித் தலையைச் சுற்றி எறிந்துவிட்டு, காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதினாராம்.

''மகாத்மாஜீ! நான் தேசத்திற்கு உழைக்கத் துணிந்து விட்டேன். அவ்விடம் நான் வரட்டுமா? அல்லது தேசத்தை இங்கே அனுப்பி வைக்கிறீர்களா?'' என்று கேட்டாராம்.

மகாத்மாஜி கேட்டதற்குப் பதில் சொல்லாமல், ''கைராட்டையில் தினம் இரண்டாயிரம் கெஜம் நூல் நூற்றுவா! உன் மனது தெளிவடையும்'' என்று எழுதினாராம்.

''ரொம்ப லக்ஷ்ணம்! நான் தேசத்துக்கு உழைக்க வந்தேனா? நூல் நூற்க வந்தேனா'' என்று கல்கி தமக்குத் தாமே கேட்டுக் கொண்டு மகாத்மாஜியை விட்டு விட்டாராம்.

பின்னர் திடீரென்று தம் உடையை மாற்றினாராம். ஒரு கதர் ஜிப்பாவும், அதன் மேல் கம்பளி வெயிஸ்ட் கோட்டும் அணிந்து தலையில் ஒரு காந்திக் குல்லா தரித்துக் கொண்டாராம். உடனே அச்சமயம் காங்கிரஸ் தலைவராயிருந்த பண்டித ஜவஹர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினாராம்.

''தேச சேவைக்குத் தயார்! காங்கிரஸ் தலைமைப் பதவி வகிப்பது சிரமமாயிருந்தால் தந்தி அடிக்கவும்; உடனே புறப்பட்டு வருகிறேன்!'' என்று குறிப்பிட்டிருந்தாராம். ஜவஹர்லால்ஜியிடமிருந்து பதில் வந்ததாம்.

''தற்சமயம் இந்தியாவுக்குச் சேவை சீனப் போர்க்களத்தில் செய்ய வேண்டும். உடனே புறப்பட்டுப் போகவும்'' என்பதுதான் அந்தப் பதில்.

இதைப் பார்த்ததும் கல்கிக்குக் கோபம் கோபமாய் வந்ததாம். உடனே வெயிஸ்ட் கோட்டையும் காந்திக் குல்லாவையும் எடுத்தெறிந்து விட்டுத் தலையில் உச்சிக் குடுமி வைத்துக் கொண்டாராம். புகைக் கண்ணாடியும் வாங்கி மாட்டிக் கொண்டாராம். பிறகு நமது சொந்த மாகாணத் தலைவர் ராஜாஜிக்குக் கடிதம் எழுதினாராம்.

''தேசத்திற்காக உயிரைவிடக் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டேன். எவ்விடத்தில் ஆரம்பிக்கலாம்?'' என்று யோசனை கேட்டிருந்தாராம்.

''கள்ளுக் கடையில் ஆரம்பிக்கலாம். ஒரு குடிகாரனைக் குடியை விடும்படி செய்தால், ஒன்பது தடவை உயிரை விடுவதைவிட அதிக பலன் உண்டு'' என்று ராஜாஜி பதில் எழுதினாராம்.

''இதென்ன பிரமாதம்? ஒரு குடிகாரனைக் குடியை விடும்படி செய்து ஒன்பது தடவை தேசத்திற்கு உயிர்விடுவோம்'' என்று தீர்மானித்துக் கொண்டு கல்கி திருச்செங்கோட்டுக்கு ராஜாஜியிடம் போய்ச் சேர்ந்தாராம்.

ராஜாஜி இவரைப் பார்த்தவுடன் ''ஓ! நீங்கள் தானா தேசத்திற்காக உயிரைவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்? உம்மிடம் உயிர் இருப்பதாகவே தெரியவில்லையே? பின் எப்படி அதைவிடப் போகிறீர்?'' என்றாராம். உடனே கல்கி, ''அதுவா? ரயில் - பஸ்ஸில் - வண்டியில் வரும் போது பத்திரமாக இருக்க வேண்டுமென்பதற்காகப் பெட்டியில் வைத்திருக்கிறேன்!'' என்று சொல்லிப் பெட்டியிலிருந்து சில துண்டுப் பிரசுரங்கள், சின்னப் புத்தகங்கள் முதலியவற்றை எடுத்து வெளியில் போட்டாராம்.

''ராஜாஜி அவற்றைப் படித்து விட்டு, பேஷ்! இதை நீர் உம்முடைய உயிர் என்று சொன்னது சரிதான்'' என்று மெச்சிவிட்டு அதைப்போல நிறைய எழுதும்படி கல்கியைத் தூண்டினாராம்.

கல்கி தமிழ் எழுத ஆரம்பித்தார்!-

அடடா! தமிழ் மொழிக்கு யோகமல்லவா பிறந்து விட்டது.

கல்கியின் எழுத்துப் பைத்தியத்தை ராஜாஜி வளர்த்தது போலவே ஆசிரியர் திரு.வி. கல்யாண சுந்தர முதலியாரும் வளர்த்து வந்தார். ''தமிழ் நாட்டில் பலர் செய்வது போல என்னுடைய தமிழ் நடையைக் 'காப்பி' அடித்துக் கெட வேண்டாம்; உன் போக்கிலேயே செல்'' என்று திரு.வி.க. அவர்கள் கல்கிக்குச் செய்த போதனை தான், இந்த ஏட்டிக்குப் போட்டி புத்தகத்திற்கு விதை போட்டது போலவாம்.

இதெல்லாம் ஒரு புறம் இருக்கத் தமிழ் மக்களாகிய நாம் மிஸ்டர் வாரன் என்னும் துரை மகனாருக்கு ஒரு கோயில் கட்டிக் கும்பாபிஷேகமும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏனெனில் கல்கியைத் தமிழ் எழுத்தாளராக ஆக்கியதற்கு முக்கிய பொறுப்பாளி அவர்தான்!

1922-ஆம் ஆண்டிலே கூடலூர் சிறைச்சாலைக்குக் கல்கியை மேற்படி துரை மகனார் அனுப்பி வைக்கப் போக - அங்கே சும்மா இருப்பதற்கு முடியாமல் கல்கி தமிழ் எழுத ஆரம்பிக்க, பின்னர் தமிழும் கல்கியும் ஓர் உயிரும் ஈருடலுமாகி, இப்பொழுது 'தமிழ் என்றால் கல்கி, கல்கி என்றால் தமிழ்' என்பது போன்ற பொய்யா மொழிகளும்

உண்டாகிவிட்டன. தமிழ் வாழ்க! அதை வாழ்விக்க வழி செய்த வாரன் துரை மகனாரும் அடியோடு வாழ்க!

கல்கி எழுதியவற்றைத் தமது பத்திரிகையல் பிரசுரித்து ஆதிகாலத்தில் ஊக்கம் கொடுத்த இன்னொருவர் ஸ்ரீ எஸ்.எஸ். வாசன் அவர்கள். அவருக்கும் நமது நன்றியைச் செலுத்துகிறோம்.

''ஏட்டிக்குப் போட்டி'' முதற்பதிப்பு 1930-இல் வெளியாயிற்று. பிறகு 1946 வரையில் இரண்டாம் பதிப்பு வெளிவராமலிருந்தாலும் மேற்படி புத்தகத்தை மட்டும் தமிழ் மக்கள் மறக்கவில்லை. பத்திரமாகவும் ஜாக்கிரதையாகவும் பலர் முதற் பதிப்பை பதினாறு ஆண்டுகளாகக் காப்பாற்றி வந்திருக்கும் விஷயம் தெரிய வந்தது.

ஏட்டிக்குப் போட்டி இரண்டாம் பதிப்பு வெளியிட வேண்டுமென்று எண்ணிப் புத்தகத்தின் உரிமையாளர் கல்கி-ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் விஷயத்தைத் தெரிவித்த போது என்னிடம் மிகவும் அன்புக்காட்டி ஆதரவு தந்து வரும் அவர் உடனே அனுமதியளித்தார்.

''முதற்பதிப்புப் புத்தகம் இருந்தால் ஒன்று கொடுங்கள்; அச்சுக்குக் கொடுக்கலாம்'' என்று அவரிடம் கேட்ட போது ''அது பிரசுரமாகிப் பதினாறு ஆண்டுகளாகி விட்டன. என்னிடம் எங்கே இருக்கப் போகிறது? வேறு யாரிடமாவது இருந்தால் விசாரித்து வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றார்.

நான் சோர்ந்து போய் விட்டேன்! ''அடடா! இந்தக் கல்கிக்கு நாம் இந்தப் புஸ்தகத்தைப் போடுவதில் இஷ்டமில்லை போலிருக்கிறது. அவருடைய புஸ்தகம் அவரிடமில்லா விட்டால் வேறு யார் அவ்வளவு ஜாக்கிரதையாக 16- வருஷமும் பாதுகாத்து வைத்திருக்கப் போகிறார்கள். இப்படி நம்மை மோசம் செய்து சோதனையில் மாட்டி விட்டாரே!'' என்று நொந்து கொண்டேன். ஆயினும் யாராவது சில நண்பர்களுக்கு எழுதிக் கேட்கலாம் என்று எண்ணி எழுதினேன்.

என்ன விந்தை! எத்தனை பேருக்கு எழுதினேனோ அத்தனை 'ஏட்டிக்குப் போட்டி' முதற் பதிப்பு புத்தகங்கள் வந்து குவிந்துவிட்டன.

மேலும் நான் 'ஏட்டிக்குப் போட்டி' புத்தகம் இரண்டாம் பதிப்பு வெளியிடப் போவதாகப் பல நண்பர்களுக்குத் தெரிந்து அவர்கள் எல்லாரும் என்னைப் பாராட்டிப் பல

கடிதங்கள் எழுதிய ஆளுக்கொரு புத்தகம் அனுப்பி வைத்தார்கள்.

இம்மாதிரி தமிழ் மக்கள் பதினாறு வருஷகாலம் பத்திரப் படுத்தி வைத்துக் கொண்டிருக்கும் அரிய பொக்கிஷம் ஏட்டிக்குப் போட்டி என்ற புத்தகம்.

அந்த அரிய பொககிஷத்தை இரண்டாம் பதிப்பாக வெளியிடத் தமிழ்ப பண்ணைக்கு அனுமதியளித்ததற்காகக் கல்கி-ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு என் இதய பூர்வமான வந்தனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்பன் பிறந்த தமிழ்நாடு என்றும், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்றும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு என்றும், பாரதியார் போன்ற பெரும் புலவர் தோன்றிப் பல்கலை வளர்த்த தமிழ்நாடு என்றும், நாமக்கல் கவிஞர் உதித்த நற்றமிழ் தமிழ் நாடு என்றும், தேன் தமிழ் அளிக்கும் தேசிக விநாயகம் தோன்றிய தமிழ்நாடு என்றும், தமிழ் நாட்டின் பெருமைகளைப் பலர் பலவிதமாகச் சொல்லிப் பாராட்டி வருகிறார்கள்.

இனி, ''கல்கி பிறந்த தமிழ் நாடு' என்று மட்டும் சொன்னாலே போதும். ஏனெனில் கம்பரும் - வள்ளுவரும் - இளங்கோவும் - பாரதியும் - நாமக்கல் கவிஞரும் தேசிக விநாயகமும் கல்கியின் உருவத்திலே தமிழ் நாட்டில் உலாவுகிறார்கள்.

''கல்கி பிறந்த தமிழ் நாடு வாழ்க'' என்று வாழ்த்துவோமாக!

இந்த இரண்டாம் பதிப்பிற்கு முகவுரை அளித்திருக்கும் ரஸிகமணி டி.கே.சி. அவர்கள் கலை என்ற கடலுக்குக் கரை கண்ட பெரியார்; நிலையான அறிவிற்கு நிகரற்ற துணைவர்; கம்பனென்ற பெரும் பெயரை நினைத்தாலே கண்முன்னே காட்சி தரும் அறிஞர். அவருக்கு நமது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்ப்பண்ணை.

31-1-47

ஏட்டிக்குப் போட்டி

விதவையல்லாதார் சகாயத்துக்கென்று ஏன் ஒரு சங்கமோ சபையோ சமாஜமோ ஏற்படுத்தக்கூடாது? இந்த எண்ணம் திடீரென்று நேற்று என் உள்ளத்தில் உதயமாயிற்று. ஒரு பத்திரிகையில் விதவைகளின் நிலைக்கு இரங்கி ஒரு பரோபகாரி எழுதியிருந்த கடிதத்தைப் படித்துக் கொண்டே வருகையில், இந்த எண்ணம் பீறிக்கொண்டு எழுந்தது. விதவைகளின் பரிதாப நிலையும், அவர்களுக்குள்ள கஷ்டங்களும் எனக்குத் தெரியாமலில்லை; அவற்றை நினைத்து நினைத்துக் குடம்குடமாகக் கண்ணீர் வடித்திருக்கிறேன். ஆனால் முன்னமே சொன்னதுபோல், நேற்று எக்காரணத்தினாலோ திடீரென்று விதவையல்லாதவர்களின் மீது எனக்கு இரக்கம் பிறந்தது.

கைம்பெண்கள் என்றால் ஏதோ கிள்ளுக் கீரைபோல் சிலர் பேசுகிறார்கள். ஆயினும் அவர்களுடைய அபாரமான வல்லமையைப் பற்றி யாரேனும் சிந்தித்ததுண்டா. ஆக்கவும் அழிக்கவும் வல்லவர்கள் அவர்கள்தான் என்று கூறினால், அது நூற்றுக்கு நூறு பங்கும் உண்மையேயல்லாது வேறில்லை.

உங்கள் வீட்டில் ஒரு கல்யாணம் நடக்கிறது, நிச்சய தாம்பூலம் பெறுவதற்கு நீங்கள் கும்பலாகப் புறப்படுகிறீர்கள், அந்த ஊரிலே உங்களுக்கு ஆகாத ஏழைக் கைம்பெண் ஒருத்தி இருந்தால், இக்கல்யாணத்தை நிறுத்தி விடலாம். அந்த அம்மாள் இதற்காகப் பெரிய சூழ்ச்சி எதுவும் செய்ய வேண்டியதில்லை; நிச்சயதாம்பூலத்துக்கு நீங்கள் புறப்படும் சமயம் பார்த்து அவள் எதிரில் வந்தால் போதும்! நீங்கள் பட்ட சிரமமெல்லாம் வீண்தான். கல்யாணம் நின்று போய் விடும். இப்போது சொல்லுங்கள் கைம்பெண் அல்லாதாரின் கதிமோட்சத்திற்கு வேலை செய்ய ஒரு சங்கமோ, சமாஜமோ அவசியமா, இல்லையா?

பிராமணர்களுடன் போர்தொடுக்கும் பிராமணரல்லாத நண்பருக்கு ஒரு வார்த்தை; ஒரு பார்ப்பனருடன் சண்டை தொடங்குவதற்கு முன்னால், நீர் மூன்று முறை யோசித்தல் வேண்டும். உமது குடும்பத்திலே எவ்வித சுபகாரியமும் நடக்கவொட்டாமல் தடுத்துவிடப் பிராமணர் ஒருவரால் முடியுமென்பதைக் கவனித்தீரா? இதற்காக அவர்தம் கம்புக

ளுடன் ஆள் சேர்த்துக் கொண்டு வர வேண்டிய அவசியமில்லை. நீர் நல்லவேளை பார்த்துக் கிளம்பும் சமயம் மட்டும் அவருககுத் தெரிந்தால் போதும், உமது ஆசை நிராசைதான்!

ஓ! வாணியச் செட்டியாரே? நீர் பார்ப்பனரைப் பார்த்துப் பொறாமை கொள்ள வேண்டாம். அவருக்குள்ள சக்தி உமக்கும் இல்லாமற் போகவில்லை. ஆனால் எண்ணெய்க்குடம் ஒன்று மட்டும் நீர் தலையில் தூக்கிக் கொள்ள வேண்டும். உமது அடுத்த வீட்டுக்காரர் உமக்கு ஆகாதவரல்லவா? அவர் இவ்வருஷம் எள்ளு வியாபாரத்திற்காக முதன்முதல் இன்று நல்ல நாள் பார்த்துக் கொண்டு கிளம்புகிறார். உமது வீட்டுத் திண்ணையின் சாளரத்தின் வழியாகப் பாரும். ஆ! அவர் சட்டமாக உடை தரித்துக் கொண்டு, காலில் செருப்பும், கையில் குடையுமாக இதோ கிளம்பி விட்டார். எண்ணெய்க் குடத்தைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு நடவும். அவருடைய திருமுகமண்டலம் ஏன் இவ்வாறு சிறுத்துப் போகிறது? அதோ அவர் திரும்பி உள்ளே போய்விட்டார். இவ்வருஷம் வியாபாரத்தில் நஷ்டந்தான் என்பதில் அவருக்கு இனிச் சந்தேகமில்லை.

வாயில்லாப் பிராணிகளாம்! மனிதர்களின் வாழ்க்கையை அமைப்பதில் வாயில்லாப் பிராணிகளுக்கு எவ்வளவு சக்தி உண்டு, தெரியுமா? கருட தரிசனத்தின் மகிமையைப் பற்றி நான் எழுதத் தொடங்கிவிட்டால் அப்புறம் எங்கே போய் நிறுத்துவதென்பதே எனக்குத் தெரியாமல் போய் விடும். ஆனால் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். எங்கள் ஊரிலே கருட தரிசனம் ஆகாத கல்யாணம் ஒன்றுகூட நடந்ததில்லை. ஆனால், சுமங்கலிகளின் எண்ணிக்கையைவிடக் கைம்பெண்களின் தொகைதான் எங்களூரில் அதிகம்? அதிலும் யாராவது வெளி ஊருக்குப் போவதற்கென்று கிளம்பி வாசலில் வந்து நின்றுவிட்டால், சுமங்கலி ஒருத்திகூடக் கிடையாதோ என்று தோன்றும். சுமார் அரை மணி நேரம் காத்திருந்துவிட்டு அமங்கலி யாரும் வராத நேரத்தில் வேகமாக ஓடி வீதியைக் கடக்க வேண்டும்.

உலகிலேயே செவிக்கினிய குரல் எந்தப் பிராணியினுடையது என்று என்னைக் கேட்டால் கழுதையினுடைய குரல்தான் என்று சொல்வேன். நீங்கள் நகைக்கலாம்! ஆனால், கழுதையின் கத்தலைப்போல் சிறந்த சகுனம் வேறில்லை யென்பது உங்களுக்குத் தெரியுமா? வாழ்

நாளில் காரியசித்தி பெறுதற்குக் காரணமாயிருக்கும் கழுதையின் குரல் இனியதினும் இன்ப சங்கீதமாய் ஏன் இருக்காது? கர்த்தபசுரத்தின் தனிப்பெருஞ் சிறப்பு இதுவே யாகும்; வாழ்க்கையில் அடிக்கடி தோல்வியடைந்து கஷ்டப்படுவோர் நான் சொல்வதைக் கேளுங்கள். கழுதைகள் நிறைய வளர்க்கும் வண்ணார் வீட்டுக்குப் பக்கத்தில் சென்று குடியிருங்கள்; நீங்கள் காரியசித்தி பெறுவது திண்ணம்.

குதிரைப் பந்தயக் கடைகளில் தினந்தோறும் பணம் தோற்றுவிட்டு, ''மூன்றாம் பேஸ்'' வைத்த முகத்துடன் வீடு திரும்பும் நண்பர்களுக்கு ஒரு யோசனை கூறுகிறேன். இக்காலத்தில் சில பெரிய மனிதர்கள் புனுகு பூனை, முயல் குட்டி, நாய்க் குட்டி முதலிய பிராணிகளைப் பிடித்துச் செல்லமாய் வளர்க்கிறார்கள். இவர்கள் விஷயம் தெரியாதவர்கள். நீர் எங்கேனும் சென்று, எப்பாடாவது பட்டு, ஒரு நரியை பிடித்துக் கொண்டு வந்து, கூண்டில் அடைத்து வளர்த்து வாரும். தினம் காலையில் எழுந்ததும் அதன் முகத்தில் விழித்துவிட்டு வெளியே கிளம்பும். அன்று நீர் பந்தயத்தில் ஜெயிக்காவிட்டால் என்னைக் கேளும் - இல்லை. நரியைக் கேளும். ஆனால், ஒன்று ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும். நீர் நரி முகத்தில் விழித்தெழுந்தாலும், புறப்படும்போது பூனை குறுக்கே போய்விட்டால், உமது தோல்விக்குப் பொறுப்பாளி நானுமல்ல, நரியுமல்ல. ஆகையால் வீட்டிலே பூனைக் குட்டிகள் ஏதேனும் இருந்தால், முதலில் அடித்துத் துரத்திவிடும்.

இவ்வளவு தூரம் எழுதியான பிறகு என் சொந்த அனுபவத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிடாமல் விட மனம் வருமா? நான் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த போது என் சிற்றன்னையின் வீட்டில் சில நாள் இருக்க நேர்ந்தது. அந்த அன்னையின் புதல்வன் மணி என்பவன் இரண்டாவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்தான். ஒரே பையனாதலால் அன்னைக்குப் பிள்ளையிடம் அபார பிரேமை. இத்துடன் சகுனம் பார்ப்பதில் அந்த அம்மாளுக்கு விசேஷ பிரேமையுண்டு. தினசரி பையன் பள்ளிக்கூடம் போகும் போதுகூடச் சகுனம் பார்த்துதான் அனுப்பி வைப்பாள். வெறும் நாளிலே இப்படியென்றால் பரிட்சையும் சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டுமா? முதல் நாள் பையனுக்கு இங்கிலீஷ் பரிட்சை. எனக்கு விடுமுறை ஆதலால் வீட்டிலேயே இருந்தேன். சிற்றன்னை அன்று காலையில் அவசர அவசரமாக வீட்டுக்காரியங்களை முடித்துப் பையனுக்குத் தலை வாரிப் பின்னிக் குளிப்பாட்டி,

சாதம் போட்டு உடை உடுத்து விட்டாள். இதற்குள் மணி பத்து ஆகிவிட்டது. பையனை உள்ளே இருக்கச் செய்து, வாசலில் வந்து பார்த்துவிட்டு, ''வா வா! யாரும் வரவில்லை? ஓடிவா!'' என்றாள் தாயார். ஆனால் பையனுக்குக் கொஞ்சம் சுறுசுறுப்பு அதிகம். அவன் வாசற் படிக்கு வருவதற்குள் ''உள்ளே போ, கொஞ்சம் தண்ணீர் சாப்பிடு!'' என்று தாயார் கூறினாள். நான் வாசலில் போய்ப் பார்த்த போது, விதவை ஒருத்தி வந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள். அடுத்த முறை பையன் கிளம்பும்போது ஒற்றைப் பிராமணர் ஒருவர் வந்தார். என் சிற்றன்னை பிராம்மணாபிமானம் நிரம்ப உள்ளவள்தான். ஆனால், அந்தப் பிராமணருக்கு அன்றைய தினம் அவள் கொடுத்த சாபங்களில் ஏதாவது பலித்தால்கூடப் போதும், அந்த மனிதருடைய உயிரை எந்த துரதிர்ஷ்டம் பிடித்த கம்பெனியாவது இன்ஷியூர் செய்திருந்தால், அது வாயில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ள வேண்டியது தான்.

இதற்குள் பத்து அடித்து இருபது நிமிஷம் ஆகிவிட்டது. கடைசியாக, ''அப்பா, ஓடிவா! தண்ணீர்க்குடத்துடன் சுமங்கலி வருகிறாள் திவ்யமான சகுனம்'' என்று தாயார் கூவினாள். பையன் அவசரமாகப் புறப்பட்டுச் சென்றான். சந்து திரும்பும் வரையில் மேற்படி சுமங்கலியைத் தவிர வேறு யாரும் எதிர்ப்படவில்லை. ''நல்ல பேஷான சகுனம். குழந்தை நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்குவான், பார்!'' என்றாள் குதூகலத்துடன். எனக்கு மட்டும் கொஞ்சம் சந்தேகமாகவே இருந்தது. ஆனால், சகுனத்தின் பலன் இப்படியாகுமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. கால் மணி நேரம் ஆனதும், பையன் போனது போலத் திரும்பி வந்துவிட்டான். எங்களிருவருக்கும் தூக்கிவாரிப் போட்டது. ''என்ன? என்ன?'' என்று இருவரும் ஏக காலத்தில் கேட்டோம். ''நான் போவதற்குள் மணி அடித்து 15 நிமிடம் ஆகிவிட்டது. ஆகையால் பரிட்சை எழுத விடமாட்டேன் என்று வாத்தியார் சொல்லிவிட்டார்?'' என்றான் பையன். சிற்றன்னை கோபித்துக் கொள்வாள் என்று தெரிந்ததும் என்னால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவேயில்லை.

உண்மைச் சம்பவத்தை உரைத்தான பின்னர், ஒரு பழங்கதையையும் குறிப்பிட வேண்டாமா? வைகறைப் போதில் இரட்டைக் காக்கையைக் கண்டால் நல்ல சகுனமென்று ஓர் இராஜாவுக்கு யாரோ சொன்னார்களாம். அவ்வரசன் தன் சேவகன் ஒருவனைக் காலையில் இரட்டைக் காக்கை உட்கார்ந்திருக்குமிடம் பார்த்து வந்து

சொல்லும்படி கட்டளையிட்டான். அவ்வாறே அச்சேவகன் ஒருநாள் காலையில் ஜோடிக் காக்கைகளை ஓரிடத்தில் கண்டு ஓட்டமாக ஓடிவந்து அரசனிடம் தெரிவித்தான். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இராஜா போவதற்குள் காக்கைப் பறந்து போய்விட்டது. அரசன் கோபங்கொணடு சேவகனை நையப் புடைத்தான். அடிப்பட்ட சேவகன் இராஜனைப் பார்த்து, ''அரசே! வைகறையில் இரட்டைக் காக்கை பார்த்ததற்கு எனக்குக் கைமேல் பலன் கிடைத்து விட்டது'' என்றான். இந்தக் காலத்திலே என்றால், அந்தச் சேவகனை அதிகப் பிரசங்கித்தனத்திற்கென்று வேலையை விட்டுத் தள்ளியிருப்பார்கள். ஆனால் அந்தக் காலம் வேறு; அரசன் வெட்கிப்போய்ச் சேவகனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

இப்படியெல்லாம் எழுதுவதால், சகுனம் பார்க்கக் கூடாதென்று நான் சொல்லுவதாக நினைக்கிறீர்களே? அது தானில்லை. கொஞ்சம் பொறுங்கள். ''அவசரப்படேல்!'' என்று ஔவையாரோ வேறு யாரோ சொல்லியிருப்பதாக ஞாபகம். என்னுடைய கருத்து என்னவென்றால், சகுனம் மட்டும் பார்த்தால் போதாது? நாள் நட்சத்திரம், திதி, மாதம், பட்சம், கிழமை, ராகுகாலம், வாரசூலை, தியாஜ்யம் இத்தியாதிகளும் பார்க்கவேண்டும். நமது முன்னோர்கள் இருக்கும் திக்கு நோக்கி (எந்தத் திக்கு என்பது தான் தெரியவில்லை) இரண்டு கரங்களையும் கூப்பித் தண்டனிடுகிறேன். ஆகா அவர்கள் நமக்குச் செய்திருக்கும் நன்மை என்ன? வருஷம் 365 நாளில், ஏறக்குறைய 300 நாள் நமக்கு விடுமுறையளித்திருக்கிறார்கள். இக்காலத்தில் வாரத்திற்கு ஒருநாள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறது. ஆனால் நமது முன்னோர்கள் செய்து வைத்த ஏற்பாடு எவ்வளவு அழகானது பாருங்கள்! மாதங்களிலே மார்கழியும் புரட்டாசியும் கெட்டவை. ஒரு மாதத்தை எடுத்துக் கொண்டால் அமாவாசை, பாட்டி முகம், நவமி, திதி இவை உதவா. பின்னர் பரணி, கார்த்திகை நட்சத்திரங்கள்; வாரத்திலோ வெள்ளிக்கிழமை கலக நாள்; சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகா - செவ்வாயோ வெறுவாயோ என்று கேட்டதில்லையா? பின்னர் மரணயோகமும், கரிநாளும், மாதம், திதி, நட்சத்திரம், கிழமை யோகம் எல்லாம் கூடிய நாள். ஒன்றிருந்தால் அதில் ராகுகாலம், தியாஜ்யம் பிரோஷம், இந்த வேளைகள் கூடா. இவ்வளவு விபத்துக்களையும் கடந்து ஒருவன் ஏதேனும் காரியம் செய்யப்போனால், யாரேனும் ஒரு சிறு தும்மல் தும்மிவிட்

டால் போதும்! அன்று விடுமுறைதான். ஆகா! இவ்வளவும் பூரணமாக அமுலிலிருந்த அந்தப் பழைய காலம்! நினைத்தால் நாவில் ஜலம் சொட்டுகிறது. இப்போது வரவரக் கலியுகமல்லவா முற்றி வருகின்றது!

ஒரு சந்தேகம். சுமார் 160 வருஷங்களுக்கு முன்பு கிளைவ் என்னும் துஷ்டப்பையன், பிழைப்புக்கு வழிதேடி, இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டானே அவன் நாளும், நட்சத்திரமும், மரணயோகமும், ராகு காலமும் பார்த்துக் கொண்டா புறப்பட்டான்? அவன் இந்தப் பாரதநாட்டிலே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைப் பலமாக நிலைநாட்டி விட வில்லையா? அவன் நாட்டிய அந்த விருட்சத்தைப் பெயர்த்து விடுவதற்காக மிதவாதிகளும், அமிதவாதிகளும், உத்தியோகவாதிகளும், வகுப்புவாதிகளும், காங்கிரஸ் வீரர்களும் கிலாபத் தீரர்களும், வெடிகுண்டு சூரர்களும், இன்னும் யார் யாரோ எப்படியோ முயன்றும் அதை அசைக்கக்கூட முடியவில்லையே அது ஏன்? இந்நாட்டுச் சுதேச மன்னர்கள் தினம் பொழுதுவிடிந்தால் பஞ்சாங்கம் பார்ப்பதும், காக்கை வலமாகப் போயிற்றா, இடமாகப் போயிற்றா என்று கவனிப்பதுமாயிருந்தார்களே? அவர்கள் ஏன் தங்கள் நாடு நகரங்களையெல்லாம் அன்னியரிடம் ஒப்படைத்துச் சந்தியில் நிற்கிறார்கள்? அவர்களுடைய தர்பார்களில் சாஸ்திரிகளும் ஜோதிடர்களும் பரம்பரை மான்யம் பெற்றுக் கொண்டு, நூற்றுக்கணக்காக இருக்கவில்லையா?

வாசகர்கள் இந்தக் கட்டுரையை மிகவும் பாராட்டுவதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு. அவர்களுக்கு எவ்வித நீதியையும் இந்தக் கட்டுரை புகட்டவில்லை என்பதே அந்தக் காரணமாகும். இதற்காக நீங்கள் எனக்குச் செலுத்தும் நன்றியை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன். அதற்குச் சகுனத்தடை ஒன்றுமில்லை.

ஸ்ரீ யாத்திரை

டில்லியில் 1923-ஆம் ஆண்டில் நடந்த விசேஷ காங்கிரஸைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்த காங்கிரஸில் பெரிய பெரிய தலைவர்களெல்லாம் கூடி ஒத்துழையாமை இயக்கத்தை ஏகமனதாகக் கழுத்தைத் திருகிக் கொன்றார்கள். அது ''கிரீச்'' என்று சத்தம் போடவும் இடம் கொடுக்கவில்லை. ஒரே அமுக்கு, ஒரே திருகு - அவ்வளவுதான்; உயிர்போய்விட்டது.

விசேஷ காங்கிரஸில் இந்தப் பெரிய விசேஷத்தைப் பார்த்த பின்னர் கயாவுக்குப் போகவேண்டுமென்று எனக்கு எண்ணம் தோன்றியது. என் மூதாதைகளுக்கும் ஒத்துழையாமை இயக்கத்துக்கும் சேர்ந்தாற்போல் சிராத்தம் செய்துவிடலாமே என்ற யோசனை! நான் கேள்விப்பட்டிருந்த வேறொரு விஷயம் இந்த யோசனையை உறுதிப்படுத்திற்று. அதாவது கயாவில் சிராத்தம் செய்துவிட்டால் பிதிர்க்கள் ஒரேயடியாகக் கரைசேர்ந்து விடுகிறார்களென்றும், அப்புறம் சிராத்தமே செய்ய வேண்டியதில்லை என்றும், யாரோ எனக்குச் சொல்லியிருந்தார்கள். எனவே கயா யாத்திரை நல்ல லாபகரமான வியாபாரமாகிறதல்லவா?

ஆகவே டில்லியிலிருந்து கிளம்பி, வழியில் ஆக்ரா, பிரயாகை, காசி முதலிய க்ஷேத்திரங்களில் இறங்கிப் புண்ணியத்தை மூட்டை கட்டிக்கொண்டு கயா வந்து சேர்ந்தோம். கயாவில் காங்கிரஸ் காரியதரிசிக்கு ஓர் அறிமுகக் கடிதம் கொண்டு வந்திருந்தோம். அவர் ஒரு நல்ல யுக்தி சொன்னார். அதாவது கயா சிராத்தத்தைக் 'கண்டிராக்ட்' விட்டு விடுங்கள் என்றார். முதலில் எனக்குப் பயமாயிருந்தது. 'கண்டிராக்ட்' வேலைகளைப் பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். உதாரணமாக சாலைக் கண்டிராக்டை எடுத்துக் கொள்ளுங்கள். ஆயிரம் ரூபாய்க்கு ஒரு சாலையை நான் ''கண்டிராக்ட்'' எடுக்கிறேன். இப்போதைக்கு எனக்கு அத்தகைய அதிர்ஷ்டம் கிடைக்க மார்க்கமில்லை என்பது உண்மையே. இருந்தாலும், கூடிய சீக்கிரத்தில் என்னுடைய மாமாவுக்கு அத்தான் பிள்ளையின் மைத்துனர், ஒருவர் ஜில்லா போர்டு அங்கத்தினராகலாமென எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவருக்கு வோட் சேகரித்துக் கொடுக்கும் உத்தேசமும் எனக்குண்டு. பின்னர்,

ஆயிரம் ரூபாய் சாலைக் 'கண்டிராக்ட்' ஒன்று நான் எதிர்பார்ப்பது அதிக ஆசையாகுமா?

நல்லது; ஆயிரம் ரூபாய்க்கு ஒரு சாலையை நான் 'கண்டிராக்ட்' எடுக்கிறேனென்று வைத்துக் கொள்ளுங்கள். இதில் என்ஜினியர், ஓவர்சியர், சாலை மேஸ்திரி முதலியோருக்கு வீதாசாரப்படி கமிஷன் பகிர்ந்து கொடுத்தால், பாக்கி 500 ரூபாய்தான் மிஞ்சும். எனவே கண்டிராக்டில் எனக்கு லாபம் வேண்டுமென்றால் சாலை வாயில் மண்தானல்லவா? - ஐயோ! - தப்பு! சாலைக்கு வேண்டியது மண்தானே? எனக்கு நல்ல லாபம் வேண்டுமென்றால், சாலைக்கு ஒரு பிடி மண் கூடக் கிடைக்காதல்லவா?

காங்கிரஸ் காரியதரிசி 'கண்டிராக்ட்' என்று சொன்னதும் இந்த விஷயங்களெல்லாம் எனக்கு ஞாபகம் வந்தன. நம்முடைய பணப்பை என்ன, சர்க்கார் கஜானாவா அல்லது தாலுக்கா போர்டு, ஜில்லா போர்டுகளைப் போல் ஊரார் பணம் நம்மிடம் கொட்டிக் கிடக்கிறதா என்றெல்லாம் எண்ணிப் பயந்தே போனேன். ஆனால், காங்கிரஸ் காரியதரிசி வெகுவாகச் சொல்லி என்னுடைய பயத்தைப் போக்கினார். சாதாரண முறையில் சிராத்தம் செய்தால் அதற்கு ஒரு ரூபாய், இதற்கு இரண்டு ரூபாய், என்று ஏராளமாகப் பணம் பறித்து விடுவார்களென்றும், அத்துடன் எழுந்திரு, உட்காரு, மேற்கே பார், கிழக்கே திரும்பு என்று பிராணனை வாங்கி விடுவார்களென்றும், 'கண்டிராக்ட்' என்றால் சுலபமாய் முடித்துவிடலாமென்றும் சொன்னார். அவருடைய யோசனைக்குக் கடைசியில் இணங்கினோம். கண்டிராக்டை ஏலத்தில் ''கயாவளி'' ஒருவர் எங்கள் மூதாதைகளின் சஞ்சித கர்ம மூட்டைகளையெல்லாம் தாம் ஏற்றுக் கொண்டு, அவர்களைக் கரையேற்றி விடும் மகத்தான பொறுப்பை ஏழரை ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்து எடுத்துக் கொண்டார்.

இதன் பொருட்டு அந்தக் ''கயாவாளிக்கு'' நான் என்றென்றைக்கும் நன்றியுடையவனாயிருப்பது நியாயமேயல்லவா? உண்மைதான். ஆனால் அவர் நான் சற்றும் எதிர்பாராத வேளையில் என் முதுகில் அப்படி ஓங்கி அறைந்திருக்க வேண்டியதில்லையென்று இன்றளவும் உறுதியான அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன். அதைக் குறித்து எந்த மகா சபையிலும் எவ்வளவு மகா மகோபாத்தியாயர்கள் வரினும், வாதமிடச் சித்தமாயுள்ளேன். இதிலே இன்னும் பெரிய வயிற்றெரிச்சல் என்னவென்றால், 'கண்டிராக்ட்' பேசிய ஏழரை ரூபாயைத் தவிர இன்னும் ஒரு

ரூபாய் அதிகம் கொடுத்து அறையை வாங்கிக் கொண்டதுதான்! அந்த ஏழரை ரூபாயையும் முதலிலேயே கொடுத்து விட்டோம். கோயிலில் அட்சய வட விருட்சத்தின் அடியில் சிராத்தம் எல்லாம் முடிந்து, இனி எழுந்து போகலாம் என்று நாங்கள் ஆசைப்படத் தொடங்கிய சமயத்தில், ''கயாவாளி'' ஆங்கிலம், வங்காளி, ஹிந்துஸ்தானி முதலிய பல பாஷைகளைக் கலந்து ஏதேதோ பேசினார். இந்தக் கதம்பப் பிரசங்கத்திலிருந்து, இன்னும் கொஞ்சம் 'ஸம்திங்' நீட்டினால் தான் சிராத்தம் பூரணமாகுமென்பது அவர் கருத்தென்று அறிந்து கொண்டோம். அவர் எங்கள் மூதாதைகளுக்குச் செய்யப் போகிற பெரிய சகாயத்தை எண்ணி, தலைக்கு இன்னும் ஒரு ரூபாய் கொடுத்தோம். பிறகுதான் அவர் மேற் சொன்னவாறு முதுகில் அறைந்தார். அச்சமயம் பக்கத்தில் இருந்தவர்கள் சிராத்தத்தில் பூரண திருப்தி அடைந்ததற்கு அது அறிகுறி என்று விளக்கம் கூறியிராவிடில், - ஏன் என்ன செய்திருப்போமென்றா? ஒரு நாளுமில்லை? நாங்கள் அஹிம்சா வாதிகள் என்பது நினைவிருக்கட்டும். திரும்பிக் கூடப் பாராமல் ஓடியே வந்திருப்போம்.

இவ்வாறு கயாவில் ஏழேழு தலைமுறைகளைச் சேர்ந்த பிதுர்க்களைக் கரையேற்றிவிட்டுக் கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்தோம். கல்கத்தாவைப் பற்றி நாங்கள் ஏற்கெனவே பத்திரிகைகளில் படித்ததிலிருந்து, அந்நகரில் எங்கே பார்த்தாலும் வெடிகுண்டு மயமாயிருக்குமென்று எதிர் பார்த்தோம். ஆனால், என்ன அதிசயம்: மருந்துக்குக்கூட ஒரு வெடி குண்டை நாங்கள் பார்க்கவில்லை. அதனால் எங்களுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைச் சொல்ல முடியாது. கல்கத்தாவுக்குப் போய் வெடிகுண்டு பார்க்க முடியவில்லையென்றால் - இது உயிருள்ளவும் மறக்கக் கூடிய சங்கதியா?

கல்கத்தாவிலிருந்து பூரிக்கு புறப்பட்டோம். சிற்றுண்டிக் கடைகளிலே கோதுமை மாவும், புழுதியும் சமபாகமாகக் கலந்து, நெய் என்று அவதூறாகக் கூறப்படும் திராவகத்தில் வறுத்து எடுத்த ஒரு பலகாரத்துக்குப் பெயர் பூரி; -- பிராமணோத்தமர்களுடைய குக்ஷியில் தங்கள் அன்னம் சிறிதுசேர்வதால், சுவர்க்கத்தில் மைல் கணக்காக வளைத்துக் கட்டிவிடலாமென நம்பும் மனிதர்கள், அப்படி அந்தப் பிராமணர்கள் சாப்பிடுவதற்குச் சிரம பரிகாரமாகக் கொடுக்கும் தட்சணைக்குப் பெயர் பூரி - மத்திய இந்தியாவில் கீழ்க் கடற்கரையோரத்திலுள்ள ஒரு புண்ணிய க்ஷேத்திரத்தின் பெயர் பூரி - இந்த மூன்றும் ஒரே பெயர் ஏற்பட்டிருப்பதின் இரகசியம் என்னவென்று உங்களில்

யாருக்காவது தெரியுமா? தெரியாவிடில் அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம், ஏனெனில் அது எனக்கும் தெரியாது!

பூரிக்கு-மேலே மூன்றாவதாகச் சொன்ன பூரிக்குப்-புறப்பட்டோம். ஹாவ்ரா ஜங்ஷனையடைந்து நேரே பூரி ஜகந்நாதத்துக்கே டிக்கட் வாங்கத் தீர்மானித்தோம். 'தீர்மானித்தோம்' என்று காரணத்துடனேதான் கூறுகிறேன். ஏனெனில் தீர்மானிப்பது எளிது; தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்றுவது அவ்வளவு எளிதன்று. அதிலும் இந்தியாவிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களில் டிக்கட் வாங்க வேண்டுமென்னும் தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்றுவது மிக மிகக் கஷ்டமாகும். இந்த இரண்டு துறையிலும் எனக்குக் கொஞ்சம் அனுபவமுண்டு. ஆதலின் இம்மாதிரிக் காரியங்களில் 'நான் முந்தி' என்று வரும் கெட்ட வழக்கம் என்னிடம் கிடையவே கிடையாது.

முக்கியமாக இந்த ரயில் பிரயாணத்தின்போது, நானும் எனது நண்பரும் ஒருவிதமாகத் தொழில் பிரிவினை செய்து கொண்டிருந்தோம். தீர்மானம் செய்வதெல்லாம் நான், காரியத்தில் கொண்டு வருவதெல்லாம் அவர். டிக்கட் வாங்க வேண்டுமென்று நான் தீர்மானம் செய்வேன்; அவர் டிக்கட் வாங்கிக் கொண்டு வருவார். ஓரிடத்தில் சமையல் செய்ய வேண்டுமென்று நான் தீர்மானிப்பேன்: அவர் சமையல் செய்து விடுவார். இந்த நல்ல வழக்கத்தை நான் காங்கிரஸ் தொண்டனாயிருந்த காலத்தில் பயின்று கொண்டேனென்பதை உங்களுக்குச் சொல்ல வேண்டும். காங்கிரஸுக்கு வெளியூர்களிலிருந்து பிரதிநிதிகள் வந்து இறங்குவார்கள். ரயிலை விட்டிறங்கியதும் அவர்கள் பிளாட்பாரத்தில் மூட்டைகளையும் பெட்டிகளையும் குவித்துக் கொண்டு நிற்பார்கள். உடனே நாலைந்து தொண்டர்களை அங்கே காணலாம். அவர்களில் தலைவராயிருப்பவர் மூட்டை பெட்டிகள் எல்லாம் மோட்டாருக்குப் போக வேண்டுமென்று தீர்மானம் செய்வார். மற்றத் தொண்டர்கள் அத்தீர்மானத்தை ஆமோதிப்பார்கள். அத்துடன் தொண்டர்கள் கடமை தீர்ந்தது. வந்த பிரதிநிதிகள் தத்தம் மூட்டைகளையும் பெட்டிகளையும் தூக்கிக் கொண்டு போய்த் தீர்மானத்தை நிறைவேற்றி வைக்க வேண்டும்!

இப்போது பூரிக்கு டிக்கட் வாங்கத் தீர்மானித்தேன். என் நண்பர் அதை நிறைவேற்றி வைத்தார். இருவரும் வெகு பிரயாசையின் பேரில் வண்டியில் இடம் பிடித்து

உட்கார்ந்தோம். இங்கு எனது நண்பரைப் பற்றிக் கொஞ்சம் கூறுவது அவசியமாகிறது. அவர் ஒரு வைதிக வைஷ்ணவர். அவர் வைஷ்ணவர் என்னும் விஷயம் மிகவும் முக்கியமானது. பின்னால் வரும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அதுதான் ஆதாரம் என்று சொல்லலாம். நெற்றி என்பது திருநாமம் போட்டுக் கொள்வதற்காகவே ஏற்பட்டதென்னும் கொள்கையுடையவர். அவருடைய விஸ்தாரமான நாமத்தைப் பார்க்கும்போதெல்லாம், எனக்கு ஒரு மாதிரியாகத்தான் இருக்கும். இந்நிலைமையில் எங்களுக்குள் சண்டை மூண்டு விட்டதென்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது!

நானும் அவரும் அத்தியந்த நண்பர்கள்தான். சைவ, வைஷ்ணவச் சண்டைகள் எல்லாம் சுத்த ஆபாசம் என்று உறுதி கொண்டவர்கள்தான். ஆயினும் என்ன? சத்தியம் பெரிதா, அஹிம்சை பெரிதா என்பதைக் குறித்து எங்களுக்குள் விவாதம் எழுந்தது. நான் சத்தியத்தில் அடங்கியது அஹிம்சை என்றேன். அவர் அஹிம்சைக்குள் சத்தியம் அடக்கம் என்றார். நான் மகாத்மா கூறியதை எனக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டினேன். அவரும் மகாத்மா மற்றோரிடத்தில் மொழிந்திருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டினார். இந்த விவாதம் முற்றிக் கடைசியில் ஏறக்குறைய அடிதடிக்கு வந்துவிட்ட போதுதான் நாங்கள் விழித்துக் கொண்டோம். இரண்டு பேரும் ஏகமனதாக ரயில்காரன் மீது பாரத்தைப் போட்டோம். வழக்கம் போல் வண்டிக்குள் ஒரு மூலையில் பெட்டிகளையும் படுக்கைகளையும் அடுக்கி, அதன் உச்சியில் ஒருவரும் வண்டிப் படியில் மற்றொருவரும் நின்று கொண்டு பிரயாணம் செய்ய நேர்ந்திருந்தால், இத்தகைய விவாதம் எழுந்தேயிராதல்லவா? சேர்ந்து உட்கார இடங் கிடைத்ததினாலல்லவா இவ்வளவு விபத்தும் ஏற்பட்டது? இவ்வாறு யோசித்து இருவரில் ஒருவர் வேறு வண்டிக்குப் போய் விட வேண்டுமென்று தீர்மானித்தேன். வழக்கம் போல் நண்பர் தீர்மானத்தைக் காரியத்தில் நிறைவேற்றினார்.

அதன் பின்னர் இருவரும் வெவ்வேறு வண்டிகளிலேயே பிரயாணம் செய்தோம். கடைசியாகப் பூரிக்கு இன்னும் நாலு ஸ்டேஷன் பாக்கியிருந்தபோது ஒரு விநோதத்தை நான் கவனித்தேன். எனக்கருகில் உட்கார்ந்திருந்த இருவர் என்னைச் சுட்டிக் காட்டி உக்கிரமான குரலில் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். முதலில் நான் பயந்து போனேன். அவர்கள் இருவரின் முக ஜாடை பேச்சின்

தொனி இவற்றைப் பார்த்தால் ஏதோ என்னைக் கொலை செய்யத் தீர்மானித்திருப்பவர்கள் போலவே தோன்றிற்று. நல்ல வேளையாகப் பக்கத்திலிருந்த ஒரு கனவானை விசாரித்து, அவ்விருவரும் பூரி க்ஷேத்திரத்தின் பண்டாக்கள் என்றும், அவர்களில் யார் என்னை அழைத்துப் போவது என்பதைப் பற்றிச் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்களென்றும் அறிந்தேன். இந்த ரஸமான சண்டையில் அடியேனுடைய அபிப்பிராயத்தையோ, சௌகரியத்தையோ அவர்களில் எவரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. என் விஷயத்தில் இவ்வளவு உரிமை கொண்டாடுகிறவர்கள் என்னைப் பாதி பாதியாகப் பங்கிட்டுக் கொள்ளத் தீர்மானித்து விட்டால் என்ன செய்வதென்று எண்ணிய போது எனது கதி கலங்கிப் போயிற்று. இந்தச் சமயத்தில்தான் என் நண்பர் பக்கத்தில் இல்லாமல் போனதின் கஷ்டத்தை உணர்ந்தேன். அவர் இருந்தால் தலைக்கு ஒருவராகவேனும் பங்கு போட்டுக் கொள்ள சௌகரியமாயிருக்கும் அல்லவா? ஏறக்குறைய நான் பயந்தபடியே தான் காரியமும் நடந்து விட்டது.

கைதியைச் சேவகர்கள் இறக்குவதுபோல், அவ்விருவரும் என்னை வண்டியிலிருந்து கீழே இறக்கினார்கள். பெட்டியை ஒருவர் பிடுங்கிக்கொண்டார்; படுக்கையை மற்றவர் பறித்துக் கொண்டார், இருவரும் தலைக்கு ஒரு கையைப் பிடித்துக் கொண்டு வெவ்வேறு திக்கில் என்னை இழுக்கத் தொடங்கினார்கள்; தமிழ்நாட்டு ஜட்கா வண்டி ஓட்டிகளும், தேர்தல் ஏஜெண்டுகளும் இந்தப் பண்டாக்களின் பாதார விந்தத்தில் அமர்ந்து பாடங்கற்றுக்கொள்ள வேண்டுமென்னும் எண்ணம் ஒரு புறத்தில் எனக்கு உண்டாயிற்று. மற்றொரு புறத்தில், பூரி க்ஷேத்திரத்துப் பண்டாக்கள் நம்மை நேரே வைகுண்டத்துக்கே அனுப்பிவிடாமல் இருக்க வேண்டுமே, நாமும் திரும்பி ஊருக்குப் போய்ப் பெண்டாட்டிப் பிள்ளைகளைப் பார்க்கவேண்டுமே என்ற கவலை தோன்றிற்று. இந்த நெருக்கடியான நிலையில், நான் பிரம்மச்சாரி என்பதைக் கூட மறந்துவிட்டேனே!

இப்படிப்பட்ட தருணத்தில், என் நண்பர் வருவதைக் கண்டதும், எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்குமென்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள். அவர் தனியாக வந்தார் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. இன்னும் இரண்டு பேருடன் வந்தார். பயப்படாதீர்கள். அவர்கள் பண்டாக்களல்லர். அவர்களுடைய கதர் உடையையும் முகத்தோற்றத்தையும் கண்டதுமே இதை நான் நன்க

றிந்து கொண்டேன். அவர்களிருவரும் ஆந்திர தேசத்தில் குண்டூர் ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். எங்களைப் போல் டில்லி விசேஷ காங்கிரஸுக்குப் போய்த் திரும்பி வருபவர்கள். அவர்களுள் கிழவருடைய பெயர் சேஷய்யா பந்தலு. வாலிபருடைய பெயர் வேங்கடரமணராவ். என்னைவிட்டுப் பிரிந்த பிறகு என் நண்பர்... அவர் மகாராஜராய் இருக்கட்டும்! - இந்தத் தெலுங்கர்களைச் சிநேகம் பிடித்தாராம். இவர்கள் ஏற்கெனவே பூரி க்ஷேத்திரத்தில் அநுபவம் பெற்றவர்களாதலால் என் நண்பரைத் தங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி சொன்னதுடன் என்னிடம் வந்ததைப்போல் அவர்களிடமும் வந்த பண்டாக்களை அதட்டி உருட்டி 'டிமிக்கி' கொடுத்து விட்டு இறங்கி வந்தார்களாம்.

மேற்படி மூவரும் கூட்டமாய் வந்ததும் என்னைப் பங்கு போட்டுக் கொண்டிருந்த பண்டாக்கள், ''சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்'' என்ற பாவனையாகப் பெட்டியையும் படுக்கையையும் கீழே எறிந்துவிட்டுப் போனார்கள். பிறகு, நாங்கள் நால்வரும், ஒற்றை மாட்டு வண்டி ஒன்று பிடித்து, அதில் ஏறிக் கொண்டோம். பண்டாக்கள், தங்கள் ஜாகைக்கு வரும்படி பரிந்தழைப்பார்களென்றும், அப்படிப் போய் விட்டால், இருக்கிற பணத்தையெல்லாம் கறந்து கொண்டு விடுவார்களென்றும் ஸ்ரீமான் சேஷய்ய பந்தலு எங்களிடம் கூறி, மைசூர் மகாராஜா சத்திரத்துக்குப் போகும்படி வண்டிக்காரனைத் திட்டம் செய்தார். வண்டி மைசூர் மகாராஜா சத்திரத்தை நோக்கி நகர ஆரம்பித்தது. கொஞ்ச தூரம் போவதற்குள், வண்டியைத் தொடர்ந்து ஒருவர் வந்து கொண்டிருக்கிறார் என்பதைக் கவனித்த சேஷய்ய பந்தலு, திடுக்கிட்டுப் போனார்.

உண்மை யென்னவென்றால், அந்த ஆந்திர தேச பக்தர்கள், பண்டாக்களுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டதாக எண்ணியது, பகற்கனவேயல்லாது வேறில்லை. பின் தொடர்ந்தவர் மகா மகோபாத்தியாய இராமச்சந்திர பண்டா அவர்களின் குமாஸ்தா ஆவார். இந்த இராமச்சந்திர பண்டா பூரியில் பெரிய செல்வந்தர்களுள் ஒருவர் என்றும் அவருக்கு அங்கே அநேக வீடுகளும் ஏழெட்டு குமாஸ்தாக்களும் உண்டென்றும் பின்னால் அறிந்தோம். ஆகா! அந்தக் குமாஸ்தாவின் பொறுமையை என்னவென்று சொல்வேன்! குமாஸ்தா எங்களை விடாமல் தொடர்ந்து வருவதைக் கண்ட பந்துலுவுக்குக் கோபம் பொங்கிவிட்டது. என்னவெல்லாமோ சொல்லித் திட்டினார். குமாஸ்தா பொறுமையாக, ''நீங்கள் தேசபக்தர்கள். உங்களுக்கு ஊழியம் செய்யும்

பாக்கியம் கிடைத்தாலே வாங்கிக் கொள்கிறேன். இல்லாவிடில் ஒன்றும் வேண்டாம்'' என்று சொல்லிக்கொண்டே வந்தார். சேஷய்யா பந்துலு தமது விஸ்தாரமான சட்டைப் பையில் கைவிட்டுப் பிரமாண்டமான ஒரு பணப்பையை எடுத்தபோது எனக்கு உண்மையிலேயே ஆச்சர்யமாய்ப் போய்விட்டது. ஆனால், அப்புறம் அவர் என்ன செய்தாரென நினைக்கிறீர்கள்? காலணாக்கள் நிறைந்து கிடந்த அந்தப் பையிலிருந்து ஒரு காலணாவை எடுத்து, ''இன்று முழுவதும் நீர் தொடர்ந்து வந்தாலும் இந்தக் காலணாவுக்கு மேல் தரமாட்டேன்; நாங்கள் ஏழைகள்'' என்று சொல்லிக் காலணாவை மீண்டும் பையிலேயே போட்டுக் கொண்டார்.

வண்டி நின்றது. நான் கீழே இறங்கிச் சுற்று முற்றும் பார்த்து, ''மைசூர் மகாராஜா சத்திரம் எது?'' என்று கேட்டேன். சேஷய்ய பந்தலுவும் சுற்றுமுற்றும் பார்த்தார். ஆகா! அவர் முகத்தில் அப்போது உண்டான திகைப்புக் குறியை என்னால் வர்ணிக்க முடியாது. ''மோசம் போய் விட்டோம்'' என்றார். விஷயம் என்னவோ என்றெண்ணி நான் நடுங்கிப் போனேன். நகரின் ஒரு மூலைக்கு நாம் வந்திருக்கிறோமென்றும், மைசூர் மகாராஜாவின் சத்திரம் வேறொரு மூலையிலிருக்கிறதென்றும் அவர் விளக்கிக் கூறினார். வண்டி வந்து நின்ற இடம் இராமச்சந்திர பண்டா யாத்திரீகர்களுக்கென்று கட்டிவிட்டிருந்த ஜாகைகளில் ஒன்று! அந்தச் சாது குமாஸ்தா வண்டிக்காரனுக்கு அத்தகைய கட்டளையிட்டிருந்தார் போலும்! ஆனால், சேஷய்யபந்துலுவுக்கு ஒரு விஷயத்தில் சந்தோஷம். வண்டிக்காரன் எங்களை வாடகையே கேட்கவில்லை! நாங்கள் இறங்கியதும் அவன் வண்டியை ஓட்டிக் கொண்டு போய்விட்டான். அந்த மாடு அவ்வளவு வேகம் போகுமென்று யார்தான் எதிர் பார்க்க முடியும்? சற்றுநேரம் பந்துலு யோசித்துவிட்டு, ''சரி, நம்மை மோசம் செய்தானல்லவா? மண்ணை வாரிப் போடுகிறேன்!'' என்றார். (நாங்கள் அப்போது வந்த சாலையில் அவர் சொன்ன அந்த வஸ்துவைப் போட்டால் திரும்பிப் போகும் போதாவது உடம்பு வலியெடுக்காமல் போகலாமென்று எண்ணினேன்) பிறகு இராமச்சந்திர பண்டாவின் ஜாகையில் நுழைந்தோம்.

பூரி புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து மூர்த்திகளைத் தரிசித்து விட்டு, நாங்கள் ஜாகை திரும்பிய போது மணி மூன்றாகி விட்டது. அப்புறம் சமையல் வேலை தொடங்கினோம். நாலு மணிக்குச் சாப்பிட்டோம் இல்லை; சாப்பிட்டார்கள். அந்தத் தெலுங்கர், பாகம் செய்த மிளகாய்த்

திராவகத்தைப் போட்டுக் கொண்டு நாங்கள் சாப்பிட்டிருந்தால் ஆகாய விமான வேகத்தில் அந்தரத்துக்குப் போயிருக்க வேண்டியதான். கடைசியாகச் சுமார் நாலரை மணிக்குப் பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு, புறப்படச் சித்தமானோம். அந்தச் சமயத்தில், நாலைந்து பேர் திடுதிடு வென்று உள்ளே வந்தார்கள். வந்தவர்கள் மகாமகோபாத்தியாய இராமச் சந்திர பண்டாவும், அவருடைய சகாக்களுமே தான்.

பண்டா பாய்க்குள் நுழைவதும், பந்துலு கோலத்திற்குள் நுழைவதுமாக ஓர் அற்புதப் போராட்டம் அப்போது ஆரம்பமாயிற்று. சம்பாஷணை முழுவதும் தெலுங்கு பாஷையில் நடந்தது. எனக்கு தெலுங்கு பேசத் தெரியாது. (தரவாதா, காலி, ஏமண்டி, அக்கட, இக்கட, வாடு, வீடு, என்னும் சில வார்த்தைகள் மட்டும் தெரியும்) சில சமயம் தெலுங்கருடைய சம்பாஷணையைக் கேட்கும் போது, தெலுங்கு மொழியே இந்த நாலைந்து வார்த்தைகள் அடங்கியதுதானோ என்று கூடத் தோன்றும். ஆனால், யாராவது தெலுங்கு பேசினால் கூடிய வரையில் புரிந்து கொள்வேன். அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையை இங்கே சுருக்கித் தருகிறேன்.

''புண்ணியக்ஷேத்திரம்'' என்றார் பண்டா. ''தேச பக்தர்கள் நாங்கள்'' என்றார் பந்துலு. ''சகலபாவங்களும் நீங்கும்'' என்றார் பண்டா. ''எங்களிடம் பாவமே கிடையாது. சத்திய விரதர்கள்'' என்றார் பந்துலு. ''தட்சணை வரவேண்டும்'' என்று பண்டா மெதுவாக நீட்டினார். ''பரம ஏழைகள்'' என்று பந்தலு ஈனக் குரலில் அழுதார். ''கொடுத்தது போதும்'' என்று பண்டா புன்னகை ததும்பக் கூறினார். ''இருந்தால் தானே?'' என்று எரிந்து விழுந்தார் பந்தலு. ''தலைக்கு ஐந்து ரூபாயாவது கொடுங்கள்'' என்று பண்டா பல்லைக் காட்டினார். ''ஐயோ! ஐந்து காலணாவும் இல்லையே'' என்று பந்துலு சண்டித்தனம் செய்தார். ''சரி இருக்கட்டும் பாதகமில்லை. ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் தலைக்கு 20 ரூபாய் அனுப்புவதாக ஜகந்நாத் ஸ்வாமி பெயருக்குப் பத்திரம் எழுதிக் கொடுங்கள்'' என்று பண்டா ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தை நீட்டினார். அதில் ஒவ்வோர் ஏட்டிலும் ஆங்கில பாஷையில் ஜகந்நாத் ஸ்வாமி பெயருக்கு ''ஆண்டிமாண்டு'' பத்திரம் எழுதப்பட்டுக் கீழே ஒரு அணாத் தலையும் ஒட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் பண்டாவின் பாசுபதாஸ்திரம் இதுவே என்பதை உணர்ந்தேன். அதை வெல்லக்கூடிய அஸ்திரம் பந்துலுவிடம் வேறு இருக்க முடியாதென்றும் தோன்றிற்று. பத்திரத்தைப் படித்த

போது என் கதி கலங்கி விட்டது. வட்டியுடன் கூடப் பணம் அனுப்பத் தவறினால் ஜகந்நாத் ஸ்வாமி ஆணையாக இன்னின்ன நரகங்களுக்குப் போவார்கள் என்பதாக அதில் எழுதியிருந்ததைப் படித்ததும் நான் இப்பத்திரத்தில் கையொப்பமிடுவதை விட ஐந்து ரூபாய் ரொக்கமாகக் கொடுத்து விடுவதே மேல் என்று தீர்மானித்தேன்.

ஆனால் இந்த யாத்திரையில் நான் கண்ட அதிசயங்களிலெல்லாம் பெரிய அதிசயத்தை இனித்தான் காணவிருந்தேன். பந்துலு தொண்டையைக் கனைத்துவிட்டுப் பேசலானார்:- ''தங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். இதோ, இந்த வாலிபரின் பெயர் வேங்கடரமணராவ். இவர் தேசத் தொண்டிலேயே தமது காலம் முழுவதையும் செலவு செய்து வருகிறார். நாங்களிருவரும் டில்லி விசேஷக் காங்கிரஸுக்குப் போயிருந்தோம். திரும்பும் போது கல்கத்தாவில் இறங்கினோம். கல்கத்தா ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நாள் படுத்திருக்க நேர்ந்தது. அப்போது இவர் தலைமாட்டில் வைத்துக் கொண்டிருந்த மூட்டையை யாரோ கிளப்பிக் கொண்டு போய்விட்டார்கள். கையிலிருந்த பணம், துணியெல்லாம் அடியோடு போய்விட்டன. என்ன செய்வார்? பாவம்! தவியாய்த் தவித்தார். இவ்வூர் வரைக்கும் நான் டிக்கெட் வாங்கிக் கொடுத்து அழைத்து வந்தேன். ஆனால், என்னிடமும் பணம் குறைவு (ஸ்ரீ இராமச்சந்திர பண்டா இப்பொழுது தமது நண்பர்களைத் திரும்பித் திரும்பி பார்க்கத் தொடங்கினார்.) இந்த க்ஷேத்திரத்திலே, மகா மகோபாத்தியாய இராமச்சந்திர பண்டாவாகிய தங்களுடைய தர்ம சிந்தையையும், உதாரகுணத்தையும் பற்றி மிகவும் கேள்விப்பட்டிருக்கிறேன். (பண்டா 'ஹூம்' என்று சொல்லிவிட்டு எழுந்திருக்க முயன்றார்) அவசரப் படக்கூடாது. கொஞ்சம் விண்ணப்பத்தைக் கேட்க வேண்டும். இந்தச் சமயத்தில் தாங்கள் உதவி செய்தால் இந்த வாலிபர் உயிருள்ளவும் அந்நன்றியை மறக்க மாட்டார் (பண்டாவும் அவருடைய நண்பர்களும் எழுந்து நின்றார்கள்) தாங்கள் கடனாகப் பாவித்துக் கொண்டாலும் சரிதான் எப்படியாவது ஒரு பதினைந்து ரூபாய் கொடுத்து உதவினீர்களானால்...''

அடுத்த கணத்தில் பண்டாவையும் அவரது நண்பர்களையும் நாங்கள் காணவில்லை. ஒரே ஓட்டமாக அவர்கள் ஓடிப்போனார்கள்! எனது ஐயங்கார் நண்பர் சந்தோஷம் தாங்காமல் பாய்ந்து சென்று ஸ்ரீமான் சேஷய்ய பந்துலுவைக் கட்டிக் கொண்டார்.

இரவல் படிப்பு

நான் ஏமாந்து போனேன். பத்திரிகைகளில், இக்காலத்தில் என் நெஞ்சத்தைத் திடுக்கிடச் செய்யவல்லது எதுவும் வெளியாகக் கூடுமென நான் எதிர்பார்க்கவே இல்லை. இத்தாலி சர்வாதிகாரி முஸோலனிக்குக்கூட அந்த சக்தி போய் விட்டதென்று எண்ணினேன். ஆனால் முஸோலனியால்கூட தாங்க முடியாத அக்காரியத்தைச் சென்னையில் வெளியாகும் இரு தமிழ்ப் பத்திரிகைகள் செய்துவிட்டன. ஆம் நான் ஏமாந்தே போனேன்.

''மகாத்மாவின் வர்த்தக யுக்தி நமக்கு விளங்கவில்லை'' என்று எனது மதிப்பிற்குரிய ஒரு தமிழ்த் தினசரி எழுதிற்று. இதை ஆமோதித்து, ''மகாத்மாவின் வர்த்தக யுக்தி நமக்கு விளங்கவில்லை!'' என்று நான் பெரிதும் போற்றும் வாரப் பத்திரிகை எழுதிற்று. இவற்றைப் படித்ததும் நான் தலையில் இடியே விழுந்ததுபோல் திடுக்கிட்டுப் போனேன். 'ஆகா! நீங்கள் கூடவா?' என்னும் மொழிகள் என்னையறியாமலே என் வாயினின்றும் பிறந்தன. இதிலே வயிற்றெரிச்சல் அதுதான். பத்திரிகைக்காரர்கள் இப்படிச் சொல்லியிருந்தால்? வேறு யாராவது, பத்திரிகை-புத்தகப் பிரசுரங்களில் அனுபவமில்லாதவர்கள் இப்படிக் கூறினால் பொருட்படுத்த வேண்டியதில்லை. விவசாயக் கல்லூரிக ளில் பட்டம் பெற்ற நிபுணர்களின் யோசனைகளை அசல் விவசாயிகள் பொருட்படுத்துகிறார்களா? அதுபோல் நாமும் தள்ளிவிட்டுப் போகலாம். ஆனால், பத்திரிகைகள் - நமது இந்திய நாட்டிலே பத்திரிகையோ புத்தகமோ வெளியிடுவ தென்றால், என்னவென்பதை உணர்ந்திருக்க வேண்டிய பத்திரிகைகள் - இப்படி எழுதினால், ''ஆகா! நீங்கள் கூடவா?'' என்று கேட்பதற்கு நமக்கு உரிமை உண்டா இல்லையா?

தினசரிப் பத்திரிகையோ வாரப்பத்திரிகையோ படிக் கும் பாக்கியசாலிகளுக்காக விஷயம் இன்னதென விளக்கு றேன். மகாத்மா காந்தி தமது சுயசரிதத்தை வாரந்தோறு எழுதி வருகிறாரல்லவா? இதன் முதல் மூன்று பாகங்க மட்டும் இப்பொழுது ஆங்கிலத்திலும், தமிழிலும் புத்த வடிவில் வெளியாகியிருக்கின்றன. ஆனால், இச்சரித்திர தின் முழுப் பதிப்புரிமையையும் மகாத்மா காந்தி ஆங்கில

புத்தகக் கம்பெனி ஒன்றுக்கு விற்றுவிட்டாரென்றும், அதன் விலையாகிய ஒரு லட்சம் ரூபாயையும் இராட்டை இயக்கத்துக்கு அளிக்கப் போகிறாரென்றும் 'இண்டியன் நேஷன் ஹெரால்டு' பத்திரிகை ஒரு வதந்தியை வெளியிட்டிருந்தது. இதைப் படித்ததும் 'ஆகா! இந்த வதந்தி உண்மையாயிருக்க வேண்டுமே' என்று நான் பிரார்த்தித்தேன்.

பிரசுரத் தொழிலில் கொஞ்சம் அனுபவமுள்ள இந்தியர் அனைவரும் - இராட்டை இயக்கத்தின் கொடிய விரோதி நீங்கலாக - என்னைப் போலவே பிரார்த்திப்பார்களென்றும் எதிர்பார்த்தேன். இந்நிலையில், மேற்படி பத்திரிகைக் கூற்றைக் கண்டதும் நான் திடுக்கிட்டுப் போனது இயல்பேயல்லவா?

'மகாத்மா காந்தி தமது சரித்திரத்தைச் சொந்தமாக பிரசுரித்திருந்தாலும், அல்லது இந்தியக் கம்பெனி ஒன்றுக்கு கொடுத்திருந்தாலும், எவ்வளவோ லட்சம் ரூபாய் இந்தியாவுக்குக் கிடைத்திருக்குமே. அவ்வளவும் இப்போது அந்நிய கம்பெனிக்கல்லவா போகப் போகிறது?' என்பது அப்பத்திரிகைகளுடைய புகாரின் சாராம்சம். ஒருவேளை இந்தப் புகார் மகாத்மாவின் காதுக்கெட்டி அவர் அந்த ஏற்பாட்டை மாற்றிவிடப் போகிறாரோ என்னும் கவலை முதலில் எனக்கு உண்டாயிற்று. ஆனால் ஒன்று, மகாத்மா எதையும் தீர ஆலோசித்துத்தான் முடிவு செய்வார், செய்த பின்னர் தமக்கே தவறென்று தோன்றினாலன்றி, அம்முடிவை மாற்ற மாட்டார். மேலும் மகாத்மா காந்தி கோமுட்டி செட்டியாரல்லவா? எனவே பயம் வேண்டியதில்லையென்று ஆறுதல் செய்து கொண்டேன்.

யாருடைய கட்சி சரியானது? மேற்படி பத்திரிகைகளின் கூற்று சரியா? மகாத்மாவும் நானும் சொல்லுவது சரியா? (ஹா! ஹா! எனக்கே சிரிப்பு வருகின்றது; சிங்கம் ஒன்றின் முதுகின்மேல் அதன் வாலுக்கு எட்டாத இடத்தில் ஓர் ஈ உட்கார்ந்து கொண்டதாம். அப்போது அந்த ஈ - 'நானும் இந்தச் சிங்கமும் சேர்ந்தால் இந்தக் காட்டிலுள்ள மிருகங்களையெல்லாம் துரத்தியடித்து துவம்ஸம் செய்துவிட மாட்டோமா?' என்று பெருமையடித்துக் கொண்டதாம். 'மகாத்மாவும் நானும்' என்பது அது போலில்லையா?) நல்லது. என் அனுபவங்கள் சிலவற்றை மட்டும் இங்கே கூறிவிடுகிறேன். பின்னர் யாருடைய கட்சி சரியானது என்று தீர்ப்பளிக்கும் உரிமையை நேயர்களுக்கே விட்டுவிடுகிறேன்.

நான் யார்? புத்தகம் எழுதுவதிலும், வெளியிடுவதிலும் பத்திரிகைத் தொழிலிலும் கொஞ்சம் அனுபவமுள்ள மனி

தன்; உங்களுக்கு என்னைப்பற்றி அவ்வளவு தெரிந்தால்
போதும். ஒரு வருஷத்திற்கு முன்பு நல்ல அமிர்தயோக
வேளையில் ஒரு புத்தகம் அச்சிட்டு வெளியாக்கினேன்.
(நண்பர்களுக்கு ஓர் எச்சரிக்கை! புது முயற்சி எதுவும்
அமிர்தயோகத்தில் தொடங்கவேண்டாம்! மரண யோகத்
திலோ, ராகுகாலத்திலோ வேறு எந்த வேளையில் வேண்டு
மானாலும் தொடங்குங்கள். ஆனால் அமிர்தயோகம் மட்
டும் வேண்டாம் என்று சொன்னேன் சொன்னேன்; முக்கா
லும் சொன்னேன்) இதைப் பற்றி ஒரே ஓர் அனுபவத்தை
மட்டும் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். ஒரு பானைச்
சோற்றுக்கு ஒரு சோறே பதமல்லவா? ஒரு மாதத்திற்கு
முன்பு கடற்கரையில் புதிய நண்பர் ஒருவர் எனக்கு
அறிமுகமானார். உடனே அவர் நம்மவர்களிடையே உள்ள
வழக்கத்தையனுசரித்து ஊர், பெயர், உத்தியோகம், சம்ப
ளம், மேல் வரும்படி ஆகிய யோக க்ஷேமங்களைப் பற்றிச்
சவிஸ்தாரமாக விசாரித்தார். இந்த விசாரணையின்போது,
'மேல் வரும்படி' என்னும் தலைப்பின்கீழ் நான் புத்தகம்
வெளியிட்டிருப்பது குறித்துச் சொல்லிவிட்டேன். ஒரு பிரதி
வாங்கிக் கொள்ள மாட்டாரா என்று எனக்கு உள்ளூற
ஆசை; கொஞ்சம் தற்பெருமையுங் கூட. நுணலும் தன்
வாயால் கெடுமல்லவா? அதைப் போல் சொன்னதும்
வந்தது விபத்து.

அப் புது நண்பர், ''ஆகா! அப்படியா? தங்கள்
புத்தகத்தை அவசியம் பார்க்க வேண்டும். தங்களுடன்
வீட்டுக்கு வருகிறேன்'' என்றார்.

எனக்கோ மகிழ்ச்சியினாலும் கர்வத்தினாலும் தலை
கால் புரியவில்லை. அவரை வீட்டுக்கு அழைத்துக்
கொண்டு போனேன்; ''என்ன பாக்கியம் செய்தது இச்சிறு
குடில்'' என்பது முதலான பாடல்களை ஒப்புவித்தேன்.
காரியத்தில் கண்ணாயிருந்த நண்பர் ''தங்கள் புத்தகம்''
என்றார். உபயோகித்துச் சிறிது அழுக்கடைந்திருந்த புது
புத்தகத்தை எடுத்துக் கொடுத்தேன்.

''புதிய புத்தகமாய் இருக்கிறதல்லவா?''

''இருக்கிறது''

''ஒன்று எடுங்கள்!''

அப்போது எனக்குண்டான ஆனந்தத்தை உங்களால்
ஊகித்துரைக்க முடியுமா? முடியாதென்றே நினைக்கிறேன்.
உங்கள் சொந்தக் கையினால் எழுதி நீங்களே வெளியிட்ட
புத்தகம் ஒன்றை நீங்கள் விற்றுக் கையில் முழுப்பணமு

வாங்கியிருந்தால்தான் அதன் அருமை தெரியும். புதிய புத்தகம் ஒன்றை மகிழ்ச்சி ததும்ப எடுத்துக் கொடுத்தேன். அவர் வாங்கிப் பிரித்தார். உடனே என் முன்னால் வைத்து, ''எங்கே? இதில் 'அன்பளிப்பு' என்று எழுதித் தங்கள் கையெழுத்தைப் போட்டுக் கொடுங்கள்'' என்றார்.

எனக்குத் திடீரென்று என்ன நேர்ந்து விட்டது? இந்த வீடும், விளக்கும், மேஜையும், இம்மனிதரும் ஏன் இப்படிச் சுழல்கிறார்கள்? இல்லை? இல்லை; இவர்கள் சுழல வில்லை. என் மூளைதான் கறகறவென்று சுழன்றது. சற்று நிதானித்து அவரைப் பார்த்தேன். பாம்புக் கண்ணின் காந்த சக்தியால் கவரப்பட்ட பறவை பிரமை கொண்டு அதன் வாயில் போய் அகப்பட்டுக் கொள்வதைப் பற்றிப் படித்தி ருக்கிறீர்களல்லவா? நானும் அந்நிலையை அடைந்தேன். அவர் சொற்படி ''அன்பளிப்பு'' என்று எழுதப் போனேன். அப்போது அவர் கண்ணின் காந்த சக்தியிலிருந்து விடுபட் டுப் புத்தகத்தை நோக்கினமையால் தப்பிப் பிழைத்தேன். பேனாவைக் கீழே வைத்து விட்டு, ''இதனால் உங்களுக்கு லாபமில்லை. எனக்கு நஷ்டம். அரைமணி நேரத்து நண்பர்க ளுக்கெல்லாம் ஒவ்வொரு புத்தகம் 'அன்பளிப்பு' செய்து வந்தால் என்னுடைய கதி என்னவாகுமென்ற யோசித்துப் பாருங்கள். படிக்க வேண்டியதுதானே தங்களுக்கு முக்கி யம்? இந்தப் பழம் புத்தகத்தையே எடுத்துக் கொண்டு போங்கள். தயவு செய்து அதையும் திருப்பிக் கொடுத்து விட்டால் நலம். தங்களைப் போன்ற மற்ற நண்பர்களுக்குக் கொடுக்க வேண்டுமல்லவா?'' என்று நயமாகச் சொன்னேன்.

பழம் புத்தகம் இன்னும் திரும்பி வந்து சேரவில்லை!

மற்றொரு நாள். ஆங்கிலச் சிறுகதைப் புத்தகம் ஒன் றைப் படித்துக் கொண்டு, கடற்கரையில் போட்டிருக்கும் ஆசனங்களில் ஒன்றில் உட்கார்ந்திருந்தேன். சற்று நேரத்திற் கெல்லாம் இன்னொரு கனவான் வந்து அதே ஆசனத்தின் மற்றொரு மூலையில் அமர்ந்தார். அவர் 703-ஆம் நம்பர் மல்லில் சைகிள் கட்டுக் கட்டிக் கொண்டு, உள்சட்டை, மேற்சட்டை, கழுத்துப் பட்டை, சுருக்கு, துருக்கிக் குல்லா, சாந்துப் பொட்டு முதலியவையுடன் விளங்கினார். சில நிமிடம் ஆனதும், அவர் சற்று நெருங்கி, நான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை எட்டிப் பார்த்தார். இன்னும் இரண்டு நிமிஷம் சென்றன. மெதுவாக விரலைக் கொடுத் துப் புத்தகத்தின் மேலட்டையைத் தூக்கிப் பார்த்தார்.

''ஓகோ! இவர் எழுதியதா? கதைகள் மிக நன்றாயிருக்கும், ஸார்!'' என்று ஆங்கிலத்தில் கூறினார். இவ்வளவுக்கும் பிறகு பேசாதிருப்பது மரியாதையல்லவென்று, ''ஆம்; நன்றாகத்தான் இருக்கின்றன!'' என்றேன். சில நிமிஷம் மௌனம். பின்னர், அட்டவணைப் பக்கத்தை விரலால் கிளறிப் பார்த்துவிட்டு, ''ஸார், ஸார்! இதில் ஒரு கதையைப் பாதியில் விட்டிருக்கிறேன். சில நிமிஷம் கொடுத்தீர்களானால் முடித்து விட்டுக் கொடுத்து விடுவேன். புத்தகம் உங்களுடையதுதானே, நீங்கள் சாவகாசமாகப் படித்துக் கொள்ளலாம்'' என்றார்.

வேறு வழியில்லை; பதில் பேசாமல் புத்தகத்தைக் கொடுத்தேன். சமுத்திரத்தை நோக்கினேன். கதைகளுக்குள் நீளமான ஒன்றை அவர் அடியிலிருந்து தொடங்குகிறார் என்பதை கடைக்கண்ணால் கவனித்தேன். அரைமணி நேரம் ''கடவுளே'' என்று பேசாதிருந்தேன். ஆனால் பொறுமைக்கும் ஓரளவு உண்டல்லவா? அரைமணி நேரத்திற்குப் பிறகு, அவர் மற்றொரு கதையைத் தொடங்க ஆரம்பித்தபோது, என்னுடைய பொறுமை போய் விட்டது. ''ஸார் தயவு செய்து புத்தகம் தருகிறீர்களா?'' என்றேன். அவர் தூக்கிவாரிப் போட்டவர் போல் காணப்பட்டார் ''புஸ்தகத்தைத் திரும்பக் கேட்கவும் துணிந்து விட்டீரல்லவா?'' என்னும் கேள்வி அவர் நெற்றியில் எழுதி ஒட்டியிருப்பதுபோல் தோன்றிற்று. பெருமூச்சு விட்டுக் கொண்டே, புஸ்தகத்தைக் கையில் கொடுத்து விட்டு, ''ஏன் ஸார்! தங்கள் வீடு... எங்கே? இதைக் கொடுத்தீர்களானால் காலையில் திரும்பக் கொண்டு வந்து கொடுத்து விடுவேன். சிலரைப் போல் நான் ஒரு புத்தகத்தை மாதக் கணக்காகப் படிப்பதில்லை. ஸார்! ஒரே இரவில் முடித்து விடுவேன். அல்லது தங்கள் வீட்டுக்கு வரச் சொன்னாலும் வந்து வாங்கிக் கொள்கிறேன் '' என்றார். நான் என்ன செய்தேனென்று எண்ணுகிறீர்கள்? எனக்குச் செய்வதற்கு ஒன்றே ஒன்றுதான் இருந்தது. குடையை எடுத்துக் கொண்டு சட்டென்று எழுந்து அதிவேகமாக நடக்கத் தொடங்கினேன். திரும்பிப் பார்க்கவேயில்லை. வீடு சென்றதும் அப்புத்தகத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டினேன். ஆனால் இன்னும் எனக்குச் சந்தேகந்தான். என்றாவது ஒருநாள் அந்தப் பெட்டி உடைக்கப்பட்டுப் புத்தகம் காணாமற் போயிருப்பதைக் கண்டால் நான் வியப்புறவே மாட்டேன்!

இந்தச் சந்தோஷமில்லாத விஷயத்தை அதிகமாக வளர்க்க நான் விரும்பவில்லை. எனினும் ஓர் அனுபவத்தை

கூறி முடித்து விடுகிறேன். ஒரு முறை நானும் என் மனைவியும் எழும்பூர் ஸ்டேஷனில் ரயில் ஏறினோம். மூன்றாம் வகுப்பு என்று உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லையல்லவா? அது அரைப்பலகை வண்டி. புறப்படும் ஸ்டேஷனானதால் கூட்டம் அதிகமில்லை. மேலும் இந்த வாயுவேக, மனோவேக நாட்களிலே மதுரை பாஸஞ்சரில் யார் ஏறுவார்கள்? நானும் என் மனைவியும் ஓர் அரைப்பலகையில் உட்கார்ந்தோம். எதிர்ப் பலகையில் படுக்கை பெட்டிகளை வைத்தோம். வண்டி புறப்படுவதற்கு முன் 'புக் ஸ்டாலுக்கு'ச் சென்று 'ஹிந்து' பத்திரிகை ஒன்று வாங்கிக் கொண்டு வந்தேன். அதை வாங்கும் போது அங்கே ஓர் இளைஞர் நின்று பார்த்துக் கொண்டிருந்தார். அவர் மீது எனக்குச் சந்தேகம் தோன்றி விட்டது. எனவே மறுபடியும் வண்டி ஏறியதும் பத்திரிகையைச் சுருட்டி வைத்து விட்டு, பிளாட்பாரம் பக்கம் பாராமல் அதற்கு எதிர்ப்புறத்தை நோக்கி கொண்டிருந்தேன். ஆனால், அந்த இளைஞர் பிளாட்பாரத்தில் மேலும் கீழும் வண்டியிலுள்ள யாரையோ தேடுபவர் போல அலைந்து கொண்டிருப்பதை மட்டும் கவனித்தேன். அப்படியே இருந்திருக்கக் கூடாதா; விதி யாரைவிட்டது? இங்கே விதி ஆரஞ்சுப் பழக்காரனின் உருவத்தில் வந்து சேர்ந்தது. ஆரஞ்சுப் பழம் வாங்குவதற்காகத் திரும்பினேனோ இல்லையோ, அவ் விளைஞரும் என்னைப் பார்த்து விட்டார். இத்தனை நேரமும் தம்மை அலையவைத்ததற்காக மனத்திற்குள் அவர் திட்டினாரென்பதில் சந்தேகமில்லை. வண்டியிலேறியதும் அவருடைய எரிச்சல் அதிகமாயிருக்க வேண்டும். எனக்குப் பக்கத்தில் என் மனைவி உட்கார்ந்திருந்தாள். எதிரிலோ பெட்டியும், படுக்கையும், வண்டியில் இடம் அதிகமிருந்தபடியால் அவற்றை எடுக்கச் சொல்லி உட்காருவதற்கில்லை. எனவே வண்டியின் மறுபக்கத்தில் இருந்த மற்றோர் அரைப் பலகையில் பெருமூச்சு விட்டுக் கொண்டு அமர்ந்தார்.

சிறிது நேரம் சென்றது. அவ்விளைஞர் மெதுவாகத் தொண்டையைக் கனைத்துக்கொண்டு, ''ஸார்! ஒரு ஷீட் (தாள்) தருகிறீர்களா?'' என்றார். எனக்குக் காதில் விழவில்லை. அதாவது விழுந்ததாக நான் காட்டிக் கொள்ளவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் கழித்து, ''ஸார்! உங்களைத்தானே? நீங்கள் வாசித்த தாளை தயவு செய்து இப்படித் தருகிறீர்களா'' என்றார். ''இன்னும் படித்தாகவில்லையே!'' என்று மட்டும் சொல்லிவிட்டு, நான் மறுபடியும் பத்திரிகையில் ஆழ்ந்துவிட்டேன். என் வாழ்நாளிலே நான்

இவ்வளவு கவனமாகப் பத்திரிகை படித்தது கிடையாதென்பது நிச்சயம். வண்டியின் இன்னொரு பக்கத்திலிருந்து நாட்டுப்புறத்துக் கனவான் ஒருவர் எழுந்து வந்து, அந்த இளைஞரின் அருகில் உட்கார்ந்தார். ''பத்திரிகையில் ஏதேனும் விசேஷம் உண்டா?'' என்று கேட்டார். சிறிது நேரம் மௌனம். ''பத்திரிகையில் விசேஷம் ஏதேனும் உண்டா?'' என்றார் மறுபடியும். ''ஒன்றையுங்காணோம்'' என்று அசட்டையாய்ப் பதிலளித்தேன். 'பத்திரிகை படிப்பவர்கள் இப்படித் தான் விழுந்து விழுந்து படிப்பார்கள். கேட்டால் ஒன்றுமில்லை என்பார்கள்' என்றார் அக்கனவான். இளைஞர் என் கட்சியை ஏற்றுக் கொண்டு, ''அதெல்லாம் உங்களுக்குச் சொன்னால் தெரியாது. வழக்கமாய்ப் படித்து வந்தால்தான் விளங்கும்'' என்றார்.

சற்று பொறுத்து, ''காந்தி இப்போது எங்கே இருக்கிறார்'' என்று நாட்டுப்புறத்து மனிதர் வினவினார். மற்றொரு மூலையிலிருந்து இன்னொருவர், ''ஜெர்மானிக்காரன் சண்டை இப்போது எப்படியிருக்குங்க?'' என்று கூச்சல் போட்டார். (என் பிரயாணம் 1928 - ஆம் ஆண்டு நடந்தது என்பது நேயர்களுக்கு நினைவிருக்க வேண்டும்) இதற்குள் செங்கல்பட்டு ஸ்டேஷன் வந்தது. அப்போது வேண்டுமென்றே ஒரு காரியம் செய்தேன். பத்திரிகை முழுவதையும் பிரித்துக் கீழே போட்டு அதில் ஆரஞ்சுப்பழங்களை வைத்துப் பொட்டணமாகக் கட்டினேன். ''ஸார்! ஸார்!! ஸார்!!!'' என்றார் இளைஞர்.

''என்ன, என்ன?'' என்றேன் நான்.

''பத்திரிகை தருகிறேன் என்றீர்களே?''

''மன்னிக்க வேண்டும், ஸார்! நான் இங்கே இறங்கப் போகிறேன்.''

''நீங்கள்தான் படித்தாய்விட்டதே; கொடுத்துவிட்டுப் போகலாமே?''

''ஓர் அணாக் கொடுத்தால் தந்து விடுகிறேன்?'' என்றேன்.

இளைஞர் என்னைக் கொன்றுவிடுபவர்போல் பார்த்தார்.

''நீங்களெல்லாம் இப்படி இரவல் வாங்கிப் படித்துவிட்டால் பத்திரிகைக்காரர்கள் எப்படி ஐயா, பிழைப்பது!'' என்று சொல்லிக் கொண்டே நான் அவசரமாக வண்டியை விட்டுக் கீழே இறங்கினேன்.

''மகாத்மாவின் வர்த்தக யுக்தி நமக்கு விளங்கவில்லை'' என்று எழுதியவர்களுக்கு ஒரு வேண்டுகோள்:

தயவு செய்து அவர்கள் தங்கள் இலவசச் சந்தாதாரர் ஜாபிதாவை எடுத்து இப்போது ஒரு முறை பார்க்கட்டும். அநேகமாக, மகாத்மாவின் வர்த்தக யுக்தி அவர்களுக்கு விளங்கி விடலாம். ஓர் அணா இனாம் கொடுத்தால் அதைப் பெரிய அவமதிப்பாகக் கருதக் கூடியவர்கள்... பத்திரிகை மட்டும் இரவல் வாங்கலாம் என்னும் கொள்கையுடையவர்களாயிருப்பது எப்படி என்று எனக்கு விளங்கவேயில்லை. பாதி சந்தாவுக்குப் பத்திரிகை கேட்பவர்கள் எத்தனை பேர்? தபால் கட்டணம் மட்டும் செலுத்தி விடுவதாக மனமுவந்து ஒப்புக் கொள்பவர்கள் எத்தனை பேர்? புதிதாக ஒரு வாசகசாலை ஏற்பட்டதென்றால் பத்திரிகைகளுக்கு ஒரு புதிய இலவச சந்தாதாரர் என்று பொருள். இந்த ஏழை நாட்டில் தனி மனிதன் ஒருவன் பத்திரிகையைப் பணங்கொடுத்து வாங்கத் தயங்கினால் அதில் அவ்வளவு வியப்புற வேண்டியதில்லை. ஆனால், பலபேர் படிக்கக் கூடிய வாசகசாலைகள், காலணா அரையணவாக வசூலித்தாலும் பத்திரிகைகளுக்குச் சந்தா கட்டி விடலாமே?

நேயர்களே! இப்போது நீங்களே தீர்ப்புக் கூறுங்கள். ''மகாத்மாவின் வர்த்தக யுக்தி'' உங்களுக்கு விளங்கிவிட்டதா, இல்லையா?

தலைகிழ்ப் பாடம்

"என்ன டாக்டரே! சௌக்கியமா? முகம் ஏன் ஒரு விதமாய் வாட்ட முற்றிருக்கிறது?'' என்று என் நண்பரைப் பார்த்துக் கேட்டேன்.

''சௌக்கியத்துக் கென்ன குறைவு? நான் மட்டுமல்ல ஊரிலேயே எல்லாரும் சௌக்கியம், எனவே என் முகம் வாட்ட முறுவதற்குக் கேட்பானேன்?'' என்றார் நண்பர். அவர் விடையின் பொருத்தம் முதலில் எனக்கு நன்றாய் விளங்கவில்லை: கொஞ்சம் யோசித்ததும் விளங்க ஆரம்பித்தது. ஆனால், நண்பர் என் மனத்துக்கு அதிக சிரமம் கொடுக்கவில்லை. அவர் மேலும் சொன்னதாவது 'ஆமாம் ஸார்! ஊரிலே வியாதியே கிடையாது; சீதோஷ்ண நிலை ரொம்ப சுகமாயிருக்கிறது. இது காலரா வரவேண்டிய காலம். ஆயினும் அதைக் காணவே காணோம். டாக்டர்களுக்கு உறுதுணையான மலேரியா கூட எங்கோ மலைவாசம் செய்யப் போய்விட்டதாகக் காண்கிறது. ஒருவருக்கும் ஒரு வயிற்றுவலிக் கூடக் கிடையாது. இம்மாதம் பிறந்து, முழுமையாக மூன்று ரூபாய்க்குக் கூட பில் போட்டு அனுப்பவில்லை. இந்த மாத காலட்சேபம் எப்படி நடக்கப் போகிறதோ ஆண்டவனுக்கே வெளிச்சம். இந்த லட்சணத்தில் தீபாவளி வேறு வருகிறது.''

ஏன் நேயர்களுக்கு இப்போது மட்டைக்கு இரண்டே கீற்றென விளங்கி விட்டதல்லவா?

''என்னப்பா இது? ஊரிலே நோய் நொடி இல்லாமலிருந்தால் சாதாரணமாய் எல்லாரும் சந்தோஷப்படுவார்கள். நீ துக்கப்படுகிறாயே?'' என்று வினவினேன்.

''இது கலியுகமல்லவா? எல்லாம் தலைகிழ்ப் பாடம்!'' என்று பதில் வந்தது.

உலகத்தில் தற்போது பல காரியங்கள் தலைகிழாக நடைபெறுகின்றன என்பதில் சந்தேகமில்லை. இவற்றுள் சில கொஞ்சம் கோணலானவை; இன்னும் சில அதிகம் கோணலானவை; அடியோடு தலைகுப்புறக் கவிழ்ந்து கிடப்பவை ஒரு சில; இவற்றுள் தலைமையானது வைத்தியத் தொழிலாகும். ஊரில் எவ்வளவுக்கெவ்வளவு நோய் அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு வைத்தியர்களுக்கு

பிழைப்பு. எனவே மாரியம்மன், காளியம்மன், பெண் கொசுத் தெய்வம் முதலியவர்களுடன் வைத்தியர் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள் (பெண் கொசுதான் மனிதரைக் கடிக்கும். ஆண் கொசு சைவ விரதங்கொண்டது என்னும் உண்மை இதற்குள்ளாக நேயர்கள் எல்லாருக்கும் தெரிந்திருக்கமென்று நம்புகிறேன். விஞ்ஞான சாஸ்திரிகள் அப்படிச் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்வதை நம்பத்தான் வேண்டும் நம்பாதவர்கள் நாகரிகமடையாதவர்கள். சூரிய மண்டலத்தில் மனிதர்கள் உண்டு என்று ஒரு விஞ்ஞானப் புலவர் சொல்வார். சூரிய மண்டலத்தில் மனிதர்கள் இல்லை என்று மற்றொரு விஞ்ஞான பண்டிதர் புகல்வார். இரண்டையும் நம்பித்தான் ஆக வேண்டும். புதிய விஞ்ஞானிகள் கூறுவன அனைத்தையும் அப்படியே நம்புவதும், பழைய ஞானிகள் கூறியன எல்லாவற்றிலும் அடியோடு அவநம்பிக்கை கொள்வதும் தான் நாகரிகத்துக்கு அழகு.)

ஊரில் காலரா, வைசூரி முதலியவை வந்தால் காளித்தாய்க்கும், மாரியம்மனுக்கும் கொண்டாட்டம்; வைத்தியர்களுக்கு அளவில்லாத பூரிப்பு. ஆனால் கொசு தேவிக்கு ஏன் கோயில் கட்டப்படவில்லை. இந்தக் கைங்கரியத்தக்கு யாரேனும் ஓர் ஆஸ்திகப் பிரபு முன் வருவாரென நம்புகிறேன்.

சீன தேசத்தார் இவ்விஷயத்தில் வழி காட்டிகளாயிருக்கிறார்கள். அந்நாடு ஒன்றில்தான் வைத்தியத்தொழில் நேரிய முறையில் நடந்து வருகிறதென்னலாம். சீனத்தில் நோயைத் தீர்ப்பதற்காக ஜனங்கள் வைத்தியர்களுக்குப் பணம் கொடுப்பதில்லை. நோய் வராமல் தடுப்பதற்காகப் பணம் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பத்திலும் மாதம் இவ்வளவு ரூபாய் என்று வைத்தியருக்குக் கொடுத்து வருவார்கள். வீட்டில் யாருக்கும் நோய் வராமல் வைத்தியர் பார்த்துக் கொள்ளவேண்டும். நோய் 'வந்துவிட்டால் அந்த மாதத்தில் வைத்தியருக்குப் பணம் கிடையாது. இது எவ்வளவு நல்ல ஏற்பாடு பாருங்கள்? இந்த ஏற்பாட்டின்படி நோய் வராமல் பார்த்துக் கொள்வதில் வைத்தியர்களுக்குச் சிரத்தை இருக்கிறது. ஆனால் நம் நாட்டிலோ நோய் குணமாகாமலிருக்கும் வரையில்தான் டாக்டர்களுக்கு வருமானம். டாக்டர்களும் மனிதர்கள் தானே? எனவே, நோயைக் குணப்படுத்துவதில் நமக்குள் 'அவசரம் அவர்களுக்கில்லையென்றால் அதில் ஆச்சரியம் என்ன?

நம் நாட்டில் முன் காலத்திலிருந்த முறையாவது கொஞ்சம் மத்திய தரமென்று சொல்லலாம். யாருக்காவது வியாதி வந்தால் வைத்தியரைக் கூப்பிடுவார்கள். வைத்தியர் மருந்து கொடுப்பார். மருந்து கொடுக்குங்கால் காலையில் படி அரிசியும், வெற்றிலை பாக்குந்தான் பெற்றுக் கொள்வார். சிலர் மருந்துச் செலவுக்கென்று கொஞ்சம் பணமும் வாங்கிக் கொள்வதுண்டு. நோயாளி குணமடைந்து எழுந்த பின்னரே ''சோமன் ஜோடு'' முதலியவை சன்மானம் செய்யப்படும். ஆனால் மேனாட்டு நாகரிகம் வந்து புகுந்த பின்னர் எல்லாம் அடியோடு தலை கீழாகி விட்டன. இப்போது இங்கிலீஷ் டாக்டர்கள், ஆயுர்வேத வைத்தியர்கள், சித்த வைத்தியர்கள், யூனானி ஹக்கீம்கள் எல்லாரும் ஒரே முறையைத்தான் கையாளுகிறார்கள். நோயாளி பிழைத்தாலும் செத்தாலும் 'பில்' என்னமோ தவறாமல் பிரசன்னமாகிவிடும்.

டாக்டர்களில் பலவகை உண்டு. இரண்டொரு வகைகளைப்பற்றி மட்டும் இங்கே கூறுகிறேன். ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்து செல்வர்களிடம் அதிகப் பணம் வாங்குவோர் ஒரு வகை. ஆனால் இவர்களிடம் ஒரு தொந்தரவு என்னவென்றால் ஏழைகளுக்கு வைத்தியம் செய்ய மட்டும் இவர்களுக்கு அவகாசமே கிடைப்பதில்லை. ஆயினும், ''அவரா! புண்ணியவனாயிற்றே! பணக்காரர்களிடம் கண்டிப்பாய்ப் பணம் வாங்கினாலும் ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம் செய்கிறார்'' என்று ஊரில் பேசிக்கொள்வார்கள். மற்றொரு வகை டாக்டர்கள் கை நீட்டிப் பணம் வாங்குவதில்லை என்று விரதம் கொண்டவர்கள். ஆனால், மேஜைமீது அவரவர்களுக்கு விருப்பமான தொகையை வைத்துவிட்டுப் போகலாம். இது ஒரு சௌகரியமான விரதம். கைநீட்டிப் பணம் வாங்குவதென்று வைத்துக் கொண்டால் நோயாளிகளும் அவர்களுடைய இஷ்டமித்திர பந்துஜனங்களும் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லும்படி நேரும். ஆனால், மேற்கூறிய விரதம் எடுத்துக் கொள்பவர்களுக்கு இந்தச் தொல்லை இல்லை. அவர்கள் மௌன விரதத்தையும் மேற்கொள்ளலாம். மொத்தத்தில் பணம் வருமானமும் குறையாது. சாதாரண டாக்டர்கள் ஒரு நோயாளிக்கு வைத்தியம் பார்க்கும் நேரத்தில் இத்தகையவர்கள் பத்துப் பேருக்குப் பார்த்து விடுவார்கள்.

நோயாளிகளைக் கொண்டு, மருந்து ஆராய்ச்சி நடத்தும் டாக்டர்கள் சிலர் உண்டு. புதிதாக மருந்து ஜெர்மனியிலி

ருந்து புறப்படும். அதன் சக்தியைத் தெரிந்து கொள்வது எப்படி? தங்களிடம் வரும் முதலாவது நோயாளிக்கு அதன் பெயரை எழுதிக் கொடுத்துவிடுவார்கள். அது பயனில்லை என்று தெரிந்தால் வேறொன்று எழுதிக் கொடுப்பார்கள். ஆனால் ஒரு விஷயம். நோயாளிகளை இவர்கள் ஏமாற்றுவது மட்டுமில்லை, ''இதைச் சாப்பிட்டுப் பாருங்கள்'' என்று சொல்லுவார்களேயன்றி ''இதைச் சாப்பிடுங்கள்! குணமாகி விடும்'' என்று சொல்லவே மாட்டார்கள். பெரிய பெரிய டாக்டர்களைப் பற்றி இவ்வளவு தூரம் சொன்னேன். கொஞ்சம் கீழ்த்தரத்தைச் சேர்ந்த இன்னொரு வகை டாக்டர்கள் உண்டு. இவர்கள் மருந்துக் கடையும் வைத்திருப்பார்கள். இத்தகையோரிடம் வைத்தியத்திற்குச் செல்லு முன்பு ஆயிரம் தடவை யோசிக்கும்படி நண்பர்களுக்குச் சொல்லுவேன். ஏனெனில் இவர்களிடம் ஒரு முறை போய்விட்டால், தங்களிடமுள்ள மருந்து வகைகள் எல்லாவற்றிலும் ஒவ்வொரு 'டோஸா'வது உங்கள் உடம்பில் செலுத்திய பிறகுதான் விடுவார்கள். இவர்களிடமிருந்து தப்பிப் பிழைக்க வேண்டுமானால், ஒரு வழிதான் உண்டு. செத்துப் போவதுதான் அந்த வழி!

டாக்டர்களைப் போல்தான் மருந்துகளும். என் நண்பர் வயிற்று வலிக்காக டாக்டரிடம் யோசனை கேட்டார். டாக்டர் ஒரு மாத்திரையின் பெயரை எழுதிக் கொடுத்தார். நண்பர் அம்மாத்திரைகளை வாங்கிச் சாப்பிட ஆரம்பித்தார். முதலில் தினம் ஒரு மாத்திரை சாப்பிட்டார். பயன் விளைந்து வந்தது. சில தினங்களுக்குப் பின்னர் அது பயன் தரவில்லை. டாக்டர் இரண்டு மாத்திரை சாப்பிடச் சொன்னார். இது சில தினங்களுக்குப் பயன் தந்து வந்தது. மறுபடியும் பழைய விதமே ஆயிற்று. இப்போது என் நண்பர், தினந்தோறும் ஒரு புட்டி மாத்திரை விழுங்கி வருகிறார். இன்னும் கொஞ்ச காலத்தில் அவருடைய வருமானம் முழுவதும் மாத்திரை வாங்குவதற்குத்தான் சரியாயிருக்குமென்று தோன்றுகிறது.

நேயர்களுக்குக் கடைசியாக ஓர் எச்சரிக்கை செய்யக் கடமை பட்டிருக்கிறேன். நீங்கள் வைத்தியர்களிடம் வேண்டுமானாலும் போங்கள். அவர்கள் கொடுக்கும் அல்லது எழுதித் தரும் மருந்தை வாங்கிச் சாபபிடுங்கள். ஆனால், பத்திரிகைகளில் மருந்து விளம்பரங்கள் வருகின்றனவே, அவற்றை மட்டும் கண்ணெடுத்துக்கூடப் பார்க்க வேண்டாம். பத்திரிகைளில் விளம்பரமாகும் மருந்துகளெல்லாம் பயனற்றவையென்று நான் சொல்ல வரவில்லை. மருந்து

'விளம்பரங்களைப் பார்க்கவேண்டாமென்று நான் சொல்வதன் காரணம் முற்றும் வேறானது. அந்தக் காரணத்தைச் சொல்வதைவிட, என்னுடைய அனுபவம் ஒன்றைக் கூறினேனானால் உங்களுக்கு நன்றாய் விளங்கிவிடும்.

ஒரு நாள் தினசரிப் பத்திரிகை ஒன்றைப் புரட்டிக் கொண்டிருக்கையில் ஒரு விளம்பரம் கண்ணில் பட்டது. அது ''கல்லீரல் மாத்திரை'' விளம்பரம். அந்த விளம்பரத்தை வாசித்தபோது எனக்குப் பெருமூச்சு வாங்கியது; உடம்பு வியர்த்தது. ஏனெனில் கல்லீரல் கெட்டுப் போயிருந்தால் என்னென்ன அறிகுறிகள் காணப்படும் என்று அவ்விளம்பரத்தில் சொல்லப்பட்டிருந்ததோ, அவ்வளவு அறிகுறிகளும் என்னிடம் இருப்பதாகத் தோன்றிற்று. 'சரி, இதை இத்துடன் விட்டுவிடக்கூடாது; முழுதும் ஆராய்ந்தே தீர வேண்டும்' என்று தீர்மானித்தேன். உடனே அருகிலிருந்த புத்தகசாலை ஒன்றுக்குள் சென்றேன். அங்கே வைத்தியப் புத்தகங்கள் உண்டென்று அறிந்ததும், போன உயிரில் பாதி திரும்பி வந்தது. நோய்களைப் பற்றி விவரிக்கும் அகராதி ஒன்றை வாங்கிக் கல்லீரல் நோயைப்பற்றிப் படிக்கத் தொடங்கினேன். சந்தேகம் அறவே நிவர்த்தியாயிற்று. என் கல்லீரல் நைந்து அழுகி நாசமாய்ப் போயிருக்க வேண்டுமென்று நிச்சயமடைந்தேன். உடனே சென்று அந்த மாத்திரையை வாங்கவேண்டுமென்று தீர்மானித்தேன்.

வந்த காரியம் ஆனதும் எழுந்து போயிருக்கக் கூடாதா? சைத்தான் ஆசை ஒன்று உண்டாயிற்று. ''வந்ததுதான் வந்தோம்; இன்னும் சில ரோகங்களைப் பற்றியும் படிக்கலாமே?'' என்று தோன்றிற்று. எனவே சில ஏட்டைத் தள்ளி மற்றொரு நோயைப் பற்றி படித்தேன். அது ஒரு மகா கொடிய நோய். (பின்னால் சேர்ந்த மனக் குழப்பத்தில் அதன் பெயரை மறந்துவிட்டேன்) நாலைந்து வரி படிப்பதற்குள் ஒரு பயங்கரமான சந்தேகம் எழுந்தது. இன்னும் நாலைந்து வரி படித்ததும் சந்தேகம் நிச்சயமாயிற்று. அப்பயங்கர நோய் என்னைப் பிடித்திருந்த தென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. கால் கட்டை விரல் முதல் உச்சந்தலை வரையில் ஒரு நடுக்கம் உண்டாயிற்று. பின்னர் நடுங்கிக் கொண்டிருந்த விரல்களால் மற்றொரு ஏட்டைப் புரட்டினேன். டைபாய்டு சுரம் வந்தது. ஆனால், என் உடம்புக்கு அது வந்து குறைந்தது ஆறு மாதாமாயிருக்க வேண்டுமெனத் தெளிவாயிற்று. இதன் பின்னர் எனக்கு அச்சத்தைவிட ஆச்சரியமே அதிகமாயிருந்தது. எனக்குத் தெரியாமல் இத்தனை நோய்கள் எவ்வாறு வந்திருக்கக்கூடும்.

இதை அடியிலிருந்து ஆரம்பித்து, ஆராய்ச்சி செய்து விடுவதென்று தீர்மானித்தேன்: 'ஏ'யிலிருந்து தொடங்கினேன். புத்தகம் ஆங்கிலப் புத்தகம் என்று நேயர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லையல்லவா? வரிசையாக நோய்களைப் படித்துக்கொண்டே வந்தேன். காசநோய் எனக்கிருப்பதாகத் தெரிந்தது. ஆனால் அதைப்பற்றிப் பயமில்லை. காசநோயுடன் பல வருஷ காலம் உயிரோடு இருக்கலாம். க்ஷயரோகம் எனக்குப் பிறவியிலேயே உண்டென்று தெற்றென விளங்கிற்று. இன்னும் மலேரியா, வைசூரி, இன்புளுயன்ஸா, நிமோனியா ஆகியவையெல்லாம் ஒவ்வொரு நிலையிலிருந்தன. கடைசி எழுத்து (இஜட்) முடியப் படித்தேன். காக்கை வலிப்பு ஒன்றைத் தவிர மற்றெல்லா நோய்களும் என்னைப் பிடித்திருந்ததாக உறுதி பெற்றேன். இது குறித்து முதலில் கொஞ்சம் வருத்தமாய்த் தான் இருந்தது. காக்கை வலிப்பு ஏன் இல்லை? மற்ற எல்லா நோய்களும் வந்திருக்கும் போது, காக்கை வலிப்பு மட்டும் நம்மை அசட்டை செய்து விட்டதே என்று ஏக்கமுண்டாயிற்று.

சட்டென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று. வைத்தியக் கலாசாலை ஒன்றுக்கு நாம் எவ்வளவு உபயோகமாய் இருக்கலாம்? நாம் மட்டும் ஒரு வைத்தியக் கலாசாலைக்குச் சொந்தமாயிருந்தால் மாணாக்கர்கள் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று தனித்தனி நோயுள்ளவர்களைப் பார்த்துக் கொண்டு அலையத் தேவையில்லை நாமே ஒரு வைத்தியசாலை! யானை முகக் கடவுள் பரமசிவனைச் சுற்றி விட்டுப் பழத்தை வாங்கிக் கொண்டதுபோல், மாணாக்கர்கள் நம்மைப் பார்த்து ஆராய்ந்துவிட்டுப் பட்டம் பெறலாம் என்று எண்ணினேன். அப்படி வைத்தியக் கலாசாலை ஏதேனும் என்னை வாங்குவதாயிருந்தால் பதினாயிரம் ரூபாய்க்குக் குறைந்து விற்பதில்லையென்றும், அதற்குமேல் கிராக்கிக்குத் தகுந்தாற்போல் பார்த்துக் கொள்வதென்றும் முடிவு செய்திருந்தேன்.

இதற்குள் இன்னொரு நினைவு எழுந்தது. எல்லாவற்றிற்கும் உயிரோடிருந்தாலல்லவா? கை நாடியைப் பிடித்துப் பார்த்தேன். முதலில் நாடி அடிப்பதாகவே தெரியவில்லை. திடீரென்று அதிவேகமாக அடிக்கத் தொடங்கிற்று. எண்ணியத்தில் ஒரு நிமிஷத்தில் 136 தடவை அடித்ததாகத் தெரிந்தது. பின்னர் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தேன். நெஞ்சு அடித்துக் கொள்ளவேயில்லை. இப்போது உயிரோடிருக்கிறேனா, செத்துப் போனேனா என்பதே சந்தேகமாகி

விட்டது. தொடையில் கிள்ளிக் கொண்டேன்; கொஞ்சம் வலித்தது. உயிர் சிறிதளவு ஒட்டிக் கொண்டிருக்கிறதென்று தைரியம் பிறந்தது. ஆனால், புத்தகசாலையிலிருந்து வெளியே வருவதற்குக் கூட உடம்பில் பலமில்லை. மெதுவாக சுவரைப் பிடித்துக் கொண்டு வெளியே வந்து, ஒரு ஜட்கா வண்டி பிடித்து இக்கட்டுரையின் தலைப்பில் குறிப்பிட்ட டாக்டர் வீட்டுக்கு ஓட்டச் சொன்னேன். அவர் எனது நெடு நாள் நண்பர். அடிக்கடி கை பார்ப்பார்; 'தர்மா மீட்ட'ரில் வெப்பநிலை அளந்து சொல்லுவார்; தாகமாயிருக்கிறதென்றால், ஏதேனும் 'மிக்சர்' (கலப்பு மருந்து) கொடுப்பார். அவருக்கு நன்றி செலுத்த இது நல்ல சமயம் என்று தோன்றிற்று. ஊரில் வியாதி இல்லையென்று அவர் வருத்தப் பட்டுக்கொண்டிருந்தார். ஒரு வியாதி இரண்டு வியாதியுடைய ஆயிரத்தைந்நூறு நோயாளிகளும் சரி, நான் ஒருவனும் சரியல்லவா? என்னால் பணம் கிடைக்காவிட்டாலும், பணக்கவலை தோன்றாவண்ணம் அவருக்குப் பொழுது போக்காவது ஏற்படுமல்லவா?

''உமக்கென்ன வந்தது?'' என்று அந்த டாக்டர் நண்பர் கேட்டார். நான், ''எனக்கு வந்திருக்கும் வியாதியையெல்லாம் சொல்லத் தொடங்கினால் நான் சொல்லி முடிப்பதற்குள் நீர் செத்துப் போனாலும் போகலாம். ஆதலின், எனக்கு என்ன வரவில்லை என்பதைச் சொல்கிறேன். காக்கை வலிப்பு எனக்கு வரவில்லை, ஏன் அது வரவில்லை என்று நான் அறியேன். அது வரவில்லை என்பது உண்மை. மற்ற எல்லா ரோகங்களும் எனக்கு வந்திருக்கின்றன'' என்றேன். பின்னர் இதைக் கண்டு பிடித்த வரலாற்றைக் கூறினேன். அவர் என் கையைப் பிடித்து பார்த்தார். பிறகு என் மார்பில் இரண்டடி அடித்தார். அது ஒரு வகைப் பரிசீலனை என்று சமாதானம் சொல்லி மருந்தும் எழுதிக் கொடுத்தார். அம் மருந்து தம்மிடம் இல்லையென்றும், மருந்துக் கடைக்குப் போகும் படியும் சொன்னார்.

மருந்துக் கடைக்குச் சென்று சீட்டை நீட்டினேன். கடைக்காரன் சீட்டைப் படித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தான். என்னை ஏற இறங்கப் பார்த்தான். ''இது மருந்துக் கடையல்லவா?'' என்று கேட்டேன். ''ஆம்; இது மருந்து கடைதான். ஆனால் இதை மளிகைக் கடை அல்லது சாப்பாடு ஹோட்டல் என்று நீர் நினைத்த காரணம் என்ன?'' என்றான் கடைக்காரன். சீட்டைப் பிரித்துப் படித்தேன்:-

1. காற்படி கைக்குத்தலரிசிச் சோறு (பருப்பு, நெய், மோர் உட்பட) இரண்டு வேளை.

2. ஓர் இளநீர், அகப்பட்டால் இரண்டு ஆரஞ்சும் சில திராட்சைப் பழங்களும்.

3. தினம் ஐந்து மைல் நடத்தல்.

4. இரவு ஒன்பது மணிக்குப் படுக்கை

5. தெரியாத விஷயங்களில் தலையிடாமல் வாலைச் சுருட்டிக் கொண்டிருத்தல்.

ஆமாம். எனக்குத் தலைகால் தெரியாத கோபம் வந்தது. அதிலும் அந்தக் கடைசி யோசனை! டாக்டர்களே இப்படித்தான். உறவினர் அல்லது நண்பர்களுக்கு நோய் வந்தால் இந்த மாதிரியான அசட்டுப் புத்திமதி ஏதேனும் சொல்லி விடுவார்கள். அந்நியர் யாருக்காவது நோய் வந்தால் மட்டும் கடையிலுள்ள மருந்துகள் எல்லாம் போதா. ஆயினும் நிதானமாக யோசித்ததில் அவருடைய புத்திமதியைக் கடைப்பிடிப்பதே புத்திசாலித்தனமென்று தீர்மானித்தேன்.

கடைசியாக ஒரு விஷயம். மேற்படி மருந்துச் சீட்டில் என் நண்பர் 'அந்தரங்கம்' என்று குறிப்பிட்டிருந்தார். எனவே, அதை யாருக்கும் சொல்லவேண்டாமென்று நேயர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம் ஒரு கழுதை

முதலில், நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். யாரிடம் என்று நேயர்களுக்கு சொல்ல வேண்டியதில்லை. கழுதையிடந்தான்! கழுதையைச் சட்டத்துடன் ஒப்பிட்டது கழுதைக்கு அகௌரவமாகத் தோன்றலாம். ஆனால், இந்த அவதூறுக்கு நான் பொறுப்பாளியல்ல. ''சட்டம் ஒரு கழுதை'' என்று கூறியவர் ஓர் ஆங்கில ஆசிரியர். எனவே அவதூறு வழக்குத் தொடர எண்ணினால், தப்பு! மன்னிக்க வேண்டும். கோர்ட்டுக்குப் போவது போன்ற அறிவீனமான செயலைக் கழுதை செய்யுமா, என்ன!

எனினும், சட்டத்தைக் கழுதையுடன் ஒப்பிடுவது மிகவும் பொருத்தமான விஷயம் என்று நான் குறிப்பிடாதிருக்க முடியவில்லை அவதூறு வழக்கைப் பற்றிய அச்சம் இல்லாதபடியால் இதைத் தாராளமாகச் சொல்லலாம். இரண்டு கழுதைகள் வண்ணான் மூட்டைகளைச் சுமந்து கொண்டு போகும்போது யாராவது பார்த்ததுண்டா? நான் பார்த்திருக்கிறேன். அவற்றின் பேச்சை நம்மால் அறிந்து கொள்ள முடியுமானால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று நான் எண்ணுவதுண்டு. ஒருகால் அவை பின்வருமாறு பேசிக்கொண்டு போகலாம்.

முதல் கழுதை: அண்ணே! இந்த இரண்டு கால் பிராணியின் கர்வத்தைப் பார்த்தாயா? நம்மைப் பார்த்துக் கையெடுத்துகூடக் கும்பிடாமல் விறைப்பாய்ச் செல்கிறது.

இரண்டாம் கழுதை :- ஆம். தம்பி! இந்த மனிதன் என்னும் ஐந்து மிகவும் நன்றி கெட்டது. நாம் 'பொதி போன்ற மூட்டைகளைச் சுமந்து துணி வெளுத்துக் கொண்டு வந்து தராவிட்டால் தன்னுடைய தளுக்கான உடையும், கிறுக்கான நடையும் என்ன ஆகும் என்பதைச் சிறிதும் கவனித்துப் பார்ப்பதில்லை.

இந்தச் சம்பாஷணையை அகச்செவியினால் நான் கேட்குந் தோறும், ஐரோப்பியர்கள் கீழ்நாட்டுக் கறுப்பு மனிதர்களின் சுமையைச் சுமந்து திரிவது என் ஞாபகத்துக்கு வரும். அடுத்தாற் போல், சட்டத்தைப் பற்றி ஆங்கில ஆசிரியர் கூறியதும் நினைவில் தோன்றும். ஆம், கழுதையின் மீது எவ்வளவு சுமை போட்டாலும் அது எப்படி

முணுமுணுக்காமல் சுமந்து செல்கிறதோ, அப்படியே சட்டத்தின் மீது எவ்வளவு பாரம் போட்டாலும் அது தாங்குகிறது. உங்களுக்கு இதில் சந்தேகமிருந்தால் ஓர் உதாரணம் கூறுகிறேன்.

சென்னை ஹைகோர்ட்டில் சில மாதங்களுக்கு முன் பந்தகப் பத்திரம் சம்பந்தமான ஒரு வழக்கு நடந்தது. பந்தக நிலங்களில் தனக்கு ஜீவனாம்ச பாத்தியம் உண்டென்று மீனாக்ஷியம்மாள் என்னும் பெண்மணி ஒரு குறுக்கு வழக்குத் கொடுத்தாள். அதில் அந்த அம்மாளுக்கு அனுகூலமாகத் தீர்ப்புக் கிடைத்தது. ஜீவனாம்சத் தொகையும் செலவுத் தொகையுமாகச் சேர்த்து ரூ 503-8-0 அந்த அம்மாளின் வக்கீல் ஸ்ரீமான் விசுவநாதய்யர் பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுக் கொண்டார். ஆனால், இந்தப் பணத்தை அவர் மீனாக்ஷியம்மாளிடம் கொடுக்க வில்லை. பல முறைகேட்டும் பயனில்லாமற் போகவே, அந்தப் பெண்மணி வக்கீல்மீது வழக்குத் தொடுத்தாள். இவ் வழக்கு கீழ்க் கோர்ட்டுகளையெல்லாம் தாண்டி, ஹைகோர்ட்டுக்கு வந்தது. நீதிபதி மாதவநாயரும் நீதிபதி ஜாக்ஸனும் வழக்கை விசாரித்தார்கள். வக்கீல் ஸ்ரீமான் விசுவநாதய்யரின் சார்பாக மாஜி நீதிபதி வி.வி. சீனிவாசய்யங்கார் தோன்றி வாதமிட்டார். மேற்படி ஜீவனாம்ச வழக்கில் ஸ்ரீமான் விசுவநாதய்யருக்கு வக்கீல் கூலி ரூ.550 வரவேண்டுமென்றும், அதற்காகத்தம் கட்சிக்காரர்க்குத் தீர்ப்பான தொகையை அவர் நிறுத்திக் கொண்டதாகவும் அவர் எடுத்துக் கூறினார்.

ஏன்? நன்றாயிருக்கிறதல்லவா! ஜீவனாம்சமும் செலவுத் தொகையும் சேர்த்து ரூ.503-8-0. இந்தத் தொகைக்காக வழக்கு நடத்திய வக்கீலுக்குக் கூலி ரூ.550. இது அநீதியேயானாலும், சட்டம் அதற்கு இடங்கொடுக்கின்றதென்றும், வக்கீல் குற்றவாளியல்ல என்றும் கனம் நீதிபதிகள் தீர்ப்பளித்தார்கள்! இது சம்பந்தமாக சட்டத்தைத் திருத்தியமைத்தல் நலமென்று அவர்கள் யோசனை சொன்னார்கள்.

அதுதான் விஷயம். சட்டம் வேறு நீதி வேறு. இரண்டும் ஒன்றுதான் என்று நாட்டில் சிலர் நினைக்கிறார்கள். இப்படி நினைத்த சாது மனிதன் ஒருவன் வெளியூர் கோர்ட் ஒன்றில் நீதிபதியைப் பார்த்து ''எஜமானே! நீதி வழங்க வேண்டும்'' என்று முறையிட்டான். நீதிபதி கொஞ்சம் நகைச்சுவையுள்ளவர், அவர் உடனே ''இங்கே நீதி கிடையாது அப்பனே நீதி கிடையாது, சட்டம்தான் உண்டு'' என்பது பதில் கூறினார். ஏழை ஸ்திரீ ஒருத்தியின் ஜீவனாம்சத் தொகை

முழுவதையும் வக்கீல் விழுங்கிவிடுதல் நீதிக்குப் பொருந் தாது என்று குட்டிச்சுவரைக் கேட்டாலும் சொல்லும். இதைத் தென் ஆப்பிரிக்க கொள்ளைக்காரன் கூட ஒப்புக் கொள்வான். ஆனால் சட்டம் அதற்கு இடம் கொடுக்கிறது. சட்டத்தின் படி வக்கில் தமக்குச் சேரவேண்டிய பாக்கி ரூ. 46-8-0க்கு அந்தப் பெண்மணியின் மீது வழக்குத் தொடராதி ருந்தாலோ பெரும் பாக்கியம்! ''சட்டம்- ஒரு கழுதை'' என்ற ஆங்கில ஆசிரியரின் வாக்கு உண்மையா, அல்லவா?

சில வருஷங்களுக்கு முன்னர் நடந்த மற்றொரு வழக்கைப்பற்றிச் சமீபத்தில் கேள்விப்பட்டேன். இரண்டு சகோதரர்கள் தங்கள் தகப்பனார் வைத்துச் சென்ற இரண்டு லட்ச ரூபாய் சொத்தைப் பிரித்துக் கொண்டார்கள். சொத்துப் பிரிவினை எல்லாம் சமரசமாக முடிவடைந்து, கடைசியில் தகப்பனார் பூஜை செய்து வந்த, 'ஸாளக் கிராம'த்தைப் பிரித்துக் கொள்வதில் தகராறு ஏற்பட்டது. இதில் சமரசம் ஏற்படாமல் போகவே சகோதரர்கள் கோர்ட்டுக்குச் சென்றார் கள். ஹைகோர்ட் 'புல்பெஞ்சு' வரைக்கும் போய் வழக்காடி னார்கள். பிரித்துக் கொண்ட ஒரு லட்ச ரூபாய் சொத்தில் ஒரு தம்பிடி பாக்கியின்றி இருவரும் செலவழித்தார்கள். முடிவாக ஸாளக் கிராமத்தை இரண்டாய் உடைத்து தலைக்கு ஒரு பாதி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு அளிக்கப்பட்டது! எனவே ஒரு சந்தேகம். மேற்படி ஸாளக் கிராமத்திடம் இவ்விரு சகோதரர்களை விட அதிக பக்தி கொண்டு மானஸ பூசை செய்துவந்த சில வக்கீல்மார் கள் இருந்திருக்கலாமோ? அந்தப் பக்தர்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று 'ஸாளக் கிராமம்' திருவுளங் கொண்டிருக்க லாமல்லவா?

மயிலாப்பூரில் ஏறக்குறைய எழுபது வயதானவரும் ஆசார சீலருமான ஒரு பெரிய வக்கீல் இருக்கிறார். இவர் சமீபத்தில் விவாக வயது கமிட்டியாரின் முன்பு சாட்சியம் தருகையில் பெண்களுக்கு 11 வயதுக்குள் கல்யாணம் செய்து, பெரியவளான பதினாறாம் நாள், சாந்தி முகூர்த்தம் நடத்தி, அதற்கு அடுத்த வருஷம் குழந்தை பிறந்து, அதில் தப்பிப் பிழைத்தால் இருபது வயதிற்குள் கிழவியாகி, கண்ணால் பார்க்க வேண்டுமென்றும், பெண்களுக்கு அடுப் பங்கரைக் கல்வியே அதிகமென்றும், இன்னும் பல முன் னேற்றமான யோசனைகளும் கூறி கடைசியில் இவைதான் தம்முடைய மதம் என்றும், ''என் மதத்துக்காக நான் உயிரையும் விடச் சித்தமாயிருக்கிறேன்'' என்றும் சொல்லி முடித்தார். ஆனால், தற்போது அவர் தினந்தோறும் கோர்ட்

டுக்கு வந்து பணத்துக்காக உயிர் விடுவதைத்தான் நாம் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். இப்பெரியார் சமீபத்தில் ஓர் அரிய யோசனை கூறினார். அதாவது, பத்து வருஷத்திற் குச் சட்டக் கலாசாலையை மூடிவைக்க வேண்டுமென்று அவர் தெரிவித்தார்; இந்த யோசனை எனக்கு மிகவும் பிடித்திருந்தபடியால் சட்டக் கலாசாலை மாணாக்கர் சிலரி டம் அதைப் பற்றி அபிப்பிராயம் கேட்டேன். ''இதைவிட அறுபது வயது தாண்டிவிட்ட வக்கீல்கள் கோர்ட்டுக்கு வரக்கூடாதென்று சட்டம் செய்தால் நலம்'' என்று அவர்கள் சொன்னார்கள். பின்னர், கட்சிக்காரர் சிலரிடம் இந்த யோசனையைப் பற்றிச் சொன்னேன். 'சட்டக் கலாசா லையை மூடுவதை விடக் கோர்ட்டுகள் எல்லாவற்றையும் பத்து வருஷ காலத்திற்கு மூடி விட்டால் சர்வோத்தமமாயி ருக்கும்'' என்று இவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள்.

வக்கீல் தொழிலில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை இவை எல்லாம் தெரிவிக்கின்றன அல்லவா? வக்கீல்களின் கூட்டம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. கட்கிச்காரர்களோ நாளுக்கு நாள் ஏழையாகி வருகிறார்கள். எனவே போகும் வழி என்ன? கொஞ்ச நாளைக்கு முன் மாயவரத்துக்கு ஜில்லா நீதிபதி வந்திருந்த போது வக்கீல்கள் அவரை இந்தக் கேள்விதான் கேட்டார்கள். அதற்கு அந்த நீதிபதி ''வேறு வழி ஒன்றும் எனக்குப் புலனாகவில்லை. ஈஸ்வரனைப் பிரார்த்தியுங்கள்'' என்று பதிலளித்தார். தற்போது மாயவரம் வக்கீல்கள் ''ஈஸ்வரா! வழக்குகளும் கட்சிக்காரர்களும் பெருகும்படி அருள் செய்வாய்'' என்று தினந்தோறும் மூன்று வேளை பிரார்த்தனை செய்து வருகிறார்களென்றும் நம்புகிறேன்.

'ஆகவே, வக்கீல் தொழிலும் தலைகீழ்ப் பாடந்தான் போலும்!' என்று இதற்குள் நேயர்கள் முடிவு செய்திருக்க லாம். அதில் சந்தேகமே கிடையாது. வழக்குகளும், விவகா ரங்களும் அதிகமாக ஆக, வக்கில்களும் வருவாய் அதிகம் என்று இருக்கும் வரையில் அவர்கள் சமரசத்தில் அதிகப் பற்றுக் கொள்ளாதிருப்பதில் ஆச்சரியம் இல்லை அல்லவா? வைத்தியர்களைப் போலவே வக்கீல்களும் மனிதர்கள்தான் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். சீன தேசத்தார் வைத்தியர்கள் விஷயத்தில் கையாளும் முறை ஒன்றுதான் இந்நிலைக்குப் பரிகாரமாகும். நம்முடைய குடும்ப வக்கீல், நமக்கும் அண்டை அயலார்களுக்கும் நேரிடும் சச்சரவுகளையெல்லாம் சமரசமாகத் தீர்த்து வைத்து, நம்மைக் கோர்ட்டிற்கு இழுக்காத வரை அவருக்கு

மாதம் இவ்வளவென்று சம்பளம் கொடுத்து வருவோம். ஒரு வேளை கோர்ட்டுக்குப் போக நேர்ந்து விட்டால் சம்பளத்தை நிறுத்திவிட வேண்டும். ஸ்டாம்பு கட்டணம் முதற்கொண்டு, கோர்ட்டுச் சேவகனுக்குக் கொடுக்கும் இனாம் வரையில் எல்லாச் செலவுகளும் வக்கீலே செய்ய வேண்டும்.

போலீஸ் இலாகா விஷயத்திலும் ஏன் இதே முறையைக் கையாளக்கூடாது? ஊரில் திருட்டு, கொலை, கலவரம் நிகழாதிருக்கும் வகையில் போலீஸ்காரர்கள் தாராளமாகச் சம்பளம் வாங்கிக் கொள்ளட்டும். அதிக காலம் எந்தப் பிரதேசத்தில் குற்றம் நடவாமலிருக்கிறதோ, அந்தப் பிரதேசத்திலுள்ள போலீஸ்காரர்களுக்கு சம்பள உயர்வும் உத்தியோக உயர்வும் அளிப்போம். ஆனால் கொலையும் களவும் எங்கே நிகழ்கின்றனவோ, அங்கேயுள்ளவர்களுக்குச் சம்பளப் பிடித்தம் செய்வோம். ஏன்? முதல் தரமான ஏற்பாடல்லவா? இதற்கு மாறாக இப்போதுள்ள ஏற்பாட்டின் ஊழலைக் கவனியுங்கள். கொலை களவு நடந்த பின்னர் குற்றவாளிகளை யார் கண்டு பிடித்துத் தண்டனை வாங்கி வைக்கிறார்களோ அவர்களுக்குத் தான் சம்பள உயர்வு, உத்தியோகம் பதவி எல்லாம்! இந்த நிலையில், நீங்களே போலீஸ்காரர்களாயிருந்த போதிலும் குற்றம் நிகழாமல் தடுப்பதில் உங்களுக்குச் சிரத்தை இருக்குமா? நெஞ்சில் கை வைத்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்!

இதே முறையை வேறு சிலர் விஷயத்தில், நீங்களே கையாண்டு பார்க்க விரும்புவீர்களென்பதை நான் அறிவேன். உதாரணமாக, சிற்சில ஆசாமிகள் புதிய நாவல் எதுவும் எழுதாமலிருப்பதற்காக நீங்கள் பணம் கொடுக்க சித்தமாயிருப்பீர்கள். சில பத்திரிகைகள் வெளிவராமலிருக்கும் பொருட்டுப் பணம் கொடுக்கவும் சம்மதிப்பீர்கள். உங்களுக்கு அடுத்த வீட்டில் உள்ள சங்கீத வித்வான் பாடாமலிருப்பதற்கும், உங்கள் வீதியில் வசிக்கும் நாதசுரக்காரர் நாயனம் வாசிக்காமலிருக்கவும், சிற்சில நடிகர்கள் அரங்கத்திற்கு வராமலிருக்கவும், சிற்சில பிரசங்கிகள் மேடையில் ஏறாமலிருக்கவும் இப்படி இன்னும் எத்தனையோ காரியங்களுக்கு நீங்கள் சந்தோஷமாகப் பணம் கொடுக்க ஒப்புக் கொள்வீர்கள் என்பது எனக்கு நன்கு தெரியும்.

வாக்கு வேட்டை

முன்னுரை

நேயர்கள் சற்றே சிரித்து மகிழ வேண்டும். கொஞ்சம் புன்னகையேனும் கொள்ள வேண்டும்-என்ற நல்ல எண்ணத்துடனேயேதான் நான் எழுதி வருகிறேன். ஆனால், இந்த நல்ல எண்ணம் எவ்வளவு தூரம் பலிதமாகி வருகிறதென்று எனக்குத் தெரியாது. சென்னை நகரில் ஒரு பிரபல அரசியல்வாதி இருக்கிறார். அவருக்கு மற்றவர்களைப் போல் தாமும் நகைச்சுவை ததும்பப் பேச வேண்டும் என்னும் ஆவல் மிகுதியுண்டு. எனவே, அவர் மேடைமீது நின்று பேசும் போது மிக்க ஹாஸ்ய ரசத்துடன் பேசுவதாக, தாமே எண்ணிக் கொண்டு இடையிடையே "ஹா! ஹா! ஹா!!!" என்று சிரிப்பார். ஆனால், பொதுக் கூட்டத்துக்கு வரும் ஜனங்கள் இருக்கிறார்களே-அப்பா! சிறிதும் அநுதாபம் இல்லாதவர்கள். வாயில் கொழுக்கட்டை உள்ளவர்களைப் போல் உம்மென்று உட்கார்ந்திருப்பார்கள். ஆனால் பிரசங்கி இதைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. அவர் பாட்டுக்குப் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் போவார். எனக்கும் அவருடைய கதி தானோ என்னமோ தெரியாது. அவருக்காவது ஓர் ஆறுதல் உண்டு. பொது ஜனங்கள் எப்படியிருந்தாலும் பத்திரிகை நிருபர்கள் மட்டும் எப்போதும் நகைச்சுவை மிகுதியுள்ளவர்கள். மற்றவர்களுக்கு ஒன்றும் புலப்படாத இடங்களில் கூட அவர்கள் ஹாஸ்யரஸத்தை கண்டு பிடித்து விடுவார்கள். எனவே மேற்படி தலைவரின் பிரசங்கம் மறுநாள் பத்திரிகைகளில் வரும்போது இடையிடையே நகைப்பு, சிரிப்பு, பலத்த சிரிப்பு, விடா நகைப்பு, பரிகாசச் சிரிப்பு முதலிய சொற்களும், சொற்றொடர்களும், மிளிர்வதைக் காணலாம். இந்த ஆறுதல் கூட எனக்குக் கிடையாது. நான் எழுதும் கட்டுரை அல்லது கதையிலே நானே சிரிப்பு, நகைப்பு என்று போட்டுக் கொள்ளுதல் நன்றாயிருக்குமா? இது நிற்க.

கீழே வரும் கதையில் சிறிது சோகரசமும் என்னை அறியாமல் கலந்து விட்டதோ என்று சந்தேகமாயிருக்கிறது. எதற்கும் முன்னதாக எச்சரிக்கை செய்து விடுவது நலமென்று கருதி இம்முன்னுரையை எழுதினேன்.

கதை

நமது கதை 1926-ஆம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் காலை ஐந்து மணிக்கு நாட்டுப் புறத்துச் சாலையொன்றில், இரட்டை மாடு பூட்டிய ஒரு கட்டை வண்டியில் ஆரம்பமாகிறது. (இதுதான் 'நாவல்'களும் கதைகளும் தொடங்குவதற்குரிய நவீன முறை. நேயர்கள் கவனித்துக் கொள்க) வண்டி 'லொடக் லொடக்' என்று ஆடிக்கொண்டே போயிற்று. வண்டிக்காரக் கௌண்டர் அரை நிமிடத்துக்கொரு முறை 'ஹாய்' 'ஹாய்' என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தார். நான் சற்று கண்ணயர்வதும் வண்டி சாலையிலுள்ள பள்ளத்தில் விழுந்து எழுந்திருக்கும் போது திடுக்கென்று விழித்துக் கொள்வதுமாயிருந்தேன். ஒவ்வொரு சமயம் வண்டிக் கூண்டின் முனைகள், மண்டையிலோ தோள் பட்டை எலும்பிலோ மொட்டென்று தாக்கும். வண்டியில் என்னுடன் இருந்த வண்டிக்காரக் கௌண்டரின் மகன் கண்ணன் சிற்சில சமயம் தொப்பென்று என் மேலே விழுவான். அச்சமயங்களில் நான் அவனுக்குக் கொடுத்த மானஸீக சாபங்களை இங்கே எழுதுவது முறையல்ல. ஏனெனில் கண்ணன் தான் நமது கதாநாயகன். வாசகர்களுக்கு அவன் மீது முதலிலேயே கெட்ட எண்ணம் உண்டாக்கிவிடக் கூடாதல்லவா?

இவ்வாறு ஆயிரம் முறை உறங்கி விழித்த பின்னர். பறவைகளின் உதயகானத்தைக் கேட்டுக் கண் விழித்து எழுந்து உட்கார்ந்தேன். கீழ்வானம் பொன் மயமாகத் திகழ்ந்தது. பால சூரியன் இன்ப ஒளித் திரளாக அப்போது தான் உதயமாகிக் கொண்டிருந்தான். மனோகரமான இளங் காற்று வீசிற்று. சாலையின் ஒரு புறத்தில் இருந்த விசாலமான தோப்பிலிருந்து ஆயிரக்கணக்கான புள்ளினங்கள் 'காகூ' வென்று பற்பல சுரங்களில் பாடிக் கொண்டே நானா திசைகளையும் நோக்கிப் பறந்தோடின. குடியானவர்கள் புலங்களுக்குத் தண்ணீர் இறைத்துக் கொண்டே பாடிய ஒலி, எங்கேயோ வெகு தூரத்திலிருந்து காற்றுடன் கலந்து வந்து கேட்டது. நேயர்களுக்கு ஓர் இரகசியச் செய்தி. உண்மையில் இந்த விவரங்களையெல்லாம் அப்போது நான் கவனிக்கவேயில்லை. கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்ததும், வழியில் இட்லி காப்பி எங்கேயாவது கிடைக்குமா என்பதில்தான் புத்தி நாட்டங் கொண்டிருந்தது. ஆனால், கதை என்று ஒன்று எழுதினால், அதில் இது போன்ற இயற்கை வர்ணனைகள் மிகவும் அவசியம்; இல்லாவிடில் ரஸப்படாது. ஆகையினால் தான் பின்னால் யோசனை செய்து இந்த வர்ணனையை எழுதினேன்.

புதுக் கதைக்கு இன்றியமையாத அம்சங்களான முடுக்கான ஆரம்பம், இயற்கை வர்ணனை இவ்விரண்டும் இப்போது அமைந்துவிட்டபடியால், இனிமேல் நான் கதையை உள்ளது உள்ளபடியே சொல்லிக் கொண்டு போகலாம். கௌண்டரும் நானும் நெடுங்கால நண்பர்கள். ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால், நான் தற்போது சென்னைவாசி. அவர் கிராமத்திலேயே வசித்து வந்தார். அவருக்குக் கொஞ்சம் நிலபுலம் உண்டு. அத்துடன் வாடகை வண்டியும் ஓட்டி நாலு பணம் சம்பாதிப்பார். வருஷமொருமுறை நான் ஊருக்குப் போவது வழக்கம். அதுபோல், இவ்வருஷமும் சென்றேன். தற்செயலாகக் கௌண்டர் வண்டி ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்ததால், மேற் கூறியவாறு வண்டியில் ஏறிப் படுத்துக் கொண்டு புறப்பட்டேன். தூக்கம் கலைந்தது. நானும் கௌண்டரும் ஊர் விஷயங்கள் பலவற்றையும் குறித்துப் பேசத் தொடங்கினோம். வண்டி பாதி தூரம் போன பின்னர் கண்ணன் ''அப்பா! உட்கார்ந்து உட்கார்ந்து காலை குறக்களி வாங்குகிறது. நடந்து வருகிறேன்'' என்றான். கௌண்டர் வண்டியை நிறுத்திப் பையனை இறக்கி விட்டார். நானும் இறங்கிவிடலாமென்று எண்ணினேன். ஆனால், பேச்சின் சுவையே வெற்றி கொண்டது. வண்டிக் கூண்டின் முனைகளில் அடிபட்டு எலும்பு முறிவது கூடப் பெரிதாகத் தோன்றவில்லை. கௌண்டர் இடையிடையே 'ஹாய்! ஹாய்'' என்று உருப்போட்டுக் கொண்டு வந்தார். நானோ அடிக்கடி 'இட்லி காப்பி' மந்திரத்தை ஜபம் செய்து கொண்டே வந்தேன்.

''பூம் பூம்'' என்ற மோட்டார் 'ஹாரன்' சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஐயோ! அப்போது நான் கண்ட காட்சியை என்னவென்று கூறுவேன்? வண்டிக்குப் பின்னால் சுமார் ஐம்பது கஜ தூரத்தில் சாலையில் ஒரு வளைவு இருந்தது. குழந்தை கண்ணன் இவ்வளைவைக் கடந்து, இப்போதுதான் திரும்பினான். அந்தக் கணத்திலே ''பூம் பூம்'' என்று சத்தமிட்டுக் கொண்டு மோட்டார் வண்டியும் வளைவு திரும்பி, அந்தோ-அந்த சின்னஞ் சிறு குழந்தையின் மேல் ஏறி விட்டது. மோட்டார் சத்தம் கேட்ட நான் திரும்பிப் பார்த்த அதே நேரத்தில், ஒரு கணத்தில், இவ்வளவும் நிகழ்ந்து விட்டது. என்னைப் போலவே திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த கௌண்டர் 'ஹோ'வென்று அலறிக் கொண்டு கீழே குதித்து ஓடினார். நானும் சட்டென்று வண்டியினின்றும் குதித்து, அவர் பின்னால் விரைந்து சென்றேன். குழந்தை கிடந்த இடத்தை அடைந்ததும் கௌண்டர் அவனை வாரி எடுத்து மடியில் போட்டுக்

கொண்டார்; இதற்குள் நானும் அங்கே போய்ச் சேர்ந்தேன். சிறுவனுடைய மார்பில் கையை வைத்தேன். ''பட பட'' வென்று அடித்துக் கொண்டிருந்தது. மூச்சு மிகவும் மெது வாய் வந்து கொண்டிருந்தது. ''பயப்படாதீர்கள்! கடவுள் காப்பாற்றுவார்!'' என்றேன். கௌண்டர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய்ப் பொழிய ஆரம்பித்தது. பின்னர், எங்கள் இருவர் நினைவும் இயற்கையாக மோட்டார் வண்டியின் மீது சென்றது. வந்த வேகத்தில் கொஞ்ச தூரம் போய்விட்ட மோட்டார் இப்பொழுது திரும்பி வருவதைப் பார்த்தோம்.

எங்கள் அருகில் வந்ததும் வண்டி நின்றது. அதன் பின் பலகையில் இருந்த இரண்டு பேர்தான் அந்தக் கூட்டத்தில் முக்கியமானவர்கள் என்று பார்த்தவுடனே தெரிந்தது. கல்யாண வீட்டில் ஆயிரம் பேர் கூடியிருந்த போதிலும் மாப்பிள்ளையைப் பார்த்தவுடன் கண்டுபிடிக்க முடியுமல்லவா? அவ்விருவரில் ஒருவர் ஐயங்கார் சுவாமி கள். அவர் 50 வயதுக்கு மேற்பட்டவர். பறங்கிப் பழம் போன்ற நிறமுடையவர். நல்ல ஆஜானுபாகு. நெற்றியில் அழகான நாமம் தரித்திருந்தார். தங்க விளிம்பு கட்டிய மூக்குக் கண்ணாடி; காதுகளில் ரவைகள் பதித்து டாம் வீசிய கடுக்கண் ஜோடி; அரையில் மூலக்கச்சம்; சரிகைத் தலைப் பாகை முதலியவை அவர் அழகுக்கு அழகு செய்தன. சொக்காய் பையினுள்ளிருந்து வேலைப்பாடமைந்த தங்கக் கெடிகாரச் சங்கிலி தொங்கி விளையாடிக் கொண்டிருந்தது. மற்றொருவர் வேளாளப் பிரபு போல காணப்பட்டார். அவர் கறுப்பு நிறம். ஆனால், உடல் பருமனிலோ ஆடையாபர ணங்களிலோ ஐயங்காருக்குச் சிறிதும் குறைந்தவரல்லர்.

மோட்டார் வந்து நின்றதும், ''என்ன? உயிருக்கு அபாயம் இல்லையே?'' என்று கனம் ஐயங்கார் வினவினார். ''ஏதோ அந்த மட்டில் உங்கள் தயவு தான்!'' என்று நான் பதில் சொன்னேன். ஐயங்கார் என்னைச் சற்றே ஏற இறங்கப் பார்த்து விட்டு அசட்டுச் சிரிப்பு சிரித்தார். இதற்குள் முன் ஆசனத்திலிருந்து ஒருவர் கீழே குதித்து அருகில் வந்து சிறுவனைப் பார்த்து விட்டு, ''அதெல்லாம் ஒன்றுமில்லை. அதிர்ச்சியினால் மூர்ச்சையடைந்திருக்கிறான், அவ்வளவு தான். நல்ல வேளையாக ஓரத்திலிருந்தபடியால் வண்டி எட்டித் தள்ளிவிட்டுப் போய்விட்டது; நடுவில் அகப்பட்டி ருந்தால் சட்னிதான்!'' என்றார் அவர். இதைக் கூறிய முறையில் பையன் 'சட்னி!' யாகாதது குறித்து அவர் மிகவும் வருந்துவது போல் தோன்றிற்று.

இதுவரை சிறிது கலக்கங் கொண்டவர் போல் காணப் பெற்ற வேளாளப் பிரபு, இப்போது தைரியமடைந்தவராய்

கௌண்டரைப் பார்த்து. ''ஓய், உமக்கு மூளை இருக்கா? சிறு பையனைச் சாலையில் இப்படி விடலாமா! பையன் செத்துப் போயிருந்தால் இப்போது என்ன செய்வது?'' என்று கேட்டார். எனக்குச் சொல்ல முடியாத ஆத்திரம் வந்தது. ''பிள்ளைவாள்! அந்தக் கேள்வியை நாங்கள் அல்லவா உங்களைக் கேட்க வேண்டும்? சாலை கூடவா உங்கள் ஏகபோக உடைமையாகிவிட்டது?'' என்றேன். பிள்ளை என்னைச் சுட்டு வீழ்த்தி விடுபவர் போலப் பார்த்தார். அப்போது ஐயங்கார் சிறிது தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''என்ன ஓய்! லா பாயிண்டா பேசுகிறீர்?'' என்று கேட்டார்.

இவர்களெல்லாம் மனிதர்கள் தானா மிருகங்களா என்று எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது. ''ஐயங்கார் சுவாமி! உம்முடைய லாவையும், பாயிண்டையும் உடைப்பிலே போடும். குழந்தையின் மேல் மோட்டாரை ஏற்றி விட்டு ஏதேதோ பேசுகிறீர்களே? பையன் குத்துயிராகக் கிடப்பது தங்கள் கண்ணில் படவில்லையா? அவனை உடனே வைத்திய சாலைக்குக் கொண்டுபோய்ச் சிகிச்சை செய்யவா வது வேண்டாமா?'' என்றேன்.

ஐயங்கார் மூக்குக் கண்ணாடியை எடுத்துத் துடைத்துப் போட்டுக் கொண்டு என்னைப் பார்த்தார். ''யாரோ டவுன் காலாடி போலிருக்கிறது'' என்று அவர் பிள்ளையிடம் மெதுவாக ஆங்கிலத்தில் கூறினார். ''இவர்களுக்கெல்லாம் கொஞ்சம் கூட இடம் கொடுக்கக்கூடாது, ஏதேது? இன்னும் கொஞ்ச நாளில், கம்யூனிஸமே வந்து விடும் போலிருக்கிற து'' என்று பிள்ளை பதிலளித்தார். பின்னர், ''கிளம்பு'' என்றார். இதற்குள் ஐயங்கார் தமது சட்டைப் பைக்குள் கையை விட்டுப் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கௌண்டருக்கு அருகில் எறிந்து, ''ஓய் இந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளும். பையனை யாராவது டாக்டரிடம் கொண்டு போய் கவனமாய்ப் பாரும்'' என்றார். மோட்டார் வண்டியும், பட் பட் என்று அடித்துக் கொண்டு புறப்படலா யிற்று.

கௌண்டர் அவசரமாய்க் குனிந்து அந்தப் பத்து ரூபாய் நோட்டை எடுத்தார். அதைக் கண்டதும் என் மனம் சிறிது புண்பட்டது. என் மானம் போய் விட்டதென்று எண்ணி னேன். ஆனால், அடுத்த கணத்தில், நான் அவருக்குப் பெரும் அநீதி செய்துவிட்டேன் என்பது புலனாயிற்று. கௌண்டர் பொறுக்கிய நோட்டை வேகமாக வீசி எறிந்தார். அது பறந்து சென்று அப்போது தான் புறப்பட்டுக் கொண்டி ருந்த மோட்டாரில் ஐயங்கார் முகத்தினெதிரே விழுந்தது.

நான் என்னையும் கௌண்டரின் துயரத்தையும் மறந்து கைகொட்டிச் சிரித்தேன். அருகிலிருந்த பட்டணத்தில் எனக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு கடிதம் எழுதிக் கௌண்டரிடம் கொடுத்தேன். ஐயங்காரின் நோட்டுக்கு நேர்ந்த கதியைப் பார்த்த பின்னர் கௌண்டருக்கு பணம் கொடுக்க எனக்குப் பயமாகத்தானிருந்தது. இருப்பினும் துணிந்து ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தேன். நான் பயந்ததற்கு நேர் மாறாக அவர் அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

பின்னர், வண்டியைத் திரும்பிக் கொண்டு போனார். நான் காலை வண்டியில் ஊர் போய்ச் சேர்ந்தேன். அவர் குடும்பத்தாருக்கு விவரத்தைத் தெரிவித்துத் தைரியம் கூறினேன். இரண்டு நாள் கழித்துக் கௌண்டர் கண்ணனுடன் திரும்பி வந்து சேர்ந்தார். மாலை அவர் வீட்டுக்குப் போனேன். கடவுள் அருளால்தான் பையன் தப்பிப் பிழைத்ததாக டாக்டர் கூறினாராம். அவனைப் பார்த்த பின்னர் வீட்டு நடையில் இருந்த திண்ணையில் உட்கார்ந்து நானும் கௌண்டரும் பேசிக் கொண்டிருந்தோம். வாசல் திண்ணையின் மாடத்தில் ஒரு சிறு மண்ணெண்ணெய் விளக்கு மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது. அப்போது வாசலில் 'பூம்' 'பூம்' என்ற மோட்டார் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு போனோம், "ஏது? மோட்டார் யமன் நம்மை விடமாட்டான் போலிருக்கிறதே?" என்றேன். இதற்குள் வண்டி கௌண்டர் வீட்டு வாசலிலேயே வந்து நின்றது. "கௌண்டரே! கௌண்டரே!" என்று கூப்பிடும் சத்தம் அடுத்த நிமிஷம் கேட்டது. நாங்கள் ஆச்சரியக் கடலில் மூழ்கிவிட்டோம். கௌண்டர் எழுந்து வாசல் திண்ணைக்குப் போனார்.

எனக்கு மட்டும் ஒரு சந்தேகம் உதித்தது. அன்று வாக்கு வேட்டைக்காக சிலர், எங்கள் ஊருக்கு வரப் போகிறார்களென்று கேள்விப்பட்டிருந்தேன். ஆதலின் நடைத்திண்ணையில் இருந்த வண்ணம் எட்டிப் பார்த்தேன். மோட்டாரிலிருந்து மூவர் இறங்கி வந்து வாசல் திண்ணையில் உட்கார்ந்தார்கள். அவர்களில் ஒருவர் எங்க ஊர் மிட்டாதார். மற்ற இருவரும் - சரி, சரி அந்த மங்கிய மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியிலும் அவர்களை நான் கண்டு கொண்டேன். என் சந்தேகம் நிச்சயப்பட்டது. சொல்ல முடியாத குதூகலத்தினால் அங்கேயே ஒருதுள்ளல் துள்ளிக் குதித்தேன். அப்புறம் என்ன சிறுபிள்ளைத்தனம் என்று எனக்கே சிறிது வெட்கமாயிருந்தது. இதற்குள் வாசலில் சம்பா

ஷணை தொடங்கியாகி விட்டது. பேசியவர் மிட்டாதார். அவர் கூறியதாவது.

"கௌண்டரே! இவர்கள் ரொம்பப் பெரிய மனிதர்கள். சாதாரணமாகவெல்லாம் நம்மைத் தேடி வரக்கூடியவர்கள் அல்லர்!"

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்!" என்றார் கௌண்டர். அவர் பேச்சின் தொனியிலிருந்து அவருக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டியிருக்கலாமென்று தோன்றியது.

"ஆமாம். வராதவர்கள் தான் வந்திருக்கிறார்கள். அதோ இருக்கிறவர்கள் சென்னைப் பட்டணத்திலே பெயர் பெற்ற வக்கீல்கள். நமக்கு ஏதாவது ஹை கோர்ட்டில் கேஸ் ஏற்படும் போது இவர்களிடந்தான் போவது வழக்கம். ஹைகோர்ட் ஜட்ஜு பதவி ஒப்புக் கொள்ள வேண்டுமென்று சர்க்கார் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். ஆனால், சம்பளம் குறைவென்பதாக இவர்கள் மறுத்து விட்டார்கள். பரோபகாரம் செய்வதிலே இவர்களை மிஞ்சியவர்கள் இந்தச் சென்னை இராஜதானியிலேயே கிடையாது. ஏராளமாகப் பணம் சம்பாதித்து, அவ்வளவையும் தர்மத்துக்காகவே செலவு செய்து வருகிறார்கள்..." என்றார் மிட்டாதார்.

"ஏதேது? நமது ஊர் மிட்டாதார் இவ்வளவு வாக்கு திறமையுள்ளவரா?" என்றெண்ணி நான் பிரமித்துப் போனனேன். அவர் பேச்சில் நானே மயங்கி விழுந்துவிடுவேன் போல் இருந்தது. ஆனால் இந்தப் பாடத்தைப் பல இடங்களில் ஒப்புவித்து அவருக்கும் பழக்கமாய்ப் போயிருக்க வேண்டும்.

மிட்டாதார் மேலும், "ஏழை எளியவர்களுக்கு அதிக உபகாரம் செய்துவரும் காரணத்தினால் ஜனங்கள் இவர்களுக்கு 'ஏழைகளின் நண்பர்' என்ற பட்டப் பெயரும் அளித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட மகான் டில்லி சட்டசபைக்குத் தேர்தலில் நிற்கிறார்கள். உங்களுடைய வோட்டை நீங்கள் அவர்களுக்கே கொடுக்க வேண்டும். வரி, வாய்தாக்களைக் குறைப்பதற்குப் பாடுபடுவதாயும் சொல்லியிருக்கிறார்கள். இதோ இருக்கும் பிள்ளைவாளைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவர்கள்தான் மணிமங்கலம் பெரிய பண்ணைப் பிள்ளை. பரம்பரையான பெரிய குடும்பம். இவர்கள் நமது சென்னை மாகாணச் சட்டசபைக்கு நிற்கிறார்கள். எத்தனையோ தர்மங்கள் செய்திருக்கிறார்கள். முக்கியமாகக் குழந்தைகளின் க்ஷேமத்திலே இவர்களுக்கு ரொம்ப சிரத்தை உண்டு. ஒவ்வொரு வருஷ

மும் நமது ராஜா பிறந்த தினத்தன்று இவர்கள் பதினாறாயிரம் பள்ளிக் குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கிவருகிறார்கள்...'' என்றார்.

இதற்குமேல் என்னால் தாங்க முடியவில்லை உடனே நான் வாசலுக்குவந்து மாடத்திலிருந்த விளக்கை எடுத்துத் தூண்டி விட்டுத் தூக்கிப் பிடித்தேன்! மிட்டாதரைத் தவிர்த்து இரண்டு ஆசாமிகளும் நாங்கள் முன்னரே மோட்டாரில் கண்ட பிரபுக்கள்தான் என்பது ஐயமற விளங்கிற்று, ''ஐயங்கார் சுவாமிகளே! சௌக்கியமா!'' என்றேன். ஐயங்காரும் பிள்ளைவாளும் திடுக்கிட்டவர்களாய், என்னையும் கௌண்டரையும் பார்த்து 'திரு திரு'வென்று விழித்தார்கள். ஆகா! அந்த நேரத்திலே அந்த மங்கிய மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியிலே அவர்களுடைய திருமுகமண்டலங்களின் தோற்றத்தை நீங்கள் பார்த்திருக்க வேண்டும்!

அப்போது மிட்டாதார் என்னைப் பார்த்து ''ஓஹோ! நீங்களா? உங்களுக்கு ஐயங்கார் சுவாமிகளைத் தெரியுமா?'' என்று கேட்டார். ''எனக்கு இரண்டு பேரையும் தெரியும். ஜீவகாருண்யமுள்ளவர்கள். அதிலும் குழந்தைகள் என்றால் உயிரை விடுவார்கள்!'' என்றேன். பிள்ளை வேறு பக்கம் திரும்பி பொடி டப்பியைத் திறந்து ஒரு சிட்டிகை எடுத்து இழுத்தார். ஐயங்கார் கடிகாரத்தை எடுத்து மணி பார்த்து விட்டு, ''நேரமாகிறது'' என்றார். பின்னர் மூவரும் எழுந்து சென்றார்கள்.

''யாருக்கு வோட்டுக் கொடுக்கப் போகிறீர்கள்?'' என்று கௌண்டரைப் பார்த்துக் கேட்டேன்.

''எங்க வீட்டு எருமை மாட்டுக்கு'' என்று அவர் பதில் சொன்னபோது, எனக்குக் கொஞ்சம் கோபந்தான் வந்தது. ஏனெனில், எப்போதேனும் தேர்தலுக்கு நிற்கலாம் என்ற ஆசை எனக்கும்கூடச் சிறிது உண்டு.

''அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்றேன்.

''எங்கள் வீட்டு எருமை மாடு எங்கள் குழந்தையை இடறித் தள்ளிக்கொண்டு போவதில்லை. குழந்தையைக் கண்டால் கொஞ்சம் அகன்றுதான் போகும்!'' என்றார் கௌண்டர்.

''எல்லாரும் ஐயங்கார் சுவாமிகளையும் பிள்ளைவாளையும் போலவே இருப்பார்களா?'' என்று ஆன மட்டும் சொல்லிப் பார்த்தேன். ஒன்றும் பயனில்லை.

ஆகவே, நேயர்களில் யாரேனும் தேர்தலுக்கு நிற்க எண்ணினால், நமது கௌண்டரிடம் மட்டும் போக வேண்டாம். போனால் நிச்சயமாக வீண் முயற்சியாகவே முடியும். அதைவிடக் குட்டிச்சுவரிடம் போய் முட்டிக் கொள்ளலாம்.

ஆரம்ப ஆசிரியர்

கொஞ்ச நாளைக்கு முன் பத்திரிகைகளில் ஒரு செய்தி படித்தேன். ஒரு திருடன் சுருட்டுக் கடை ஒன்றில் கன்னம் வைத்துப் புகுந்தானாம். அங்கே எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டியும் அவன் எதிர்பார்த்தபடி ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில் பெட்டிக்கு அடியில் கிடந்த காலணா காசுடன் அவன் திரும்பிப் போக நேர்ந்ததாம். என்ன வெட்கக்கேடு பாருங்கள்! திருடப் போயும் தரித்திரம் தொலையவில்லை. அந்தச் சுருட்டுக் கடைக்காரன் பரம லோபியாயிருந்திருக்க வேண்டும்.

மேற்படி செய்தியைப் படித்தபோது எனக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. அதாவது, திருட்டுத் தொழில் இவ்வளவு கேவலமாய் போய்விட்டால், திருடர்கள் வேறு ஏதேனும் உத்தியோகம் பார்த்துக் கொள்ள வேண்டியது தான் என்று நினைத்தேன். வேறு நல்ல உத்தியோகம் ஒன்றும் கிடைக்காவிட்டால் எங்கேயாவது ஒரு கிராமத்தில் பள்ளிக்கூடமாவது போடலாமல்லவா?

ஆமாம், உண்மையிலே இந்த ஆரம்பப் பள்ளிக்கூடங்களால் தேசத்துக்கு அதிக நன்மை விளைந்து வருகிறது. வேறு எந்த வேலைக்கும் லாயக்கில்லாத எத்தனை இளைஞர்களும் கிழவர்களும் நடுத்தர வயதினரும் அந்தப் பள்ளிக் கூடங்களினாலே பிழைத்து வருகிறார்கள்? இங்கிலாந்து தேசத்தில் இவ்வாறு வேறு வேலைக்கு லாயக்கில்லாதவர்களையெல்லாம் இந்தியாவில் உத்தியோகம் செய்ய அனுப்பி விடுவார்கள். ஆனால். இங்கிலாந்துக்கு இந்தியா இருப்பது போல் இந்தியாவுக்குத் தன் ஆட்சிக்குட்பட்ட தேசம் வேறு கிடையாது. எனவே போகும் வழியென்ன? நாட்டிற்குள்ளே தான் ஏதேனும் வழி ஏற்பட வேண்டும். ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் எவ்வளவு உபயோகமானவை என்று இதிலிருந்து நன்கு விளங்குகின்றதல்லவா?

எனக்குத் தெரிந்த பையன் ஒருவன் ஐந்தாவது பாரத்தில் படித்துக் கொண்டிருந்தான். அவன் துர்ச்சகவாசத்தினால் கெட்டுப் போய், கெட்ட வழிகளில் இறங்கினான். ஒரு முறை அவன் தன் அண்ணன் மனைவியின் நகைகளைத் திருடிக் கொண்டு போய் சில தினங்கள் எங்கேயோ

கெட்டலைந்து கடைசியாக வீட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தான்.

அப்போது தமையனார் தம்பிக்கு அன்புடன் சொன்ன புத்திமதியாவது:- "தம்பி! போனது போகட்டும். எல்லாவற்றையும் மன்னித்து விடுகிறேன். இனிமேல் உனக்குப் படிப்பில் புத்தி செல்லாது, படித்தது போதும். ஏதாவது பிழைப்புக்கு வழி பார்க்க வேண்டும். வக்கீல் குமாஸ்தா ஆகிறாயா? ஆனால் அதில் எடுத்ததும் வருமானம் கிடைக்காது. கோயில் கணக்குப்பிள்ளையாகலாம். தர்மகர்த்தாவை எனக்குத் தெரியும். சிபாரிசு செய்கிறேன். இதுவும் உனக்குப் பிடிக்காவிட்டால், டிரெயினிங்குக்குப் போய் வந்து பள்ளிக்கூட உபாத்தியாயராகவாவது ஆகலாம். ஆமாம் எல்லாவற்றையும் விட இதுதான் நல்லது சிபாரிசு கிபாரிசு ஒன்றும் வேண்டியதில்லை. சுலபமான வேலை. என்ன சொல்கிறாய்?" என்றார். பையன் தற்போது டிரெயினிங் ஸ்கூலில் படித்து வருகிறான்!

நான் இப்படிச் சொல்வதினால் ஆரம்ப ஆசிரியர்களை நிந்தனை செய்வதாக யாரும் நினைத்தல் கூடாது. பாவம்! ஆரம்ப ஆசிரியர்களுக்கு வாழ்க்கை ஆரம்பத்தில் நகைச்சுவை உணர்ச்சி கொஞ்ச நஞ்சம் இருந்தாலும், நாளாக ஆக, அது மங்கி ஒன்றுமில்லாமல் போயிருக்கும். ஆகவே அவர்கள் என் மீது இதற்குள்ளேயே கடுங்கோபம் கொண்டிருந்தால் நான் ஆச்சரியப்படமாட்டேன். "அதெப்படி நாங்களெல்லாரும் ஒரு வேலைக்கும் லாயக்கில்லாதவர்கள் என்று சொல்லலாம்" என்று அவர்கள் சண்டைக்கு வரலாம். மன்னிக்க வேண்டும். என்னுடைய நோக்கம் இதற்கு முற்றிலும் மாறானது.

நான் இத்தனை சக்கர வட்டமாக எழுதுவதெல்லாம் ஓர் ஆரம்ப ஆசிரியரின் அருளினால்தான். அவர் இருக்கும் திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பிக்கிறேன். இன்றும் எனது பிரிய நண்பர்களில் சிலர் ஆரம்ப ஆசிரியர்கள். என் மதிப்புக்குரிய பெரியோர்களில் பலர் ஆரம்ப ஆசிரியர்கள். எல்லாவற்றிலும் முக்கியமானது என்னவென்றால் நானும் தற்போதைக்கு ஒரு முறையில் ஆரம்ப ஆசிரியர் தான். ஆகவே ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றி நான் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அந்தத் தொழிலின் தற்கால நிலைமையைப் பற்றியே கூறினேன். அதைப் பற்றியே இன்னமும் கூறப் போகிறேன்.

மேலே தமையனார் தம்பிக்குப் புத்தி சொன்னாரல்லவா? அவர் சொன்னதிலே பாக்கியெல்லாம் சரிதான். ஆனால், ஒன்று மட்டும் கொஞ்சமும் சரியில்லை. ஆரம்ப ஆசிரியர் தொழிலை மிகவும் சுலபமான வேலை என்பதாக அந்தப் புண்ணியவான் சொன்னார். ஒரு கதை சொல்கிறேன், கேளுங்கள். ஒருவன் ஆற்றோடு போய்க்கொண்டிருந்தான். கரையில் நின்ற மற்றொருவன் "அப்பனே! உன்னை நான் கரையேற்றிவிடுகிறேன். என் குழந்தைகள் இரண்டு பேருக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கிறாயா?" என்று கேட்டான். 'ஐயோ! வேண்டாம்? நான் ஆற்றோடேயே போகிறேன்' என்று சொல்லி அவன் போய்விட்டானாம். உண்மையிலேயே அது அவ்வளவு கஷ்டமான வேலை. எனினும், அதைப்போல் அவமதிக்கப்படும் தொழில் வேறு கிடையாது. அவ்வளவு குறைந்த கூலி வேறெந்த வேலைக்கும் இல்லை.

உபாத்திமைத் தொழிலே கஷ்டந்தான். அதிலும் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதென்றால் சொல்ல வேண்டியதில்லை.

"ம-ர-ம்=மரம்," "ம-ர-ம்=மரம்" என்று பன்னிரண்டு தடவை சொல்லிக் கொடுத்த பிறகு பையன், "ப-ள-ம்=மழ்ழம்" என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொல்லுகிறான், "ஐயோ? கர்மமே!" என்று உபாத்தியாயர் தலையில் அடித்துக் கொள்கிறார். இதற்குள் ஒரு பையன், "ஜார்! சீனு என் புத்தகத்தைக் கிழித்து விட்டான்" என்று கத்துகிறான். மற்றொருவன், "ஸ்லேட்டுக் குச்சியைக் காணோம்" என்கிறான். வேறொரு பையன் தேம்பித் தேம்பி அழுகிறான். எவ்வளவு தடவை கேட்டாலும் பதில் வருவதில்லை. இதற்குள் வாசலில் ஏதோ சத்தம் கேட்கிறது. எல்லாப் பிள்ளைகளும் எழுந்து வெளியே ஓடுகிறார்கள். அவர்களைத் திரட்டிக் கொண்டு வந்து சேர்ப்பதற்குள் உபாத்தியாயருடைய பிராணன் உச்சந் தலைக்கு வந்துவிடுகிறது.

உலகம் பலவிதம் என்பார்கள். பிள்ளைகளிலும் பலவிதம் உண்டு. இராமன் கெட்டிக்காரப் பையன், அவனுக்குக் கணக்கெல்லாம் நன்றாய்த் தெரியும். ஆனால், கேட்டால் மட்டும் பதில் சொல்லமாட்டான் "ராமா ஏழும் எட்டும் எவ்வளவு?" என்று வாத்தியார் கேட்கிறார். பையன் வாய்மூடி மௌனியாய் நிற்கிறான்.

"எவ்வளவு?" என்று மீண்டும் கேட்கிறார்.

மௌனம்,

என்னதான் தட்டிக் கொடுத்தாலும் பயனில்லை. மனத்திற்குள் அவன் 'பதினைந்து!' என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறான் ஆனால் உதட்டைத் தாண்டி அது வெளியில் வருவது கிடையாது. இவனுக்கு நேர்மாறானவன் கோபு. ''ஏழும் எட்டும் எவ்வளவு?'' என்று வாத்தியார் கேட்டு வாய் மூடுவதற்குள் ''பத்தொன்பது'' என்று அவன் தயக்கமின்றிப் பதில் சொல்லுகிறான்.

''என்னடா பத்தொன்பது.''

''ஆறும் ஏழும் பத்தொன்பது,''

''நான் என்ன கேட்டேன்?''

''எட்டும் ஒன்பதும் என்னவென்று கேட்டீர்கள்.''

''எட்டும் ஒன்பதும் என்னடா?''

''பதின்மூன்று.''

''பார்த்துச் சொல்லு?''

''பதினாலு!''

உபாத்தியாயர் எரிச்சல் பொறுக்காமல் அடிப்பதற்குக் கை ஓங்குகிறார்.

''இல்லை சார்! பன்னிரண்டு!'' என்று பையன் அவசரமாய்க் கத்துகிறான். ஆசிரியர் கண்களில் நீர் ததும்புகிறது.

சில வேலைகள் மிகவும் கஷ்டமாயிருக்கலாம்; ஆனால் அவை முக்கியமில்லாததாகயிருந்தல் கூடும். ஆனால் ஆரம்ப ஆசிரியர் வேலை அத்தகையதன்று. அது எவ்வளவு கஷ்டமானதோ அவ்வளவு முக்கியமானதாகும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பது பழமொழி. ஐந்தில் வளைப்பவர் ஆரம்ப ஆசிரியர். அவர் கோணலாய் வளைத்துவிட்டால் வாழ்க்கை பூராவும் கோணல்தான். நாட்டின் வருங்காலப் பிரஜைகள் வளருமிடம் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள். தேச மக்கள் தீரம்மிக்க ஆண் சிங்கங்களாய் விளங்குவதும் கோழைத்தனம் வாய்ந்த அடிமைகளாயிருப்பதும் ஆரம்ப ஆசிரியர்களின் கை வேலையேயாகும்.

இந்த உண்மைகளை மேனாட்டார் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆரம்பக் கல்விக்குக் கோடி கோடியாய்ப் பணம் செலவழிக்கிறார்கள். உயர்தரக் கல்விக்குச் செலவழிப்பதைக் காட்டிலும் ஆரம்பக் கல்விக்கே அதிகம் செலவு செய்கிறார்கள். டாக்டர் மாண்டிஸோரி என்னும் ஓர் அம்மையார் இருக்கிறார். இவர் பச்சைக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு புதிய முறை கண்டு பிடித்திருக்கிறார். இந்த முறையின்படி ஐந்து வயதுக் குழந்தை ஒன்றுக்குக் கல்வி கற்பிக்க 500 ரூபாய்க்குக் கருவிகள் மட்டும் வாங்க வேண்டும்! நமது நாட்டிலோ ஐம்பது குழந்தைகள் படிக்கும் ஒரு பள்ளிக் கூடம் முழுவதற்கும் ஆசிரியர் சம்பளம் உள்பட வருஷத்தில் 500 ரூபாய் கூடச் செலவழிப்பதில்லை.

நம் நாட்டு ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் இரண்டு வகைப்பட்டவை. ஒருவகை அரசாங்க உதவி பெற்ற சொந்தப் பள்ளிக்கூடங்கள்; மற்றொருவகை போர்டு பள்ளிக் கூடங்கள். சொந்தப் பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கத்திலிருந்து வருஷா வருஷம் கிராண்ட் கொடுக்கப்படும். போர்டு பள்ளிக்கூடங்களுக்கு மாதாமாதம் தாலுகா போர்டிலிருந்து சம்பளம் கிடைக்கும். சொந்தப் பள்ளிக்கூடங்களின் உபாத்தியாயர்கள் பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வாங்கிக் கொள்ளலாம். ஆனால் சம்பளம் கிடைப்பது மட்டுமில்லை. சம்பளம் கேட்டால் பிள்ளைகள் வரமாட்டார்கள்! பிள்ளைகள் வராவிட்டால் கிராண்டும் கிடைக்காது! ஆனால் மொத்தத்தில் போர்டு பள்ளிக்கூட ஆசிரியர்களைக் காட்டிலும் இவர்கள் நிலைமை சௌகரியம் என்று சொல்லலாம். ஏனென்றால் இவர்களுக்குத் தொந்தரவு அதிகமில்லை. வருஷத்தில் ஒரு நாள் இன்ஸ்பெக்டர் வருவார். அவருக்குச் சாப்பாடு, சிற்றுண்டி, காப்பி, பால், தயிர் முதலியவை ஒழுங்காக சப்ளை செய்ய வேண்டியது. அவருடைய சேவகருக்கு அரை, கால் கொடுக்க வேண்டியது. பரிட்சை தினத்தன்று எப்படியாவது சிரமப்பட்டு உள்ளூர் அயலூர் பிள்ளைகளையெல்லாம் சேர்த்து விட வேண்டியது. இந்த மூன்று விஷயங்களையும் கவனித்துக் கொண்டால் ஒன்றுக்குப் பாதியாவது கிராண்டு கிடைத்துவிடும். ஒரு வருஷத்திற்குக் கவலையின்றிக் காலேயரைக்கால் வயிறு சாப்பிட்டுக் காலந்தள்ளலாம்.

ஆனால், போர்டு பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் நிலைமையை நினைத்தாலும் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. அவர்கள் எத்தனை பேருக்குப் பதில் சொல்லியாக வேண்டும் தெரியுமா? எல்லாருக்கும் முதன்மையாகத் தாலுகா போர்டு அக்கிராசனர் - அவர் உள்ளூர்க்காரராயிருந்து விட்டால் சொல்ல வேண்டியதில்லை. அவருடைய

வீட்டு எருமைக் கன்றுக்குட்டி கெட்டுப் போய்விட்டால், வாத்தியார் தான் தேடிக்கொண்டு வந்து கட்ட வேண்டும். அவருக்குப் பிறகு, தாலுகா போர்டின் உப அக்கிராசனர், அங்கத்தினர்கள், இவர்களுக்கெல்லாம் தேர்தலில் வோட்டு சேகரித்துக் கொடுத்தவர்கள், இவர்களுடைய இஷ்டமித்திர பந்து ஜனங்கள், தாலுகா போர்டு குமாஸ்தாக்கள், சேவகர்கள், கல்வி இலாகா அதிகாரிகள் இத்தனை பேருடைய தயவும் போர்டு பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்களுக்கு வேண்டும்.

தாலுகா போர்டு அக்கிராசனருக்கு வோட்டு வாங்கிக் கொடுத்தவரின் சம்பந்தியின் நண்பரின் பிள்ளைக்கு ஒரு போர்டு ஸ்கூல் வாத்தியார் 'பிரைவேட்' சொல்லிக்கொடுக்கவில்லை. இந்தக் குற்றத்திற்காக அவருக்கு வேலை போய் விட்டது. சில தாலுகா போர்டுகளில் அக்கிராசனரும் உப அக்கிராசனரும் வேலைகளைப் பிரித்துக் கொள்வதுண்டு. ஒரு தாலுகா போர்டின் உப அக்கிராசனர் பங்குக்குப் பள்ளிக்கூடங்கள் விழுந்திருந்தன. அவர் ஒரு நாள் வீட்டில் பெண்டாட்டியுடன் சண்டை போட்டுக் கொண்டார். அந்தக் கோபத்துடன் அவசரமாய்த் தாலுகா போர்டு ஆபீஸுக்குச் சென்றார். உபாத்தியாயர்களின் ஜாபிதாவை எடுத்தார். மளமளவென்று மாற்றத் தொடங்கினார். குறுக்கை வாத்தியாரைத் திருநாரையூருக்கும், பட்டிக் குளம் வாத்தியாரைப் பண்டாரவாடைக்கும், இப்படியாகத் தாறுமாறாய் மாற்றி விட்டார். பாவம்! அந்த உபாத்தியாயர்கள் ஒரு வார காலத்துக்குள் ஜாகை மாற்றுவதற்குப் பட்ட கஷ்டம் ஆண்டவனுக்கு தெரியும்.

போர்டு பள்ளிக் கூடங்களின் உபாத்தியாயர்களுக்கு மாதாமாதம் சம்பளம் வருமென்று ஐதீகம். ஆனால் அது கைக்குச் சேருவது நாலு மாதத்திற்கொரு முறை தான். அதுவும் பதினைந்து தடவை நடந்து அலைந்த பிறகு தான் கிடைக்கும். அதுவரைக்கும், உபாத்தியாயரும் அவர் குடும்பமும் வயிற்றை இறுக்கிக் கட்டிக்கொண்டு கட்டாய உபவாசம் இருக்க வேண்டும். மாதாமாதம் சம்பளம் வந்து விட்டால் தானென்ன? முழு வெள்ளி ரூபாயாகப் பதினாறு ரூபாய் வீசி எறிவார்கள்! உபாத்தியாயரின் சட்டை, தலைப் பாகை உபாத்தியாயர் மனைவிக்குப் புடவை, குழந்தை குட்டிகளுக்குத் துணிமணி ஐந்தாறு ஜீவன்களுக்குச் சாப்பாடு, கிழத் தாயாரின் இராமேசுவர யாத்திரை, இவ்வளவும் அந்தப் பதினாறு ரூபாய்க்குக்குள் தான் ஆக வேண்டும்.

சம்பளந்தான் இப்படியிருக்கிறதே என்றால், தொழிலுக்குத் தகுந்த மரியாதையாவது உண்டா!

பள்ளிக்கூடத்தைப் பார்வையிடத் தாலுகா போர்டு அக்கிராசனர் வந்துவிட்டால், அவரைவிட யோக்கியதையிலும் வயதிலும் எவ்வளவு பெரியவராயிருந்தாலும் உபாத்தியாயர் தலையில் முண்டாசுடன் எழுந்து நிற்க வேண்டும். உப அக்கிராசனர், அங்கத்தினர் இவர்களுக்கு ஓட்டுச் செய்த பெரிய மனிதர்கள், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், போலீஸ் ஹெட்கான்ஸ்டேபிள் ஆகிய எல்லாருக்கும் உபாத்தியாயர் மரியாதை செய்யவேண்டும். தாலுகா போர்டு சேவகன்கூடத் தனக்கு உபாத்தியாயர் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறான். இந்த நிலையில், பிள்ளைகளுக்கு உபாத்தியாயரிடம் எவ்வளவு மதிப்பு ஏற்படும். அவர்களுக்குப் பாடம் எவ்வளவு நன்றாய் வரும்; நற்குணங்கள் எப்படிப் படியும் என்று சொல்ல வேண்டியதில்லை.

சமீபத்தில், ஒரு சம்பவத்தைப்பற்றி நான் கேள்விப்பட்டேன். தாலுகா போர்டு உப அக்கிராசனர் ஒருவர் ஒரு பள்ளிக்கூடத்தைப் பார்வையிடச் சென்றார். உபாத்தியாயர் மேஜையின் மீது ஒரு தினசரிப் பத்திரிகை கிடந்தது. அதைப் பார்த்ததும் உப அக்கிராசனருக்குக் கோபம் வந்து விட்டது. ''ஓய்! பாடம் நடத்துகிறீரா, பத்திரிகை படிக்கிறீரா? இரண்டு ரூபாய் அபராதம்!'' என்றார். உபாத்தியாயர் கதிகலங்கிப் போனார். ''இதென்னடா? பிச்சைக்காரன் குடிசையில் சனீசுரபகவான் புகுந்தானே?'' என்று அவர் எண்ணி, ஏதோ சமாதானம் சொல்வதற்காக ''எஜமானே!'' என்று ஆரம்பித்தார். அதற்குள் உப அக்கிராசனர் கடுங் கோபங்கொண்டு கண்களில் தீப்பொறி பறக்க, புருவம் நெரிய, உதடுகள் துடிக்க, ''ஓய்! வாயை மூடும். பதில் பேசினீரோ டிஸ்மிஸ் செய்துவிடுவோம் வாங்குவது பதினாறு ரூபாய் சம்பளம். இதிலே பத்திரிகை படிக்கும் ஐம்பம்'' என்று எரிந்து விழவே உபாத்தியாயர் பெட்டிப் பாம்புபோல் அடங்கிவிட்டார். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு இந்த உபாத்தியாயரிடம் எவ்வளவு மதிப்பிருக்கும் பாருங்கள்!

இந்த நிலையில், ஒரு வேலைக்கும் லாயக்கில்லாதவர்கள் ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயராக முன் வருவதில் ஏதேனும் ஆச்சரியமுண்டா? கிடையவே கிடையாது. உண்மையில் ஆச்சரியமென்ன வென்றால், இப்படிப்பட்ட நிலை

மையிலும் சில உத்தமர்கள், சன்மார்க்க சீலர்கள், அறிஞர் கள், தலை சிறந்த ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளிக் கூடங்க ளில் உபாத்தியாயர்களாயிருந்து வருவதேயாகும். இது இவர்களுக்குப் பெருமை தருவதேயன்றி தொழிலின் தற் போதைய நிலைமைக்குப் பெருமை தருவதாகாது. ஆனால் நிலைமை இப்படியே இருந்து வருமானால், நாளடைவில் இந்த உத்தமர்களெல்லாம் விலகிக்கொள்வார்கள். வேறு தொழில் எதற்கும் தகுதியற்றவர்களும் மூடர்களும், துன் மார்க்கர்களும், சோம்பேறிகளுமே உபாத்தியாயர்களாக வந்து கொண்டிருப்பார்கள். இவர்களுடைய போதனையி னால் நம் குழந்தைகள் எவ்வளவு நல்ல பயிற்சி பெறுவார் கள் என்று சொல்லவேண்டியதில்லை.

இத்தகைய விபத்து நேராமல் தடுக்கவேண்டுமானால், உடனே இந்த நிலைமையைச் சீர்திருந்த வழி தேடவேண் டும். உபாத்தியாயர்களுக்கு நல்ல சம்பளமும், உயர்ந்த கௌரவமும் கொடுத்து, அறிஞர்களும் உத்தமர்களும் ஆரம்ப ஆசிரியத் தொழிலுக்கு வருமாறு ஊக்கமளிக்க வேண்டும். பள்ளிக்கூடங்கள் அந்தந்த ஊர் பஞ்சாயத்தின் மேற்பார்வையிலோ, அல்லது உள்ளூரிலுள்ள சிறந்த கல்வி மான் ஒருவருடைய மேற்பார்வையிலோ நடக்குமாறு ஏற் பாடு செய்யவேண்டும். ஆனால், இந்த யோசனைகளெல் லாம் காரியத்தில் நடக்கப்போகின்றனவா என்று கேட்டால், நல்லது, அந்தக் கேள்வி என்னைக் கேட்கவேண்டாம். பக்கத்திலுள்ள பிரபல ஜோசியரைப் பிடித்து உரிய தட் சணை வைத்துக் கேளுங்கள்.

என் பெயர்

சில நாளைக்கு முன் ஒரு நண்பர் என்னிடம் பலமாகச் சண்டை பிடித்தார். நான் புனை பெயர் வைத்துக் கொண்டு பத்திரிகைகளுக்கு எழுதுவதுதான் அவருடைய கோபத்துக்கு காரணம். "ஏன் சொந்தப் பெயர் போட்டுக் கொண்டு எழுதக்கூடாது? சொந்தப் பெயரைச் சொல்லிக் கொள்ள வெட்கமாயிருக்கிறதா? ஏன் இந்தக் கோழைத்தனம்?" என்று அவர் கேட்டார். உண்மை என்னவென்றால், அவ ருக்கு ஒரு பிரமை. என்னுடைய கதைகள், கட்டுரைகள், முதலியவற்றினால் எனக்கு வரவேண்டிய கீர்த்தி (!) அவ்வளவும் என்னைச் சேராமல் அநியாயமாய்க் கொள்ளை போய் விடுகிறதென்பது அவருடைய கவலை.

பெயர் போட்டுக் கொள்ளாததற்குக் கோழைத்தனம் காரணமல்ல என்று நான் சொல்ல வேண்டியதில்லை. அப்படி வெட்கப்படும்படியான சங்கதி ஏதேனும் நான் எழுதுகிறேனா என்ன? ஒன்றுமில்லை. பின்னர், புனை பெயர் ஏன்? உலகத்தின் மனப்போக்குதான் அதற்குக் காரணம்.

சொந்தமாகச் சிந்தனை செய்யும் சக்தியை, இந்த உலகத்தில் பகவான் மிகவும் கொஞ்சமாக வைத்துவிட்டார். நம்மில் பெரும்பாலோர் பிறருடைய அபிப்பிராயங்களையே நம்முடைய சொந்த அபிப்பிராயமாகக் கொண்டு போராடுகி றோம். ஓர் இதாலி தேசத்துக் கதை சொல்கிறேன், கேளுங் கள். டாஸோ, அரிஸ்டோ என்னும் இரண்டு பிரபல நூலாசிரியர்கள் இத்தாலியில் இருந்தனர்.

இவ்விருவருடைய எழுத்துத் திறமையைக் குறித்து இரண்டு நண்பர்களிடையே வாதம் எழுந்தது. ஒருவர் 'டாஸோ தான் சிறந்தவர்' என்றார். மற்றொருவர் 'அரிஸ் டோவின் புலமை அவருக்கு வராது' என்றார்.

முதல் நண்பர் 'டாஸோவுக்குக் கவிதா சக்தி அதிகம்' என்றார். இரண்டாம் நண்பர் 'அரிஸ்டோவின் வசன நடையில் தேனொழுகுகிறது' என்றார். 'ஹாஸ்ய ரசத்தில் டாஸோவுக்கு மிஞ்சித்தான்' என்றார் ஒருவர். 'மொத்தத்தில் அரிஸ்டோவுக்கு ஈடானவர் எவருமில்லை' என்றார் மற்ற வர். இவர்களுக்குள் விவாதம் முற்றி, வார்த்தை தடித்து கடைசியில் பெருஞ் சண்டையாகி விட்டது.

இருவரும் கத்தியெடுத்து ஒருவரோடொருவர் பலமான சண்டை போட்டார்கள். இருவரும் பலத்த காயமடைந்து

கீழே விழுந்தார்கள். அப்போது முதல் நண்பன் சொன்னான்:- ''ஐயோ! டாஸோவுக்காக நான் உயிர்விடுகிறேன். ஆனால் அவன் புத்தகத்தில் ஒரு வரிகூடப் படித்ததில்லை!'' என்றான். இரண்டாவது நண்பன் சொன்னான்:- ''அட கர்மமே! நானும் அரிஸ்டோவின் நூலில் ஒரு வரிகூடப் படித்தது கிடையாது! இதற்காகவா நாம் சண்டை போட்டோம்?'' என்றான்.

இப்படித்தான் சாதாரண ஜனங்களாகிய நாம் சண்டை போட்டுக் கொண்டு சாகிறோம். ஏதேனும் ஒரு விஷயம் கேள்விப்பட்டால் அதன் குணா குணங்களைப் பற்றி முதலில் ஆராய்வதில்லை. அதைச் சொல்வது யார் என்று முதலில் கவனிக்கிறோம். சொல்பவர் பிரசித்தி பெற்றவராயிருந்தால் அல்லது நமக்குப் பிடித்தவராயிருந்தால், உடனே விஷயத்தை ஆதரிக்கத் தொடங்குகிறோம்; அதைப் பாராட்டுகிறோம். அதன் புகழைப் பாடுகிறோம். சொல்பவர் சாதாரணப் பேர்வழியாயிருந்தால் உடனே அதை மறந்து விடுகிறோம். சொல்பவர் நமக்குப் பிடிக்காதவராயிருந்தாலோ, உடனே குறை சொல்லத் தொடங்கி விடுகிறோம்.

இலக்கியத் துறையில் மட்டுமல்ல; அரசியல், சங்கீதம் சமூக சீர்திருத்தம் ஆகிய எல்லாவற்றிலும் இப்படித்தான். பெரும்பாலும், எல்லாவற்றிலும் நாம் இரவல் பிழைப்பே பிழைத்து வருகிறோம். சென்னையிலுள்ள எனது நண்பர் ஒருவருக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் அபாரப் பிரேமை. ஆகையால், அவருக்குப் பண்டித நேருவைக் கொஞ்சமும் பிடிக்காது. ஒருநாள் நான் பத்திரிகை படிக்க அவர் கேட்டுக் கொண்டிருந்தார். இந்திய சட்டசபையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் செய்த பிரசங்கத்தைப் படித்தேன். அப்போது அவர் அடைந்த உற்சாகத்தையும், காட்டிய சந்தோஷத்தையும் சொல்ல முடியாது. பிரசங்கம் முடிந்ததும், ''ஓ! நீர் என்னதான் சொல்லும், அந்த ஒரு மனுஷனால் தான் இப்படிப் பேசமுடியும்!'' என்றார் நண்பர். ''சுவாமி! மன்னிக்க வேண்டும். பெயர் தவறாகச் சொல்லிவிட்டேன். இப்பொழுது படித்தது பண்டித நேருவின் பிரசங்கம்'' என்றேன் நான். அவரால் நம்ப முடியவில்லை. பத்திரிகையை வாங்கிப் பார்த்து விட்டு, ''சரிதான்; தொலையட்டும். நடுவில் கொஞ்சம் சந்தேகமாய்த் தானிருந்தது. இவ்வளவு அசம்பாவிதமாய் ஐயங்கார் பேசியிருக்க முடியாதே என்றுகூட நினைத்தேன்'' என்றார். சற்று முன்னால், நான் பிரசங்கம் நன்றாயில்லையென்று சொல்லியிருந்தால், அவர் என்னை அடிக்கவே வந்திருப்பார்.

இதனால் நான் மட்டும் பெரிய மேதாவி என்று நீங்கள் எண்ணிவிட வேண்டாம். ஒருவேளை அரசியலிலும், சமூக விஷயங்களிலும் நான் ஏமாற மாட்டேன்! இந்த விஷயங்க

ளைப் பற்றிக் கொஞ்சம் சிந்திக்கிறேன். ஆனால், சங்கீதத் துறையில் நான் ஏமாந்த கதையைச் சொல்கிறேன் கேளுங்கள். கோகலே ஹால் மாடியில் உட்கார்ந்து ஒரு நாள் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தேன். கீழே ஏதோ சங்கீதக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. ''பிடில் யார்?'' என்று பக்கத்திலிருந்த நண்பரைக் கேட்டேன். '...ஐயர்' என்று அவர் சொன்னார்.'' அதுதான் அழுது வடிகிறது. மலைக்கோட்டை கோவிந்தசாமி பிடில் வாசித்துக் கேட்க வேண்டும். மற்றவர்களெல்லாம் சுகமில்லை!'' என்றேன். கொஞ்ச நேரங்கழித்துக் கீழே இறங்கிப் போனபோது வாசலில் போட்டிருந்த கச்சேரி விளம்பரத்தைப் பார்த்தேன். அதில் ''மலைக்கோட்டை கோவிந்தசாமி-பிடில்'' என்று கொட்டை எழுத்தில் போட்டிருந்தது.

சிற்பம், சித்திரம் ஆகிய கலைகளில் இரவல் பிழைப்பு இன்னும் அதிகம். அடையாற்றில் சித்திரக் கண்காட்சி ஒன்று நடந்தது. அவனீந்திரநாத் தாகூரின் சித்திரவன்மையைப் பற்றி அதிகம் கேள்விப்பட்டிருந்த இரண்டு மாணவிகள், அங்கிருந்த ஒரு படத்தின் முன் நின்று அதை வெகுவாகச் சிலாகித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று அவர்களுள் ஒருத்தி, படத்தின் அடியில், சிறிய எழுத்தில் இருந்த பெயரைப் பார்த்தாள். ''ஓஹோ, அது அவனீந்திரர் படமல்ல, வேறு யார் பெயரோ போட்டிருக்கிறது'' என்றாள். ''சை! இவ்வளவுதானா!'' என்றாள் மற்றவள். உடனே இருவரும் அவ்விடம் விட்டுச் சென்று அவனீந்திர நாதர் எழுதிய படத்தைக் கண்டுபிடித்து அதைச் சிலாகிக்கத் தொடங்கினார்கள்.

மற்றத் துறைகளிளெல்லாம் 100க்கு 40 பங்கு, 50 பங்கு இரவல் அபிப்ராயமென்றால், இலக்கியத் துறையில் 100-க்கு 99 பங்கு இரவல் என்றே சொல்லலாம். நேயர்களுக்கு ஒரு சிறு யோசனை கூற விரும்புகிறேன். அதாவது, அவர்களுடைய நண்பர்கள், சொந்த அபிப்ராயம் உள்ளவர்களா, கடன் வாங்குபவர்கள் தானா என்று கண்டுபிடிக்க ஒரு வழி. தற்பொழுது தமிழ்நாட்டில் கம்பனுக்கு என்றுமில்லாத பெருமை ஏற்பட்டிருப்பது எல்லாருக்கும் தெரியும். கம்பனைப் பற்றி ஏதேனும் கட்டுரை வெளிவராத தமிழ்ப் பத்திரிகையே கிடையாது. திடீரென்று கம்பனுக்குச் சுக்கிர திசை பிறந்திருக்கிறது. இது நல்லதுதான் சந்தேகமில்லை. ஆனால் மூன்றாந்தர நாலாந்தரக் கவி ஒருவரின் அசட்டுப் பாட்டு ஒன்றை எடுத்துக் கொண்டு, கம்பனைப் போற்றும் உங்கள் நண்பரிடம் சென்று, ''இதோ பார்த்தீர்களா? கம்பன் பாட்டு ஒன்று! என்ன கவிதை! என்ன அழகு!'' என்று சொல்லுங்கள். அவர் உங்கள் வலையில் விழாவிட்டால் என்னைக் கேளுங்கள்.

ரவீந்திரநாத் தாகூரைப் பற்றி ஏதேனும் சொன்னால், நேயர்களே ஒருவேளை என்னை அடிக்கக் கிளம்பலாம். இருந்தாலும் சொல்லியே ஆக வேண்டும். தாகூரின் சிறு கதைகளையும் நவீனங்களையும் படித்து இன்புற்றவர்களில் நானும் ஒருவன். அவருடைய கவிதைகளில் சில தெய்விக சௌந்தரியம் பெற்று விளங்குகின்றன. ஆயினும் சில இடங்களில், அவர் பாட்டுக்கள் கூடப் பொருளற்ற வெறும் வார்த்தைப் பந்தலாக எனக்குத் தோன்றுகிறது. இதைப் பற்றி நான் . ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் என்ன சொன்னார் தெரியுமா? ''அதில் ஏதேனும் உள்ளர்த்தம் இருக்கும். உமக்கு விளங்கவில்லை அவ்வளவு தான்!'' என்றார்.

இத்தகைய மனோபாவம் குடிகொண்டிருக்கும் இவ்வுலகத்தில் நான் சொந்தப் பெயர் போட்டுக் கொண்டு எழுதுவது உசிதமாகுமா சொல்லுங்கள். எவரும் தாம் எழுதுவதைப் பிறர் படிக்க வேண்டுமென்று விரும்புவது இயல்பல்லவா? எனக்கும் அந்த ஆசை உண்டு. ஆனால் தலைப்பில் என் பெயரைப் போட்டுக் கொண்டால் என்ன நேரிடுமென்று நினைக்கிறீர்கள்? முக்கால் வாசிப் பேர் ஏட்டைப் புரட்டி விட்டுப் போய் விடுவார்கள்.

ஒரு சிலருக்குப் பெயர் போட்டுக் கொள்வதில், உண்மையாக அநுகூலம் உண்டு. உதாரணமாக திரு.வி.கல்யாண சுந்தரமுதலியார், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இவர்களைச் சொல்லலாம். இவர்கள் என்ன எழுதினாலும் படிப்பதற்குத் தனித் தனியே ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள். ஒருவருடைய அபிமானிகள் மற்றவர்கள் பெயரைக் கண்டதும் தள்ளி விட்டுப் போய் விடலாமாயினும் ஒவ்வொருவருக்கும் குறைந்தது 500 பேராவது படிப்பதற்கு இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், என் போன்ற சாமானியர்களுக்கோ வென்றால்...என் 'குட்டை' நானே ஏன் உடைத்து விட வேண்டும்? உண்மையில் புனை பெயர் வைத்துக் கொள்வதிலுள்ள அநுகூலம் இதுதான். பெயரைப் போட்டுக் கொண்டால் சாமானியனாகி விடுகிறேன். ஆனால் ''கல்கி'' எவ்வளவு பெரிய மனிதராய்த் தான் இருக்கக் கூடாது; மகா வித்வானாயிருக்கலாம். பண்டித சிரோமணியாயிருக்கலாம்; ஹைகோர்ட் ஜட்ஜாக இருக்கலாம்; மந்திரியாகக்கூட இருக்கலாம். காங்கிரஸ் தலைவராயிருக்கலாம்; இன்னும் எவ்வளவோ பெரிய மனிதராயிருக்கலாம்; இவ்வளவு மகோன்னதமான பதவியை நான் ஏன் விடவேண்டும்?

ஜீவரசம்

முன்னொரு காலத்தில் நான் பதினெட்டு வயதுள்ள இளைஞனாயிருந்தேன். அத்துடன், கலாசாலையில் எம்.ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். போதாதற்குப் பரீட்சை சமீபத்திலிருந்தது. நானோ பரீட்சையில் முதல் தரமாகத் தேற வேண்டுமென்பதில் பெரிய பிரமை கொண்டவன். இவ்வளவும் தவறான விஷயங்கள் என்பது பிற்காலத்தில் தான் எனக்கு விளங்கிற்று.

பரீட்சைக்கு முன்னாள் மாணாக்கர்கள் அமைதியாகப் படிப்பதற்கென்று ஒரு வாரம் விடுமுறை விட்டார்கள். நகரில் இருந்தால் அந்த ஒரு வாரமும் நிச்சயமாய் வீணாகிவிடுமென்று நான் அனுபவத்தில் கண்டறிந்தவன். காப்பி ஹோட்டல்கள், சினிமாக்கள், நாடகங்கள், சீட்டுக் கச்சேரிகள் முதலியவை குறித்துப் பரீட்சை வினாக்கள் கேட்பதாயிருந்தால் நகரிலிருக்கலாம். ஆனால் அந்தக் குருட்டுப் பரிட்சகர்களோ டார்வினைப் பற்றியும், ஷேக்ஸ்பியரைப் பற்றியும், ஸீஸரைப் பற்றியும் அல்லவா கேள்வி கேட்கிறார்கள்? ஆகவே, என்ன செய்யலாமென்று யோசித்தேன். ஓர் அற்புதமான யோசனை தோன்றிற்று.

நகரத்துக்கருகிலுள்ள ஏதேனுமொரு கிராமத்துக்குச் சென்று அந்த ஒரு வாரமும் அமைதியாகப் படித்துப் பரீட்சைப் பாடங்களைக் கரைத்துக் குடித்துவிட்டு வந்து விடுவதென்று தீர்மானித்தேன். அவ்வாறே ஒரு நாள் காலையில் ஸ்நானம் செய்து உடையணிந்து, கைப் பெட்டி ஒன்றில் டார்வின், ஷேக்ஸ்பியர் முதலியவர்களையும், மாற்றி அணிவதற்குச் சில துணிகளையும் எடுத்து வைத்துக் கொண்டு கிளம்பினேன். ரயில்வே ஸ்டேஷன் சென்றதும், எந்த ஊருக்கு டிக்கட் வாங்கலாமென்று பார்த்தேன். நகருக்கு ஐந்தாறு ஸ்டேஷனுக்கப்பால் தாமரை வேலி என்ற ஸ்டேஷன் இருந்தது. ஊரின் பெயர் அழகாயிருந்தபடியால் அந்த ஸ்டேஷனுக்கே டிக்கட் வாங்கிக் கொண்டு ரயில் ஏறினேன்.

ரயில் ஓடியபோது சிந்தனையும் வெகுதூரம் ஓடிற்று. தாமரை வேலி! ஆஹா! என்ன அழகான பெயர்! ஊரும் அத்தகைய அழகாகத்தான் இருக்கும். பக்கத்திலே சலசல வென்று ஜலம் ஓடிக்கொண்டிருக்கும் ஆறு; தாமரையும்

அல்லியும் பூத்திருக்கும் பெரிய குளம்; தென்னந்தோப்புக்கள்; மாமரங்கள்; வாழைத் தோட்டங்கள்; வீடுகள்! இரண்டு சிறு கோயில்கள். ஆகா படிப்பதற்கு இவ்வளவு அமைதியான இடம்? சாப்பாட்டைப் பற்றிக் கவலையில்லை. ஹோட்டல் இராதென்பது உண்மையே. அதனாலென்ன மோசம்? ஒரு வீட்டிற்குள் தைரியமாக நுழைந்து சாப்பாடு போடும்படி கேட்கலாம். விஷயத்தை சொன்னால் சந்தோஷமாகப் போடுவார்கள்...

''லொடக்'' என்று ஆடிக்கொண்டு ரயில் நின்றது. அவசர அவசரமாக வண்டியை விட்டுக் கீழே இறங்கினேன். என்ன ஏமாற்றம்? எல்லாம் வெறும் ஆகாசக் கோட்டையாக முடிந்தது: ஆறு இருந்தது; தண்ணீர் இல்லை. குளம் இருந்தது; தாமரையும் அல்லியும் இல்லை. தென்னை மரம் இருந்தது; ஆனால் சமீபத்தில் அதன் மேல் இடி விழுந்திருக்க வேண்டும். எனவே, மட்டையாவது தேங்காய்க் குலையாவது இல்லாமல் மொட்டையாய் நின்றது. மாமரம் பெயருக்கும் இல்லை. புளியமரம் ஏராளம். கோயில் ஒன்றிருந்தது; ஆனால் இடிந்து பாழாய்க் கிடந்தது. நந்தவனத்துக்குப் பதிலாக எங்கெங்கும் குப்பை மேடுகளாய்க் காணப்பட்டன. ஒரு கள்ளுக்கடை, ஒரு காப்பி ஹோட்டல், ஒரு போலீஸ் ஸ்டேஷன், ஒரு சுருட்டுக் கடை, ஒரு பள்ளிக்கூடம். பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் ''அர்ரித்மெட்டிக்'' என்று அழுத்தந் திருந்தமாய்ச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். ஆயினும் நான் தைரியத்தைக் கைவிடவில்லை. அடுத்த ரயில் வரும் வரையில் கிராமவாசம் செய்தே தீருவதென்று தீர்மானித்தேன். வேறு வழியில்லை.

என்னதான் இருந்தாலும் கிராமம் கிராமம்தான். ஆஹா! எவ்வளவு விஸ்தாரமான மைதானம்? என்ன அழகான அருகம்புல்? எவ்வளவு நேர்த்தியான மண்? அப்புறம், இதோ தெரியும் சப்பாத்திக் கள்ளி, இவையெல்லாம் நகரத்தில் காணக்கிடைக்குமா? அவசரப்பட்டுக் கிராம வாழ்க்கை வெறும் 'ஹம்பக்' என்று தீர்மானித்தது பிசகுதான். எப்படியும் இந்தப் புல் நிறைந்த மைதானத்தில் சிறிது நேரம் உட்கார்ந்து அமைதியாகப் படிக்கலாம். ஆனால், அதற்கு முன்னால் கொஞ்சம் தாகத்துக்குச் சாப்பிட வேண்டும். தொண்டை வரளுகிறது. காப்பி கிளப்புக்கு-சை! கிராமத்துக்கு வந்தும் காப்பி கிளப்பா? ஏதாவது ஒரு வீட்டுக்குள் நுழைந்து கொஞ்சம் மோர் வாங்கிக் குடித்து விட்டு வரலாம்.

கிராமத்துக்குள் சென்றேன். கொஞ்சம் ஒதுங்கி நின்ற ஒரு வீடு என்னைக் கவர்ந்திருந்தது. அது சிறிது பாழடைந்த வீடு. 'ஏழை வீட்டுக்குப் போனால்தான் நல்லது! தைரியமாகக் காலணா கொடுத்து மோர் கேட்கலாம்'' என்று எண்ணியவாறு, வீட்டினருகில் சென்றேன். பெயர் ''லலிதா விலாசம்.'' கதவு தாளிட்டிருந்தது. வெளிச் சுவரில் ஏதேதோ எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தேன். இராஜப் பிரதிநிதி இர்வின் பிரபுக்கு ஒரு நோட்டீசு. ''இது கண்ட ஒரு வாரத்திற்குள் நீர் நமக்குத் தரவேண்டிய இரண்டு லட்சம் ரூபாயையும் அனுப்பி வைக்க வேண்டியது. இல்லாவிடில் உம்மை வேலையிலிருந்து தள்ளி விடும்படி சிபாரிசு செய்யப்படும்.'' சென்னை ஹைகோர்ட்டு நீதிபதிகளையெல்லாம் இந்தியாவிலுள்ள பற்பல இடங்களுக்கும் மாற்றியிருப்பதாக மற்றோர் உத்தரவு எழுதப்பட்டிருந்தது. இடையிடையே ''ஜீவரசம், ஜீவரசம்'' என்று பல இடங்களில் பொறிக்கப்பட்டிருந்தது. ''சரி நமது கிராம வாசம் வீண் போக வில்லை. இங்கே ஏதோ விநோதம் இருக்கிறது'' என்று எண்ணிக் கொண்டேன். கதவைத் தட்டினேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கதவு திறக்கப்பட்டது. முதலில் ஒரு கரும் பூனை வெளியே வந்தது. அப்புறம் ஒரு முயல் குட்டி. அப்புறம் ஒரு நாய், பின்னர் ஒரு கிழவரின்! முகம் மட்டும் தெரிந்தது. கிழவரின் உருவம் முழுவதும் வெளியே வந்தது. ஆஹா! எத்தகைய கிழவர்! நீண்ட வெண்ணிறத் தாடி; முழங்கால்வரை வந்த வெண்மையான மேலங்கி; கண்ணில் மூக்குகண்ணாடி; நெற்றியில் குங்குமம்; ஆஜானுபாகுவான தோற்றம்; யாரோ பிரம்ம ஞான சங்கத்தைச் சேர்ந்த மகானாயிருக்க வேண்டுமென்றும், இங்கே தனிமையாக வந்து தவம் செய்கிறாரென்றும் நான் எண்ணினேன்.

''என்னப்பா! எங்கே வந்தே?'' என்றார்.

''தங்களுக்குத் தொந்தரவு கொடுத்ததற்காக மன்னிக்க வேண்டும். தாகமாயிருக்கிறது. கொஞ்சம் மோர் கிடைக்குமா என்று கேட்க வந்தேன்'' என்றேன்.

''மோ-மோர், என்ன மோரா? ஓஹோ! மோர்-சரி, சரி உள்ளே வா'' என்றார் கிழவர்.

எனக்குக் கொஞ்சம் சந்தேகம் தட்டிற்று. இருந்தாலும் உள்ளே சென்றேன். சுற்று முற்றும் பார்த்ததும் என் கலக்கம் அதிகரித்தது. காரணம் அவ்வளவு விசித்திரமான சாமான்கள் அங்கே காணப்பட்டன. பழைய அலமாரி, அதற்குள்

கணக்கில்லாத கண்ணாடிப் புட்டிகள், ஒடிந்த மேஜை, அதன்மீது கண்ணாடிக் குழாய் முதலிய என்னென்னவோ கருவிகள். மூலைக்கு மூலை கிழிந்த பழைய புத்தகங்கள். ஒரு ஜோடி பூனை, நாலு முயல், ஒரு நாய், எலி வளை, முதலியன. கிழவர் ஒரு சட்டியிலிருந்து கொஞ்சம் மோர் ஊற்றிக் கொடுத்தார். அதை மறுப்பதற்கு எனக்குத் தைரியமில்லை. வாங்கிக் குடித்தேன். சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று.

''தாங்கள் என்ன இரசாயன சாஸ்திரியோ?'' என்று கேட்டேன். இரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டதாகவே எண்ணினேன்.

''என்ன! என்ன? ரசாயனமா? இல்லை, இல்லை! ஹா! ஹா! ஹா! ர்ரசவாத சாஸ்திரி, ர்ரசவாத சாஸ்தி! ர்ரசவாதம், ர்ரசவாதம்?''

கிழவன் பைத்தியக்காரன் என்பது இப்போது எனக்கு நன்கு விளங்கிவிட்டது. திரும்பிப் போவதற்கு ஓர் அடி எடுத்து வைத்தேன். ஆனால் அதற்குள் கிழவன் என் கையைப் பிடித்துக் கொண்டான். ஏதோ பெரிய இரகசியம் சொல்வதுபோல் அவன் கூறியதாவது-

''தெரியுமா? நான் ஜீவரசம் கண்டுபிடித்திருக்கிறேன். ஒரு லட்சம் உயிர்களின் வடிகட்டிய ஜீவசத்து. ஆமாம்; ஒரு லட்சம் உயிர்கள்! ஓர் உயிருக்கு நூறு வருஷம், லட்சம் உயிருக்கு கோடி வருஷம். கோடி வருஷத்து ஆயுள். இதோ இந்தப் புட்டியில் அடங்கியிருக்கிறது!''

இவ்வாறு சொல்லிக் கிழவன் மேசையிலிருந்தது ஒரு சிறு புட்டியை எடுத்துக் காட்டினான். இந்தப் பைத்தியக்காரனிடமிருந்து எப்படித் தப்பி வெளியே போகப் போகிறோம் என்று எனக்கு ஏக்கம் உண்டாகிவிட்டது.

''நல்லது ஐயா! ரயிலுக்குப் போகவேண்டும். மோர் கொடுத்தீர்களே, அதற்கேதாவது காசு...'' என்று நான் தயங்கினேன்.

''நீ நல்ல பையன். நான் சொல்றதைக் கேளு. ஒரு புட்டி வாங்கிக்கோ.. ஜீவரசம் ஒரு லட்சம் உயிர்களின் வடிகட்டிய சத்து. கோடி வருஷ ஆயிசு'' என்று கிழவன் ஜீவரசத்தைப் பற்றி வர்ணித்தான்.

அங்கிருந்து தப்புவதற்கு இதுதான் வழியென்று நினைத்தேன்! ''என்ன விலை?'' என்று கேட்டேன்.

''விலை மூன்று ரூபாய். நீ நல்ல பையன்; உனக்கு மட்டும் இரண்டு ரூபாய்.''

ஒரு குவளை மோருக்கு இரண்டு ரூபாய் நல்ல பேரம் அல்லவா? ஆனால் எனக்கு அப்போதிருந்த மனக் குழப்பத்தில் கையில் இருந்த பத்து ரூபாயையும் கேட்டாலும் கொடுத்து விட்டு வந்திருப்பேன்.

நான் வெளியே வந்து அந்த வீட்டின் கிழண்டைச் சுவரைப் பார்த்தபோது அதில் "பித்துக் கொள்ளிக் கிழவன்'' என்று யாரோ குழந்தைகள் எழுதியிருப்பதைக் கண்டேன்... என் நடையின் வேகம் நான் சொல்லாமலே அதிகமாயிற்று. நேரே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனேன். இப்போதுதான் ஒரு வண்டிபோயிற்றென்றும் அடுத்த வண்டி வர இன்னும் மூன்று மணி நேரம் ஆகுமென்றும் சொன்னார்கள். ''அட தெய்வமே!'' என்று எண்ணியவனாய் ஸ்டேஷனிலிருந்த கடையில் கொஞ்சம் வாழைப் பழம் வாங்கிக்கொண்டு சமீபத்தில் புல் முளைத்திருந்த ஒரு மைதானத்தில் போய் உட்கார்ந்தேன். வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது. ஏதோ வந்ததற்குச் சிறிது நேரம் அமைதியாய்ப் படிப்போம் என்று எண்ணினேன். அதற்கு முன் மருந்துப் புட்டியை எடுத்து ஒரு முறை பார்த்தேன். பெருமூச்சுடன் அதைக் கீழே வைத்துவிட்டு டார்வின் புத்தகத்தைக் கையில் எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். ஜீவ வர்க்க பரிணாமத்தைப் பற்றியும் குரங்கிலிருந்து மனிதன் எப்படிப் பிறந்தான் என்பதைப் பற்றியும் வெகு ரசமாகச் சொல்லப்பட்டிருந்தது.

அந்த ரசத்தில் சொக்கிப்போன எனக்கு ஆனந்தமாக நித்திரை வந்தது.

''சை! தூங்கக்கூடாது!'' என்று எண்ணி நான் கண்ணைக் கசக்கியபோது சமீபத்தில் காலடிச் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். எதிரில் யார் வந்தது என்று நினைக்கிறீர்கள்? புத்தகத்தில் யாரைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்தேனோ அந்த சாக்ஷாத் ஆஞ்சநேயப் பெருமான்தான். குரங்குடன் மனிதன் ஒருவனும்கூட வந்தான். அவன் கழுத்தில் ஒரு பழைய ஹார்மோனியப் பெட்டி தொங்கிக் கொண்டிருந்தது. குரங்கு, சட்டையும் குல்லாவும் அணிந்திருந்தது. ''இந்தப் பிராணியிடமிருந்தா நாமெல்லாரும் பிறந்தோம்? டார்வினும் ஒரு பெரிய பைத்தியக்காரன் போலிருக்கிறதே!'' என்று நான் எண்ணினேன்.

''குட்மார்னிங் ஸார்!'' என்றான் குரங்காட்டி. அவனுடைய குரங்கு என்னை வெகுவாகக் கவர்ந்து விட்டதென்பதை அவன் எப்படியோ கவனித்திருக்க வேண்டும்.

''ஹனுமான்! ஐயாவுக்கும் ஸலாம் போடு!'' என்றான். ஹனுமார் ஸலாம் போட்டது.

''ஐயாவுக்கு வாத்தியம் கேட்கப் பிரியமா?'' என்று கேட்டான் அந்த மனிதன்.

''இல்லை'' என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னேன். ஹார்மோனியம் என்றாலே எனக்குப் பிடிக்காது. அதிலும் நான் வசித்த ஹோட்டலுக்கு அடுத்த வீட்டிலிருந்த ஹார்மோனியம் என் படிப்பைக் கெடுப்பது போதாதென்று இங்கு அமைதியாகப் படிக்க வந்த இடத்திலுமா?

''ஐயா ஹனுமாருக்குக் காலணா கொடுப்பாரு. நான் வாத்தியம் வாசிப்பேன்'' என்றான்.

''இரண்டும் இல்லை'' என்றேன் நான்.

''அப்படியானால் ஐயா அரையணாக் கொடுப்பாரு. நான் வாத்தியம் வாசிக்காதிருப்பேன்!'' என்றான் மனிதன். இப்போது அவன் குரங்கின் விலாவில் விரலால் குத்தவே அது ஓடிவந்து தன் தலையில் இருந்த குல்லாவை எடுத்து நீட்டியது.

மறுபடியும் தோல்விதான். சட்டைப் பையில் கை விட்டுக் காலணாக்களைத் தேடிக்கொண்டிருந்தேன். இதற்குள் குரங்கின் கவனம் பக்கத்திலிருந்த வாழைப் பழத்தின் மேல் போய்விட்டது. அப்பொழுது எனக்கு அருமையான ஒரு யோசனை தோன்றிற்று. கிழவனிடம் பெற்ற ஜீவரசத்தை இந்தக் குரங்குக்குக் கொடுத்து ஏன் பரிசோதிக்கக் கூடாது என்பதுதான் அந்த யோசனை.

சட்டென்று ஒரு வாழைப் பழத்தை உரித்து, குரங்காட்டி பாராமல் புட்டியிலிருந்து அதில் கொஞ்சம் மருந்து ஊற்றிக் குரங்கினிடம் கொடுத்தேன். குல்லாவில் அரையணாவும் போட்டேன். அடுத்த கணத்தில் குரங்கு தன் எஜமான் தோளுக்குப் போயிற்று; அரையணா எஜமானின் சட்டைப் பைக்குப் போயிற்று. வாழைப்பழம் குரங்கின் வயிற்றுக்குள் போயிற்று. குரங்காட்டி என்னை வாழ்த்திக் கொண்டே போனான். ''இவ்வளவு தானா? ஒன்று மில்லையே!'' என்று நினைத்துக் கொண்டு நான் மீண்டும் படிக்கத் தொடங்கினேன்.

ஆனால், குரங்காட்டி கொஞ்சதூரம் போய் நின்று குரங்கினிடம் ஏதோவாதமிடுவதைக் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தேன். ஆஹா! இதென்ன விந்தை? பழைய குரங்கு எங்கே? இந்தப் பெரிய குரங்கு எங்கிருந்து வந்தது? குரங்காட்டி ஏதோ தந்திரத்தினால் இந்தப் புதிய குரங்கைக் கொண்டு வந்து விட்டானோ? அப்படியிருக்க முடியாது.

ஏனெனில் குரங்காட்டியும், என்னைப் போலவே அதிசயமடைந்தவனாய்க் காணப்பட்டான். அவன் குரங்கைக் கீழே இறக்கி விட்டு அதைப் பார்த்து ஏதோ ஹிந்துஸ்தானி பாஷையில் பேசினான்.

நன்றாய்க் கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தேன். முன் பார்த்த குரங்கைவிட இது மூன்று மடங்கு பெரியதாயிருந்தது. நிமிஷத்துக்கு நிமிஷம் அது வளர்ந்து வந்ததுடன் உருவமும் மாறிவந்தது. இப்போது குரங்காட்டியின் மார்பு அளவுக்கு அது உயர்ந்து விட்டது. அதன் முதுகு வளைவு மறைந்து போயிற்று. கால்கள் நிமிர்ந்து வந்தன. ஆனால், குல்லா பழைய குல்லாதான் சட்டையும் பழைய சட்டைதான். ஆனால் உடம்பு பருத்தபோது சட்டை தாறுமாறாய்க் கிழிந்து விட்டது. எனவே பழைய குரங்குதான் இப்படி வளர்ந்து வருகிறதென்பதில் சந்தேகமில்லை. வாயைப் பிளந்த வண்ணம் இந்த அற்புதக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

குரங்கு - அல்லது மாஜி குரங்கு - இன்னும் சில நிமிஷத்தில் தன் எஜமானின் தோள் அளவுக்கு வந்து அவன் முகத்தை வினோதமாக உற்றுப் பார்க்கத் தொடங்கியபோது அதற்கு மேல் அந்த மனிதனால் தாங்கமுடியாமல் போய் விட்டது. அவன் ஹார்மோனியப் பெட்டியைத் தொப்பென்று கீழே போட்டுவிட்டு, ''ஆண்டவனே அல்லாவே!'' என்று கூச்சலிட்டுக் கொண்டு ஓட்டம் பிடித்தான். ரயில் வேலி, தண்டவாளம், அதனருகிலிருந்த வாய்க்கால் முதலியவற்றை அவன் சிறிதும் பொருட்படுத்தாமல் ஒரே தாண்டாகத் தாண்டிக் குதித்து ஓடினான். ஆனால், நானோ இந்த மகத்தான அற்புதக் காட்சியைப் பார்த்த வண்ணம் மந்திரத்தினால் கட்டுண்டவன் போல் உட்கார்ந்திருந்தேன். குரங்காட்டி ஓடிப்போனதும் மாஜி குரங்கு திரும்பிப் பார்த்தது. மெதுவாக என்னை நோக்கி வந்தது. இப்போது இது காட்டுமிராண்டி மனிதனைப் போல் காணப்பட்டது. அதற்குள்ளாகச் சட்டை சுக்குச் சுக்காகக் கிழிந்து கீழே விழுந்து விட்டபடியால் தலையில் குல்லாவைத் தவிர வேறொன்றும் இல்லை.

அந்த விநோதப் பிராணி என்னெதிரே வந்து நின்று உற்றுப் பார்த்தது. எப்படியேனும் அதைத் திருப்தி செய்ய வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. பக்கத்திலிருந்த வாழைப் பழத்தைச் சீப்புடன் எடுத்து, அதனிடம் கொடுத்தேன். அந்தக் குரங்கு ''அப் - அப்- அப்'' என்றது.

''அப்படியா? சந்தோஷம்!'' என்றேன் நான். உள்ளுக் குள் எனக்கிருந்த திகிலைச் சொல்லி முடியாது.

குரங்கு மனிதன் எனக்கெதிரில் புல்லில் உட்கார்ந்து கொண்டான். ''கிக்-கிக்-கிக்'' என்றான். பிறகு ''எக்-எக் எக்'' என்றான். பின்னர் என்னை நோக்கி ஏதோ கேட்பவன் போல் ''வக்-வக்-வக்'' என்றான்.

என் மூளை இப்போது வேலை செய்ய ஆரம்பித்தது. இதென்ன விந்தை? இதென்ன அற்புதம்? எப்படி நிகழ்ந்தி ருக்கும்? கிழவனுடைய ஜீவரசம் செய்யும் வேலையா? ஆளைத்தானே வளர்க்க முடியும்? ஒரு லட்சம் உயிர்களின் வடிகட்டிய சத்து. ஒரு கோடி வருஷ ஆயுள், டார்வின் கொள்கை. பரிணாம வாதம் ஓஹோஹோ! விளங்கி விட்டது; விளங்கி விட்டது. கிழவன் பைத்தியக் காரனல் லன். மகாசித்த புருஷன். வெறுமே உயிரைச் சாகாமல் வைத்திருக்கும் ஜீவரசம் அன்று; உயிர் வளர்ச்சி வரும் ஜீவரசம். கால்மணி நேரத்தில் ஒரு லட்சம் வருஷத்தின் வளர்ச்சி! ஆஹா; என்ன அற்புதம்!

ஆனால், இந்த அற்புதத்தின் உண்மையைக் கண்டு பிடித்த மகிழ்ச்சியை நான் அதிகநேரம் அநுபவிப்பதற் கில்லை. ஏனெனில் நிமிஷத்துக்கு நிமிஷம் நிலைமை மாறி மேலும் மேலும் பிரமிப்பு உண்டாகி வந்தது. இப்பொழுது அந்தக் குரங்கு மனிதன் பேசுவதற்கு முயல்கிறானென்பதை அறிந்து கொண்டேன்.

''இன்-இன் இன்'' என்று சொல்லிக்கொண்டே அவன் ஜீவரசம் இருந்த புட்டியைச் சுட்டிக் காட்டினான்.

பிறகு சிறிது சிரமப்பட்டு ''இன்-இன்-இன்னும் கொஞ் சம்?'' என்றான்.

ஆதிகாலத்தில் முதன் முதல் தோன்றிய மனித சாதி தமிழ் மொழிதான் பேசிற்றென்று ஒரு தமிழ்ப் பிரமுகர் கூறுவது எனக்கு நினைவு வந்தது. அது உண்மையாகவே இருக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால், இது குறித்து அதிக நேரம் சிந்திப்பதற்கு தருணம் அதுவன்று. இன்னும் கொஞ்சம் ஜீவரசம் குடித்து விட்டால் என்ன விளையுமோ வென்று பீதி எனக்கு உண்டாகிவிட்டது. ஆகையால் புட்டியைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு எழுந்திருக்க முயன்றேன்.

ஆனால் முயற்சி பலிக்கவில்லை. வலிமை பொருந்திய ஒரு கை என்னைப் பிடித்து இறுத்திற்று. மற்றொரு கையால் அவன் புட்டியைப் பிடுங்கி அதிலிருந்த ஜீவரசம் முழுவதை யும் குடித்துவிட்டான். பின்னர் அவன் என் கைப் பெட்டி யைத் திறந்தான்; அதிலிருந்த என்னுடைய மாற்று உடை களை எடுத்து அணிந்து கொண்டு மறுபடி கீழே உட்கார்ந் தான். என்மூளை திருவிழாக் காலங்களில் திருக்குளம் குழம்புவது போல் குழம்பிற்று. அது அடியோடு சிதறிப்போ காமலிருக்கும் பொருட்டு நகரம் கலாசாலை என்னுடைய ஆசிரியன்மார் முதலியவர்களைப்பற்றி எண்ணினேன். எனக்கு நேர்ந்திருக்கும் இந்த நிலைமையை என் விஞ்ஞான ஆசிரியரால் கூடச் சமாளிக்க முடியாது என்று கருதினேன்.

''ரொம்ப நல்லது!'' என்று அக்குரங்கு மனிதன் தூய தமிழில் பேசினான். பிறகு ஏதோ அபூர்வ ஜந்துவைப் பார்ப்பது போல், என்னைப் பார்த்துவிட்டு, ''நீ என்ன, பழைய கர்நாடகமாயிருக்கிறாயே!'' என்றான்.

ஒரு கூத்தாடிக் குரங்கு என்னைப் பார்த்து; ''பழைய கர்நாடகம்'' என்று சொல்லுமென்று நான் கனவிலும் கருதியதில்லை. எனவே, அக்கேள்வி என்னைத் தூக்கிவா ரிப் போட்டது. அப்போது என்மடியிலிருந்த டார்வின் புத்தகம் கீழே விழுந்தது.

''ஓஹோ! மாண்டுபோன ஆங்கில மொழியா?'' என் றான் அம்மனிதன். நிமிஷத்துக்கு நிமிஷம் என் வியப்பு அதிகமானது போல், உருவமும் மாறி வந்தது. பழைய காட்டு மிராண்டி வடிவம் போய்விட்டது. அவன் தேகம் மெலிந்து மென்மையாகி யிருந்தது. மண்டை அசாத்தியமா கப் பெருத்து விட்டது. கண்களும் அப்படியே. வாய் மிகவும் சிறுத்திருந்தது. விரல்கள் மெலிந்து நீண்டிருந்தன. தலையில் இருந்த சிறு குல்லா ஒன்றுதான் அவன் சற்று நேரத்திற்கு முன் குரங்காயிருந்தவன் என்பதை எனக்கு நினைவூட்டிற்று.

இந்த நினைவு வந்ததும், மறுபடியும் ஒரு நிமிஷம் சிந்தனை செய்தேன். வளர்ச்சி அதிவேகமாக நிகழ்ந்து வருகிறதென்று அறிந்தேன். குரங்கு காட்டுமனிதனாகி, காட்டு மனிதன் இக்கால மனிதனாகி, இக்கால மனிதன் வருங்கால மனிதன் ஆகி விட்டான். இப்போது அவனைக் கண்டதும் என்னையறியாமலே பயபக்தி உண்டாயிற்று.

''மன்னிக்க வேண்டும்'' என்ற சொற்கள் என் வாயி னின்று தாமே வெளி வந்தன. எதற்காக மன்னிக்க வேண்டு மென்பது எனக்கே விளங்கவில்லை.

வருங்கால மனிதன் கீழே விழுந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்துவிட்டுச் சொன்னான்:- ''ஓ! டார்வின் இயந்திரயுகத்தை சேர்ந்தவன். நமது வளர்ச்சியை ஒருவாறு ஊகித்து அப்போதே சொன்னான். ஆயினும் அக்காலத்து மக்களெல்லாரும் பொதுவாக மூடர்கள். எனவே ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டு செத்தார்கள்.''

''உண்மை; வாஸ்தவம்!'' என்றேன். இவ்வளவு மூளைக் குழப்பத்திடையே எனக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. வருங்கால மனிதர் தமிழ்மொழி பேசுவார்கள் என்பதில் தான் அந்தச் சந்தோஷம் உண்டாயிற்று.

மீண்டும் சட்டென்று எனக்கு ஓர் அரிய யோசனை தோன்றிற்று. வருங்காலத்தைப்பற்றி, இந்த வருங்கால மனிதன் கூறுவதை எல்லாம் எழுதி வைத்துக் கொண்டால், நல்லதல்லவா? அப்படிச் செய்து கொண்டால் கலாசாலை ஆசிரியர்களைக் கூட ஓட ஓட விரட்டலாம். உடனே நோட்டுப் புத்தகமும் பென்சிலும் சட்டைப் பையிலிருந்து எடுத்துக் கொண்டேன்.

''ஓஹோ! எழுதும் கலை! இது மறந்து போய் இரண்டு லட்சம் ஆண்டு கழிந்து விட்டதல்லவா?'' என்று கூறி வருங்கால மனிதன் வியப்புடன் நோக்கினான்.

பிறகு சட்டென்று ஓர் எண்ணம் உதயமானவனைப் போல் என்னை உற்றுப் பார்த்து, ''நீ யார்!'' என்று கேட்டான்.

விஞ்ஞானப் புலவர்கள் ஒரு வண்டு அல்லது தேனீயை நோக்குவதுபோல் அவன் என்னை ஆராய்ச்சிக் கண்ணுடன் பார்க்கத் தொடங்கினான். உடனே எனக்கு அளவில்லாத பீதி உண்டாயிற்று. நல்லவேளை! அவன் முன்போல் காட்டுமிராண்டி மனிதனாயில்லை. தப்பித்து ஓடிப்போகலாம்!

எழுந்து ஓடினேன். ஆனால் சில தூரம் போவதற்குள் என் கால்கள் தாமாகவே நின்றன. விருப்பமில்லாமல் திரும்பிப் பார்த்தேன். வருங்கால மனிதன் இருந்த இடத்திலேயே இருந்தான். ஏதோ கண்ணுக்குப் புலனாகாத சக்தி என்னைப் பிடரி பிடித்துத் தள்ளிக்கொண்டு போய் அவன் எதிரில் உட்கார வைத்தது. தேகபலத்தை அவன் இகழ்ந்து கூறியதின் கருத்து எனக்கு இப்போது நன்கு விளங்கியது. இதற்குள்ளாக அவன் மண்டையும் கண்களும் இன்னும் அதிகம் பெருத்திருந்தன. கண்களில் காந்த ஒளி வீசிற்று.

இதன் பின்னர், அவன் வாய் திறந்து பேசவில்லை. ஆயினும் அவனுடைய கட்டளைகள் என் மூளையில் வந்து நன்றாகப் பதிந்தன.

''உன் குல்லாவை எடுத்து என்னிடம் கொடு!'' என்று மானஸரூபக் கட்டளை பிறந்தது.

''முடியாது!'' என்று நான் வாயால் சொன்னேன். ஆனால், கையினால் குல்லாவை எடுத்துக் கொடுத்தேன். மௌன மனிதன் அக்குல்லாவை மண்டபம் போலிருந்த தன் தலையின் உச்சியில் வைத்துக்கொண்டான். பின்னர் குரங்குக் குல்லாவை என்னிடம் கொடுத்தான்.

''இதை உன் தலையில் வைத்துக்கொள்'' என்று இன்னொரு கட்டளை பிறந்தது.

''மாட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே அதை வாங்கி என்னுடைய தலையில் வைத்துக்கொண்டேன்.

''இடது கையில் குல்லாவைத் தூக்கி வலது கையினால் ஸலாம் போடு!' என்று அடுத்த உத்தரவு வந்தது.

ஐயையோ! இதெல்லாம் அநியாயம்! மனிதர்கள் குரங்குகளையும் நாய்களையும் பழக்குவதுபோல் அல்லவா இவன் நம்மைப் பழக்குகிறான்.!

''முடியாது'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னேன். ஆயினும் என் இடது கை குல்லாவைத் தூக்கிற்று. வலது கை ஸலாம் போட்டது.

''மீண்டும் ஸலாம் போடு!

எனக்குக் கண்களில் நீர் ததும்பிற்று. ஆயினும் ஸலாம் போட்டேன்.

''எழுந்து நின்று கூத்தாடு!''

அவமானம்! அவமானம்! ஆனாலும் எழுந்து நின்று கூத்தாடினேன்.

''போதும், உட்கார்''

உட்கார்ந்தேன். அதற்கடுத்தாற்போல் ''செத்துப் போ'' என்ற கட்டளை பிறக்கக் கூடாதா என்று நினைத்தேன்.

என்ன அதிசயம்! அடுத்த கணத்தில ''செத்துப் போ'' என்ற பயங்கரமான கட்டளை வந்தது.

''மாட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே மல்லாந்து கீழே விழுந்தேன். வருங்கால மனிதனுடைய பயங்கரமான பெரிய மண்டை என் முகத்தினருகே வந்தது. அவனுடைய

மெலிந்த நீண்ட விரல்கள் என் முகத்தைத் தீண்டின. அளவில்லாத பீதி கொண்டவனாகக் கண்களை மூடிக் கொண்டேன்.

ஒரு பெரிய பிரயத்தனம் செய்து கண்களைத் திறந்தேன். என் மார்பின்மீது குரங்கு உட்கார்ந்து பல்லை இளித்துக் கொண்டிருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தேன். குரங்காட்டி ஹார்மோனியத்தைத் திறந்து ஸ்வரம் போட்டுக் கொண்டிருந்தான். எருமைக் கன்று சத்தமிடுவது போலிருந்தது. பக்கத்தில் வாழைப் பழங்கள் எல்லாம் உரிக்கப் பட்டுத் தோல்கள் கிடந்தன. கடவுளே! இவ்வளவும் கனவுதானா? சட்டென்று எழுந்து உட்கார்ந்தேன். என் மார்பிலிருந்து கீழே விழுந்த குரங்கு என்னை நோக்கி 'கிக்-கிக்-கிக்' என்றது.

''ஐயா அநுமாருக்குக் காலணாக் கொடுப்பாரு; நான் வாத்தியம் வாசிப்பேன்'' என்றான் குரங்காட்டி.

''இங்கு எத்தனை நேரமாக நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டேன்.

''கால் நாழியாக நிற்கிறேன், சாமி! இன்று முழிச்ச முகம் நல்ல முகமில்லை. பொழுது விடிந்து தம்பிடிகூடக் கிடைக்கவில்லை. அதோ அந்தப் பித்துக்குளி வீட்டில் ஒரு நாழி வீணாய்ப் போச்சு. நீங்களோ பட்டப் பகலில் தூங்கிப் போயிட்டிங்க'' என்றான்.

பித்துக்குளி என்றதும் நான் பக்கத்தில் திரும்பிப் பார்த்தேன். குரங்கு அப்போதுதான் ஜீவரசம் இருந்த புட்டியைத் திறந்து கொண்டிருந்தது. ''ஐயையோ!'' என்று ஒரு சத்தம் போட்டு அதைப் பிடுங்கி வீசியெறிந்தேன். கிராம வாசம் போதும் போதுமென்று ஆகிவிட்டது. கைப் பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு ஸ்டேஷனை நோக்கி வேகமாய் நடக்க ஆரம்பித்தேன். அப்போது குரங்கு என்னை உற்றுப்பார்த்து 'வக்-வக்-வக்' என்றது.

''மாட்டேன்'' என்று சொல்லிக்கொண்டே அதற்கு நான் ஸவர்ம் போட்டேன்.

ராகு காலம்

ராகுவென்றால் இன்ன வென்பது நீங்கள் எல்லாரும் அறிந்த விஷயமே. ராகுவென்பது ஒரு கிரஹம், அல்லது ஒரு பாம்பு; அல்லது ஓர் இராட்சதன்; அல்லது ஓர் இராட்சதப் பாம்புக் கிரகம். இந்த ராகுவுக்குச் சில சமயம் திடீரென்று அகோரமான பசி உண்டாகிவிடும். பின்னர் அது என்னசெய்யும் தெரியுமல்லவா? பகலாயிருந்தால் சூரியனையும், இராவாயிருந்தால் சந்திரனையும் அப்பம் என்றெண்ணி விழுங்கிட முயலும். ஆனால் சூரியன் என்றால் இலேசா என்ன? சூரியனுடைய குறுக்களவு, சுற்றளவு, வெப்பத்தின் டிகிரி முதலியவையும் உங்களுக்குத் தெரிந்த விஷயங்களே. சூரியனது குறுக்களவு 10,00,000... மைல். எவ்வளவு பூஜ்யம் என்பது ஞாபகமில்லை. பூஜ்யம் எவ்வளவு போட்டால்தானென்ன? இதே முறையில் எல்லாக் கிரகங்களின் அளவையும் கணக்காகச் சொல்லிவிடலாமென்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். பூமியிலிருந்து சூரியனுடைய தூரமோ ஒன்று போட்டு பதினாறு பூஜ்யம் மைல் என்று நினைக்கிறேன். இவ்வளவு தூரத்திலிருக்கும் சூரிய பகவான் வருஷந்தோறும் நாம் கொடுக்கும் பொங்கல், வாழைப் பழம் முதலியவற்றைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே வெளியில் மண்டையை வெடிக்கின்றது. இப்படிப் பட்ட சூரிய பகவானை விழுங்க முயலுபவனின் கதி என்னவாகுமென்று சொல்ல வேண்டியதில்லை.

இப்படியாக, ராகு சூரியனையோ, சந்திரனையோ விழுங்கப் பார்த்து முடியாமல் திரும்பக் கக்கி விடுவதற்குத்தான் சூரிய சந்திர கிரஹணங்கள் எனப் பெயர் என்பதை நாமெல்லாரும் அறிவோம். வாசகர்களின் காதோடு ஒரு சமாசாரம். இந்தக் கதையில் உண்மையாக உங்களுக்கு நம்பிக்கை கிடையாது. எனக்கும் நம்பிக்கை கிடையாது. முறையே, பூமி சந்திரன், இவற்றின் நிழலினால் எப்படி சூரிய, சந்திர கிரஹணங்கள் உண்டாகின்றனவென்பதை நாலாம் வகுப்பிலேயே நாம் படித்திருக்கிறோமல்லவா? ஆனால், கிரஹண தினத்தன்று மட்டும் இந்த விஞ்ஞான அறிவெல்லாம் நமக்கு மறந்து போய் விடுகிறது. அன்று, கடல் நீரிலோ குளங்குட்டையிலோ தலை முழுகித் தர்ப்பணம் முதலியவை செய்ய நீங்களும் நானும் தவறுவதில்லை. இது குறித்து நாம் வெட்கப்பட வேண்டிய அவசியமுமில்லை. வான சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற

எம்.ஏ.பட்டதாரிகள் கூட அப்படித்தான் செய்கிறார்கள், இது நிற்க.

ராகுவைப் பற்றியும் கிரகணங்களைப் பற்றியும் இப்பொழுது நமக்கு நன்றாக உண்மை விளங்கிவிட்டது. ஆனால் இந்த ராகுகாலம்! இதன் இரகசியந்தான் எனக்கு பிடிபட வில்லை. ராகுவுக்கும் காலத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்ககூடும்? ராகு காலத்திலும், ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம் வரும் ராகுகாலம் மிகப் பொல்லாததாம். ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு காரியத்துக்காக நான் புறப்பட்டுச் சென்றேன்; புறப்படும்போதே 'ராகுகாலத்தில் கிளம்புகிறோம்!' என்று நெஞ்சு அடித்துக்கொண்டது. அதற்கேற்றாற்போல் காரியமும் நடக்கவில்லை. சரி, சரி, ராகுகாலப் பலன்தான் என்று தீர்மானித்து விட்டேன். ஆனால் நான் கொஞ்சம் சந்தேகப் பிரகிருதி என்பது உங்களுக்குத் தெரியுமே, மறுபடியும் யோசனை வந்துவிட்டது. நான் புறப்பட்ட நேரத்திற்கும், நான் பார்க்கச் சென்றவர் ஊரில் இல்லாததற்கும், என்ன சம்பந்தம் இருக்ககூடும்? ராகு காலத்திற்கு முன்னால் போயிருந்தாலும் அவர் இருந்திருக்க முடியாது. இவ்வாறு எண்ணி வேறொரு நாள் வேண்டுமென்றே ராகுகாலத்தில் கிளம்பிச் சென்றேன். அன்று வேலை திருப்திகரமாய் நடந்தது. அதற்குப் பிறகு பல முறை ராகுகாலத்தில் காரியம் தொடங்கிப் பார்த்தேன். சில முறை நடந்தது; சிலமுறை நடக்கவில்லை. ஆகவே காரிய சித்திக்கும் கிளம்பும் நேரத்துக்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை என்பது விளங்கிற்று. இக்கட்டுரையையும் நான் துணிந்து ராகு காலத்தில்தான் எழுதத் தொடங்குகிறேன்.

இதற்குள்ளாக, நேயர்களில் பாதிப்பேர் என்னை நாஸ்திகன் எனத் தீர்மானத்திருப்பார்கள் என்றே நினைக்கிறேன். உண்மையில் நான் கடவுள் கட்சியைச் சேர்ந்தவன்தான். நான் பிறந்ததிலிருந்து கடவுளுடைய் கட்சியில் இருந்து விட்டு, இப்போது அவருக்கு ஆபத்து வரும் சமயத்தில், அவரைக் கைவிட்டு விடுவதென்றால் என் மனம் இடங்கொடுக்கவில்லை. அது நம்பிக்கைத் துரோகமல்லவா? எனக்கு வயதோ இந்திய மக்களின் சராசரி வயதைவிட அதிகமாகி விட்டது இன்னும் எத்தனை காலம் உயிர் வாழப்போகிறேனோ தெரியாது. (ஜோதிடர்கள் 60 வயது என்று சொல்லியிருக்கிறார்களென்றாலும் என்னுடைய நண்பர்கள் சிலருடைய ஜோதிட அநுபவம் அவ்வளவு நம்பிக்கை யூட்டுவதில்லை) மனித காலம் அநித்யம். இன்றைக்கிருப்பாரை நாளைக்குக் காணோம். இந்த நிலையில் ஏதோ இருக்கும்வரையில் கடவுள் கட்சியிலேயே இருந்துவிட்டு, உயிரை விடலாம் என்று உறுதியாக இருக்கிறேன். ஆகையால் ''நாஸ்திகன்'' என்னும் பழியைத் தயவுசெய்து என்பேரில் போடவேண்டாம்.

''அப்படியானால் நீர் ராகுகாலத்தைப்பற்றிக் குறை சொல்கிறீரே. சொல்லலாமா?'' என்று சிலர் கேட்கலாம். அப்படிக் கேட்பவர்கள் ராகுகாலத்துக்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம் என்பதை முதலில் தெரிவித்தல் நலம். சம்பந்தம் எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. கடவுள் என்றால் எல்லாவற்றையும் கடந்து நிற்பவரென்று பொருள். எனவே, அவர் அறியாத்தனத்தையும் கடந்து நிற்கவேண்டுமல்லவா? ஆகையினால்தான் மனிதனுக்கு ஆண்மையையும் அறிவையும், ஊக்கத்தையும், உறுதியையும் அளித்த பகவான், இவ்வளவும் பயன்படாமற்போக நடுவில் நாளையும் கிழமையையும் ராகு காலத்தையும் வாரசூலையையும் வைத்திருப்பாரென்று என்னால் நம்பமுடியவில்லை.

கடவுள் விஷயத்தை இவ்வளவு திருப்திகரமாய் தீர்த்து விட்டபடியால், இனிமேல் ஜோதிடத்தைப் பற்றி என்னுடைய அனுபவங்கள் சிலவற்றைத் தைரியமாகச் சொல்லலாமென எண்ணுகிறேன். ''ஒரு ரூபாய்க்கு ஒரு வருஷ பலன்'' விளம்பரங்களைப் பற்றி நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். என்னுடைய நண்பர் ஒருவர் இத்தகைய விளம்பரம் ஒன்றைக் கண்டு ஒரு ரூபாய் பணம் அனுப்பிவைத்தார். அதில் ஜோதிடம் கேட்ட மாதத்திலிருந்து பன்னிரண்டு மாதங்களையும் எழுதி ஒவ்வொரு மாதத்துக்கும் நேராக ''நன்மை'' ''தீமை'' ''நிஷ்பலன்'' என்று இவ்விதமாகப் பலன் குறிப்பிட்டிருந்தது. இக்கடிதத்தை அப்படியே பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டு ஒருவருஷம் கழித்துப் பரிசோதிக்கலாமென்று நான் அந்த நண்பருக்கு யோசனை கூறினேன். அவ்வாறே ஒரு வருஷம் சென்ற பிறகு ஒரு நாள் அக்கடிதத்தைக் கொண்டு வந்தார் நண்பர். பலன்களைப் படித்துவிட்டு ''பலே ஜோதிடம்! அவ்வளவும் சரியாயிருக்கிறது!'' என்று அவர் கூறினார். ''என்ன? என்ன?'' என்று நான் ஆவலுடன் வினவினேன். அவர் கூறியதாவது:-

''நிஷ்பலன்'' என்று இதில் காணப்படும் மாதத்தில் தான் 104 டிகிரி சுரம் அடித்து வைகுண்டத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். ''நன்மை'' என்று இதில் காணப்படும் மாதத்தில் பரீக்ஷையில் தவறிப்போனேன். ''தீமை'' என்று இதில் போட்டிருக்கும் மாதத்தில் எனக்கு கலியாணம் நடந்தது.

இவ்வாறு சொல்லி அவர் சிரித்தார். நானும் நகைத்தேன். ஆனால், சற்று யோசித்துப் பார்த்ததில் சோதிடம் சரியென்றே தோன்றியது. எப்படியென்றால், முதலில் 'நிஷ்

பலன்' மாதத்தை எடுத்துக் கொள்வோம். அம்மாதத்தில் என் நண்பருக்குச் சுரம் அடித்தது உண்மையே. ஆனால், அது காரணமாக அவர் வைகுண்டத்தை எட்டிப் பார்த்தாரே யொழிய, வைகுண்டம் போய்ச் சேரவில்லை அல்லவா? அங்கே போயிருந்தால் அல்லவா சுரம் பலன் தந்ததாகும்? ஆதலின், அது 'நிஷ்பலன்' தான். பின்னர், 'நன்மை' என்ற மாதத்தில் என் நண்பர் பரீட்சையில் தவறினார். எனவே, உத்தியோகத்துக்கு அலையும் கவலை இன்னும் ஒரு வருஷத்துக்கு அவருக்கு இல்லாமற் போயிற்று. இது 'நன்மை' அல்லவென்றால், வேறு எதை நன்மை என்று சொல்லுவது? கடைசியாகக் கலியாணம்... கலியாணம் நன்மையா, தீமையா என்பதைப்பற்றி என் அபிப்பிராயத்தை இங்கே நான் எழுதப்போவதில்லை. நேயர்களில் கல்யாண மானவர்கள் எல்லாருக்கும் அது தெரிந்த விஷயமே. பிரமச்சாரிகளாயிருக்கும் பாக்கியசாலிகள் தயவுசெய்து தனித்தனியே கலியாணமானவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

''சப்தரிஷி வாக்கியம்'' என்று சிலர் கேள்விப்பட்டிருக் கலாம். இது ஒரு பிரமாண்டமான சாஸ்திரம். இவ்வுலகிலே ஆதிகாலத்திலிருந்து இன்றுவரைக்கும் இருந்தவர்கள், இப் போது இருப்பவர்கள், இனிமேல் பிறக்கப்போகிறவர்கள் ஆகிய எல்லாருடைய ஜாதகங்களுக்கும் பிரதிகளும் அவற் றிற்கு மிக நுட்பமான ஆயுள் பலனும் இந்த சாஸ்திரத்தில் உண்டாம்! என்னுடைய மாமன் ஒருவர் கொடியதொரு நோயினால் வருந்திக்கொண்டிருந்தார். அவர் மேற்படி சாஸ்திரம் வைத்திருந்த ஒருவரிடம் சென்று ஏழு ரூபாய் கொடுத்துப் பலன் கேட்டார். ஓர் அறையில் கட்டுக் கட்டாகக் கிடந்த ஓலைச் சுவடிகளை மூன்று நாள் புரட்டிப் புரட்டித் தேடிய பிறகு அவருடைய ஜாதகத்தைப் போன்ற ஒரு ஜாதகமும், 200 பாட்டுக்களில் அந்த ஜாதகத்தின் பலன்களும் அடங்கிய சுவடிக்கட்டும் கிடைத்தது. மேற்படி பாட்டுகளுக்கு நகல் எடுத்துக் கொண்டு அவர் திரும்பி வந்து சேர்ந்தார். அதில் அவருடைய ஊர், பெயர் முதற் கொண்டு அன்றுவரை அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லோரும் சிறிதளவும் மாறாமல் கூறப்பட்டிருந்தன. இது குறித்து, எல்லோரும் மிக்க ஆச்சரியமடைந்தார்கள். ஆனால் எனக்கு வேறொரு விஷயம் அதைவிட ஆச்சரியமாயிருந் தது. ''சப்தரிஷி வாக்கியம்'' பண்டைக்கால ரிஷிகளால் அருளிச் செய்யப்பட்டதாம். அதாவது, பல நூற்றாண்டுக ளுக்கு முன்னர் அது எழுதப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பின் இன்றுவரை உலகத்தில் எவ்வளவோ கோடானுகோடி மனிதர்கள் பிறந்து இறந்தார்கள். அவ்வளவு பேருடைய ஜாதகப் பலன்களும் எழுதப்படுவதற்கு எத்தனை சுவடிகள்

வேண்டும்? அந்த சுவடிகளையெல்லாம் வைப்பதற்கு எவ்வளவு பெரிய இடம் வேண்டும்? ஆனால், என்னுடைய மாமனார் ஒரு சிறு அறையில் கிடந்த சுவடிகளிலிருந்து தம்முடைய ஜாதகத்தைத் தேடிப் பொறுக்கி எடுத்ததாகக் கூறினார். இது சந்தேகத்துக்கிடமென்பதாக எனக்குத் தோன் றிற்று. பின்னால், சந்தேகமும் நீங்கிவிட்டது. சாஸ்திரம் பார்த்துவிட்டு வந்ததற்குப் பிறகு, ஒன்றாவது அதில் கூறியபடி நடக்கவில்லை. முப்பத்தி நாலாவது வயதில் அவர் நோய் நீங்கிக் குணம் பெறுவாரென்றும், அதன் பிறகு அவருக்குச் சர்க்கார் உத்தியோகம் கிடைக்குமென்றும், இரண்டு பெண் குழந்தைகள் பிறக்குமென்றும், ஐம்பத்தைந் தாவது வயதில் துவாதசி திதியில் காலை பத்து நாழிகைக்கு அவர் காலமாவார் என்றும் சாஸ்திரம் சொல்லிற்று. நல்ல வேளையாக அவர் இந்த விபத்துக்களுக்கெல்லாம் தப்பி, சாஸ்திரம் பார்த்த நாலாவது வருஷத்தில், முப்பத்தி மூன் றாம் வயதில் அமாவாசையன்று இரவு பன்னிரண்டு மணிக்கு மரணமடைந்தார். அந்த வயதிலே ஒரு சிறு கண்டமிருப்பதாகக்கூடச் சப்தரிஷி வாக்கியத்தில் சொல்லப் படவில்லை! ''சப்தரிஷி வாக்கிய''த்தைக் காவல் புரிந்த கனவான் கவிபாடத் தெரிந்தவரா யிருக்கலாமென்பது என் னுடைய ஊகம். சாஸ்திரம் பார்க்க வருவோர் ஏழு ரூபாயைக் கொடுத்து விட்டு ஓலைச் சுவடிகளைப் புரட்டிக் கொண்டிருக்கும் போது இவர் அவர்களுடைய வரலாறு களை விசாரித்து அறிந்து கவிபாடிச் சுவடியில் எழுதிக் கும்பலில் சேர்த்து விடுகிறார் போலும்! ஆனால் அவர் பேரில் நான் குற்றஞ் சொல்வதாக நினைக்க வேண்டாம். தமிழ் நாட்டில் தற்போது கவிகள் பிழைப்பதற்கு வேறென்ன வழி இருக்கிறது? கவிகளுக்கு மனமுவந்து பணம் கொடுப் போர் யார் இருக்கிறார்கள்? ஒரு பாரதியின் பாடே எவ்வளவு திண்டாட்டமாயிருந்தது. ஆகவே, மேற்படி ''சப்தரிஷி வாக்கியக்காரர்'' மீது தவறு இருப்பதாக நான் சொல்லவே மாட்டேன்.

இன்னும் இரண்டோர் அநுபவங்களைச் சொல்கிறேன். எங்கள் ஊரில் ஜோசியர் ஒருவர் வெகுகாலமாகப் பிரபலம டைந்திருந்தார். தூர தூர இடங்களிலிருந்து அவரிடம் ஜோதிடம் கேட்கவும், கலியாணப் பொருத்தங்கள் பார்க்க வும் ஜனங்கள் வருவார்கள். அவருக்கு அருமையான ஒரு பெண் இருந்தாள். அவளுடைய கலியாணத்தை மிகச் சிறப்பாக நடத்தினார் ஜோசியர். கலியாணத்தின் நாலாம் நாள் இரவு மாப்பிள்ளைக்குக் காலரா வந்து, மறுநாள் காலையில் பெண் விதவையானாள். இந்தப் பரிதாப சம்பவம் நடந்ததற்கு அடுத்த மாதத்தில் ஜோசியர் எங்கள் ஊரை விட்டே போய்விட்டார்.

இதன் பிறகு மற்றொரு பிரபல ஜோசியர் தற்காலிக மாக எங்கள் ஊருக்கு வந்திருந்தார். அவரிடம் விதை விதைப்பதற்கு நல்ல நாள் கேட்டுக்கொண்டு பெரிய மிராசுதார் பலர் சாகுபடிக்கு விதை தெளித்தார்கள். பதி னைந்து நாளைக்கெல்லாம் கொள்ளிடம் உடைப்பெடுத்துக் கொள்ளவே நாற்றுகளெல்லாம் அடியோடு நாசமாயின. பல நிலங்கள் மண் மேடிட்டுப் போயின. சர்க்கார் கிஸ்திகூட வஜா செய்யப்பட்டதென்றால், மகசூல் எத்தனை லட்சண மாயிருக்குமென்று நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

ஒருக்கால் வாசகர்களில் சிலருடைய அநுபவம் வேறு விதமாயிருந்திருக்கக் கூடும். அவர்கள் கேட்ட ஜோதிடம் ஒரு வேளை பலித்திருக்கக்கூடும். எனினும், அதனால் அவர்கள் அடைந்த பலன் என்னவென்பதைச் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜோதிட சாஸ்திரமே பொய் யென்பதாக நான் சொல்லவில்லை. அந்தச் சாஸ்திரத்தில் எனக்கு ஆராய்ச்சி கிடையாது. எனவே, அது பொய் யென்றோ நிஜமென்றோ நான் சொல்லத் தயாராயில்லை. அது உண்மையாகவே இருந்தாலும் அதிகப் பயனில்லை என்று மட்டுமே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பத்து வருஷத்திற்குப் பிறகு ஒரு தீமை வரப்போவதாக வைத்துக் கொள்ளுவோம். அதை இப் போதே தெரிந்து கொள்வதால் நாம் அடையும் பயன் என்ன? தீமையைத் தடுத்துவிட முடியாது. முடியுமென்றால் ஜோசியம் பொய்யாகி விடுகிறது. ஆகவே, அத் தீமைக ளைப் பற்றி இப்போதிருந்தே எண்ணி எண்ணி வருந்துவ தைத் தவிர வேறு லாபம் என்ன? வரப்போவது நன்மையா யிருந்தாலும் அதை அறிந்து கொள்ளவும் நான் விரும்ப மாட்டேன். திடீரென்று எனக்கு ஒரு புதையல் கிடைத்தால், அது ஒரு சிறு தொகையாயிருந்தாலும் சந்தோஷப் படுவேன். புதையல் கிடைக்கப்போகும் விஷயம் முன்னமே தெரிந்து விட்டால் ''சீ! இவ்வளவு தானா?'' என்று வருத்தப்படு வேன். ஆகவே முன்கூட்டித் தெரிந்து கொள்வதில் பயன் என்ன?

கடைசியாக ஜோதிடர்களுக்கு ஒரு வார்த்தை. இதைப் போல நான் இன்னும் 9999 கட்டுரைகள் எழுதினாலும் உங்களுடைய பிழைப்புக்கு யாதொரு ஆபத்தும் வராது. ஆகையால் கவலையற்றிருங்கள்! இந்தக் கட்டுரை ராகு காலத்தில் தொடங்கி எங்கெல்லாம் சுற்றி, ஜோதிடத்தில் வந்து முடிந்திருக்கிறது. ராகு காலத்தில் ஆரம்பித்ததன் பயனைப் பார்த்தீர்களல்லவா?

பாரதியின் நகைச்சுவை

''எனக்கு நகைச்சுவை மட்டும் இல்லாவிட்டால் எப் போதோ தற்கொலை செய்துகொண்டு இறந்திருப்பேன்'' என்று ஒருமுறை காந்தியடிகள் கூறினார். தனிமனிதனு டைய வாழ்க்கையிலும் சரி, தேசிய வாழ்க்கையிலும் சரி, நகைச் சுவையானது முன்னேற்றத்துக்கு இன்றியமையாத அம்சங்களில் ஒன்றாகும். உலகில் முன்னணியில் நிற்கும் தேசத்தார் எல்லாரும், பெரிதும் நகைச்சுவை கொண்டவர்க ளாயிருப்பதைக் காணலாம். இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களில் ஹாஸ்ய ரசத்திற்கென்றே எத்த னையோ பத்திரிகைகளும் புத்தகங்களும் வெளியாகின்றன. பிரபல ஆசிரியர்கள் பலர் ''கழுதையின் குரல்'' என்றும் ''நாயின் வால்'' என்றும் ஹாஸ்யக் கட்டுரைகள் எழுதி வருகிறார்கள். லட்சக்கணக்கான ஜனங்கள் அவற்றைப் படித்துச் சிரித்து மகிழ்கிறார்கள். ''அந்தக் கட்டுரைகளினால் விளையும் பயன் என்ன? அவை போதிக்கும் நீதி என்ன?'' என்று யாரும் கேட்பதில்லை. ஒரு கணநேரம் புன்னகைக்கா கவும், ஒரு நிமிஷ சிரிப்புக்காகவும் அவர்கள் 'ஷில்லிங்' கணக்கிலும், 'டாலர்' கணக்கிலும் பணம் கொடுத்துப் பத்திரிகைகளும் புத்தகங்களும் வாங்குகிறார்கள்.

பாரத நாடு சிறப்புடன் விளங்கிய காலத்தில், நமது முன்னோர் நகைச்சுவை உணர்வு அதிகமுள்ளவர்களாயிருந் தனரென்பதற்குப் போதிய சான்றுகள் இருக்கின்றன. இராஜ சபைகளில் நகையூட்டுவதற்கென்றே விகடகவிகள் விதூஷ கர்கள் முதலியோர் இருந்தார்கள். ஒவ்வொரு நாடகத்திலும் விதூஷகன் ஒரு முக்கிய பாத்திரமாக விளங்கினான். கம்பராமாயணம் முதலிய காவியங்களிலும் ஹாஸ்ய ரசம் பெரிதும் காணப்படுகிறது. ஆனால், பிற்காலத்தில் தேசம் பராதீனமடைந்து தாழ்வுற்றபோது மக்களின் நகைச்சுவை யும் வீழ்த்தப்பட்டதாகத் தோன்றுகிறது. (ஒருக்கால் நகைச்சு வையை யிழந்ததே தேசத்தின் வீழ்ச்சிக்கும் காரணமாயிருக்க லாமோ?)

தமிழ் நாட்டின் 'வாரப் பத்திரிகை ஒன்றில் உலக மகான்களைக் குறித்து நகைச்சுவையுள்ள குறிப்புகள் வாரந் தோறும் வெளியாகி வந்தன. அதன் பொருட்டு, மேற்கூறிய இனத்தைச் சேர்ந்த ஒரு மகான் அப்பத்தரிகையின்

ஆசிரியரிடம் சென்று, ''ஐயா! இப்படி ஏன் பத்திரிகையின் இடத்தை எல்லாம் வீணாக்குகிறீர்கள்?'' என்று பரிதாபத்துடன் கூறியதாகக் கேள்விப்பட்டேன். பழைய தலைமுறையைச் சேர்ந்த இத்தகைய பத்தாம்பசலிகளை எவராலும் திருத்த முடியாது. இளைஞர்களும், இளம் பெண்மணிகளும் தான் நாட்டில் நகைச்சுவையை வளர்க்க வேண்டும்.

தமிழ் நாட்டில் நகைச்சுவை குன்றியிருக்கிறதாயினும் அதிர்ஷ்டவசமாக அது அடியோடு அழிந்து விடவில்லை. இந்தப் துர்ப்பாக்கிய நாட்டில் பிறந்த தமிழ்ப் பிரமுகர்களிலும் சிலர் நகைச்சுவை பெற்றிருந்தனர். பெற்றிருக்கின்றனர். தமிழுக்குப் புத்துயிர் தந்த காலஞ் சென்ற ஸ்ரீ சுப்ரமணிய பாரதி இத்தகையோரில் ஒருவராவார். பாரதியார் தமது வாணாளில் பெரும்பகுதி துன்ப வாழ்க்கையே நடத்தினார். தமது சொந்தத் தொல்லைகளை விடத் தாய் நாட்டின் துயரங்களை நினைந்து, அவர் உள்ளம் நைந்து உருகினார். எனினும், அவர் தம் நகைச்சுவையை மட்டும் இறுதி வரையில் இழக்கவில்லை. அவருடைய கவிதைகள் சிலவற்றிலும் வசன நூல்களிலும் நகைச்சுவை ஆங்காங்கு பீறிக் கொண்டு எழுவதைக் காணலாம்.

தேசம் சுதந்திரம் பெற்றுச் சுபிட்சமாயுள்ள காலத்தில் பாரதியார் பிறந்திருந்தால், இப்போது ஆங்காங்கே குமிழி விட்டுக் கிளம்புவதுடன் நிற்கும் அவருடைய நகைச்சுவையானது பெரு வெள்ளம் போல் பெருகி ஓடியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பாரதியாரின் கவிதைகளுள் குயில் பாட்டு என்னும் அற்புதக் கற்பனைச் சித்திரத்தில்தான் அவருடைய நகைச்சுவை ஒளிவிட்டு ஓங்குகிறது என்று கூறலாம். கவிஞன் காட்டகத்தில் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட காதற் குயிலைத் தேடிச் சுற்றும் முற்றும் பார்த்து துடித்துக் கொண்டு வருகிறான். அப்போது அவன் கண்ட காட்சி அவன் நெஞ்சைத் திடுக்குறச் செய்கிறது. ஆனால், அக் காட்சி என்னவென்பது முதலிலேயே கூறப்படுதில்லை.

''வஞ்சனையே! பெண்மையே! மன்மதனாம் பொய்த்தேவே
நெஞ்சகமே! தொல்லிவிதியி னீதியே பாழுலகே!
கண்ணாலே நான் கண்ட காட்சிதனை யென்னுரைப்பேன்!
பெண்ணா லறிவிழக்கும் பித்தரெல்லாங் கேண்மினோ!
காதலினைப் போற்றும் கவிஞரெலாங் கேண்மினோ!
மாதரெலாங் கேண்மினோ! வல்விதியே கேளாய் நீ!''

என்று கவிஞன் ஆத்திரம் பொங்கப் புலம்புவது பின்னால் வரப்போகும் நகைச்சுவை ததும்பும் நிகழ்ச்சிக்கு ஏற்றதோற்றுவாயாக அமைந்திருக்கிறது. மேற் கூறிய வரிகளைப் படித்ததும் வாசகர்கள் ஏதோ பயங்கரமான நிகழ்ச்சி வரப் போகிறதென்றும் எதிர்பார்க்கிறார்கள். அதற்கு மாறாக, ஹாஸ்ய ரசம் பொருந்திய ஒரு நிகழ்ச்சி கூறப்படும் போது, அதன் சுவை வாசகர்களுக்குப் பன்மடங்கு மிகைப்பட்டுக் காண்கிறது. கவிஞன் காணும் அத்தகைய பயங்கரக் காட்சி தான் என்ன?

கவிஞன் தேடிச் செல்லும் மாயக் குயில் ஒரு மரக்கிளையில் வீற்றிருக்கிறது, அதனருகில் ஓர் ஆண் குரங்கு காணப்படுகின்றது. குயில் விழி நீர் பாய சிறிய உடல் பதைக்க, விம்பிப் பரிந்து துயரக் குரலில் அக்குரங்கினிடம் ஏதேதோ கூறியிரங்குகிறது. கவிஞனுடன் நாமும் மரத்தடியில் ஒளிந்து நின்று அப்பெட்டைக் குயில் குரங்கினிடம் கூறும் மொழிகளை ஒட்டுக் கேட்போம்:

வானரரே
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே, பெண்மைதான்
எப்பிறப்புக் கொண்டாலும், ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்குந் தரமாமோ?
மண்ணி லுயிர்க்கெல்லாந் தலைவரென மானிடரே!
எண்ணி நின்றார் தம்மை; எனிலொரு கால்,
ஊர்வகுத்தல்
கோயில் அரசு, குடி வகுப்புப் போன்ற சில
வாயிலிலே யந்த மனித ருயர்வெனலாம்.
மேனி யழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனியிருக்கும் கொலு நேர்த்தி தன்னிலுமே,
வானரர்தஞ் சாதிக்கு மாந்தர் நிகரா வாரோ?
ஆனவரையு மவர் 'முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப்படாத தமதுடலை
எட்டுரையால் மூடி யெதிருமக்கு வந்தாலும்,
மீசையையும் தாடியையும் விந்தை செய்து
வானரர்தம்
ஆசை முகத்தினைப் போலாக்க முயன்றிடினும்,
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணி வைத்துச் சென்றாலும்,
வேறெதைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர் போலாவாரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை யிதற்கு நிகராமோ?

பாகெயிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு, கந்தைபோல்
வேகமுறத் தாவுகையில் வீசி யெழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ
சைவசுத்த போஜனமும் சாதுரியப் பார்வைகளும்
வானரர் போற்சாதியொன்று மண்ணுலகின் மீதுள்ளதோ?
வானரர் தம்முள்ளே மணிபோ லுமையடைந்தேன்.

மாயக் குயிலின் இக்காதல் மொழிகளை - இந்த வானர ஸ்துதித்யத்தை - நான் முதன் முதலில் படித்தபோது ''வாலுக்குப் போவதெங்கே?'' என்னும் இடத்துக்கு வந்ததும், கொல்லென்று சிரித்துவிட்டேன். நான் அறிந்த அளவில் தமிழ் மொழியின் நவீன இலக்கியத்திலே நகைச்சுவையில் இதை மிஞ்சக்கூடிய பகுதி ஒன்றிருப்பதாகத் தோன்றவில்லை.

குயிலின் காதல் மொழிகளைக் கேட்டதும்,

''வற்றற் குரங்கு மதிமயங்கிக் கள்ளினிலே
முற்றும் வெறிபோல் முழுவெறி கொண்டாங்ஙனே,
தாவிக் குதிப்பதுவுந் தாளங்கள் போடுவடுவதும்
'ஆவி யுருகுதடீ; ஆஹாஹா!' என்பதுவும்,
கண்ணைச் சிமிட்டுவதும். காலாலுங் கையாலும்
மண்ணைப் பிருண்டி யெங்கும் வாரி யிறைப்பதும்
''ஆசைக்குயிலே! அரும் பொருளே? தெய்வதமே
பேசமுடியாப் பெருங்காதல் கொண்டுவிட்டேன்''

என்று கூறுவதுமாகிய காட்சியும், நமக்குப் பேருவகை யளித்து நகைப் பூட்டுவ தொன்றாகும்.

மறுநாள் காலையில், மீண்டும் கவிஞன் நீலக்குயிலைத் தேடிச் சோலைக்குள் செல்கிறான். இன்று அப்பொல்லாத பெண் குயில் ஒரு மாமரத்தின் கிளையிலமர்ந்து கீழே நின்ற ஒரு கிழக் காளை மாட்டினிடம் பழைய மோகக் கதையைப் படிக்கின்றது.

''நந்தியே!
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே!
காமனே மாடாகக் காட்சி தரு மூர்த்தியே!
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ?
மானிடருந் தம்மும் வலி மிகுந்த மைந்தர்தமை
மேனியுறுங் காளை யென்று மேம்பா டுறப்புகழ்வார்
காளையாத முள்ளே கனமிகுந்தீர், ஆரியரே!
நீளமுகமும், நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்,
பஞ்சிப் பொதி போற்படர்ந்த திருவடிவும்

மிஞ்சு புறச் சுமையும், வீரத்திருவாலும்.
வானத்திடி போல 'மா' வென்று நுமுவதும்
ஈனப்பறவை முதுகின் மிசை யேறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும் பல்
காலம் நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்.''

இவ்வாறே காளைக்குப் புகழ்ச்சி கூறிய குயில், பின்னர் அது எங்கே தன் காதலைப் புறக்கணித்துவிடப் போகிறதோ என்று அஞ்சி உரைக்கும் ஆசை மொழிகளை கவனியுங்கள்.

''மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்
கூனர் தமை யூர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருதவி செய்த பின்னர் மேனி விடாய்
எய்தி யிருக்கும் மிடையினிலே, பாவியேன்
வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்.
வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்.
வாலிடிபட்டு மனமகிழ்வேன்; 'மா'வென்றே
ஒலிடுநும் போரொலியோ டொன்றுபடக் கத்துவேன்
மேனியிலே உண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்.
கானிடையே சுற்றிக் கழனியெலா மேய்ந்து நீர்
மிக்கவுண வுண்டுவாய் மென்றசை தான் போடுகையில்
பக்கத்திருந்து பல கதைகள் சொல்லிடுவேன்.
காளை யெருதரே காட்டிலுயர் வீரரே
தாளைச் சரணடைந்தேன்; தையலெனைக் காத்தருள் வீர்.''

என்னும் காதற் குயிலின் பேச்சில் அடங்கியுள்ள நய மிகுந்த நகைச்சுவை ரஸிகர்களுக்குப் பெரு மகிழ்ச்சி தருவதாகும்.

பாரதியாரின் கவிதைகளுக்குள்ளே காவியம் என்று சொல்லக்கூடியது ''பாஞ்சாலி சபதம்'' ஒன்றேயாம். புதிய தலைமுறையில், எளியநடையில் இயற்றப்பட்டுள்ள இவ்வ ழகிய சிறு காவியத்தில் பாரதியாரின் நகைச்சுவை ஆங்காங்கு குமிழிவிட்டுக் கிளம்புவதைக் காணலாம். திருதராஷ்டிரன் தன்மகன் துரியோதனனுக்குத் தர்க்க ரீதியாகப் பல நீதிகளை எடுத்துப் புகட்டுகின்றான்; மகன் பாண்டவர் மீது கூறிய பழிகளையெல்லாம் மிக அழகாகவும், சாதுர்யமாகவும் மறுத்து விடுகின்றான். அவனுடைய வாதங்களுக்கு நேர்முறையில் துரியோதனனால் விடையிறுக்க முடியாமற் போகிறது. எனவே அவன் குறுக்கு வழியில் புகுந்து ''ஆஹா; மன்னர் தந்திரம் தேர்ந்தவர்களுக்குள்ளே என் தந்தையை யொப்பவரில்லை.''

மாதர்த மின்ப மெனக்கென்றான் - புவி
மண்டலத் தாட்சி யவர்க் கென்றான் - நல்ல
சாதமு நெய்யு மெனக்கென்றான் - எங்கும்
சாற்றிடுங் கீர்த்தி யவர்க்கென்றான்.

''அடடா! பிள்ளையினிடம் இவ்வாறு ஆதரவு காட்டும் தந்தை உலகில் வேறு உண்டா? நீ என் தந்தை, பாண்டவர் என் உயிர்ச்சோதரர். இனிமேல் எனக்கென்ன குறை?'' என்று கூறுகிறான். தந்தைக்கும் மைந்தனுக்கும் நடக்கும் இந்த விவாதத்தில் அமைந்துள்ள சாதுரியமும், நகைச்சுவையும் தெவிட்டாத இன்பந்தருவனவாகும். இத்தகைய் நகைச் சுவையை இக்காவியத்தில் இன்னும் பல இடங்களில் காணலாம். சிறப்பாகத் தருமனைச் சூதுக்கு வருமாறு தூண்டும் சகுனி அவனை நோக்கி.

''மாரத வீரர் முன்னே - நடு
மண்டபத்தே பட்டப் பகலினிலே
சூர்சிகா மணியே - நின்றன்
சொத்தினைத் திருடுவ மெனுங் கருத்தோ!''

என்று பரிகசிக்கும் மொழிகளிலும், சபை நடுவில் துரியோதனன் விதுரனைப் பார்த்து,

'ஐவருக்கு நெஞ்சும் - எங்கள்
அரண்மனைக்கு வயிறும்
தெய்வமன் றுனக்கே - விதுரா
செய்து விட்டதேயோ?''

என்று சொல்லும் மொழிகளிலும் நகைச்சுவை ததும்புகின்றது.

இனி, பாரதியாரின் தீஞ்சொற் கவிதைச் சோலையிலிருந்து வெளிக்கிளம்பி, அவருடைய வசன நூல்களில் சிதறிக் கிடக்கும் ஹாஸ்ய ரத்தினங்களில் சிலவற்றைத திரட்டும் முயற்சியில் இறங்குவோம்.

''ஆறில் ஒரு பங்கு'' என்னும் சிறு கதையில், ஸ்ரீமான் நாயுடுவுக்கு மூன்று வருஷத்திற்கொருமுறை ஆபீஸில் பத்து ரூபாயும், வீட்டில் ஒரு குழந்தையும் பிரமோஷன்'' என்னும் வாக்கியத்தைப் படிக்கும்போது குலுங்கச் சிரிக்காத மனிதர்களை ஏதேனுமொரு கண்காட்சி சாலைக்குத்தான் அனுப்ப வேண்டுமென்று சிபாரிசு செய்வேன். ''சந்திரிகை''யின் கதையில், கைம்பெண்ணாகிய விசாலாஷியின் ரூபலாவண்யங்களையும், குணாதியங்களையும் பற்றி வீரேசலிங்கம் பந்துலு, டெபுடி கலெக்டர் கோபாலய்யங்காருக்கு வெகு

வாக எடுத்துச் சொல்லுகிறார். இதனால் அய்யங்காரின் மனம் பக்குவமடைந்திருக்கிறது. அந்நிலையில் அவர், சோலை மலரொளியில் சுந்தரப் புன்னகை செய்து கொண்டிருந்த குழந்தை சந்திரிகையைப் பணிப்பெண் முத்தமிடும் காட்சியைக் காண்கிறார். அப்பணிப் பெண்ணையே விசாலாஷி என்று அவர் எண்ணி அவள் மீது காதல் கொள்கிறார். பின்னால் தமது தவறு தெரிய வந்த போது அவர் அப்பணிப் பெண்ணையே மணம் புரிந்து கொள்ளப்போவதாக வீரேசலிங்கம் பந்துலுவிடம் கூறுகிறார். இந்த நிகழ்ச்சிகளைப் படித்துவரும் போது வாசகர்களின் இதழ்களில் புன்னகை தவழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனால், இறுதியாக வீரேசலிங்கம் பந்துலு டெபுடி கலெக்டரைப் பார்த்து.

''கதையாவது உருளைக் கிழங்காவது! அய்யங்கார் ஸ்வாமிகளே, பணிப்பெண்ணாவது, கதையாவது'' என்று கூறும்போது வாசகர்களின் புன்னகை 'கொல்'லென்ற சிரிப்பாக மாறிவிடுகிறது.

தமிழ் வசனத்திலேயே ஒப்புயர்வற்ற நூல் என்று கருதப்படும் ''ஞானரதம்'' என்னும் கற்பனைக் களஞ்சியத்தில் ''மண்ணுலகம்'' என்னும் அத்தியாயம் நகைச்சுவை குலுங்கும் ஓர் அரிய பொக்கிஷமாகும். அடியிலிருந்து கடைசி வரை ஹாஸ்யரஸமாயிருக்கும். இவ்வத்தியாயத்திலிருந்து தனித் தனியே சில பகுதிகளைப் பொறுக்கி எடுத்துக் காட்டுதல் எளிதன்று. எனினும், நேயர்களுக்கு அதை முழுதும் படிக்க வேண்டுமென்னும் ஆர்வம் உண்டாக்கும் பொருட்டு இரண்டொரு பகுதிகளை உதாரணமாக இங்கே தருகிறேன்.

''முன் பகுதியில் ஒரு ராயர் பெரிய குடும்பத்தோடிருந்தார். அவருக்குப் பகல் முழுதும் உழைத்துக் கொண்டிருக்கும்படியாகத் தபால் கச்சேரியிலோ, எங்கேயோ ஓர் உத்தியோகம். உடம்பிலே கோபிமண் முத்திரைகள் எத்தனையோ, அத்தனை குழந்தைகள். அவர் மனைவி மறுபடியும் கர்ப்பம். அந்த முற்றத்திலே ஒரு பசுமாடு. அத்துடன் ஒட்டுக்குடியாக அவருடைய பந்துக்கள் சிலர் வசித்தார்கள். ராயருக்குக் காச நோயாதலால் அவர் இருமிக் கொண்டேயிருக்கிற சப்தம் ஓயாமல் கேட்கும். அவருடைய குழந்தைகள் ஒன்று மாற்றி ஒன்று அழுது கொண்டேயிருக்கும். கர்ப்பிணியாகிய அவர் மனைவி இடையிடையே விழித்துக் குழந்தைகளையோ, அல்லது ராயரைத் தானோ, கன்னட பாஷையிலே திட்டி விட்டு மறுபடியும் உறங்கி விடுகிறாள்''

''வரும் வழியிலே ஜட்காவண்டிகள், துரைகள் போகும் கோச்சுகள், புழுதி, இரைச்சல், துர்நாற்றம் இவற்றையெல்லாம் கடந்து முன்பகுதியில், பசுமாடு, ராயர் வீட்டம்மாள் குழந்தைக் கூட்டங்கள் முதலிய விபத்துக்செல்லாம் தப்பிப் பின்புறத்திலே மெத்தைக்கு வந்து சேர்ந்தேன்.''

''நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர்களெல்லாம் புளியஞ்சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத்தொண்டர். 'காலணா'வின் அடியார்க்கு மடியார். ஆனால், எங்களிலே ஒவ்வொருவனும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும் படியாயிருக்கும்''.

பாரதியாரின் நகைச்சுவையை உள்ளபடி அனுபவிப்பதற்கு அவருடைய கவிதைகளையும், உரைநடை நூல்களையும் தொடர்ந்து படித்தல் அவசியமாகும். ஆங்காங்கு துண்டாக எடுத்துத் தரும் பகுதிகளை மட்டும் படித்து அவற்றின் சுவை நயத்தை முழுதும் அநுபவித்தல் இயலாத காரியம். இக்கட்டுரையைப் படிக்கும் அன்பர்களின் உள்ளத்தில் நமது மகாகவியின் நூல்களைப் படிக்கும் ஆர்வம் ஒரு சிறிதேனும் உண்டாகியிருக்குமாயின் என் முயற்சி பயன் தந்தது என்று எண்ணிப் பெருமகிழ்ச்சியடைவேன்.

குழந்தைகள் மகாநாடு

அகில இந்தியக் குழந்தைகள் மகாநாடு ஒன்று நடைபெறப் போவதாக நான் முதலில் கேள்விப்பட்டபோது, அதை அவ்வளவாக நம்பவில்லை. இருப்பினும் அது உண்மையாயிருந்தால், அம்மகாநாட்டுக்குக் கட்டாயம் போக வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன். ஏனென்றால், குழந்தைகள் என்றால் எனக்கு அதிகப் பிரியம். (எங்களுக்கு அடுத்த வீட்டுக் குழந்தை மட்டும் இதற்கு விலக்கு என்பதை ஒப்புக் கொண்டு விடுகிறேன். தினந்தோறும் சரியாக இரவு ஒரு மணிக்கு இந்தக் குழந்தை கண் விழிந்து, தனக்குப் பசியாயிருக்கிறதென்ற விசேஷ சமாசாரத்தை ''பா ஆ ஆ ஆ'' என்ற சத்தத்தின் மூலம் தெரிவிக்கத் தொடங்கும். அப்போது எங்கள் வீதியில் ஓர் ஈ காக்கை பாக்கியில்லாமல் எல்லாரும் விழித்துக் கொள்வார்கள். அந்த நேரத்தில் ஒரே ஒரு பெண்ணரசி மட்டுந்தான் ஆழ்ந்த நித்திரையில் இருப்பாள். அவள், குழந்தைக்கருகில் படுத்திருக்கும் அதன் தாயார்தான்.) ஆகவே, மகாநாடு உண்மையிலேயே நடை பெறுகிறதென்று அறிந்ததும் குறிப்பிட்ட நேரத்தில் மகாநாட்டுப் பந்தலுக்குச் சென்றேன்.

பந்தல் வாயிலில் இரண்டு குழந்தைத் தொண்டர்கள் நின்று கொண்டிருந்தார்கள். ''என்ன உபத்திரவம், அப்பா! பெரியவர்களின் மகாநாடுகளில்தான் தொண்டரின் தொல்லையென்றால், இங்கே கூட அது இருக்கிறதே?'' என்று சொல்லவில்லை-நினைத்துக் கொண்டேன். பின்னர் மரியாதையாக, 'தொண்டரே, தயவு செய்து என்னை உள்ளே விடமுடியுமா'' என்றேன்.

''தயவு செய்து உம்மை உள்ளே விடமுடியாது!'' என்று பதில் வந்தது. நான் கொஞ்சம் திகைப்படைந்து போனேன்.

''என்னை ஏன் விடக்கூடாது?''

'' உம்மை ஏன் விட வேண்டும்?''

குழந்தைகளென்றால் இந்தக் கஷ்டந்தான். அவர்களுடன் வாதம் செய்ய முடியாது. அவர்களுக்குத் தர்க்க முறையே தெரியாது. ஏதாவது கேட்டால் ஏதாவது பதில் சொல்வார்கள். இதற்கு என்ன செய்வதென்று யோசித்தேன். உடனே, பழைய அநுபவம் ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

அதாவது சென்னையில் இரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு மகாநாட்டின் விஷயம். அம்மகா நாட்டுக்கு நான் முதலில் போனபோது உள்ளே விட மறுத்து விட்டார்கள். பணங் கொடுத்து டிக்கட் வாங்க வேண்டுமென்றார்கள். கடைசியாக ஒரு யுக்தி செய்தேன். மகாநாட்டின் காரியதரிசி வெளியில் வந்த சமயம் பார்த்து, அவரிடம், ''மிஸ்டர்! நான் பத்திரிகைப் பிரதிநிதி, உள்ளே போகலாமா?'' என்றேன். அடடா! உடனே அவர் செய்த உபகாரத்தைப் பார்க்க வேண்டுமே! ''அப்படியா! - எந்தப் பத்திரிகை? - சரி - இந்தாருங்கள், டிக்கட். நான் எவ்வளவு வேலை செய்கிறேன் பார்க்கிறீர்கள் அல்லவா...என் பெயர் ஸ்ரீதர சர்மா - பத்திரிகையில் விவரமாக எழுதுங்கள் - நான் நன்றாக பிரசங்கம் கூடச் செய்வேன்'' என்று என்னைக் கையைப் பிடித்து அவரே உள்ளே அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்தார்.

இப்போது மேற்படி யுக்தி எனக்கு ஞாபகத்திற்கு வரவே இங்கும் அதையே கையாளத் தீர்மானித்தேன்.

''தொண்டரே! நான் பத்திரிகைப் பிரதிநிதி. இப்போதாவது விடலாமா?'' என்று கேட்டுக் கொஞ்சம் விறைப்பாகப் பார்த்தேன்.

''அப்படியானால் உம்மைக் கட்டாயம் விடவே கூடாது'' என்ற பதிலைக் கேட்டதும், எனக்கு தூக்கிவாரிப் போட்டது. அக்குழந்தைத் தொண்டர் மேலும் கூறியதாவது:- ''எங்கள் பெரியோர்கள் செய்யும் தவறை நாங்களும் செய்யப்போவதில்லை. உங்களை உள்ளே விட்டால் இஷ்டம் போல் ஏதேதோ எழுதி விடுவீர்கள். அப்புறம் அவற்றுக்கெல்லாம் நாங்கள் மறுப்பு எழுதிக் கொண்டிருக்க நேரும். அதைவிட நாங்களே ஒரு விவரம் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவிடப் போகிறோம்.''

அந்தத் தொண்டரின் காதைப் பிடித்து, ஒரு கிள்ளுக் கிள்ளலாமா வென்று என் கை ஊறிற்று. ஆனால் நல்ல வேளையாக அப்படிச் செய்யவில்லை. சத்தம் போட்டு அழுவதிலே அந்தக் குழந்தை வெகு சமர்த்து என்று பின்னால் தெரிந்து கொண்டேன். எனவே, நான் அதன் காதைக் கிள்ளியிருந்தால், என்ன வந்திருக்குமோ கடவுளுக்கே தெரியும். பின்னர், மிகவும் பிரயாசைப்பட்டு, இரண்டு நிபந்தனைகளின் பேரில் மகாநாட்டுள் செல்ல அனுமதி பெற்றேன். அந்த நிபந்தனைகள் வருவாறு:- (1) குழந்தைகளின் கொச்சைப் பேச்சை யெல்லாம் அப்படியே

எழுதக் கூடாது. ஏனெனில் பெரியவர்கள் அதைப் படித்துச் சிரித்துவிட்டு அலட்சியமாகத் தள்ளி விடலாம். ஆகையால் பெரியவர்களின் பாஷையிலேயே எழுதவேண்டும். (2) நான் எழுதும் விவரத்தை மகாநாட்டு அதிகாரிகளிடம் காட்டி அநுமதி பெற்ற பிறகே பத்திரிகைகளுக்கு அனுப்ப வேண்டும். மேற்படி நிபத்தனைகளுக்கிணங்க, மகாநாட்டு அதிகாரிகளால் எடுக்கப்பட்ட பகுதிகள் போக, மற்ற விவரங்களைக் கீழே தந்திருக்கிறேன்:-

மாநாடு கூடியதும், ஏழு வயதுள்ள ஸ்ரீமான் பி.ஏ.ராகவன் அவர்கள், அக்கிராசன பதவிக்குப் பிரேரேபிக்கப்பட்டு, ஆமோதிக்கப்பட்டு அக்கிராசன பீடத்தில் அமர்ந்தார். சுமார் ஐந்து நிமிஷ நேரம் காது செவிடு படும் படியான கரகோஷம் நடந்தது. ஆரவாரம் அடங்கிய பின்னர், அக்கிராசனர் செய்த தலைமைப் பிரசங்கத்தின் சாராம்சமாவது:-

''சகோதரிகளே! சகோதரர்களே! இன்றைய தினம் பாரத நாட்டின் குழந்தைகளாகிய நமக்கு ஒரு புதிய யுகம் பிறந்திருக்கின்றது. இத்தகைய குழந்தைகளின் மகாநாடு கூடியிருப்பது இதுதான் முதல் தடவையென்று உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை. பெரியவர்களுடைய மகாநாடுகளைப் போல என்னுடைய தலைமைப் பேச்சை அதிகமாக வளர்த்தப் போவதில்லை. பேச்சிலே என்ன இருக்கிறது? ஒரு பெப்பர்மிண்டில் உள்ள ருசி பேச்சில் இருக்கிறதா? (சிரிப்பு) ஒரு வெல்லச் சீடையின் ருசியாவது அதில் உண்டா? சிலர் நாவைச் சப்புக் கொட்டுகின்றனர். ஒன்றுமே கிடையாது. மேலும், மகாநாடு முடிந்ததும் நமக்கு முக்கியமான ஒரு காரியம் இருக்கிறது. எல்லாரும் கடற்கரையிலே போய் அங்குள்ள கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கடலில் எறிந்து யார் தான் அதிக தூரம் எறிகிறார்களென்றும் பார்க்க வேண்டும். அவ்வளவு முக்கியமான காரியமிருக்கும் போது நான் நமது மூத்தோர்களைப் போல வெறுமே பேசிக் கொண்டிருக்க விரும்பவில்லை. (''கேளுங்கள் கேளுங்கள்'') ஆனால் ஒன்று மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நாம் இனிமேல் ஒரு நிமிஷ நேரமேனும் இந்தப் பெரியவர்களின் கொடுங் கோன்மையின் கீழ் உயிர்வாழ முடியாது. (கரகோஷம்) நமக்கு விடுதலை வேண்டும்; பூரண சுதந்திரம் வேண்டும். (கரகோஷம்) வேறெதுவும் நமக்கு வேண்டாம். இக்காலத்திலே சில பெரியவர்கள் ''பேபிவீக்'' என்றும், ''சிசுசம்ரக்ஷண வாரம்'' என்றும் ஏற்பாடு செய்கிறார்கள். (''மோசம் மோசம்'' என்ற கூக்குரல்) ஆம்; அவையெல்லாம் பெரும் மோசந்தான். நம்மை அடிமைகளாக வைத்து நம்

உடம்பை மட்டும் கொழுக்க வைத்தால். நாம் திருப்தியடைந்து விடுவோமோ? (மாட்டோம்) சந்தோஷம். இன்னும் குழந்தைகளாகிய நமக்கிருக்கும் குறைகள் பல. அவையெல்லாம் இம் மகாநாட்டில் வரப்போகும் தீர்மானங்கள் மூலம் தெரியவரும். ஆகையால் உங்களுக்கெல்லாம் என் மனமார்ந்த வந்தனம் அளித்து, இத்துடன் என் முகவுரையை முடித்துக் கொள்கிறேன்.''

பின்னர், ஐந்து வயதுள்ள ஸ்ரீமதி அலமு அம்மாள் பின் வரும் தீர்மானத்தைப் பிரேரணை செய்தாள்.

''பெற்றோர்களுக்குக் குழந்தைகள் நன்றி பாராட்ட வேண்டுமென்னும் கொள்கை முற்றும் நியாய விரோதமானதென்றும், அதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாதென்றும் இந்த மகாநாடு பலமாக வலியுறுத்துகிறது.''

மேற்படி தீர்மானத்தின் மீது ஸ்ரீமதி அலமு அம்மாள் வீரமும் உற்சாகமும் ததும்ப ஆவேசத்துடன் பேசியதன் காரணமாவது - ''சகோதரிகளே! இத் தீர்மானத்தைப் பற்றி உண்மையில் எதுவும் பேசுவதற்கு அவசியமில்லை. அது அவ்வளவு தெளிவாயிருக்கிறது. ஆனால் இந்த உலகம் தோன்றிய காலந்தொட்டு, பெற்றோர்களுக்குக் குழந்தைகள் நன்றி பாராட்ட வேண்டுமென்னும் பொய்க் கொள்கையைப் பெற்றோர்கள் பரப்பி வந்திருக்கிறார்கள். இதை நம்பி நமது உள்ளங்களெல்லாம் ஒருவகை மாயையில் கட்டுப்பட்டுக் கிடக்கின்றன. இந்த மாயையை நாம் உடைத்துத் தகர்த்து எறியவேண்டும். (கரகோஷம்) அன்பர்களே! யோசித்துப் பாருங்கள். இரக்கம், அனுதாபம் முதலியவற்றைச் சிறிது நேரம் தூரம் ஒதுக்கிவைத்து விட்டு, அறிவை மட்டும் உபயோகித்து ஆலோசனை செய்யுங்கள். நாம் எதற்காகப் பெற்றோர்களிடம் நன்றி பாராட்ட வேண்டும்? எந்த விதத்திலே நாம் அவர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறோம்? சாதாரணமாக தாய்தந்தையர்கள் என்ன சொல்கிறார்களென்றால், ''நாங்கள் உன்னைப் பெற்றோம், வளர்த்தோம், பால் புகட்டினோம்; நல்ல ஆடையாபரணங்கள் அணிவித்தோம், அறுசுவையுண்டி அளித்தோம். ஆகையால் நீ எங்களிடம் நன்றி பாராட்ட வேண்டும். அதற்குப் பதிலாக நீ விஷமம் செய்கிறாய். கொஞ்சமாவது உனக்கு நன்றி கிடையாது என்று இப்படிச் சொல்கிறார்கள். இதில் ஓர் அணுவளவாவது நிஜக்கலப்பு இருக்கிறதா, பாருங்கள். முதலில், என் பெற்றோர் என்னை எதற்காகப் பெற்றார்கள்? (கரகோஷம்) என்னைப் பெறுவதற்கு முன் என்னைக் கலந்து கொண்டார்களா? என் சம்மதத்தைக் கேட்டார்களா? (சபாஷ் சபாஷ்)

என்னை எப்படியாவது உங்கள் குழந்தையாக ஏற்றுக்கொள்ளத் திருவுளம் பற்றுங்கள் என்று நான் அவர்களைக் கெஞ்சிக்கேட்டுக் கொண்டேனா? (சிரிப்பு) அன்பர்களே! நீங்கள் சிரிக்கிறீர்கள். இந்த அநீதியை எண்ணும்போது என் நெஞ்சம் கொதிக்கிறது. உண்மையில் என் தாய் தந்தையர் என்னைப் பெற்றபோது என் விருப்பத்தைச் சிறிதாவது கேட்கவில்லை. என்னைக் கேட்டிருந்தால், குழந்தைகளை அடிமையாக வைத்திருக்கும் இந்தப் பாழும் உலகத்தில் பிறக்க, நான் ஒருநாளும் சம்மதித்திருக்க மாட்டேன். பிறகு, என் பெற்றோர் எனக்குச் சாப்பாடு போடுவதற்காக நன்றி பாராட்ட வேண்டுமாம். இதைவிட அக்கிரமம் வேறில்லை. என்னுடைய சம்மதத்தைக் கேளாமல் என்னைப் பெற்றவர்கள் எனக்குச் சாப்பாடு போடக் கடமைப் பட்டிருக்கிறார்கள். நான் எதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டும்? உண்மையில், இது கூட அவர்கள் சுய நலத்துடனேதான் செய்கிறார்கள் நான் வேண்டாமென்றாலும் கேளாமல் தினம் நாலு வேளை திணியச் சோறு ஊட்டுகிறார்களே, அது எதற்காக? சீக்கிரத்தில் நான் வளர்ந்து அம்மாவுக்கு உபகாரமாக வேலை செய்வதற்குத்தான்! (''கேளுங்கள், கேளுங்கள்'') நமக்கு ஆடையாபரணங்கள் அணிவிக்கிறார்களாம்! எதற்காக என்று நான் கேட்கிறேன். நம்மைத் திருப்தி செய்வதற்காகவா? தங்களுடைய பணப் பெருமையை வெளிக் காட்டுவதற்காகவா? சகோதரிகளே! சகோதரர்களே! எல்லாம் மோசம், வேஷம். வெகுநாளாக நாம் மயக்கத்திலாழ்ந் திருந்தோம். இப்போது விழித்துக் கொண்டு விட்டோம். இனிமேல் ஒரு பெரிய புரட்சி நடத்தி நமது பரிபூரண சுதந்திரத்தை . நிலைநாட்ட வேண்டும். நமது முயற்சிகள் எல்லாவற்றிற்கும் இந்தத் தீர்மானமே அஸ்திவாரம். ஆகையால், இதை ஏகமனதுடன் நிறைவேற்றி வைக்கும் படி உங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்'' (பலத்த கரகோஷம்.)

நான்கு வயதுள்ள திருவாளர் 'ஒற்றைக் கண்' நொண்டிக் கந்தன் அவர்கள், மேற்படி தீர்மானத்தை ஆமோதிக்க எழுந்தார். அப்போது, சபையினர் அனைவரும் ஒரே குரலாக,

''ஒற்றைக்கண்டோரியா
சென்னைப் பட்டணம் போறியா
நொண்டிக்கந்தா வாரியா
தக்கடதக்கட ததிங்கிடதோம்.''

என்று பாடி, அவரை வரவேற்றார்கள், அவர் சபையோருக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் பேசியதாவது:- ''இத்தனை சீமான்களும் சீமாட்டிகளும், திருவாளர்களும், திருவளர்ச் செல்விகளும் கூடியிருக்கும் இந்தச் சபையில், அடியேனுக்குப் பேச அனுமதி கொடுத்தது குறித்து முதலில் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். ஆனால், நான் பேச வேண்டிய அவசியமேயில்லை. என்னை நீங்கள் சற்றே உற்றுப் பார்த்தாலே போதும். என் கால் சற்றே நொண்டி. கண் பார்வை கொஞ்சம் கோணல். இக் காரணத்தினால் குழந்தை சமூகத்திலே நான் தீண்டப்படாதவனாயிருக்கிறேன். என்னை யாரும் எந்த விளையாட்டிலும் சேர்த்துக் கொள்வதில்லை. என்னைக் கண்டாலே நீங்கள் கேலி செய்யத் தொடங்குகிறீர்கள். ஆனால், இப்படி நான் அவலட்சணமாயிருப்பது என்னுடைய தவறா என்று யோசித்துப் பாருங்கள். என்னைப் பெறுவதற்கு முன்னால் என் தாய் தந்தையர் என் சம்மத்தைக் கேட்டிருந்தால் நான் இப்படிப் பிறப்பதற்குச் சம்மதித்திருப்பேனா? ஆயினும், நான் என் பெற்றோர்களிடம் நன்றி செலுத்த வேண்டுமாம்! சகோதரிகளே, சகோதரர்களே இன்று ஓர் இரகசியம் சொல்லுகிறேன் கேளுங்கள். எனக்கு அவமானம் பொறுக்க முடியாமல், ஒரு முறை தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்தேன். (சபையினர் கண்களில் நீர் ததும்புகிறது.) எங்கள் வீட்டுக் கொல்லைக் கிணற்றில் போய் விழுந்தேன். ('ஆஹா' என்ற சத்தம்.) ஆனால், என்னுடைய துர்பாக்கியம் என்னை விடவில்லை. என் தாயார் பலமாய்க் கூச்சலிடவே என் தந்தை ஓடிவந்து, கரையேற்றி விட்டார். இதிலே வேடிக்கை என்ன தெரியுமா? இதற்காக நான் என் பெற்றோர்களிடம் இருமடங்கு நன்றி பாராட்ட வேண்டுமாம்! 'வெட்கம் வெட்கம்' ஆகையால், நண்பர்களே இத் தீர்மானத்தை நீங்கள் ஒருமுகமாக ஒப்புக் கொள்ளுங்கள். அத்துடன் இன்னொரு விஷயம். என்னுடைய நொண்டிக் காலுக்கும், ஒண்ணரைக் கண்ணுக்கும் நான் பொறுப்பாளியல்லவாதலால், அவற்றின் பொருட்டு, என்னை நீங்கள் பரிகாசம் செய்யாமலிருக்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.''

இப்பொழுது சபையில் சிறிது குழப்பம் உண்டாயிற்று. ஸ்ரீமான் போக்கிரிமுத்து என்னும் பிரதிநிதி எழுந்திருந்து ''இப்போது பேசியவர் கடைசியாகக் கூறிய விஷயம் தீர்மானத்துக்குச் சம்பந்தமற்றதாகையால் அது ஒழுங்கீனம் என்று நான் ஆட்சேபிக்கிறேன்'' என்றார். சிறிது வாக்குவாதம் நடந்தபிறகு ''ஸ்ரீமான் ஒண்ணரைக் கண் நொண்டிக் கந்தன் அவர்கள் கடைசியாக கூறிய விஷயம் மகாநாட்டைக் கட்டுப்படுத்தாது'' என்று அக்கிராசனர் தீர்ப்புக் கூறினார்.

பின்னர் தீர்மானம் வோட்டுக்கு விடப்பட்டு பலமான ஆரவாரங்களுக்கிடையே ஏகமனதாக நிறைவேறியது.

இரண்டாவது தீர்மானம்

''பொய் சொல்லுதலும், கண்ணீர் விட்டு அழுதலும் குழந்தை மகாஜனங்களின் ஜீவாதார உரிமைகளென்றும், அந்த உரிமைகளுக்குப் பாதகமான எல்லா முயற்சிகளையும் பலமாக எதிர்க்க வேண்டுமென்றும் இந்த மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.''

ஆறு வயதுள்ள ஸ்ரீமான் கோபி மேற்படி தீர்மானத்தை பிரேரணை செய்து பேசியதாவது:— ''அன்பர்களே! இந்தத் தீர்மானத்தின் முக்கியத்தை ஏறக்குறைய நீங்கள் எல்லாரும் உங்கள் அனுபவத்திலிருந்தே உணர்ந்திருப்பீர்கள். குழந்தைகள் பொய் சொல்லக் கூடாதென்றும் நிஜந்தான் சொல்ல வேண்டுமென்றும் சிற்சில போலிக் கொள்கைகளைப் பெற்றோர்களும், உபாத்தியாயர்களும் சேர்ந்து நாட்டில் பரப்பி வருகிறார்கள். முதலில் நிஜம் சொல்வதினால் ஏதேனும் பயனுண்டா என்று பார்ப்போம். ஒன்றுமே கிடையாது. உங்களுக்கு ஓர் உதாரணம் சொல்கிறேன், கேளுங்கள். நேற்றுக் காலையில் நான் எங்கள் வீட்டு ஜன்னலுக்கு அருகில் உட்கார்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்தேன். 'எப்போதும் நிஜமே பேசு!' என்று அதில் போட்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஜன்னலுக்கு வெளியே ஒரு காக்கை வந்து உட்கார்ந்தது. ''கா'' என்று கத்திற்று. எனக்குக் கோபம் வந்தது. உடனே கையிலிருந்த புத்தகத்தை வீசி அதன் மேலெறிந்தேன். அந்தப் பொல்லாத காக்கை புத்தகத்தை மூக்கினால் கொத்தி எடுத்துச் சாக்கடையில் போட்டுவிட்டு ஓடிவிட்டது. இதில் என்மேல் ஏதேனும் தப்பு உண்டா என்று யோசித்துப் பாருங்கள். பிறகு நான் என்ன செய்தேன்? துரதிர்ஷ்டவசமாக, நிஜம் சொல்லிப் பார்க்கலாமென்று தீர்மானித்தேன். அப்பாவிடம் போய் நடந்தது நடந்தபடி சொன்னேன். அதற்கு என்ன பலன் கிடைத்தது என்று நினைக்கிறீர்கள். ''என்னடா மடையா? ஏதோ சாமார்த்தியமான காரியம் செய்து விட்டது போல் வந்து கூறுகிறாயே?'' என்று திட்டித் தலையில் ஒரு குட்டும்

வைத்தார். (''வெட்கம் வெட்கம்'') ஏன்? நிஜம் சொன்னதின் பயனைப் பார்த்தீர்களா? நான் உண்மையைச் சொல்கிறேன். நிஜத்தில் ஒன்றும் கிடையாது. அதனால் நன்மையுமில்லை. அதில் ருசியுமில்லை. நிஜம் பேசுவதற்குப் புத்தி வேண்டுமா? யோசனை வேண்டுமா? ஒன்றும் வேண்டாம்! எங்கள் அப்பா சொன்னது ரொம்ப சரி. மடையன் கூட நிஜம் கூற முடியும். உண்மையில் மடையன் தான் நிஜம் சொல்வான். (சிரிப்பு) அன்பர்களே! பொய் சொல்வதைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம். பொய் சொல்லப் புத்தி வேண்டும்; சாமர்த்தியம் வேண்டும். ஆஹா! பொய் சொல்வதில் எவ்வளவு ருசி இருக்கிறது! ஹல்வாப் பண்டத்தில் கூட அவ்வளவு ருசி கிடையாது. பொய் சொல்வதில் நன்மையும் இருக்கிறது. ஓர் உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்; ஒரு நாள் எங்கள் வீட்டு சைக்கிள் வண்டியின் விளக்கை உடைத்து விட்டேன். சாயங்காலம் அப்பா சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியே போவாரென்று எனக்குத் தெரியும். எனவே ஒரு யுக்தி செய்தேன். ஒரு பெரிய கல்லை எடுத்துக் கொண்டு போய் ஜன்னலருகில் உட்கார்ந்து கொண்டேன். ''அடே கோபு!'' என்று கத்திக் கொண்டே உள்ளே வந்தார். கல்லைக் கையிலெடுத்துக் கொண்டு ''அப்பா! அப்பா!...'' என்றேன். 'அடே சைக்கிளைத் தொடாதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்.'' என்பதாக அவர் ஆரம்பித்தார். உள்ளுக்குள் எனக்குப் பயமாயிருந்தாலும் வெளிக்குத் தைரியத்தைக் கைவிடாமல் அவரை விட அதிகமாகச் சத்தம் போட்டு'' அப்பா! இந்தக் கல்லை ஒரு தடிப்பையன் என் பேரில் எறிந்துவிட்டு போகிறான்'' என்று கத்தினேன். ('சபாஷ் சபாஷ்') உடனே அப்பா தடிப்பையனைத் தேடிக்கொண்டு வீதியில் ஓடினார். (உரத்த சிரிப்பு) அதுதான் சமயமென்று நானும் கோயிலை பார்க்க ஓட்டம் பிடித்தேன். பிறகு அப்பா திரும்பி வந்து சைக்கிளைச் சரி பண்ணி எடுத்துக் கொண்டு போனாராம். நான் அதிசீக்கிரமாகப் படுக்கச் சென்று, அவர் வருவதற்குள் தூங்கியே போய் விட்டேன். பார்த்தீர்களா? பொய் சொல்லுவதில் எவ்வளவு சுவாரஸ்யம் இருக்கிறது? எவ்வளவு நன்மையிருக்கிறது? இப்படிப்பட்ட உரிமையை நாம் விட்டு விடுவதா? (கூடாது கூடாது) நமது உயிரைக் கொடுத்தாவது அந்த உரிமையைப் பாதுகாக்க வேண்டும். (கரகோஷம்) நமது உடம்பில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் அவ்வுரிமைக்காக நாம் போராட வேண்டும். (பலத்த

கரகோஷம்) இந்தத் தீர்மானத்தின் மற்றொரு அம்சத்தைப் பற்றி எனது சகோதரியார் பேசுவார். எனவே, இத்துடன் நான் முடித்துக் கொள்கிறேன்!''

பிறகு மூன்று வயதுள்ள ஸ்ரீமதிராஜம்மாள் மேடையிலேறி, வீர முழக்கத்துடன் ஆர்ப்பரித்துப் பேசியதாவது: — ''சகோதரிகளே, சகோதரர்களே, அழுகை! அழுகை! அழுகை!!! கண்ணீர்! கண்ணீர்!! கண்ணீர்!!! அம்மா, அப்பா என்னும் கொடுங் கோலர்களைச் சரிபடுத்த அழுகை, கண்ணீர் இவற்றைப் போன்ற ஆயுதங்கள் ஈரேழு பதினாலு உலகங்களிலும் இல்லை! இல்லை!! இல்லை!!! இந்த ஆயுதங்களைச்கூட சமயோசிதம் போல் உபயோகப்படுத்த வேண்டும். நேற்று என்ன செய்தேன் தெரியுமா? சாப்பாட்டுப் பீங்கான் தட்டுடன் எங்கள் வீட்டு முற்றத்தில் விழுந்து விட்டேன். கீழே விழுவது நமக்கெல்லாம் வெகு சகஜம். கொஞ்சம் இரத்தம் வந்தால் கூட நாம் சாதாரணமாய்க் கவனிக்கப் போவதில்லை. இப்பொழுதோ தட்டு விழுந்து சுக்கு நூறாய் உடைந்து விட்டது. எனக்குத் தாங்க முடியாத சிரிப்பு வந்தது. ஆனால் சிரித்திருந்தேனோ கட்டாயம் முதுகில் இரண்டு அடி விழுந்திருக்கும். ஆகவே, கஷ்டப் பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டேன். பிறகு, முதல் நாள் கோயிலில் விழுந்த போது முழங்காலில் பட்ட காயத்தை நினைத்துக் கொண்டேன். உடனே எனக்குப் பொறுக்க முடியாமல் அழுகை வந்தது. நல்ல வேளையாக அப்போது காயமான இடத்தில் இப்போது கொஞ்சம் தேய்ந்து ஒரு துளி இரத்தமும் வந்தது. விம்மி விம்மி அழத் தொடங்கினேன். அம்மா வந்து என்னைச் சமாதானம் செய்து வாய் நிறையத் திரட்டுப்பால் அடைத்த பிறகுதான் அழுவதற்கு முடியாமல் தானே அழுகை நின்றது. (கரகோஷம்) ஆகையால், அன்பர்களே! இவ்வளவு அற்புதமான ஆயுதத்தை நாம் ஒரு நாளும் கைவிடக் கூடாது! நீங்கள் இந்தத் தீர்மானத்தை ஒருமுகமாக ஒப்புக் கொள்வீர்களென்று நம்புகிறேன்'' (கரகோஷம்)

பின்னர் மேற்படி இரண்டாவது தீர்மானமும் ஓட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

மூன்றாவது தீர்மானம்

''பள்ளிக்கூடங்கள் என்பவை குழந்தைக் குலத்தின் பரம விரோதிகளால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனங்கள் என்றும் அவை குழந்தைகளை மயக்கி ஏமாற்றி அவர்களுடைய

சுதந்திரங்கள் எல்லாவற்றையும் பறிப்பதற்காகவே ஏற்பட்டவை என்றும் இந்த மகாநாடு கண்டிப்பாக அபிப்பிராயப்படுகிறது. ஆகையால் மேற்படி பள்ளிக்கூடங்களை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்று இம் மகாநாடு பலமாக வற்புறுத்துகிறது.''

மேற்படி தீர்மானத்தை ஆறு வயதுள்ள ஸ்ரீமதி பாலாம்பாள் பிரேரணை செய்து பேசியதாவது: — ''ஓ! என் அருமைச் சகோதரிகளே! சகோதரர்களே! தாய் தந்தையர்களின் நன்றி கெட்ட தன்மையை நான் என்னவென்று சொல்வேன்? அதை நினைக்கும் போதே எனக்கு அளவிழுந்த துக்கம் உண்டாகிறது. பெற்றோர்களுக்கு நாம் செய்யும் உபகாரங்களைப் பற்றி நான் பெருமையடித்துக் கொள்ளப் போவதில்லை. அவர்கள் மார்பில் கையை வைத்து யோசித்துப் பார்த்தார்களானால் யாருக்கு யாரால் நன்மையென்று தாங்களே தெரிந்து கொள்வார்கள். ஒன்றிரண்டு மட்டும் இங்கே சொல்கிறேன். நான் பிறந்திரா விட்டால் அப்பாவுக்ும் அம்மாவுக்கும் முதலில் பொழுது எப்படிப் போகும்? சமைப்பதும், சாப்பிடுவதும், சண்டை போடுவதும் தவிர வேறு அவர்களுக்கு வேலையிராது, இன்னும் பாருங்கள். அம்மாவுக்காக நான் நாலு வேலை சாப்பிடுகிறேன். அம்மாவுக்காகத் தலைவாரிப் பின்னிக் கொள்கிறேன். அம்மாவுக்காகக் குளிக்கிறேன். அம்மாவுக்காகச் சட்டை போட்டுக் கொள்கிறேன். நகை அணிந்து கொள்கிறேன். அப்புறம் அம்மாவுக்காக விளக்கெண்ணெய் ' கூடக் குடித்துத் தொலைக்கிறேன். இவ்வளவு உபகாரம் நான் செய்வதற்கு அவர்கள் பிரதி உபகாரம் என்ன செய்கிறார்கள்? பள்ளிக்கூடம் என்னும் சிறைக்கூடத்துக்கு என்னை அனுப்புவதுதான். (வெட்கம், வெட்கம்) ஆம்: இதைப் போன்ற வெட்கக்கேடு உலகிலே ஒன்றுங் கிடையாது. பள்ளிக்கூடங்களிலே என்ன செய்கிறார்கள்? நம்மையெல்லாம் ஏமாற்றுகிறார்கள். புத்தகத்திலே யானை போட்டு நமக்குக் காட்டுகிறார்கள். புத்தகத்து யானை இங்கே யாருக்கு வேண்டும்! அது நடக்கிறதா? தும்பிக்கையை ஆட்டுகிறதா? வாழைப்பழம் கொடுத்தால் வாங்கித் தின்கிறதா? ஒன்றுமேயில்லை. அது ஏமாற்றமல்லவா? மோசமல்லவா? (''ஆம், ஆம்'') ஏன் நமக்கு நிஜ யானை காட்டக் கூடாது? இப்படித்தான் யெல்லாம், கிளியாம் கிளி! அது வாயைக் கூடத் திறப்பதில்லை. (சிரிப்பு) ஒரு நாள் நாள் 'பீபில்ஸ் பார்க்'குப்

போயிருந்தேன். அங்கே நிஜ சிங்கம், நிஜக் குரங்கு, நிஜக் கரடியெல்லாம் பார்த்தேன். ஆஹா! எவ்வளவு சந்தோஷமாயிருந்தது? ஏன் தினமும் அங்கே அழைத்துக் கொண்டு போகக் கூடாது? என்று நான் கேட்கிறேன். இது மட்டுமா? புத்தகத்தில் வாழைப்பழம், பலாப்பழம், இவை இருந்தன. பார்த்ததும் வாயில் ஜலம் ஊறிற்று. ஆனால் என்ன ஏமாற்றம்? என்ன மோசம் பாருங்கள்! புத்தகத்தில் உள்ள ஒரு கூடை வாழைப்பழம் நிஜவாழைப்பழம் ஒன்றுக்குச் சமானமாகுமா? (கரகோஷம்) அன்பர்களே! இத்தீர்மானத்தைப் பற்றி நான் அதிகம் பேச வேண்டியதில்லை. ஏனென்றால் உங்கள் இயற்கை உணர்வே இதைப்பற்றி உங்களுக்குச் சொல்லும். பள்ளிக்கூடம் என்ற பெயரைக் கேட்டாலே உங்களுக்கு வெறுப்பாயிருக்கிறது. பள்ளிக்கூடத்து அருகில் போனவுடனேயே நடுக்கம் உண்டாகிறது. ஆகையால் இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்வீர்களென்று நம்பி என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.'' (கரகோஷம்)

இப்பொழுது தான் மகாநாட்டு நடவடிக்கைகளில் அபிப்பிராய பேதம் தலை காட்டிற்று. ஏழு வயதுள்ள ஸ்ரீமான் வக்கிரதந்தர் என்பவர் எழுந்திருந்து, ''சபையோர்களே! எனக்கு இந்தத் தீர்மானத்தின் நோக்கத்தில் அனுதாபம் உண்டு. ஆனால்...'' என்று சொல்லுவதற்குள் சபையில் பெருங் கூச்சல் உண்டாகி விட்டது. ''தீர்மானத்தை நீர் ஆதரிக்கப் போகிறீரா? எதிர்க்கப் போகிறீரா?'' என்று ஒரு பிரதிநிதி கேட்டார். ''ஆட்சேபிக்கப் போகிறேன்'' என்று வக்கிரதந்தர் பதில் சொன்னார். உடனே அந்தப் பிரதிநிதி, சபைத் தலைவரை நோக்கி, ''அக்கிராசனர் அவர்களே! குழந்தை மகா ஜனங்கள்தான் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளலாமென்பது மாநாட்டின் விதிகளில் முக்கியமானது. பிரஸ்தாப தீர்மானத்தை எதிர்க்கக் கூடியவர் குழந்தையாயிருக்க முடியாது (''கேளுங்கள், கேளுங்கள்'') அவர் வயது வந்த மனிதராகவேயிருக்க வேண்டும். இன்னும் கிழவராய்க் கூட இருக்கலாம். தலை மயிரைச் சோதித்துப் பார்த்தால் அது தெரிய வரும். (சிரிப்பு) ஒரு வேளை இது பெரியவர்களின் சூழ்ச்சியாக இருக்கலாம். எப்படியிருந்தாலும் இவர் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உரிமையற்றவர் என்று ஆட்சேபிக்கிறேன்'' என்றார்.

உடனே சபையில், ''சூழ்ச்சி, சூழ்ச்சி,'' ''துரத்துங்கள் துரத்துங்கள்'' என்று கூக்குரல் எழுந்தன. அக்கிராசனர் கையமர்த்தி அமைதி உண்டாக்கிய பின்னர் ''ஆட்சேபத்தை நான் ஒப்புக் கொள்கிறேன். ஸ்ரீவக்கிர தந்தருக்கு இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உரிமை கிடையாது'' என்று தீர்ப்பளித்தார். உடனே நான்கு தொண்டர்கள் முன் வந்து வக்கிரதந்தரின் கையைப் பிடித்துக் கொண்டு போய் வெளியேற்றி விட்டு வந்தனர். பிறகு, மேற்படி தீர்மானம் எவ்வித ஆட்சேபமுமின்றி ஏகமனதாக நிறைவேறியது.

நாலாவது தீர்மானம்

சாப்பிடவும், சாப்பிடாமலிருக்கவும், தூங்கவும் தூங்காமலிருக்கவும், பள்ளிக்கூடம் போகவும், போகாமலிருக்கவும், குளிக்கவும், குளிக்காமலிருக்கவும், இன்னும் இது போன்ற எல்லாக் காரியங்களிலும் குழந்தைக் குலத்துக்குப் பரிபூரண சுதந்திரம் உண்டென்று இந்த மாநாடு வலியுறுத்துகிறது. சாத்விகச் சட்டமறுப்பு உள்பட எல்லா முறைகளையும் கையாண்டு மேற்படி சுதந்திரத்தை நிலை நாட்ட வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

இத் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது. வந்தனோபசாரங்கள் கூறியான பின்னர் மிகுந்த உற்சாகத்துக்குக் கிடையே மாநாடு கலைந்தது. சிறுவர்களும், சிறுமியர்களும் கூட்டம் கூட்டமாகக் கடற்கரைக்கு வந்து, கிளிஞ்சல் ஓடுகளைப் பொறுக்கி வீசி எறிந்து விளையாடி மகிழ்ந்தார்கள். நானும் கடற்கரையில் அமர்ந்து பகற் கனவு காண்பதை நிறுத்தி, வீடு நோக்கிச் சென்றேன்.

இருப்பதா? இறப்பதா?

(சட்டசபை அங்கத்தினர் பிரலாபம்)

ஐயா! கல்கியே! ஏதேதோ கதை வளர்த்துக் கொண்டு போகிறீரே? சிரிப்பு விளையாட்டுக் கெல்லாம் இதுதானா சமயம்? தேசத்திலே பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. என் வாழ்க்கையிலோ அதைவிடப் பெரிய நெருக்கடி தோன்றியிருக்கிறது. ''இருப்பதா? இறப்பதா?'' என்னும் கேள்விக்கு இப்போது பதில் சொல்லியாக வேண்டும். இருப்பதிலும், இறப்பதிலும் உள்ள லாப நஷ்டங்களையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்ய வேண்டும். இத்தகைய நெருக்கடியில் நீர் எனக்கு உதவி செய்யப் போகிறீரா? அல்லது வெறும் அரட்டையே அடித்துக் கொண்டிருக்கப் போகிறீரா?

நல்லது; அப்படியானால் நான் சொல்லப் போவதையெல்லாம் கவனமாய்ச் செவி கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்து விட்டுக் கடைசியில் உமது ஆலோசனையைச் சொல்லும் பார்க்கலாம். மகாத்மாவையும், பண்டித நேருவையும் போல் நீர் பிறர் கஷ்டம் தெரியாத மனிதரல்லர். அதனால் தான் உம்மிடம் வந்தேன். சட்ட சபை அங்கத்தினர் பதவி என்றால் ஏதோ ரோஜாப் பூ மெத்தையென்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த ரோஜா மெத்தையில் முள்ளுதான் அதிகம் என்பது அதில் படுத்து அனுபவித்தவர்களுக்கே தெரியும். ஐயோ! இந்தப் பதவி அடைவதற்காக தான் பட்ட பாடுகளையும், பதவியடைந்த பிறகுகூட நான் நாளதுவரை அநுபவித்து வரும் துன்பங்களையும் எண்ணி எண்ணிப் பார்த்தால் 'சை! இதைத் தொலைத்துத் தலை முழுகலாம்'' என்று தோன்றுகிறது. ஆனால் எந்தக் காரியமானாலும் அதிலுள்ள லாப நஷ்டங்களைத் தீர ஆலோசித்துப் பார்க்க வேண்டும். அதற்காக எவ்வளவு கஷ்டமெல்லாம் பட்டேனோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்குள், வெண்ணெய் திரளும் சமயத்தில் தாழி உடைந்தாற்போல், சட்ட சபையை விட்டு விடுவதென்றால் மனம் வரவில்லை.

முதலிலிருந்து தொடங்குகிறேன், கேளுங்கள். சுமார் பதினைந்து வருஷத்திற்கு முன்னால் எனக்கு இந்த எண்ணம்

உண்டாயிற்று. அதுமுதல் எல்லா வகையான பொதுக்காரியங்களிலும் ஈடுபட்டு வந்தேன். காங்கிரஸ் மகாசபையில் சேர்ந்தேன். ஹோம் ரூல் சங்கத்தில் சேர்ந்தேன். தொழிலாளர் இயக்கத்தில் கலந்தேன். சமூக சீர்திருத்த சபைகளில் அங்கத்தினனானேன். எந்த வேளையில், எந்த ஸ்தாபனத்தின் ஆதரவில் எந்த விதமான கூட்டம் நடந்தாலும் போகத் தவறமாட்டேன். குறைந்தது அரைமணி நேரமாவது பிரசங்கம் செய்யாமல் விட மாட்டேன். சாதாரணமாக எப்போதும் என்னைக் கடைசியில் தான் பேசச் சொல்லுவார்கள். ஏனென்றால், எந்தக் கூட்டத்திலும் நான் பேசிவிட்டால் அப்புறம் ஒருவரும் இருக்க மாட்டார்கள். சபையில் ஒருவராவது பாக்கி இருக்கும் வரையில் நான் பேச்சை நிறுத்த மாட்டேன். சில சமயம் வழக்கம் போல், 'கனவான்களே!' என்று அழைத்துவிட்டு, அப்புறம் என்னை நானே திருத்திக் கொண்டு ''ஐயாவே'' என்று அழைத்துப் பேசியதுண்டு. வேறு சில கூட்டங்களில், அக்கிராசனரை மட்டும் வைத்துக் கொண்டு சரமாரியாய்ப் பொழிந்திருக்கிறேன்.

பிரசங்கம் செய்வதுடன் வேலை முடிந்துவிட்டதென்று நினைக்காதீர்கள். பிரசங்கத்தை ஒரு சிலர் தான் கேட்பார்கள். ஆனால், அதுவே பத்திரிகையில் வந்தால் ஆயிரக்கணக்கானவர்கள் படிப்பார்கள். ஆகையால் என் பிரசங்கத்தை முழுவதும் பத்திரிகையில் போடுவதற்கு ஏற்பாடு செய்து வந்தேன். இது லேசான வேலையா? பத்திரிக்கை நிருபர்களை எவ்வளவோ தழுவிக் கட்டியாக வேண்டும். மேலும் அவர்களில் சிலர் விஷயம் தெரியாதவர்கள். பேசியது பேசியபடியே போட்டு விடுவார்கள். இதற்காக நானே என் பிரசங்கத்தை எழுதி முன்னுக்குப் பின் உதையாமல் அழகுபடுத்திக் கொடுப்பேன்.

கூட்டங்களில் அக்கிராசனம் வகிப்பதற்கு நான் சிறிதும் பின் வாங்கியதில்லை. பொதுக் கூட்டங்கள், ஆண்டு நிறைவு விழாக்கள், தொழிலாளர் சங்கங்கள், ரெட்டியார், முதலியார், கவுண்டர், வன்னியகுல க்ஷத்திரியர், தேவேந்திரக் குல வேளாளர் முதலியோரின் சாதி மகா நாடுகள்; வர்ணாசிரம பரிஷத்துக்கள்; ஜில்லா, தாலுக்கா, கிராம அரசியல் மகா நாடுகள்: கூட்டுறவுச் சங்கங்கள்; மாஜி கைதிகள் சங்கங்கள்: பழைய மாணாக்கர், புதிய மாணாக்கர் சங்கங்கள்; வாசக சாலைகள்: வரிகொடுப்போர் சங்கங்கள்; சன்மார்க்க சபைகள்; ஜீவகாருண்ய சபைகள் ஆகிய இவைகளின் சாதாரணக் கூட்டங்களிலும் ஆண்டு விழாக்களிலும் நான் அக்கிராசனம் வகித்தவற்றைக் கணக்கிட்டால் ஒன்பது,

பத்து, நூறு, ஆயிரம், லட்சம், கோடி, சங்கம், பதுமம், வெள்ளம், மகா வெள்ளம் என்று கணக்கில்லாமல் போகும். இந்த வைபவங்களில் அக்கிராசனருக்குப் பூமாலை வாங்கிப் போடுவதற்காக நான் கொடுத்திருக்கும் பணம் மட்டும் எவ்வளவு இருக்கும் தெரியுமா? நினைத்தால் பெருமூச்சு வருகிறது.

கொடுத்த பணம் இவ்வளவென்றால் கொடுக்காத பணத்துக்கு அளவு சங்கையே கிடையாது. உமக்குப் புரியவில்லையல்லவா? விளக்கமாகச் சொல்கிறேன். கேளும். நான் பொது வாழ்வில் ஈடுபட்டதிலிருந்து கையெழுத்துப் போட்டிருக்கும் சந்தா தொகைகளையும், நன்கொடைகளையும் கணக்கிட்டால் இந்தப் பாரத நாட்டையே விலைக்கு வாங்கி விடலாம். யார் என்ன காரியத்துக்காக வந்து பணம் கேட்டாலும் நான் இல்லை என்று சொல்வது மட்டும் கிடையாது. அற்பசொற்பமாய்க் கொடுக்கவும் எனக்குத் தெரியாது. பண்டித மாளவியா காசி ஹிந்து சர்வகலாசாலைக்காக யாசகத்துக்கு வந்தார். முதலில் ரூ.5000-க்குக் கையெழுத்துப் போட்டவன் நான்தான். கவி ரவீந்திரநாத் தாகூர் தமது சாந்தி நிகேதனத்துக்காக செய்தேன். மகாத்மா காந்தி திலகர் சுயராஜ்ய நிதிக்காக வந்தார். ரூ.20.000 கொடுத்தேன். (அதாவது கொடுப்பதாகச் சொன்னேன்.) அதே மாதிரியாகக் காதர் சுத்தி இயக்கம் முதலியவற்றுக்கும் கையொப்பமிட்டேன். இந்தப் பெரிய அகில இந்திய இயக்கங்களையல்லாமல், உள்ளூர் இயக்கங்கள், கமிட்டிகள், சங்கங்கள், சபைகள், திருவிழாக்கள், பள்ளிக்கூடங்கள், வாசகசாலைகள், வருஷோற்சவங்கள், வெள்ளக் கஷ்ட நிவாரணங்கள் இவற்றுக்கெல்லாம் கணக்கில்லாமல் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் முதலில் என் பெயர் பத்திரிகைகளில் வருவதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆனால், இவ்வளவுக்கும் பணம் கொடுத்து விட்டேன் என்று நினைக்கிறீரோ? அப்படிச் செய்திருந்தால் இன்று நான் ஓட்டாண்டியாய் நிற்க வேண்டியதுதான். கையெழுத்துப் போட வேண்டியது என் கடமை; வசூலிக்க வேண்டியது அவர்கள் கடமை.

1918-ஆம் வருஷத்தில் மாண்டகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் வந்தபோது, சட்ட சபைக்குச் செல்ல இதுதான் சந்தர்ப்பம் என்று தீர்மானித்து, காங்கிரஸ் மகா சபையின் முன்னணியில் நின்று அதிதீவிரமாய் வேலை செய்து வந்தேன். ஆனால், உமது மகாத்மா இருக்கிறாரே, மகாத்மா, அவர் குறுக்கே வந்து கெடுத்தார். ஒத்துழை

யாமை தீவிரமாய் நடந்த வரையில் கொஞ்சம் விலகியிருந்தால்தான் நல்லது, என்று தீர்மானித்து அப்படியேயிருந்தேன். ஆனால் காந்தி சிறைக்குப் போய், தேசபந்து தாஸர் சட்ட சபைக் கொடியை உயர்த்திய போது முதலில் அந்தக் கொடியின் கீழ் சென்றவன் நான்தான்! உமக்குத்தான் அந்த விஷயமெல்லாம் தெரியுமல்லவா? ஆகையால் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். தேசபந்து என்னைத் தம் வலது கண்ணாக எண்ணி இருந்தார். வழக்கம்போல் சுயராஜ்யக் கட்சிக்கு ரூபா 10,000 வீசியெறிந்தேன்-காகிதத்தில்தான்!

பிறகு தேர்தல் வந்தது. அடடா! அப்போது நான் பட்ட பிரயாசையை நினைத்துப் பார்த்தால்!-இராப் பகல் தூக்கமுண்டோ! ஒரு நிமிஷம் ஒய்வு ஒழிவு உண்டா? வேளாவேளையில் சாப்பாடு உண்டா? ஒன்றும் கிடையாது. அப்போது நான் அளித்த வாக்குறுதிகளை எண்ணினால் இந்த நெருக்கடியான சமயத்திலும், எனக்குச் சிரிப்பு வருகிறது. உதாரணத்துக்கு ஒன்றிரண்டு சொல்கிறேன், கேளுங்கள்!

(1) வர்ணாசிரம தர்மத்தை நிலைநாட்டுவதற்காக என் உடல் பொருள் ஆவிகளையெல்லாம் அர்ப்பணம் செய்வதாய் அக்கிரகாரங்களில் உறுதிமொழி கூறினேன்.

(2) சாதி வித்தியாசத்தையும், தீண்டாமையையும் ஒழிப்பதற்காக அல்லும் பகலும் அனவரதமும் உழைப்பேனென்று சீர்திருத்தக்காரர்களுக்கு வாக்களித்தேன்.

(3) சுமார் நூற்றைம்பது கிராமங்களில் கோயில்கள் கட்டுவதற்கும், பழைய கோயில்களைப் புதுப்பிப்பதற்கும் நன்கொடையளிப்பதாகக் கையொப்பமிட்டேன்.

(4) சட்ட சபைக்குச் சென்றதும், கோயில்களிலுள்ள விக்கிரகங்களையெல்லாம் அப்புறப்படுத்தி அவற்றைப் பள்ளிக்கூடங்களாகவும், தொழிற்சாலைகளாகவும் மாற்றுவதற்கு ஒரு மசோதா கொண்டு வருவதாய்ச் சுயமரியாதை வாலிபர் சங்கத்தில் 'குடியரசு' சாட்சியாகச் சத்தியப் பிரமாணம் செய்தேன்.

(5) விதவா விவாகத்தைச் சட்டம் மூலம் தடுப்பதற்குக் கிளர்ச்சி செய்வதாய் வைதிக கோஷ்டியில் உறுதி கூறினேன்.

(6) விதவா விவாக இயக்கத்தைப் பூர்ணமாய் ஆதரிப்பதாயும், தேர்தல் முடிந்தவுடன் நானே குறைந்த பட்சம் ஐந்தாறு விதவைகளைக் கலியாணம் செய்து கொள்வதாயும் விதவா விவாக சங்கத்தில் வாக்களித்தேன்.

மாதிரிக்கு இவை போதும். ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறே பதமல்லவா?

தேர்தல் முடிந்தது. வோட்டுக்கு கணக்கெண்ணியதும் எனக்கும் என் விரோதிக்கும் நெருக்கடியான போட்டி ஏற்பட்டு வந்ததும், கடைசியில் இருபது வோட்டுகள் அதிக வித்தியாசத்தினால் நான் ஜெயமடைந்ததும், உடனே நான் மூர்ச்சையாகி விழுந்ததும், இந்தச் செய்தி கேட்ட சுயராஜ்யக் கட்சித் தலைவர் ஓடி வந்ததும், நான் மூர்ச்சை தெளிந்து அவரைக் கட்டித் தழுவிக் கொண்டு சந்தோஷப் பெருக்கால் அழுததும்—இன்னும் மற்ற சங்கதிகளும் நீர் அறிந்தவையே.

தேர்தல் முடிவோடு என் கஷ்டங்களும் முடிந்துவிடுமென்று எண்ணியிருந்தேன். ஏமாந்து போனேன். நாளது வரை என்னுடைய பதவியினால் ஒரு தம்பிடி கூட லாபம் கிடையாது. நான் சென்னை நகரிலேயே குடியிருப்பதால் மற்ற அங்கத்தினர்களுக்குக் கிடைக்கும் முதல் வகுப்புப் படிச் செலவுப் பணம் கூட எனக்குக் கிடைப்பதில்லை. என்னுடைய சகோதர அங்கத்தினர் பணம் சம்பாதிக்கச் சிலசில வழிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். சட்ட சபையில் கேள்விகள் போடுவதற்குக் கேள்விக்கு இவ்வளவு ரூபாய் என்று சிலர் கட்டணம் வாங்குகிறார்கள். ஆனால் நான் ஜமீன்தாராகையால், அற்பசொற்பமான தொகைகளைக் கொடுக்க யாரும் முன்வருவதில்லை. வெட்கத்தை விட்டுப் பத்தும் இருபதும் வாங்கி என் தரித்திரம் தீரப் போவதுமில்லை. தேவஸ்தான மசோதா, தேவதாசி மசோதா இவற்றை எதிர்ப்பதற்காகச் சிலர் மடாதிபதி களிடமிருந்தும், கோயில் அதிகாரிகளிடமிருந்தும் பணஞ் சம்பாதித்தார்கள். ஆனால், நானே மூன்று கோயில்களின் தர்மகர்த்தாவாகையால், நான் அதைக் கட்டாயம் எதிர்ப்பேனென்று நம்பி, ஒருவரும் எனக்குப் பணம் கொடுக்கவில்லை.

லாபந்தான் இல்லையே? நஷ்டமாவது இல்லாமலிருக்க வேண்டாமா? அதை ஏன் கேட்கிறீர்கள். சொன்னால் வயிற்றெரிச்சல். கையெழுத்துப் போட்டுப் பணம் கொடுக்காதிருக்கும் முறை பெரிய மனிதர்களிடந்தான் பலிக்கும். தேர்தல் ஏஜெண்டுகளிடமும் கிராமவாசிகளிடமும் அது பலிக்கவே பலிக்காது. தேர்தல் ஏஜெண்டுகள் சங்கதிதான் உமக்கு நன்றாய்த் தெரியுமே? கிராமவாசிகளைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. ஒரு கிராமக் கோயிலுக்கு நூறு ரூபாய் தருவதாய் வாக்களித்திருக்கிறேன். தேர்தல் முடிந்து மூன்று மாதம் வரை அவர்கள் பொறுத்துப் பார்த்தார்கள்.

அதுவரை பணம் வராமல் போகவே, பத்துப் பன்னிரண்டு பேர் போவதற்கு மட்டும் ரயில் சார்ஜ் எடுத்துக் கொண்டு கிளம்பி இங்கே வந்து சேர்ந்தார்கள். அந்தப் பட்டிக் காட்டான்களுக்கு ஒரு வாரம் சோறு போட்டு நகரெல்லாம் சுற்றிக் காட்டி, வாக்களித்த நூறு ரூபாயுடன் ரயில் செலவுக்குப் பணமும் சேர்த்துக் கொடுத்து அனுப்ப வேண்டியதாயிற்று.

பணந்தான் நஷ்டமாகிறதே? பொருள் நஷ்டமாவது இல்லாமலிருக்கிறதா? இந்தப் பதவி கிடைத்தது முதல் நான் அடைந்து வரும் தொல்லைகளைச் சொல்லி முடியாது. யாரார் இன்னின்ன வேலைதான் எனக்கிடுவது என்று ஒரு வரம்பே இல்லை. ஓர் ஊரில் மழை பெய்யாவிட்டால், அதைப் பற்றி உடனே தக்க ஏற்பாடு செய்யும்படி கடிதம் வருகிறது. என் பிள்ளை பி.ஏ. பரீட்சை தேறியிருக்கிறான், அவனுக்கு ஓர் உத்தியோகம் சம்பாதித்துக் கொடுங்கள் என்று ஒருவர் வருகிறார். 'என் மருமகன் பி.எல் பரீட்சைக்குப் போயிருக்கிறான்; அவன் பரீட்சை தேறுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்' என்று மற்றொருவர் சொல்கிறார். 'என் பெண்ணுக்கு வயதாகி விட்டது; வரதட்சணை கேட்காத மாப்பிள்ளை தேடிக் கொடுங்கள்', என்று வேறொருவர் கேட்கிறார். 'என் பிள்ளைக்கு ரூ.4000 வரதட்சணையுடன் பெண் தேடிக் கொடுங்கள்' என்கிறார் இன்னொருவர். எதைத் தான் நான் செய்வேன்? மூன்றாம் வகுப்பு ரயில் பிரயாணத்தில் நெருங்கித் துகையலான ஒரு வாயாடி, 'சட்ட சபை அங்கத்தினர் இந்த அநியாயத்துக்குப் பரிகாரம் தேடாமல் வேறென்ன செய்கிறார்?' என்று ஆத்திரமாய் வினவுகிறார். 'ஊரில் மாட்டு நோய் வந்திருக்கிறது. கால்நடைகளெல்லாம் சாகின்றன; சட்ட சபை அங்கத்தினரோ தூங்குகிறார். அடுத்த தடவை வோட்டுக்கு வரும்போது அவருக்குப் பாடங் கற்பிக்க வேண்டும்' என்று ஒருவர் பயமுறுத்துகிறார். 'எங்கள் ஊரில் நாவிதர்களெல்லாம் கட்டுப்பாடு செய்து க்ஷவரம் பண்ணுவதில்லை யென்கிறார்கள்; உடனே வரவேண்டும்' என்று ஒரு கிராமத்துத்திலிருந்து தந்தி வருகிறது. ஐயா! கல்கியே! நீரே சொல்லும், நான் எதையென்று செய்வேன்? மாப்பிள்ளை தேடுவேனா? மாட்டு வைத்தியம் பண்ணுவேனா! க்ஷவரம் செய்யப் போவேனா?

நல்லது. இவ்வளவு தொல்லைகளுக்கிடையில், ஏன் இப்பதவியை கட்டிக்கொண்டு அழவேண்டுமென்று நீர் கேட்கலாம்—நியாயமான கேள்வி. அதற்குப் பதில் சொல்

நான் கடமைப்பட்டவன். ஜனங்கள் குதிரைப் பந்தயத்துக்கு ஏன் பணம் கட்டுகிறார்கள்? நூறு பேர் நஷ்டப்பட்டால் ஒருவனுக்கு லாபம் வருகிறதல்லவா? அந்த ஒருவன் நாமாயிருக்கக் கூடாதா? என்ற ஆசைதான். அதே மாதிரி அடுத்த தடவை மந்திரி உத்தியோகம் நமக்குக் கிடைக்காதா என்ற ஆசையினால், எனக்கும் சட்ட சபைப் பாசம் விடமாட்டேனென்கிறது. இப்போது கூட்டு வட்டியுடன் லாபம் பெறலாமல்லவா? மந்திரி பதவிதான் வேண்டுமென்னும் அவசியம் கூட இல்லை. மந்திரி கட்சி யிலிருந்தாலே போதும். ஒரு ஜில்லா போர்டு சபை என் கைக்கு வரவேண்டியது. இதன் அக்கிராசனனாகி விட்டால், அப்புறம் என் உடம்பில் உயிர் உள்ளவரையில் அதை விட்டு என்னை அசைக்க முடியுமா? நாய்க்கு எலும்புத்துண்டு எறிவது போல் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கண்டிராக்டு கொடுத்து வந்தேனானால், தீர்ந்தது.

ஏன்? இப்பொழுதுகூட மேற்படி நிபந்தனையின் பேரில் மந்திரி கட்சியில் சேர நான் தயார் தான். ஆனால், என் ஜில்லாவில் இப்போதிருக்கும் ஜில்லாபோர்டு தலைவர் மந்திரி கட்சியாதலால், அவரை விரட்ட முடியாது, ஆகையால் மந்திரி சபையையே கைப்பற்றிக் கொள்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழி கிடையாது. எனவே மந்திரி சபைக்குள்ளும் நுழைந்து பூரண சுதந்திரக் கொடியை நாட்டுவதற்காக, நாங்கள் பெரும்" பிரயத்தனம் செய்து கொண்டிருக்கையில், லாகூர் காங்கிரஸ் பெரிய கல்லைத் தூக்கிப் போட்டு விட்டது. எங்கள் ஆசையையெல்லாம் நிராசையாகச் செய்து விட்டது.

என்ன அநியாயம் பாருங்கள். தற்போது எங்களைச் சட்ட சபையிலிருந்து—விலச் சொல்லக் காங்கிரஸுக்கு அணுவளவேனும் உரிமை உண்டா? கிடையவே கிடையாது. நாங்கள் காங்கிரஸ்காரர்களாக நின்றது உண்மைதான். ஆனால் அப்போது சட்ட சபையின் காலம் மூன்று வருஷமென்று தானே இருந்தது. ஆகையால் அந்த மூன்று வருஷத்துக்குத் தானே நாங்கள் காங்கிரஸுக்குக் கடமைப் பட்டவர்கள்? சென்ற வருஷத்தோடு அந்த மூன்று ஆண்டுகளும் முடிந்து போயின. இப்போது நாங்கள் சட்ட சபையிலிருப்பது காங்கிரஸின் தயவினாலா? ஒரு நாளுமில்லை. சர்க்கார் தயவினால் அல்லவா? இந்த தேர்தல் நடத்த வேண்டியிருந்தும், அப்படிச் செய்யாமல் சட்ட சபையின் காலத்தை நீடித்தவர்கள் அரசாங்கத்தார் அல்லவா? அப்படியிருக்க ராஜிநாமா செய்யச் சொல்ல காங்கிரஸுக்கு என்ன அதிகாரமிருக்கிறது?

ஆனால், இதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. காங்கிரஸின் அதிகாரமும் கட்டளையும் என்னை என்ன செய்து விடும்? நான் கவலைப் படுவதெல்லாம் அடுத்த தேர்தலைப் பற்றித்தான். இதை எண்ணும் போதுதான் பெரிய தர்ம சங்கடமாயிருக்கிறது. இத்தனை நாள் காங்கிரஸ் வாதியாயிருந்த நான் இப்போது ராஜிநாமா செய்யாவிட்டாலும், ராஜிநாமா செய்து மறு தேர்தலுக்கு நின்றாலும் பெரிய அபகீர்த்தி ஏற்படலாம். இது ஒரு வேளை அடுத்த பொதுத் தேர்தலில் எனக்குப் பாதகமாகக் கூடும். ராஜிநாமா செய்து சும்மாயிருந்தாலோ என் எதிரி அந்த ஸ்தானத்தைப் பற்றிக் கொண்டு விடுவான். பிறகு அவனை அங்கிருந்து கிளப்புவது அசாத்தியமாகலாம். சட்ட சபைக்குப் போகும் ஆசையையே விட்டுவிடுவதென்றால், அரசியல் வாழ்க்கையில் நான் இறந்து போனதாகவே முடியும். சட்டமறுப்பு, சிறைச்சாலைப் பிரவேசம் முதலியவற்றுக்கும் எனக்கும் வெகு தூரம். இதுதான், ஐயா! இப்போது ஏற்பட்டிருக்கும் மகா நெருக்கடியான நிலைமை. நீர் என்ன யோசனை சொல்கிறீர்? நான் இருப்பதா? இறப்பதா?

நாடகம்

காலட்சேபங்களிலே முதல் ஸ்தானம் நாடகத்துக்குத்தான் கொடுக்க வேண்டும். நாடகத்துக்கு ஏன் முதன்மை ஸ்தானம் தரவேண்டுமென்று நீங்கள் கேட்கலாம். ஏன் கூடாது என்று உங்களை நான் திருப்பிக் கேட்கிறேன். இந்த ஒரு கேள்வியினாலேயே உங்கள் வாதம் அடிபட்டுப் போய் விட்டதென்றாலும் போனால் போகிறதென்று சில காரணங்களும் சொல்கிறேன். முதலாவது, நாடகத்திலே தான் உழைப்பாளிகள் அதிகம். இராமர் காட்டுக்குப் போகிறாரென்றால், வரிசையாக அறுபது பேரை நிறுத்திக் கூச்சலிடச் செய்யலாம். பாகவதர்கள் எவ்வளவு தான் வயிற்றில் அடித்துக்கொண்டு அழுதாலும் அவ்வளவு சத்தம் போட முடியாது. மேலும் நாலைந்து மணி நேரம் ஒரே ஆசாமியைப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட, மாற்றிப் மாற்றிப் பல பேரைப் பார்த்தல் கண்ணுக்குக் குளிர்ச்சியல்லவா?

இரண்டாவது, நாடகத்திலே தான் இடையிடையில் திரை போடும் நல்ல பழக்கம் இருந்து வருகிறது. நான் பார்த்திருக்கும் நாடகங்களுக்குள் ஒன்று எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அந்த நாடகம் மொத்தம் 4 ¼ மணி நேரம் நடந்தது. இதில் 3 மணி நேரம் வெளித்திரை விட்டிருந்தார்கள். சபையோருக்கு எவ்வளவு சௌகரியங்கள் பாருங்கள்! இந்த நல்ல முறையை மற்றவர்களும் கடைப்பிடித்தால் எவ்வளவு நலமாயிருக்கும் என்று, நான் அடிக்கடி எண்ணுவதுண்டு, இப்படியே நாடகத்தின் சிறப்பைக் குறித்து, நெடுகச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், இதை இத்துடன் நிறுத்தி, நாடகத்தைப் பற்றி என்னுடைய அனுபவங்கள் சிலவற்றைச் சொல்கிறேன், கேளுங்கள்:

நாடகங்களிலே இரண்டு வகை உண்டு. ஒருவகை சந்தோஷ முடிவுள்ள நாடகங்கள். மற்றொருவகை துயரமாக முடியும் நாடகங்கள். நான் பார்த்திருக்கும் நாடகங்கள் எல்லாம் சந்தோஷமாக முடிவுற்றனவேயாகும். அதாவது நாடகம் முடிந்ததும் நான் சந்தோஷமடைவேன். நான் மட்டுமா? என் ஐந்து புலன்களும் சந்தோஷமடையும். இவற்றில் மூக்கின் சந்தோஷம்தான் அபாரமானது. சுருட்டு, புகையிலை வாசனைகளை இடைவிடாது ஐந்து மணி நேரம் பிடித்த மூக்கு, நாடகம் முடிந்ததும், பெருமூச்சு விட்டு மகிழ்ச்சியடைவதில் ஆச்சரியமுண்டோ? சந்தோஷத்தை அளப்பதற்குத் தர்மா மீட்டரைப் போன்ற ஒரு கருவியிருப்ப

தைக் காணலாம். இதற்கு அடுத்தபடியில் வருவது கண். வைரம், இமிடேஷன் வைரம், தங்க மூலாம்' பூசிய பித்தளை, முகப்பவுடர் பூசிய விதவிதமான முகங்கள், பொய்மீசை, பொய் மயிர் முதலியவற்றைக் காந்த விளக்கிலும், மின்சார தீபத்திலும் பார்த்துப் பார்த்துப் பூத்துப்போன கண் இப்போது பெரிதும் மகிழ்ச்சி யடைவது இயல்பே. காதின் சந்தோஷத்தையோ சொல்ல வேண்டியதில்லை. நடிகர்களின் புலம்பல், பின்பாட்டுக்காரர்களின் ஹார்மோனியத்தின் ஒலம், ''ஒன்ஸ்மோர்'' கூச்சல், ஸ்திரீகள் பகுதியிலிருந்து வரும் குழந்தைகளின் அழுகைச் சத்தம் முதலியவற்றினால் துளைபட்டு வெளியே போகவேண்டுமென்று கெஞ்சிக் கொண்டிருந்த காது, நாடகம் முடிந்ததும் உண்மையிலேயே ஆனந்தமடைந்து விடும்.

தற்காலத்தில் நடக்கும் நாடகங்கள் சம்பந்தமாக ஒரு விஷயம் எனக்குப் பிடிப்பதில்லை. அதாவது நடிகர்களின் பெயர்களை முன்னாலேயே வெளியிட்டு விளம்பரம் செய்தல். இதன் பயனாக, நாடகத்தில் புகட்டப்பெறும் நற்போதனைகளை ஜனங்கள் பயன்படுத்திக் கொள்ள இயலாமற் போகிறது. எப்படி யென்றால் கேளுங்கள்:— நாடக மேடையில் சாவித்திரி பிரவேசிக்கிறாள். ஆனால் சபையில் வீற்றிருப்பவர்கள் ''கிஜாம்பாள் வந்து விட்டாள், கிஜாம்பாள் வந்து விட்டாள்', என்று பேசிக் கொள்கிறார்களேயன்றி சாவித்திரி வந்துவிட்டாள் என்று யாரும் சொல்வதில்லை. உடனே, கிஜாம்பாளின் பூர்வோத்ரம், அவளுக்கு மொத்தக் காதலர்கள் எத்தனை பேர். தற்போது அவளுடைய ஆசைநாயகன் யார் என்பது போன்ற விஷயங்கள் உடனே ஞாபகத்துக்கு வருகின்றன. இந்த நிலைமையில், அவள் கற்பின் சிறப்பைக் குறித்துச் சரமாரியாகப் பொழியும் பிரசங்கத்தினால், யார் பயனடையப் போகிறார்கள்?

இந்த அம்சத்திலே, டிராமா அல்லது நாடகத்தை விடத் தெருக்கூத்து மிகவும் சிரேஷ்டமானது என்று நான் கருதுகிறேன். உதாரணமாக, பொம்மலாட்டத்தை எடுத்துக் கொள்வோம்.

''ராஜாதி ராஜன் வந்துச்சே...அவன் பின்னோடே
சந்திரமதி அம்மணி வந்துச்சே—அவ பின்னோடே
லோகி தாச்சன் குஞ்சும் வந்துச்சே,''

என்று பாட்டு முழக்கத்துடன் ஒவ்வொன்றாய்ப் பொம்மைகள் வரும்போது, அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாஸன் இவர்களைப் பற்றிய நினைவே நம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. பின்னால் நின்று பொம்மைகளை ஆட்டுவிப்போரைக் குறித்து யாரும் அப்போது எண்ணுவதில்லை.

நடிகர்கள் வேஷம்போட்டு நடிக்கும் தெருக் கூத்துக் கூட இந்த விஷயத்தில் பாதகமில்லையென்று சொல்லலாம், பட்டணம் படிக்கு இரண்டு படி பிடிக்கும் பெரிய கிரீடத்தைத் தலையில் அணிந்து, கடகம், வளை, வாகு வலையம் முதலிய ஆபரணங்கள் தரித்து, பாவாடை போன்ற பெரிய அங்கியை மாட்டிக்கொண்டு, கையில் உருவிய பட்டாக்கத்தியுடன் அரங்க மேடையில் பிரவேசிக்கிறான். நாலைந்து தடவை கறகறவென்று தட்டா மாலை சுற்றி, 'தகதகதித்தோம் தகதகதித்தோம்' என்று நாலுதடவை அரங்கம் கிடுகிடுக்கும்படி குதித்து, 'ஸையா' என்று முக்காலி பலகையில் உட்கார்ந்து, ''அதோ வாரும் பிள்ளாய் மதிமந்திரியே'' என்று அவன் பேசத் தொடங்குங்கால், உண்மையிலேயே பண்டைக்' காலத்து இராஜசபை ஒன்றில் நாம் வீற்றிருப்பதாய் எண்ணுகிறோம். ஆனால், நவநாகரிக மிகுந்த இந்தக் காலத்து 'டிராமா'க்களில் இத்தகைய உணர்ச்சி உண்டாவதே கிடையாது.

இராஜபார்ட்டிலும், ஸ்திரீ பார்ட்டிலும் பெயர் பெற்ற இரண்டு நடிகர்கள், வெகுநாள் பிரிந்திருந்த பின்னர் மறுபடியும் சேர்ந்து நாடகம் நடத்துகிறார்கள் என்று ஒரு முறை தடபுடலாக விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இந்த நாடகத்துக்கு நான் போயிருந்தேன். கதை கோவலன் சரித்திரம். கதாநாயகன் வேஷம் போட்டவர் கால்சட்டையும் மேல் சட்டையும் தரித்து, தலையில் வெல்வெட் குல்லாவும் கையில் மணிக்கட்டுக் கடிகாரமும் அணிந்து, நெற்றியில் சாந்துப் போட்டு விளங்க, தியாகராஜ கீர்த்தனை ஒன்று பாடிக்கொண்டு, மேடையில் பிரவேசித்தபோது சபையினர் எல்லாரும் ''வெல்லப்பையர் வந்துவிட்டார்,'' ''வெல்லப்பையர் வந்துவிட்டார்;'' என்று சொன்னார்களேயல்லாமல், 'கோவலன் வந்து விட்டான்'' என்று சொன்னவர் யாருமில்லை.

இதனால் நான் நடிகர்கள் மீது குறை சொல்வதாக யாரும் நினைக்க வேண்டாம். கிடையவே கிடையாது. ஒவ்வொருவனும் தான் தகுதிக்கேற்பவே எதுவும் அடைகிறான் அல்லவா? ''நாடக நண்பர்களே'' தங்கள் தகுதிக்கேற்ற நடிகர்களையே பெறுகிறார்கள் என்பது என் நம்பிக்கை. கதாநாயகன் தற்கொலை செய்துகொண்டு இறக்கிறான். இந்த வேஷம் தரித்தவர் சோகரசம் ததும்ப வெகு அற்புதமாக ஒரு பாட்டுப் பாடிவிட்டுக் குத்திக் கொண்டு இறந்து விழுந்தார். அந்தப் பாட்டிலே உருகிப் போய் மயங்கி உட்கார்ந்திருந்த சபையினர் உடனே, நாலாபுறத்திலிருந்தும் ''ஒன்ஸ்மோர்; ஒன்ஸ்மோர்!'' என்று கூச்சலிட்டார்கள்.

சபையினரின் ஒரு முகமான விருப்பத்துக்கு இணங்கக் கதாநாயகன் மறுபடியும் உயிர் பெற்று எழுந்து நின்று மீண்டும் ஒருமுறை பாட்டுப் பாடிவிட்டுக் குதித்துக் கொண்டு விழுந்தாளாம்! இது வெறுங் கதையா உண்மைச் சம்பவமா என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஏறக்குறைய இதே மாதிரிச் சம்பவம் நான் மேலே குறிப்பிட்ட நாடகத்தில் உண்மையாகவே நிகழ்ந்தது.

மிகவும் உருக்கமான கட்டம். கோவலன் சிலம்பு விற்று வருவதாகக் கண்ணகியிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படுகிறான். *கண்ணகி ராக தாளங்களுடன் அழுகின்றாள். கோவலனும் ராகம் பிசகாமல் தாளம் தவறாமல் அவளுக்கு ஆறுதல் சொல்லுகிறான். பின்னர் இருவரும் பிரிந்து தலைக்கு ஒரு திசையாகத் தாளத்துக் கிசைவாகக் கால் எடுத்து வைத்துச் செல்கிறார்கள். கண்ணகி மேடையிலிருந்து மறைந்து விட்டாள். கோவலனும் உள்ளே செல்லும் சமயம்; அந்த நெருக்கடியான துயரகரமான தருணத்தில் ''தேசபந்து பாட்டு'' என்று ஒரு குரல் எழுந்தது. அதைப் பின்பற்றி மற்றொருவரும் ''தேசபந்து பாட்டு'' என்று கத்தினார். பின்னர்,

''தேசபந்து பாட்டு'' ''தேசபந்து பாட்டு''
''தேசபந்து பாட்டு'' ''தேசபந்து பாட்டு''

என்ற கூச்சல், படிப்படியாக உச்ச ஸ்வரத்தை அடைந்து கொண்டு வந்தது. உள்ளே போன கோவலன் திரும்ப மேடைக்கு வரும்வரையில் கூச்சல் நிற்கவில்லை. அவன் வந்ததும் ஐந்து நிமிஷம் பலத்த கரகோஷம். அந்த ஆரவாரம் அடங்கியதும், கண்ணகியைப் பிரிந்து அவள் காற்சிலம்பை விற்கச் சென்ற கோவலன்.

''அங்கதேச வங்கதேச பந்துவை இழந்தனம்!'

என்று பாடத் தொடங்கினான். முதலிலே இந்தப் பாட்டு எனக்கு விளங்கவேயில்லை. கொஞ்ச தூரம் கேட்ட பிறகு தான், நான்கு வருஷத்திற்கு முன் இறந்து போன தேசபந்து தாஸின் மரணத்தைக் குறித்து இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்னாலிருந்த கோவலன், சிலம்பு விற்கப் போனதைக்கூட நிறுத்தி விட்டுப் பிரலாபிக்கிறான் என்று அறிந்து கொண்டேன். உண்மையிலேயே அப்போது எனக்குக் கண்களில் நீர் ததும்பி விட்டது. ஆனால், அது தேசபந்து தாஸ் செத்துப் போனதற்காகவல்ல; வேறெதற்காக வென்பதை நீங்களே ஊகித்தறிந்து கொள்ளுங்கள்.

மேற்படி நாடகத்திற்கு என்னை அழைத்துச் சென்ற நண்பர், நான் அதில் அவ்வளவு உற்சாகம் காட்டாதது குறித்து ஏமாற்றமடைந்தார். ''ஆனால் நீங்கள் ஞான

சௌந்தரி நாடகம் பார்க்க வேண்டும். பார்த்தால் சுட்டாயம் மயங்கி விடுவீர்கள்'' என்று கூறினார். ஆகவே அதையும் பார்த்து விடுவதென்று தீர்மானித்தோம். ஞான சௌந்தரியின் கதை சுமார் இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால் ரோமாபுரியில் நடந்ததாம். ஆனால் இந்த நாடகத்தில் நடித்தவர்களின் நடை உடை பாவனைகளுமல்ல; தற்போதை இத்தாலியர்களின் நடை உடை பாவனைகளுமல்ல. அவ்வளவு ஏன்? அவை, முற்காலத்திலோ தற்காலத்திலோ, எந்தத் தேசத்தாரும் கைக் கொண்டிருந்த நடை உடை பாவனைகளோ அல்ல. ஒரு பெரும் கதம்பமாகவே அவை காணப்பட்டன. கதாநாயகன் தாலுகா கச்சேரி சேவகனைப் போல், உடை தரித்திருந்தான். கதாநாயகி ஏறக்குறைய ஓர் ஆங்கிலோ இந்தியச் சிறுமியைப் போல் காணப்பட்டாள். (அல்லது காணப்பட்டான்) கதாநாயகியின் மாற்றாந்தாய் அய்யங்கார் சாதிப் பெண்ணைப் போல் புடவை கட்டிக் கொண்டிருந்தாள். கதாநாயகி பேசியதும் தமிழ்நாட்டுப் பிராமண ஸ்திரீகள் பேசும் பாஷை. ஆனால் இடையிடையே ஒவ்வொரு வார்த்தை ஆங்கிலம் கலந்து கொண்டாள். ('பப்பா! இன்று என்ன லெஸ்ஸன் டீச் பண்ணப் போரயள்?'' என்பது போல) இப்படி இரண்டொரு இங்கிலீஷ் வார்த்தை கலந்து பேசுவதால், தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த ரோமாபுரிப் பெண்ணாகி விட்டதாக அவள் எண்ணம். கதாநாயகன் என்ன பாஷை பேசினானென்பது எனக்குத் தெரியாது. ஏனெனில் அவன் பேசியது ஒரு வார்த்தையாவது என் காதில் விழவில்லை.

இதைப்பற்றி என் நண்பரிடம் கேட்டேன். அதற்கு அவர் ''இந்த நடிகருக்குப் பேச்சுத் திறமை அவ்வளவு போதாது; ஆனால் ஆக்ட் அபாரம். வேட்டை ஸீன் ஒன்று வரப்போகிறது. அதில் மன்னன் என்ன ஷோக்காய் ஆக்ட் செய்யப் போகிறான் பார்!'' என்று கூறினார். எனவே, வேட்டை ஸீன் எப்போது வரப் போகிறதென்று கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன். என் நண்பர் கூறியது உண்மையாயிற்று. அதாவது வேட்டை ஸீன் வந்தது. நடிப்பும் அபாரமாய்த்தான் இருந்தது. கதாநாயகன் பிரம்மானந்தமாக இங்கிலீஸ் நோட் ஒன்றைப் பாடிக் கொண்டு, வெகு கம்பீரமாய் இராஜ நடை நடந்து மேடைக்கு வந்தான். உடனே சட்டென்று இடுப்பில் சொருகியிருந்த கைத்துப்பாக்கியை எடுத்து, ''டப் டப் டப்'' என்று தாளந் தவறாமல் சுட்டான். என் நண்பர் என் விலாப்புறத்தில் ஒரு குத்துக் குத்தி, ''எப்படிப் பார்த்தாயா?'' என்றார். ''ஆஹா! அற்புதம்'' என்றேன் நான்.

''ஆனால் இரண்டொரு சந்தேகம். இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னால் கைத்துப்பாக்கி இருந்ததா? அப்பொழுது பாட்டுப் பாடிக் கொண்டுதான் வேட்டையாடுவது வழக்கமா? சுடப்பட்ட மிருகங்கள் எங்கே?'' என்று கேட்டேன். ''அதோ திரையில் பார் மிருகங்கள்'' என்றார் நண்பர். கதாநாயகனுக்குப் பின்னால் தொங்கிய திரையில் ஏதோ குறுக்கும், நெடுக்கும் கோடுகள் காணப்பட்டன. அவை சிங்கம், புலி, மான் முதலிய மிருகங்கள் என்று என் நண்பர் சொல்லத் தெரிந்து கொண்டேன். ''அவை ஓடவும் இல்லை. செத்து விழவும், இல்லையே-'' என்று மறுபடியும் கேட்டேன். இப்படிக் குதர்க்கம் செய்தால் என்ன பண்ணுவது? அவை செத்து விழுந்துவிட்டதாகப் பாவனை!'' என்றார் நண்பர். இதற்குள்ளாக அரங்க மேடையில் உண்மையிலேயே வேட்டை ஆரம்பமாகி விட்டபடியால், நாங்கள் பேச்சை நிறுத்தினோம். விஷயமென்ன வென்று கவனித்ததில், பின்பாட்டுக்காரனும், மிருதங்கக்காரனும் தாளந் தவறி விட்டதாகத் தெரிய வந்தது. இதனால் கோபங்கொண்ட கதாநாயகன், அவர்களைத் துப்பாக்கிக் கட்டையால் அடிக்கப் போனான். ''இதுதான் சரியான வேட்டை! முதலில் நடந்த விலங்கு வேட்டை சுத்த ஹம்பக்!'' என்று நண்பரிடம் சொன்னேன்.

இது சம்பந்தமாக நான் பலமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன். மேற்கூறிய காட்சியில், ''மிருகங்கள் செத்து விழுந்ததாகப் பாவனை'' என்று என் நண்பர் கூறினாரல்லவா? இது போன்ற காட்சிகள் முழுவதையுமே சபையினரின் மனோ பாவனைக்கு ஏன் விட்டுவிடக் கூடாது? தென்னாலிராமன் கதையொன்று நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். இராஜா, தன் சபைக்கு வந்த பெயர் பெற்ற சித்திரக்காரன் ஒருவனைக் கொண்டு அரண்மனைக் கொலு மண்டபத்தில் சித்திரம் எழுதுவித்தார். வேலை முடிந்த பின்னர் ஒரு நாள் இராஜாவும் மற்றவர்களும் சித்திரம் பார்க்கச் சென்றார்கள். முதலில் பிள்ளையார் உருவம் எழுதியிருந்தது. ''இது என்ன?'' என்று கேட்டான் தென்னாலிராமன். ''தெரியவில்லையா? இவர்தான் பிள்ளையார்'' என்றார் இராஜா. ''பிள்ளையாருக்கு முதுகு எங்கே?'' என்றான் தென்னாலிராமன். ''முதுகு பின்னாலிருப்பதாகப் பாவனை'' என்றார் இராஜா. பின்னர் தென்னாலிராமன் கொஞ்ச காலம் எங்கேயோ போய் இருந்துவிட்டுத் திரும்பி வந்தான். தான் சித்திரம் எழுதக் கற்றுக்கொண்டு வந்திருப்பதாகவும், ஒரு மண்டபமும், செலவுக்குப் பணமும் கொடுத்தால் சித்திரம் எழுதித் தருவதாகவும் கூறினான். ராஜா அவ்வாறே செய்தார். சில நாள் கழித்துத் தென்னாலி ராமன்

இராஜாவைச் சித்திரம் பார்க்க அழைத்துக் கொண்டு போனான். மண்டபம் முழுவதும் ஆங்காங்கு விளக்குமாற்றைச் சாயத்தில் தோய்த்து அடித்திருப்பது போல் காணப்பட்டதைக் கண்டு இராஜா மிகவும் கோபங் கொண்டார். ''என்னடா இது அக்கிரமம்?'' என்றார். ''அக்கிரமம் என்ன? சித்திரத்தைப் பாருங்கள்'' என்றான் இராமன். ''சித்திரமா? எங்கே இருக்கிறது?'' என்று அரசர் கேட்டார். ''நெடுகிலும் தான் இருக்கிறது. இதோ என் குதிரையின் படம்'' என்றான் இராமன். ''என்று உளறுகிறாய்? ''உளறல் ஒன்றுமில்லை, இது குதிரையின் வால்!'' என்றான். ''குதிரையின் உடம்பு முகம் எல்லாம் எங்கே?'' என்று கேட்க, ''பின்னால் இருப்பதாகப் பாவனை'' என்று பதிலளித்தான்.

தென்னாலிராமன் முறையை நமது நடிகர்கள் பெரிதும் கையாள வேண்டுமென்று கருதுகிறேன். பல காட்சிகளை நடத்தி விட்டதாகப் பாவனை செய்து விடல் பெரிதும் நலமாயிருக்கும். விளையாட்டுத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு மிருதங்கக்காரனை வேட்டையாடுவதைப் பார்க்கிலும், அது நல்லதல்லவா? இது போன்ற அசந்தர்ப்பங்கள் இன்னும் பல இருக்கின்றன. உதாரணமாக, ''தசாவதார'' நாடகத்தில் காட்டப்பெறும் ஸ்ரீ வைகுண்டத்தின் காட்சியைக் குறிப்பிடலாம். இந்தக் காட்சியைப் பார்த்ததும் என் பக்கத்திலிருந்த அய்யங்கார் ஸ்வாமிகள் ஒருவர், 'ஆஹா! சாக்ஷாத் வைகுண்டம்! சாக்ஷாத் வைகுண்டம்! பிரபோ'' என்று அலறிப் புடைத்துக் கன்னத்தில் அறைந்து கொண்டார். ஆனால் உண்மையில் வைகுண்டம் இப்படித்தான் இருக்குமென்றால், மகா விஷ்ணு லட்ச ரூபாய் லஞ்சம் கொடுத்து அழைத்தாலும் அந்த இடத்துக்குப் போகக்கூடாது என்று நான் தீர்மானித்தேன். பளபளப்பிலும், பொன் முலாத்திலும் பெருமாளுக்கே இவ்வளவு ஆசையிருந்தால், நம் போன்ற சாதாரண மனிதர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

ஒரு முறை சம்பூரண இராமாயண நாடகத்துக்குப் போயிருந்தேன். இதில் இராமன் வேடம் பூண்டவர், பெயர் பெற்ற நடிகராகிய துட்டப்பா என்பவர். காட்டுக்குப் போன இராமர் கையில் மணிக்கட்டுக் கடிகாரம் நிரம்ப அவசியமே அல்லவா? ஒருக்கால், ''14—வருஷம் காட்டுக்குத்தான் போகிறோமே; சாவகாசமாக ஷார்ட் ஹாண்டு-டைப்ரைடிங் கற்றுக்கொண்டு வரலாமே?'' என்று இராமர் எண்ணியிருக்கலாம். இந்த நாடகத்தில் சீதை மேடைக்கு வந்ததும் அந்த வேஷம் அமலம் என்னும் பெண்மணியென்றும் அவள் மேற்படி துட்டப்பாவின் அரை டஜன் காதல் நாயகிகளில்

ஒருத்தி என்றும், என் பக்கத்திலிருந்தவர்கள் தயவு கூர்ந்து தெரிவித்தார்கள். இப்பொழுது எனக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்து விட்டது. அதாவது இந்த இராமர் பழைய இராமரைப் போல் தயவு தாட்சண்யமின்றிச் சூர்ப்பனகையைத் துரத்தி விடுவாரா, அல்லது ஆறுடன் ஏழாக இருந்து விட்டுப் போகட்டுமென வைத்துக்கொண்டு விடுவாரா என்பது சந்தேகம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, இராமரும் பரதரும் பிரியும் கட்டத்திலேயே என் கண்ணில் நீர் பெருகி மூர்ச்சையுற்று விழுந்து விடுவேன் போல் ஆகிவிட்டேன். (காரணம் சோகரசமன்று; பக்கத்திலிருந்தவர் விட்ட சுருட்டுப் புகையும் சாராய நாற்றமும்) எனவே, மேற்படி சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளாமலே வெளியேறும்படி ஆயிற்று.

பற்பல டிராமாக்களையும் பார்த்த பிறகு, தெருக்கூத்துப் பார்க்க வேண்டுமென்னும் ஆசை எனக்குப் பலமாய் உண்டாயிருக்கிறது. ஆனால், தெருக்கூத்து இக்காலத்தில் மிகவும் அபூர்வமாய் விட்டது. எங்கேனும் அருமையாக நடக்கும் கூத்துக்கும் ''டிராமா'' என்னும் நாகரிகப் பெயர் கொடுத்து விடுகிறார்கள். எங்கள் ஊர் மாரியம்மன் கோயில் திருவிழாவில் குடியானவர்கள் ஆடும் கூத்துக்குக் கூட ''டிராமா'' என்றுதான் பெயர். நாட்டிலோ எத்தனையோ இயக்கங்கள் நடக்கின்றன. தெருக்கூத்தின் புனருத்தாரணத்துக்கென்று ஓர் இயக்கம் கிளம்பக்கூடாதா?

கடைசியாக ஒரு வார்த்தை. இந்தக் கட்டுரையில் காணப்படும் நடிகர்களின் பெயர்கள் யாரைக் குறிப்பிடக்கூடும் என்று யோசித்து மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டாம். அவை வெறும் கற்பனைப் பெயர்கள். கட்டுரை வெறும் கைச்சரக்குத்தான். உண்மை ஒரு வார்த்தை கூட இல்லை.

பொறாமைப்படு

பொறாமையின் பெருமையைக் குறித்து நீங்கள் எப்போதேனும் எண்ணிப் பார்த்ததுண்டோ? எனக்கும் இது வரையில் அது தெரியாமலேதான் இருந்து வந்தது. சில தினங்களுக்கு முன்பு அதன் பெருமை எனக்குச் சட்டென்று புலனாயிற்று. 'பொறாமைப்படு' என்னும் சூத்திரத்தில் தான் வாழ்க்கையில் வெற்றியடையும் இரகசியம் அடங்கியிருக்கிறது.

மேற்படி மகா ரகசியத்தை நான் எப்படிக் கண்டு பிடித்தேனென்று சொல்கிறேன் கேளுங்கள்; ஒரு சமயம் நான் என்னுடைய சொந்தக் கிராமத்திற்குச் சென்றேன். நான் இறங்க வேண்டிய ஸ்டேஷனுக்கு முதல் ஸ்டேஷனில் எனக்குத் தெரிந்த ஒரு மனிதர் வந்து ரயிலேறினார். அவர் என் கிராமத்துக்குப் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர். நாங்கள் ஒருவரையொருவர் வீட்டு எருமைக் கன்றுக்குட்டியின் தேக சௌக்கியம் உள்பட யோக க்ஷேமங்களெல்லாம் விசாரித்து முடித்தோம். பின்னர், ''நம் ஸ்டேஷனில் வாடகை வண்டி கிடைக்குமா?'', என்று அவரைக் கேட்டேன். 'அதைப்பற்றி என்ன கவலை? என்னுடைய வண்டி வந்திருக்கும்' என்றார் அந்த நண்பர். அந்தக் கணத்திலே வாழ்க்கையில் வெற்றியடையும் இரகசியத்தை நான் கண்டு பிடித்து, அதைக் கெட்டியாய் தலைப்பில் முடிந்து கொண்டேன்.

''என்னுடைய வண்டி வந்திருக்கும்'' என்று அவர் கம்பீரமாய்ச் சொன்னபோது, என்னிடம் என்ன எதிர்பார்த்தார் என்று நினைக்கிறீர்கள்? ''உனக்குச் சொந்த வண்டி கிடையாது. ஆகையால் நீ என்னிடம் பொறாமைப்படு'' என்று அந்த நிமிஷத்தில் அவர் நெற்றியில் எழுதி ஒட்டியிருந்தது. ''நல்ல வேளை! இதற்குத் தான் உங்களைப் போன்ற நண்பர்களின் சிநேகம் வேண்டுமென்பது'' என்று நான் பதிலளித்தேன். அப்போது அவர் முகத்தை மறுபடியும் நோக்கினேன். கொஞ்ச நஞ்சம் எனக்கிருந்த சந்தேகமும் நீங்கிவிட்டது. பொறாமையைப் போல் வாழ்க்கையில் வெற்றியடைவதற்குச் சிறந்த உபாயம் வேறில்லையென்று உறுதி பெற்றேன்.

''ஸ்டேஷனில் வண்டி வரவில்லை. ஒரு மணி நேரத்திற்கு முன்பாயிருந்தால் என்ன செய்திருப்பேன் தெரியுமா? ''என்ன ஸார், மதிப்பாய் வண்டி வருமென்று சொன்னீர்கள்.

ஒன்றையும் காணோம்!'' என்று அவரை மட்டந்தட்ட ஆரம்பித்திருப்பேன். ஆனால், இப்போது வாழ்க்கை இரகசியம் அறிந்தவனாதலின், அந்தப் பேச்சையே எடுக்கவில்லை. ''சத்த வண்டி ஒன்று பிடிக்கலாமே?'' என்றேன். ஆவணி மாதம், சாகுபடி காலம்; சத்த வண்டி, சத்தம் போடாத வண்டி ஒன்றையுமே பிடிக்க முடியவில்லை. கண்ணில் கண்டாலல்லவா பிடிப்பதற்கு! என்னிடம் ஒரு கைப்பெட்டியும், படுக்கையும் இருந்தன. நண்பரிடம் சாமான் ஒன்றும் கிடையாது. ''நாமே தலைக்கு ஒன்றாய் எடுத்துக் கொண்டு நடந்து போய் விடலாம் ஸார். இதிலெல்லாம் கௌரவம் பாராட்டக் கூடாது'' என்று அவர் சொன்னார். கைப்பெட்டி நல்ல கனம். ஆனால், பார்ப்பதற்கு அந்தஸ்தாயிருந்தது. அதை நண்பர் எடுத்துக்கொண்டார். நான் படுக்கையைத் தூக்கிக் கொண்டேன்.

பாவம்! கைப்பெட்டியின் கனத்தினால் அவர் தோள்கள் வெகு பாடுபட்டுக் கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் அவரிடம் எனக்கேற்பட்ட நன்றியறிதலைச் சொல்லி முடியாது. அந்த நன்றியைக் காட்டும் பொருட்டு அவர் என்ன காரியம் செய்யச் சொன்னாலும் செய்திருப்பேன். ஆனால் அவர் கேட்டதென்ன? ''என்னிடம் இன்னும் அதிகப் பொறாமைப்படு'' என்பதையல்லாது வேறெதுவுமில்லை. திவான்பகதூர் முருகய்யங்காருடன் தம்முடைய நெருங்கிய சிநேகிதத்தைக் குறித்தும், அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தூதராய் நியூஸிலாந்து தேசத்துக்குச் சென்றபோது தாம் அவருடன் இலங்கை வரை போய் வந்ததைப் பற்றியும் அவர் கூறலானார். ''ஆஹா! பிரயாணம் செய்தால் அப்படியல்லவா செய்ய வேண்டும்? ரயில்வே ஏஜெண்ட் நேரில் வந்திருந்து எங்களுக்கு ஏற்படுத்தியிருந்த தனி முதல் வகுப்பில் ஏற்றிவிட்டுப் போனார். வழியெல்லாம் புஷ்ப ஹாரங்களும் பழங்களும் வந்து குவிந்து கொண்டிருந்தன. அவற்றை நான் வாரி எல்லாருக்கும் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்படியும் ஒருகூடை திராட்சைப்பழம் அழுகிப் போயிற்று. இலங்கையில் அரசாங்க விருந்தினர்களாய்த் தங்கினோம். மூன்று மோட்டார் வண்டிகள் எப்பொழுதும் தயாராய்க் காத்துக் கொண்டிருந்தன...'' இப்படி அவர் சொல்லிக் கொண்டே போனார். நானும் என்னால் கூடியவரையில் முயற்சி செய்து எவ்வளவு பொறாமைப்படலாமோ அவ்வளவும் பட்டுக் கொண்டே வந்தேன். சாலையில் மைல் கணக்கு ஆக, ஆக, அவரிடம் என் நன்றியறிதலும், அந்த அளவில் என் பொறாமையும் ஏறிக் கொண்டே வந்தன.

பின்னால் இதைப்பற்றி நான் சாவகாசமாகச் சிந்தித்த போது, பழைய அனுபவங்கள் பல ஞாபகத்திற்கு வரலாயின. அவற்றில் ஒன்றை இங்கே சொல்கிறேன். நான் கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் அடுத்த ஊரிலிருந்து ஒரு நண்பர் அடிக்கடி வருவதுண்டு. அந்தப் பக்கத்திலேயே இந்த நண்பர்தான் முதன் முதலாகச் சைக்கிள் வண்டி வாங்கியிருந்தார். அவரைப் பார்த்து, ''எப்பொழுது வந்தீர்கள்!'' என்று யாராவது கேட்டால் ''இப்பொழுதுதான் சைக்கிளில் வந்தேன்.'' என்று பதில் சொல்வார்! கொஞ்ச நாளைக்குப் பிறகு, ''எப்பொழுது சைக்கிளில் வந்தீர்கள்?'' என்றே நான் கேட்கத் தொடங்கினேன். நல்ல வேளையாக நான் பரிகாசம் செய்கிறேனென்பது அவருக்குத் தெரியாது. ஆகவே, இன்று வரையில் அவர் என்னிடம் விசுவாசத்துடனேயே இருந்து வருகிறார்.

அப்போதெல்லாம் எனக்கு இந்த நண்பரைப் பற்றிக் கொஞ்சம் தாழ்வான அபிப்பிராயம் உண்டு. ''பெரிய தற்பெருமைக்காரன்'' என்று எண்ணுவேன். ஆனால், இப்பொழுது அவ்வெண்ணம் அடியோடு மாறிவிட்டது. இந்த நண்பருடைய நோக்கமென்ன? தான் சைக்கிள் சவாரி செய்வதைப் பற்றி நான் பொறாமைப்பட வேண்டுமென்பதுதான். ஆனால், இது மனித வர்க்கத்துக்கே பொதுவாக ஏற்பட்ட தர்மம். உலகில் மனிதரெல்லாரும் மற்றவர்கள் தங்களிடம் பொறாமை கொள்ள வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். நானும் நீங்களும் இந்த விதிக்கு விலக்கல்ல. பின்னர் மேற்படி நண்பரை மட்டும் இழிவாய்க் கருதுவதின் பொருளென்ன?

பிறருடைய பொறாமைபோல் உலகில் ஒருவனுக்குச் சந்தோஷம் தரக்கூடியது வேறொன்றும் கிடையாது. ஸர், திவான்பகதூர், ராவ்பகதூர் முதலிய பட்டங்களைப் பெரிய மனிதர்கள் ஏன் விரும்புகிறார்கள்? மற்றவர்களின் பொறாமையைக் கிளப்புவதற்காகத்தான். இல்லாவிடில் இந்தப் பட்டங்களில் என்ன இருக்கிறது? ஒத்துழையாமை இயக்கத்தின்போது பலர் இந்தப் பட்டங்களைச் சொல்லிக் கொள்ள வெட்கப்பட்டார்கள். ஏன்? ஜனங்கள் அப்பட்டங்களைக் குறித்துப் பொறாமைப்படுவதற்குப் பதிலாக இரக்கப்பட ஆரம்பித்தார்கள். அதுதான் காரணம்.

ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட மனிதர், தாம் ஒரு திவான் பகதூரின் சிநேகிதராயிருப்பது குறித்து என் பொறாமையைக் கிளப்ப விரும்பினார். அந்தத் திவான் பகதூர் என்ன செய்கிறார்? அவர் தமது சிநேகிதரிடம் ''நேற்றுக் கவர்னர் மாளிகையில் நடந்த விருந்தில் தங்களைக்

காணோமே? அழைப்பு வரவில்லையா? ரொம்பவும் சிறப்பாய் நடந்தது'' என்று சொல்கிறார். கவர்னர் துரை செய்வதென்ன? சீமைக்குத் திரும்பிப் போனதும் தமது நண்பர்களையெல்லாம் கூட்டி வைத்துக் கொண்டு, இந்தியாவில் தமக்குக் கிடைத்த உபசாரப் பத்திரங்கள், வெள்ளிப் பெட்டிகள், ''ஆஹா! இந்தியா தான் சொர்க்க லோகம்'' என்று கூறுகிறார். இவர்களெல்லாம் விரும்புவதென்ன? மற்றவர்களின் பொறாமையைத் தான்.

தேசியத் தொண்டர் ஒருவரை எடுத்துக் கொள்வோம். ''சென்னைப் பட்டணத்துக்கு மகாத்மா காந்தி வந்திருந்த போது, அவர் பக்கத்தில் நின்று விசிறிக் கொண்டிருந்தேன்'' என்று அவர் தம் நண்பரிடம் சொல்லிப் பொறாமை மூட்ட முயல்கிறார். என்னுடைய பொறாமையைக் கிளப்ப முயன்று தோல்வியடைந்த இருவரைக் குறித்து மேலே சொன்னேனல்லவா? ஆனால், மற்றொரு சமயம் ஒரு நண்பர் இந்த முயற்சியில் வெற்றியடைந்தார். ''திருச்சிக்கு லோகமான்ய திலகர் வந்திருந்தபோது நானும் கூட்டத்துக்குப் போயிருந்தேன். திலகர் வருவதற்காக வழிவிட்டிருந்தது. வழியின் பக்கத்தில் நின்றேன். திலகர் வந்தபோது எல்லாரும் கைகூப்பி நின்றார்கள். நான் மட்டும் சட்டென்று குனிந்து, அவர் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டேன்'' என்று அவர் சொன்னபோது, நான் உண்மையிலேயே அவரிடம் பொறாமை கொண்டேன்.

சென்ற வருஷம் நடந்த வேதாரண்யம் மகா நாட்டுக்கு நான் போயிருந்தேன். மகாநாடு முடிந்து ஜாகையிலிருந்து ஸ்டேஷனுக்குக் கிளம்பினேன். சாமான் எடுத்துவர ஆள் தேவையிருந்தது. ஜாகை வாசலிலிருந்த தொண்டரைப் பார்த்து, 'போர்ட்டர் அகப்படுவானா?' என்று கேட்க எண்ணி, போர்ட்டர் என்று ஆரம்பித்தேன். இதற்குள் அத் தொண்டர் ''போட்டோ எடுக்கப் போகிறார்களா?'' என்று சொல்லிக்கொண்டு அவசரமாய் எழுந்து ஓடத் தொடங்கினார். அவரை நிறுத்தி 'இல்லை, 'இல்லை போர்ட்டர் வேண்டும்'' என்று செல்வதற்குப் பெரும் கஷ்டமாய்ப் போய்விட்டது. அத் தொண்டர் புகைப்படமெடுத்துக் கொள்வதில் இவ்வளவு ஆவல் காட்டிய காரணமென்ன; ''பார்த்தாயா? வல்ல பாய்க்குப் பக்கத்தில் நான் நின்று கொண்டிருக்கிறேன்'' என்று தம் நண்பர்களிடம் சொல்லி மகிழ்வதற்குத்தான். சென்னையிலே எனக்குத் தெரிந்த காங்கிரசு தொண்டர் ஒருவர் இருக்கிறார். அவர் வீட்டு மாடி முகப்பிலே தெருவில் போகிறவர்களுக்குத் தெரியும்படியாக சுமார் 200 புகைப்படங்கள் மாட்டியிருக்கின்றன. அவ்வளவு

படங்களிலும் அத்தொண்டர் இல்லாத இடம் ஒன்றுகூடக் கிடையாது.

இவரைப்பற்றி நான் குறை சொல்வதாக நினைக்க வேண்டாம். தலைவர்கள் விஷயமென்ன? பத்திரிகையிலே படம் வருவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதை நழுவவிடக்கூடிய தலைவர் ஒருவர் உண்டா? மிக அபூர்வம். சென்னையில் வாலிபர்கள் சங்கம் ஒன்று சில காலமாக வேலை செய்து வருகின்றது. இச்சங்க அங்கத்தினரின் படம் குறைந்தது மாதம் மூன்று தடவை பத்திரிகையில் வெளியாகி வருகின்றது. ஏனெனில், சென்னைக்கு வரும் எந்தப் பிரமுகருக்கும் ஓர் உபசார விருந்து நடத்தாமல் இவர் விடுவதில்லை. விருந்துக்காகப் புகைப்படமெடுக்கப் படுகிறதா, அல்லது புகைப்பட மெடுப்பதற்காக விருந்து நடத்துகிறார்களா என்பது மட்டுந்தான் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

''எல்லாரையும் பற்றிச் சொல்லுகிறீரே? உம்முடைய சங்கதி என்ன?'' என்று நீங்கள் கேட்கலாம். என்னுடைய சொந்தச் சங்கதி இரண்டொன்று சொல்லுகிறேன் கேளுங்கள். கொஞ்ச காலத்திற்கு முன்புதான் எனக்கு அறிமுகமான ஒருவர் இப்போது என் அத்தியந்த நண்பரா யிருக்கிறார். அதன் காரணம் என்ன தெரியுமா? சொல்ல வெட்கமாயிருக்கிறது. அவர் ஒரு முறை, ''நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்க்கிறேன். உங்களைப் போல் எழுத முடியவில்லை'' என்று தெரிவித்தார். அப்படி என்னிடம் பொறாமை காட்டியதற்காக நான் அவரிடம் வெறுப்புக் கொண்டேனென்று நீங்கள் நினைக்கலாம். கிடையவே கிடையாது. அது முதல் அவரிடம் எனக்கு அபார அன்பு உண்டாகிவிட்டது.

மற்றொரு சமயம் நான் ரயில் ஏறினேன். வண்டியிலிருந்தவர்களில் ஒருவர் எனக்குக் கொஞ்சம் இடம் ஒழித்துக் கொடுத்தார். அவரை எனக்கு முன்பின் தெரியாது. அடுத்த ஸ்டேஷனில் நான் இறங்கியபோது அந்த மனிதர் பக்கத்திலிருந்தவரைப் பார்த்து, ''அவர் யார் தெரியுமா?'' அவர்தான் ''தமிழ்த் தேனீ'' என்று கூறியது என் காதில் விழுந்தது. (''தமிழ் தேனீ'') என்ற பெயருடன் நான் சில காலம் எழுதியதுண்டு என்னும் குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுகிறேன். இராஜ நடையென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என் வாணாளில் நான் எப்போதேனும் போலி இராஜ நடை நடந்ததுண்டானால் அந்தச் சமயத்தில் தானிருக்க வேண்டும். அன்று முழுவதும் அந்த மனிதர் யாராயிருக்கலாமென்றும், அவருக்கு எப்படி என்னைத் தெரியமென்றும் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

இத்தகைய அனுபவங்கள் தம் வாணாளில் கிடையா தென்று உங்களில் யாரேனும் நெஞ்சில் கை வைத்துக் கொண்டு சொல்ல முடியுமா? ஒரு நாளும் முடியாது. நீங்கள் ரயில் பிரயாணம் செய்கிறீர்கள். டிக்கட் பரிசோதகர் வந்து பக்கத்திலுள்ள குடியானவர்களிடம் டிக்கட் கேட்கிறார். உங்களை மாத்திரம் கேட்காமல் போகிறார். அப்போது உங்கள் கர்வம் ஓங்கி வளர்ந்து ரயில் கூரையைக்கூடப் பெயர்த்துவிட்டு மேலே கிளம்புவதில்லையா? ''நம்மை யெல்லாம் டிக்கட் கேட்க மாட்டார்கள். ஸார்! ஆசாமியைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்வார்கள்'' என்று எத்தனை சந்தோஷத்துடன் சொல்லுகிறீர்கள்? நம்முடைய சொந்தப் பெருமை மட்டுமல்ல, பிறருடைய சிறப்பைக்கூட நம்மு டையதென நினைத்துக் கொண்டு சில சமயம் சந்தோஷம டைகிறோம். ''நான் நேரில் பார்த்திருக்கிறேன்'' என்ற பெருமைப் பேச்சைக் கேளாதவர் யார்? பார்த்தது மகாராஜா வின் தர்பாராயிருக்கலாம். காங்கிரஸ் மகாசபையாயிருக்க லாம்; பெருங்கலகம் நடந்த இடமாயிருக்கலாம்; காசி நகரமாயிருக்கலாம்: தாஜ்மஹால் கட்டிடமாய் இருக்கலாம்; குற்றவாளியைத் தூக்குப் போட்ட சம்பவமாயிருக்கலாம்; பெரிய பாம்பு அடித்த இடமாயிருக்கலாம்; ஆகாய விமான மாயிருக்கலாம்; மோட்டார் விபத்தாயிருக்கலாம்; குதிரைப் பந்தயமாக இருக்கலாம். எதுவாயிருந்தாலும் ''நான் நேரில் பார்த்தேன்'' என்று நீங்கள் பெருமையடித்துக் கொள்ளும் போது, மற்றவர்களுடைய, பொறாமையைக் கிளப்பவே விரும்புகிறீர்களென்பதை ஒப்புக்கொள்ளுவேன்.

நம்முடைய விஷயந்தான் இப்படியென்றால் நம்மு டைய மனைவிமார், சகோதரிகள், குழந்தைகள் எல்லாரும் இதே நிலையில்தான் இருக்கிறார்கள். குழந்தை ராமு பள்ளிக்கூடத்திலிருந்து ஓடி வந்து, ''அப்பா! எனக்கு பன்னிரண்டு மார்க்கு சீனுவுக்கு கோழி முட்டை!'' என்று உற்சாகம் ததும்பச் சொல்கிறான். த்னக்கு 12 மார்க்குக் கிடைத்ததைவிடச் சீனு கோழிமுட்டை (பூஜ்யம்) வாங்கிய தில்தான் அவனுக்கு அதிக சந்தோஷம். வீட்டில் சாதாரண மாயிருக்கும் பெண்கள் எங்கேயாவது வெளியில் போவ தென்றால் ஒரு மணங்கு நிறையுள்ள பட்டுப்புடவையும் (இரவல் வாங்கியாவது,) அரை மணங்குக்குக் குறையாத நகைகளும் போட்டுக் கொண்டு கிளம்புவதேன்? மற்றப் பெண்களின் பொறாமையைக் கிளப்புவதற்குத்தான். உங்கள் சகோதரியாவது, மனைவியாவது அடுத்த முறை உங்களிடம் வந்து 'கமலம் அசாத்திய ராங்கிக்காரி. அவளுடன் சகவா

சமே உதவாது' என்று சொல்லும்போது அதை அப்படியே நம்பிவிட வேண்டாம். உங்கள் சகோதரி அல்லது மனைவி யின் புடவை நகைகளைப் பற்றியோ, படிப்பு பாட்டுத் திறமைகளை பற்றியோ ஸ்ரீமதி கமலம் பொறாமைக் காட்டவில்லையென்று தெரிந்து கொள்ளுங்கள். கோபத்திற் குக் காரணம் அதுதான்.

கேவலம் மனிதர்களிடம் மட்டுமல்ல! இன்னும் உயரிய இலட்சியங்களுக்காகப் பிறந்த மிருகங்களிடத்தில் கூட இந்தக் குணம் காணப்படுகின்றது. ஒரு சமயம் பிராணிக் காட்சிச்சாலை ஒன்றுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு குரங்கும் ஒரு யானையும் மிகவும் சிநேகிதமாயிருந்தன. மற்ற குரங்குகள் யானையின் அருகில் போகவும் துணிவ தில்லை. ஆனால், அந்த ஒரு குரங்கு மட்டும் யானையின் மேலேறியும், இன்னும் பலவிதமாகவும் விளையாடிக் கொண்டிருந்தது. இதைப்பற்றி அந்த குரங்குக்கிருந்த கர்வத் தைப் பார்த்து நான் மிகவும் வெட்கமடைந்தேன். ஏன் தெரியுமா? நம்மிடந்தான் இந்தத் துர்க்குண மென்றால், நமது மூதாதைகளான குரங்கு குலத்தினிடமுமா இது காணப்பட வேண்டுமென்ற எண்ணம். அந்தப் பொல்லாத குரங்கு யானையின் முதுகில் நின்று கொண்டு, மற்ற குரங்குகளைப் பார்த்துக் கெக்கிலி கொட்டிச் சிரித்தபோது சாக்ஷாத் மனித அவதாரமே காணப்பட்டது. முதல் வகுப்பில் ரயில் பிரயாணம் செய்பவன் மூன்றாம் வகுப்புப் பிரயாணி களை பார்ப்பது போலவும், சொந்த மோட்டாரில் போகிற வன் பாதசாரிகளை நோக்குவது போலவும், புதிதாய்த் திவான் பகதூர் பட்டம் பெற்றவன் மற்ற சாதாரண ஜனத்திரளைப் பார்ப்பது போலவும், அந்த மானங்கெட்ட குரங்கு தன் இனத்தைச் சேர்ந்த மற்றக் குரங்குகளைப் பார்த்தது. நிற்க.

இதுவரைக்கும் கூறியதிலிருந்து விளங்குவதென்ன? மனிதர்களுக்காககட்டும், மிருகங்களுக்காகட்டும், பிறரு டைய பொறாமையைப் போல் மகிழ்ச்சி தருவது வேறொன் றுமில்லை. பிறருடைய பொறாமையைக் கிளப்ப முடியாவி டில், அதைப் போல் துயரந் தருவதும் வேறு கிடையாது! ஆகவே உங்களுக்குச் சிநேகிதர்கள் வேண்டுமானால், பொது வாக உலகில் நீங்கள் வெற்றிபெற வேண்டுமானால், ''பொறாமைப்படுங்கள்'' என்று சொல்வேன்.

மதிப்புரை

ஐயா! இங்கே பாருங்கள். அவ்வளவு அவசரமாய் ஓட வேண்டாம். இந்தக் கட்டுரையைத் தாங்கள் கண்ணால் பார்க்கலாம்; படித்தாலும் பாதகமில்லை! ஏனென்றால் இது உண்மையில் மதிப்புரையன்று. அதாவது ஏதோ ஒரு புத்தகத்தைப் பற்றி எழுதிய விமர்சனம் அன்று. இது மதிப்புரைக்கு மதிப்புரை. அதாவது தமிழ்ப் பத்திரிகை உலகில் நூல்களுக்கு மதிப்புரை எழுதும் வழக்கத்தைக் குறித்து ஏதோ சில வார்த்தைகள் சொல்ல முன் வந்திருக்கிறேன்.

''சரிதான்; மதிப்புரைக்கு எழுதும்படி யோக்கியதை உமக்கு என்ன இருக்கிறது?'' என்று நீங்கள் கேட்கலாம். சரியான கேள்வி. அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப் பட்டவன். அத்தகைய யோக்கியதை எனக்குண்டென்று தைரியமாகச் சொல்வேன். ஏனென்றால், மதிப்புரையின் இரண்டு அம்சங்களிலும் எனக்கு அனுபவம் உண்டு. அந்த இரண்டு அம்சங்கள் எவையெனில், மதிப்புரைக்கு அனுப்புதல் ஓர் அம்சம், மதிப்புரை வரைதல் இரண்டாவது அம்சம்.

இரண்டாவது அம்சத்தில் என் அனுபவத்தைப் பற்றி முதலில் சொல்கிறேன். சில காலம் ஒரு தமிழ்ப்பத்திரிகையில் நான் உதவியாசிரியனாக இருந்தேன். இந்தக் காலத்தில் மதிப்புரை எழுதுவதற்காக என் வசம் வந்த பொருள்களின் ஜாபிதாவைக் கவனியுங்கள்:

பல்பொடி, சுகந்த மூக்குத்தூள், வாசனைத் தைலம், ரோஜா அத்தர், நன்னாரி ஷர்பத்து, தாதுபுஷ்டி லேகியம் படுக்கையறைப் பிரஞ்சுலேடி படங்கள், மகா சக்தி கவசம், சிவபுரிப் புகையிலை, திருச்சினாப்பள்ளி சுருட்டு, வெள்ளைக் குஷ்டத்துக்கு மருந்து, எலக்ட்ரிக் மோதிரம், நரை மயிர் கறுக்குந் தைலம், ரோம சங்காரி, க்ஷவரக் கத்தி, மாங்காய் ஊறுகாய், டானிக் ஒயின்—

ஒரு தமிழ்ப் பத்திரிகையின் உதவி ஆசிரியன், இத்தனை சமான்களையும் உபயோகித்துப் பார்த்து மதிப்புரை எழுத வேண்டுமென்றால், அது எத்தனை பொறுப்புள்ள

உத்தியோகம் பாருங்கள். ஆயினும், கொஞ்சமும் தயங்காமல் இவ்வளவு கஷ்டமான கடமையை நிறைவேற்றும் உதவியாசிரியர்கள் தமிழ் நாட்டில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இது தமிழ் நாட்டுக்கே ஒரு பெருமையல்லவா? ஆனால், என்னைப் பற்றிய வரையில், அவ்வளவு பெரிய பொறுப்பை என்னால் வகிக்க முடியவில்லை என்பதை ஒப்புக் கொண்டு விடுகிறேன். மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நன்னாரி ஷர்பத்து ஒன்றுக்குத்தான் நான் மதிப்புரை எழுதலாம். ஆனால், அதுவும் என்னால் கூடவில்லை. ஏனென்றால் மதிப்புரைக்காக வரும் மற்ற சாமான்களெல்லாம் என் மேஜைக்கு வந்துவிட, ஷர்பத்துப் புட்டிகளுக்கு மட்டும் காகிதச் சீட்டுதான் வந்து சேரும்! புட்டியை இடைமறித்துத் தலைமை ஆசிரியரின் மருமகனோ, அல்லது அச்சுக்கூட மேஸ்திரியின் மைத்துனனோ எடுத்துக் கொள்வார்கள்.

''இதென்ன இப்படிச் சொல்கிறீர்கள்? பல்பொடியைக் கூடவா உபயோகித்துப் பார்த்து மதிப்புரை எழுதக் கூடாது?'' என்று நீங்கள் கேட்கலாம். வாஸ்தவந்தான். தற்போது கோணல் மாணலாயிருக்கும் என் பற்களெல்லாம் விழுந்து, அழகிய புதுப் பற்கள் கட்டிக் கொள்ளும் ஆசை எனக்கிருந்தால் அப்படிச் செய்யலாம். ஆனால், அந்த ஆசை எனக்கில்லை. மேலும் பல்லு போனாலாவது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் மதிப்புரை எழுதலாமென்றாலோ, அதுவும் கிடையாது. பல்பொடியின் குணாதிசயங்கள் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்து விட்டல்லவா அத்தகைய மதிப்புரை எழுத முடியும்? என்னிடம் வந்த ஒரு பல்பொடியின் குணாதிசயங்களைக் கேளுங்கள்: *—(1) பல் வெளுக்கும்; (2) ஈறில் இரத்தம் வடிதல் நிற்கும்; (3) வாய்ப் புண்கள் ஆறும்; (4) வெந்நீரில் கரைத்துக் காதில் விட்டுக் கொண்டால் காது வலி நிற்கும்; (5) குழைத்துப் போட்டால் தலைவலி போகும் (6) கண்ணில் தூவினால் கண் வலி நீங்கும்; (7) கஷாயம் போட்டுச் சாப்பிட்டால் வயிற்று வலி நிற்கும்; (8) சுரம், சன்னி, பைத்தியம், க்ஷயம், குன்மம் எல்லா ரோகங்களுக்கும் கைகண்ட மருந்து.*

இவ்வளவு முறையிலும் உபயோகித்துப் பார்த்து பல்பொடிக்கு மதிப்புரை எழுதும் ஆற்றல் உங்களில் யாருக்காவது இருந்தால் தயவு செய்து உடனே தெரிவியுங்கள். உதவி

ஆசிரியர் வேலைக்குப் பூரண யோக்யதை வாய்ந்தவர் என்று அத்தாட்சிப் பத்திரம் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

மேலே குறிப்பிட்ட பொருள்களெல்லாம் சட்ட அமைப்புக்குப் புறம்பானவை யென்று நான் சொல்ல வேண்டியதில்லை. அதாவது பத்திரிகைச் சட்டத்தின்படி மதிப்புரைக்கு அனுப்பக் கூடிய பொருள்களல்ல. உண்மையில் பத்திரிகையில் மதிப்புரை செய்வதற்கருகதையானவை புத்தக வகையறா தான். மூன்று வருஷ காலத்தில் என்னிடம் மதிப்புரைக்கு வந்த புத்தக வகையறாவுக்கு ஜாபிதா:—

''தேனென இனிக்கும் தீந்தமிழ்க் கவிதைகள்''	1230
நாவல்கள் என்னும் நவீனங்கள்	3745
''உயர் தர'' நாடகங்கள்	892
காவிய ஆராய்ச்சி நூல்	3/4
பொது அறிவு நூல்கள்	3 ½
பௌதிக ஆராய்ச்சி நூல்	006
மாத சஞ்சிகைகள்	37,892
வருஷ அநுபந்தங்கள்	37,893
துண்டு பிரசுரங்கள்	79,430
புத்தக காட்லாக்குகள்	7,29,325
நகை, கடிகாரக் காட்லாக்குகள்	72,842
கலியாணப் பத்திரிகைகள்	(கணக்கிலடங்காதவை)

நான் கணக்கு வைத்தவற்றை மட்டும் மேலே எடுத்துக் காட்டியிருக்கிறேன். கணக்கு வைக்காமல் உடனுக்குடன் கிழித்துப் போட்டவை எவ்வளவோ! கடவுளுக்குத்தான் தெரியும். சுருங்கச் சொன்னால், நாட்டில் எந்த மூலையில், அச்சுக்கூடத்தில் எந்தக் காகிதம் அச்சிடப்பட்டாலும், அதில் ஒரு பிரதி மதிப்புரைக்காக என்னிடம் வந்து கொண்டிருந்தது. ஆனால், ஒரே ஒரு காகிதம் மட்டும் வருவதில்லை. அது சர்க்கார் அச்சடிக்கும் பண நோட்டுதான்.

சர்க்கார் எவ்வளவு பிற்போக்கானவர்கள் என்பது இதிலிருந்தே நன்கு விளங்குகிறதல்லவா? இந்த விளம்பர யுகத்தில் விளம்பரத்தின் பெருமையை அறியாதவர்கள் சர்க்காரைத் தவிர வேறு யாருமில்லை. உதாரணமாக, முற்போக்குடைய சர்க்காராயிருந்தால் என்ன செய்யலாம் பாருங்கள்!

பத்து ரூபாய் நோட்டு	1
ஐந்து ரூபாய் நோட்டு	2
நூறு ரூபாய் நோட்டு	6
ஆயிரம் ரூபாய் நோட்டு	12

இவற்றுக்கு 'தயவு செய்து மதிப்புரை வரைக.' என்றெழுதி எனக்கனுப்பினார்களானால், எவ்வளவு நன்றாக இருக்கும்? இதுவரை எந்தப் பிரசுரத்துக்கும் எழுதாத வகையில், அதி அற்புதமாக மதிப்புரை எழுத மாட்டேனோ? ''சர்க்கார் கஜானாவிலிருந்து பத்து, ஐம்பது, நூறு, ஆயிரம் ரூபாய் நோட்டுகள் சில வரப்பெற்றோம். இவற்றின் அழகை வர்ணிப்பதற்கு ஆயிரம் நா படைத்த ஆதி சேஷனாலும் ஆகாதென்றால், கையில் ஒரே பேனாவுள்ள நம்மால் ஆகக்கூடியதா? வெகு காலமாகத் தமிழ் மக்கள் இந்த நோட்டுக்களின் பெருமையை நன்கறிந்திருக்கிறார்களென்றாலும், இப்போது வெளியாகியிருக்கும் புதிய பதிப்பை நேரே கண்ணால் பார்த்தாலல்லாமல் அவற்றின் சிறப்பை நன்கறிந்து கொள்ள முடியாதென்று நிச்சயமாகச் சொல்வோம். இவற்றுக்குக் கிராக்கி ஏராளமென்று நாம் கேள்விப்படுவதால், வேண்டுவோர் தாமதியாமல் உடனே பணத்துடன் கஜானாவுக்குச் சென்று பெறுவார்களாக'' என்று இப்படி எழுதி விட்டேனானால், அப்புறம் சர்க்கார் கஜானாவில் நோட்டு ஒன்றேனும் பாக்கியிருக்குமா என்று கேட்கிறேன். ஒரே நாளில் அவ்வளவும் பறந்து போய் விடாதா? செலவுக்குப் பணமில்லையேயென்று சர்க்கார் கவலைப் படுவதற்கு இடமேது?

சில பத்திராதிபர்கள் மதிப்புரைக்குப் புத்தகம் அனுப்பும்படி பிரசுரகர்த்தர்களுக்கு எழுதுவதுண்டு. இந்த முறையைப் பின்பற்றி நானும் சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதினேன். ''எங்கள் மேலான பத்திரிகையில் மதிப்புரை செய்யும் பொருட்டுச் சில ஆயிரம் ரூபா, நூறு ரூபா நோட்டுகள் கூடிய சீக்கிரம் எதிர்பார்க்கிறோம்'' என்று அதில் தெரிவித்திருந்தேன். எழுதி ஒன்பது மாதம் கழித்துப் பதில் வந்தது. ''தங்களுடைய கடிதம் கிடைத்தது; அதைப் பற்றி யோசனை செய்யப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரம் முடிவு தெரிவிக்கப்படும்'' என்று நமது அரசாங்கத்தார் எழுதியிருந்தார்கள். அப்புறம் ஒன்றரை வருஷ காலம் வரை யோசனை முடிந்த பாடில்லை. ஆகவே, யோசனை வெகு

தீவிரமாய் நடக்க வேண்டுமென்று எண்ணினேன். ஆனால், இதற்குள் நான் உதவியாசிரியர் பதவியினின்று விலக வேண்டியதாயிற்று. ஜோதிடர்கள் வாக்குப் பலித்து, அடுத்த வருஷம் சுயராஜ்யம் ஏற்பட்டால் சுயராஜ்ய சர்க்கார் பழைய தாஸ்தாவேஜுகளை யெல்லாம் கிழித்தெறிந்துவிட்டுப் புதியதாக வேலை தொடங்குவார்களென்று நம்புகிறேன், ஏனெனில் என் கடிதத்தைப் பற்றி.யோசனை முடிந்து ஒருவேளை மதிப்புரைக்கு நோட்டுகள் அனுப்பி விட்டார்களானால், அவை தற்போது எனக்குப் பதில் வேலை பார்ப்பவரிடமல்லவா சிக்கிக் கொள்ளும்? நோட்டுகளை மதிப்புரை செய்யும் யோக்கியதை அந்த மனிதருக்கு... ஆனால், இதைப் பற்றி நான் எழுதுவது ரஸக்குறைவாயிருக்குமென்று விடுகிறேன். உண்மையானலும் தற்புகழ்ச்சியாய்க் காணப்படும்.

மதிப்புரையின் மற்றொரு அம்சத்தைப் பற்றி இனிக் கொஞ்சம் கவனிப்போம். இரண்டினுள்ளும் இதுதான் ரஸமான அம்சம் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் மதிப்புரை எழுதும் பொறுப்பான வேலை சிலருக்கே உரியது. ஆனால், புத்தகமோ, யார் வேண்டுமானாலும் எழுதலாம். ஏன்? நமது வாசகர்களில் 100—க்கு 99 பேர் புத்தகாசிரியர்களாயிருக்கலாம் என்பது என் மதிப்பு. அவர்களில் பலர் இதுவரை புத்தகம் அச்சிட்டு வெளிப்படுத்தாமலிருக்கலாம்; ஆனால், குறைந்தது நான்கு ஐந்து நாவலாவது அவர்கள் கையெழுத்துப் பிரதியாக வைத்திருப்பார்களென்று நம்புகிறேன். இன்னும் சிலர் இது வரை புத்தகமே எழுதாத புண்ணியவான்களாயுமிருக்கலாம். ஆனால் வருங்காலத்தில் கூடப் புத்தகம் எழுதும் உத்தேசம் எனக்கில்லையென்று நெஞ்சில் கை வைத்துச் சொல்லக்கூடியவர் உங்களுள் யாராவது உண்டா?

ஆகையினால்தான் மதிப்புரைக்கு புத்தகம் அனுப்புவதை பற்றிய என்னுடைய அநுபவங்கள் உங்களுக்கு அதிக ரஸமாயிருக்குமென்று சொல்லுகிறேன். என்னை மன்னித்துவிடுங்கள். நான் புத்தகம் எழுதியது உண்மையே. இந்தக் குற்றம் போதாதென்று, அதை அச்சிட்டு வெளியிட்டேன். இதுவும் போதாதென்று அதைத் தமிழ்நாட்டில் என்னென்ன பத்திரிகைகள் உண்டோ அவ்வளவுக்கும் மதிப்புரைக்கு அனுப்பினேன். கடவுளே! தண்டனை கிடைத்தது. தினந்தோறும் பத்திரிகைகளைப் பிரிப்பேன். ஆவலுடன் அடியிலிருந்து கடைசி வரை படிப்பேன்.ஓர் எழுத்து விடுவதில்லை. தங்க பஸ்பங்களுக்கும் காம சாஸ்திரங்களுக்கும் இடையில் என் புத்தகத்தின் மதிப்புரை எங்கேயாவது ஒளிந்து கிடக்கிறதாவென்று துருவித் தேடினேன். தேடிக்கண்ட பயன் ஏமாற்றந்தான் ஆறு மாதம் கிணற்றில் கல்போட்டாற் போல் இருந்தது. பேச்சு மூச்சில்லை.

அப்புறம் திடீரென்று ஒருநாள் கிளம்பியது. மதிப்புரை, என்னுடைய பொறுமையைப் பூரணமாய்ச் சோதித்தாய் விட்டதென்று பத்திரிகாசிரியர்களும், உதவியாசிரியர்களும் திருப்தியடைந்த பின்னர் எழுதத் தொடங்கினார்கள் போலும். பீரங்கியிலிருந்த குண்டுகள் கிளம்புவது போல் மதிப்புரைகள் படார், படார் என்று வெடித்துக் கொண்டு புறப்பட்டன. மாதிரிக்கு அவற்றில் சிலவற்றைக் கீழே காண்க.

(1) ''சாரதையின் தந்திரம் என்னும் புத்தகம் வரப் பெற்றோம். புத்தகம் பார்வைக்கு அழகாயிருக்கிறது. அட்டை நல்ல தொகுப்பு. இப்புத்தகத்தை இவ்வளவு நன்றாய் அச்சிட்டுக் கொடுத்த அச்சுக் கூடத்தை மிகவும் பாராட்டுகிறோம்.''

(2) ''சாரதையின் தந்திரம் என்னும் புத்தகம் நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இதன் ஆசிரியரைத் தமிழுலகம் நன்கறியுமாதலால் நாம் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. இப்புத்தகத்தைத் தமிழர்கள் ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.''

(3) ''கதைகள் நன்றாயிருக்கின்றன. காகிதம் நேர்த்தியாயிருக்கிறது. அட்டை அழகாயிருக்கிறது. அச்சு சுத்தமாயிருக்கிறது. ஆசிரியர்... இருக்கிறார். விலை குறைவாயிருக்கிறது.'' (அடக்கம்... காரணமாக ஆசிரியரின் குணாதிசயத்தை நீக்கியிருக்கிறேன்.)

(4) ''மிக மிக மிக நல்ல புத்தகம். ரொம்ப ரொம்ப ரொம்ப ரஸமான கதைகள்; எளிய நடையில் எழுதியிருக்கும் இவ்வினிய கதைகளின் சிறப்பைக் குறித்து அதிகம் சொல்வது மிகையாகும்.''

முதலில் எனக்கு ஒரு மாதிரியாயிருந்தது. என்னடா நாம்தான் உதவியாசிரியரின் பதவியிலிருந்து புத்தகத்தின்

அட்டையைப் பார்த்து மதிப்புரை எழுதினோமென்றால், எல்லாரும் இப்படித்தான் செய்கிறார்கள் போலிருக்கிறதே. ஒரு மனிதனாவது புத்தகத்தைப் பிரித்துப் பார்த்ததாகத் தெரியவில்லையே? இவ்வாறு எண்ணிக் கொஞ்சம் வருத்தப்பட்டேன். பின்னால் ஒருவாறு சமாதானமாயிற்று. அட்டையைக் குறித்து எழுதினார்களோ, அச்சைப் பற்றி எழுதினார்களோ, எல்லாரும் நன்றாயிருக்கிறதென்று தானே சொல்லுகிறார்கள்? குற்றம் கூறவில்லையல்லவா?

நான் உதவியாசிரியனாயிருந்தபோது மனச்சான்றின் தொல்லைக்காகச் சில சமயம் குற்றம் கண்டு பிடிப்பதுமுண்டு. உதாரணமாக—

''இதிலுள்ள சிற்சில அச்சுப் பிழைகள் அடுத்த பதிப்பில் நீக்கப்படுமென்று எதிர்பார்க்கிறோம்.''

''அட்டை பச்சை நிறமாயிருப்பது அவ்வளவு எடுத்துக் காட்டவில்லை; மஞ்சள் நிறமாயிருந்தால் நன்றாயிருக்கும்.''

''சிறுவர்களுக்கும், மாதர்களுக்கும் கூடப் பயன்படுமாறு தமிழ் நடை இன்னும் சிறிது தளர்த்தப்பட்டால் நலம்.''

என்று இப்படி ஏதேனும் ஒரு வாக்கியம் இடையில் போட்டு வைப்பதுண்டு. நல்ல வேளையாய் நமது புத்தகத்தைப் பற்றி அத்தகைய கண்டனங்கள் வரவில்லையேயென்று சந்தோஷப்பட்டேன்.

ஆனால், இதிலும் நான் அவசரப்பட்டுவிட்டேன் என்று பின்னால் தெரிந்தது. ஏனென்றால், ஏதாவது ஒரு புத்தகத்தின் அச்சு அல்லது அட்டையைப் பற்றிக் குறை சொல்லியிருந்தாலல்லவோ நான் சந்தோஷப்படலாம்? கிடையவே கிடையாது. என புத்தகத்தோடு சேர்ந்து இன்னும் முப்பது புத்தகங்களுக்கு மதிப்புரை வெளியாகி யிருந்தது. ஆனால் எல்லாம் ''மிக மிக மிக நன்றாகவும், ரொம்ப ரொம்ப அழகாகவும்'' இருந்தன.

ஆனால், எல்லாத் தமிழ்ப் பத்திரிகைகளுமே இப்படி மோசம் செய்துவிடவில்லை. தமிழ்ப் பத்திரிகை உலகின் மானத்தைக் காப்பாற்ற அத்தி பூத்ததுபோல ஒரே ஒரு பத்திரிகை முன் வந்தது. புத்தகத்தின் உள்ளழகு, வெளியழகு, கதைகளின் அமைப்பு, நடை, போக்கு முதலியவற்றை வெகு நன்றாக எடுத்துக்காட்டி விஸ்தாரமான ஒரு விமரிசனம் அப்பத்திரிகையில் வெளியாயிற்று. அது எந்தப் பத்திரிகையென்று அறிந்து கொள்ள நீங்கள் ஆவல் கொண்டிருக்கிறீர்களல்லவா? ஆனால், அதைத் தெரிந்து கொண்டு உங்களுக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. அதைவிட அந்த விமரிசனம் எம்முறையில் வெளியாயிற்று என்று அறிந்து கொண்டால் லாபமுண்டு. காதோடு சொல்கிறேன் கேளுங்கள். எனக்குப் பூரண திருப்தியளித்த அந்த விரிவான விமரிசனத்தை எழுதி திருப்தியளித்த அந்த விரிவான விமரிசனத்தை எழுதியவன் யார் தெரியுமா? புத்தகாசிரியனாகிய அடியேன்தான்.

ஒரு பத்திரிகாசிரியரைத் தற்செயலாகச் சந்தித்தபோது, ''என்ன ஸார்! என் புத்தகத்துக்கு மதிப்புரை வரவில்லையே'' என்றேன். ''அவகாசமேயில்லை, ஸார்! நீங்களே ஒன்று எழுதி அனுப்பிவிடுங்களேன்'' என்று புன்னகையுடன் கூறினார். முதலில் பரிகாசம் செய்கிறார் என்று நினைத்தேன். உண்மைதான் என்று தெரிந்ததும், அப்படியே என்னுடைய ஆற்றலையெல்லாம் காண்பித்து ஒரு மதிப்புரை எழுதி அனுப்பினேன். ஓர் எழுத்துக்கூட மாறுதலன்றி அப்படியே வெளியாயிற்று.

ஆனால், பொதுவாக மதிப்புரைக்குப் புத்தகங்கள் அனுப்புவதைப் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டால், கலியாணம் செய்து கொள்வதைப் பற்றி பிரமசாரிகள் யோசனை கேட்டால் என்ன சொல்வேனோ அதே பதில்தான் சொல்லுவேன். அது, ''வேண்டாம் வேண்டாம் முக்காலும் வேண்டாம்!'' என்பதே. புத்தகம் வெளியாக்கியதில் நான் அடைந்த லாபம் ஒன்றுண்டானால் அது தாழ்மைக் குணந்தான். உதவியாசிரியரின் பதவியிலிருந்து புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதியபோது என் தலை கழுத்தில் நிற்காது; அவ்வளவு கர்வம். புத்தகாசிரியர்களுக்கு ஏதோ சர்வமானியம் விடுவதாய் எண்ணிக் கொள்வேன். ஆனால், என் சொந்த புத்தகத்தை மதிப்புரைக்கு அனுப்பிய போது, இந்தப் பிரமை சிதறிப் போயிற்று. மொத்தம் ஐம்பது புத்தகங்கள் மதிப்புரைக்கு அனுப்பினேன். 48-மதிப்புரைகள் வெளியாயின. இவற்றின் பயனாக மொத்தம் மூன்றரைப் புத்தகம் விலையாயிற்று. (ஒரு வாசகசாலைக்குப் பாதி

விலைக்குக் கொடுத்த புத்தகத்தை அரைப் புத்தகம் என்று கணக்கிட்டேன்)

ஒரு காரியத்துக்கு மட்டும் மதிப்புரைக்கு புத்தகம் அனுப்புதல் உண்மையிலேயே பயன்படும். என்னுடைய புத்திமதியை மீறிக் கல்யாணம் பண்ணிக்கொள்ள விரும்பும் பிரமசாரி யாரேனும் இருந்தால், அவர் ஒரு புத்தகம் பிரசுரித்துத் தமது புகைப்படத்தையும் அதில் வெளியிடுவாராக. புத்தக மதிப்புரைகளில் அவருடைய அழகிய தோற்றம் வர்ணிக்கப்படுவது நிச்சயம்.

ஆசிரியரைப் பற்றிய வர்ணனைகள் ஐம்பது, அறுபது பத்திரிகைகளில் வந்து விட்டால் அப்புறம் கலியாணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டுமா, என்ன? பணம் கொடுத்து ''மணப்பெண் தேவை'' என்று விளம்பரம் செய்வதைக் காட்டிலும் இது நல்ல முறையாகாதா?

கடைசியாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடாமல் இதை முடிக்க எனக்கு மனம் வரவில்லை. அது என்னவென்றால், இங்கிலீஷ் பத்திரிகைகளில் தமிழ்ப் புத்தகங்களுக்கு மதிப்புரை எழுதுதல். எனக்கு அறிமுகமான ஒருவர் ஒரு புத்தகம் வெளியிட்டார். அதில் மேனாட்டுப் பிரபல ஆசிரியர்கள் நால்வர் எழுதிய நாலு கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கியிருந்தது. ரஸ்கின், கார்லைல் முதலியவர்களின் கட்டுரைகளை ஆங்கிலத்தில் படித்தாலே விளங்குவது கஷ்டம். தமிழிலோ சொல்ல வேண்டியதில்லை. அதிலும் இந்த ஆசிரியரோ கடினமான தமிழ் நடையில் பிரதிபதமிருக்கும்படி மிகச் சிரமப்பட்டு மொழி பெயர்த்திருந்தார். புத்தகத்தை நான் வாசித்துப் பார்த்தபோது ஓர் — அட்சரங்கூட விளங்கவில்லை. ஆங்கிலத்தில் ஏற்கனவே அக் கட்டுரைகளை வாசித்த எனக்கே இந்தக் கதியென்றால், புதிதாய்ப் படிக்கும் ஆங்கில ஞானமற்ற தமிழர்கள்என்ன பாடு படுவார்கள்!

மேற்படி புத்தகத்துக்குச் சென்னையில் முதன்மையான ஆங்கிலப் புத்திரிகையாகிய ''ஹிந்து'' வில் மதிப்புரை வெளியாயிற்று. அதன் சாராம்சமாவது:—

இந்தத் தமிழ் நூலில் மேனாட்டு மேதாவிகள் நால்வரின் ஜீவிய சரித்திரம் அடங்கியிருக்கிறது. மிக எளிய நடையில் எழுதப்பட்டிருக்கும் இப்புத்தகம் அம் மேதாவிகளைக் குறித்துத் தமிழர்கள் அறிந்து கொள்ள மிக்க உபயோகமாயிருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

ஏன், தமிழ்ப் பண்டிதர் ஒருவர் ஒரு புதிய அகராதி தயாரித்தார். அதில் நவீன வார்த்தைகளை யெல்லாம் புகுத்த எண்ணிய அவர், 'கங்காரு', என்பதற்கு ''ஆப்பிரிக்கா தேசத்து ஆறுகளில் பின்புறமாய் நீந்திச் செல்லும் ஒருவிதப் பறவை'' என்று பொருள் எழுதினார். பின்னர் ஆங்கிலம் தெரிந்த நண்பர் ஒருவருக்கு அதைக் காட்டி, ''சரிதானா?'' என்று கேட்டார். நண்பரோ, ''கொஞ்சம் தவறிருக்கிறது. கங்காரு ஆப்பிரிக்கா தேசத்தில் உள்ளதன்று; அது நீரில் வசிப்பதன்று; அது பின்புறமாய் நீந்துவதன்று; அது பறவையன்று; மற்றபடி நீர் எழுதியிருப்பது முற்றிலும் சரி'' என்றார் நண்பர். உபமானத்தைப் பொருத்திப் பார்க்கும் வேலையை நேயர்களுக்கே விடுத்து இவ்விஷயத்தை நிறுத்துகிறேன்.

பகல் தூக்கம்

விஸ்தாரமான மைதானம், கண்ணுக்கெட்டிய தூரம் பச்சைப் பசேல் என்று பசும்புற் கம்பளம் விரித்திருந்தது. மைதானத்தில் மேற்குத்திசையில் மட்டும் வெகு தூரத்துக்கப் பால் அடுக்கடுக்கான மலைத்தொடர்கள் காணப்பட்டன. மலையடிவாரங்களில் அடர்ந்து நெருங்கிய கண்ணுக்கினிய சோலைகள் காட்சியளித்தன. மெல்லிய குளிர்ப் பூங்காற்று வீசிக் கொண்டிருந்தது.

இம் மைதானத்தில் நின்று நான் நாலாபறமும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தேன்; என் உடலும் உள்ளமும் ஒருங்கே இயற்கை இன்பத்தில் ஈடுபட்டுத் திளைத்துக் கொண்டிருந்தன. உற்சாகம் பொங்கித் ததும்பிற்று. இவ்வாறு நாலாபக்கமும் பார்த்துக்கொண்டு நிற்கையில், மேற்குத் திசையில் இருந்த வெண்மலைத் தொடர்களில் எல்லாவற்றிலும் உயரமாக நின்ற ஒரு சிகரத்தின் மீது என் பார்வை சென்றது. ஓ! அப்போது நான் கண்ட காட்சியை என்னவென்று வர்ணிப்பேன்! என் கண்கள் அச்சமயத்தில் ஓர் அதிசய சக்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். இன்றேல், அவ்வளவு தொலை தூரத்தில் இருந்த மலைச்சிகரத்தில் ஓர் பெண்ணரசி தன்னந்தனியே தலைவிரிக்கோலமாய் நின்று கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்த காட்சி எனக்குத் தெள்ள தெளியக் காணப்பட்டதெவ்வாறு? என் உள்ளம் குழைந்தது! மயிர் சிலிர்த்தது! கண்ணீர் ததும்பிற்கு. அந்த மாதரசியினருகிற் சென்று அவளுக்கு நேர்ந்த குறை யாது என்று வினாவும்படி என் மனம் தூண்டிற்று. உடனே விரைந்து நடந்தேன். நான் இதுவரை என்றும் கண்டறியாத ஒரு வகை புதிய சக்தி பிடர் பிடித்துந்த வாயுவேக மனோவேகமாய்ப் பறந்து சென்றேன். மலையடி வாரத்தை அடைந்தேன். மலை மீதேறினேன். அரை நொடிப் பொழுதில் சிகரத்தின் உச்சி சேர்ந்தேன். தொலை தூரத்திலேயே என் உள்ளத்தைக் கவர்ந்த அம் மாதரசியின் தோற்றம், என்னை இப்போது பரவசப்படுத்தி விட்டது. சற்று நேரம் பேச நாவெழாது திகைத்து நின்றேன்.

அவள் தோற்றத்தை, அவள் சௌந்தர்யத்தை வர்ணிக்கச் சொல்கிறீர்களா? அது என்னால் இயலாத காரியம். அவள் அழகு தெய்விகமானது. உருக்கமும், சோகமும், அன்பும், அருளும் அற்புத சௌந்தர்யமும் ஒன்றுகூடி, ஒரு பெண் வடிவம் எடுத்தனவோ என்று சொல்லும்படி விளங்கினாள். வேறுவிதமாக அவளைப் பற்றி வர்ணிக்க நான் அறியேன். கடலினும் பெரிய, அவள் கண்களினின்றும் நீர் பெருக்கெடுத்து பொழிந்து கொண்டிருந்தது. தலைவிரி கோலமாய் அவள் நின்ற காட்சி அனலிலிட்ட மெழுகென என் உள்ளத்தை உருக்கிற்று. அவளுடைய வயது என்னவாயிருக்கலாம் என்று எண்ணிப் பார்த்தேன். அதை மட்டும் என்னால் அறியவே முடியவில்லை.

அவள் பாத தாமரைகளில் வீழ்ந்து வணங்கி, ''தாயே உனக்கு நேர்ந்த குறையென்ன சொல்வாய்? நினது கண்களினின்றும் நீர் பெருகுவதென்ன? இளமைப் பருவத்தில் என்னைப் பெற்ற அன்னையை இழந்தேன். ஆனால், இன்று உன்னைப் பார்க்கும்போது நீயே என் தாய் என்று என் உள்ளத்தினுள்ளே ஏதோ ஒன்று கூறுகிறது. உன் துயரத்தின் காரணத்தைக் கூறுவாய். என் இன்னுயிரை ஈந்தேனும் உன் துயரம் தீர்ப்பேனென்று இதோ சத்தியம் செய்கிறேன்!'' என்று நாத்தழுதழுக்க, கண்களில் நீர் ததும்ப உருக்கத்தோடு உரைத்தேன்.

அப்போது அம்மாதரசியின் முகம் ஒரு சிறிதே மலர்ச்சியுற்றது. அன்றலர்ந்த செந்தாமரையை யொத்த அவள் இதழ்களில் புன்னகையின் ஒரு சாயை மின்னல் போல் தோன்றி மறைந்தது. என் உள்ளமும் தண்ணென்று குளிர்ந்தது. அப்பெண்ணரசி தனது பவழச் செவ்வாய் திறந்து சொல்வாள்; — ''மைந்தா! முதலில் பாவியேனாகிய நான் யாரென்று உனக்குத் தெரிவிக்கிறேன். என்னைக் கண்டதும் உன் அன்னையென்னும் உணர்ச்சி பிறந்ததாகக் கூறினாய். ஆம், உண்மையில் நான் உனது அன்னையே. ஒருவரல்ல இருவரல்ல. முப்பது கோடி மக்களை ஈன்றெடுத்த தாய் நான். என்னைப் 'பாரதி' என்றழைப்பார்கள்.''

இம்மொழிகள் இன்பத்தேன் மாரியன்ன என் செவிகளிற் புகுந்து சென்று என் ஆன்மாவை ஆனந்தக் கடலில் அமிழ்த்தி விட்டன. ஆனால், அவ்வானந்தம் நீடித்திருக்க

வில்லை. அன்னை மீண்டும் சொல்வாள்: — ''ஆம் முப்பது கோடிப் புதல்வர் புதல்விகளைப் பெற்றெடுத்தேனாயினும் அநாதையாய் பராதீனமாய் இருக்கிறேன். என் மக்கள் படுந்துன்பங்கள் சொல்லுக்கடங்கா. ஆனால், எப்போதுமே நான் இப்படித்தான் இருந்து வந்தேனோ? இல்லை, இல்லை. இப்பூவுலகெல்லாம் வந்து என் அடிபணிய நான் வீற்றிருந்த காலமும் உண்டு. ஆதிகாலந் தொட்டுச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை நான் சீரும் சிறப்பும் பெற்று, மண்ணவரும் விண்ணவரும் புகழ்ந்தேற்றப் பெற்ற வளாய், மணிமுடி தரித்து வாழ்ந்திருந்தேன். என் மக்களும் அக்காலத்தில் உண்ண உணவுக்கும், உடுக்க ஆடைக்கும் குறைவின்றிப் பஞ்சமும் பிணியும் அறியாதவராய், செல்வர் களாய், வீரர்களாய் ஞானிகளாய் கவிகளாய், இன்ப வாழ்வு நடத்தி வந்தனர். இன்றோ? — பாவியேன் வயிற்றிற் பிறந்த அவர்கள் நிலையை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் என் வயிறு எரிகிறது. அந்தோ! என் செய்வேன்?''

அன்னையின் இம்மொழிகள் எனக்குத் தாங்க முடியாத பெருந் துன்பத்தை விளைத்தன. விம்மி விம்மி யழுது கொண்டே நான் கூறினேன்:— ''அன்னையே! உன்னைப் பற்றி நான் பாட்டிலே கேட்டிருக்கிறேன்; புத்தகத்திலே படித்திருக்கிறேன். இதுவரை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேனில்லை. இன்று அப்பேறடைந்தேன். ஆனால், உன் துக்கத்தைக் காணும்போது என் நெஞ்சம் வெடித்து விடும் போலிருக்கிறது. இதோ உன்னுடைய தொண்டுக்காக என் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்கிறேன். நீ உன் பெருமையிழந்து தாழ்வுற்றிருப்பதன் காரணம் என்ன சொல் வாய். உன் மக்கள் படும் துன்பங்களைத் தெரிவிப்பாய். அவற்றைப் போக்க நான் செய்ய வேண்டுவதென்ன வென்று கட்டளையிடுவாய்.''

''மைந்தா? தொலைவில் நடக்கும் காட்சிகளை இருந்த இடத்திலிருந்து அவ்வப்போதே பார்ப்பதற்குரிய 'டெலிவி ஷன்' என்னும் புதிய சாதனத்தைப் பற்றி நீ கேள்விப்பட்ட துண்டா?'' என்று அன்னை கேட்டாள்.

''மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் சிலர் இது குறித்த ஆராய்ச்சி செய்து வருவதாகப் பத்திரிகையில் படித்திருக்கி றேன்'' என்று நான் விடையளித்தேன்.

அன்னை பெருமூச்சு விட்டுச் சொல்லுவாள்:— ''ஆம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள என் போன்ற நாட்டரசிகள் இது போழ்து சீருஞ்சிறப்பும் பெற்று விளங்கு கின்றார். அவர்களின் புதல்வர்கள் தினந்தோறும் புதிய புதிய இயந்திரங்களைக் கண்டு பிடிப்பதாலும், பிறவற்றாலும் தங்கள் தாய்மார்களின் பெருமையையும் புகழையும் வளர்த்து வருகின்றனர். ஆனால் அதைப்பற்றி நான் இங்கு கூற வந்தேனில்லை. இயந்திர சாதனமெதுவுமின்றித் தொலைவில் நிகழும் காட்சிகளையெல்லாம் அந்தந்தக் கணத்திலே காணும் ஓர் அற்புத சக்தியைச் சிறிது நேரம் உனக்கு அளிக்கிறேன். அப்போது உன் கண்களாலேயே பார்த்து என் மக்களின் துயரங்களை அறிந்து கொள்வாய்.''

இவ்வாறு கூறி அன்னை பாரதி தன் திருக்கரங்களால் என் கண்களை ஒருமுறை தொட்டாள். அந்தஸ்பரிசத்தினால் நான் புளகாங்கிதமடைந்தேன். ''குழந்தாய், அதோ பார்!'' என்றாள் தாய். அவள் சுட்டிக்காட்டிய பக்கம் நோக்கினேன். அதிக ஆச்சரியமடைந்தேன். மைதானத்தை காணேன்; பசும் புற்றரையைக் காணேன்! வெண்ணிலவைக் காணேன்; பஞ்சமர்கள் வசிக்கும் சேரி ஒன்று என் கண் முன்னே தென்பட்டது. அச்சேரியின் நடுவில் இருந்த ஒரு வீட்டின் மீது என் பார்வை சென்றது. அது ஒரு குச்சு. கூரையில் ஆயிரம் பொத்தல்கள் இருந்தன. அக்கம்பக்கத்தின் ஆபாசம் சொல்லி முடியாது. குப்பைகள், எலும்புத் துண்டுகள், பிராணிகளின் அழுகிய உடல்கள், மலஜலங்கள் இவையே வீட்டைச் சுற்றிலும் உள்ளவை. அத்தகைய வீட்டின் உள்ளே ஒரு பெண் கண்ணீர் விட்டுக் கதறி அழுதுகொண்டிருந்தாள். ஆடவன் ஒருவன் அவளைப் புடைத்துக் கொண்டிருந்தான். குழந்தை ஒன்று அழுது கொண்டே வந்து அம் மனிதன் கால்களைப் பற்றியது. ஆனால், வெறிகொண்ட பித்தன் போல அந்த ஆடவன் அக்குழந்தையையும் நையப் புடைத் தான்.

''அன்னையே! இதென்ன கோரம்?'' என்று நான் வினவினேன்.

''மைந்தா, மிருகத் தன்மையனாக உனக்குத் தோன்றும் அம்மனிதன் உண்மையில் நல்லவன். தன் மனைவியிடமும், குழந்தையிடமும் அடங்கா அன்பு கொண்டவன். ஆனால்,

அவன் இன்று குடித்துவிட்டு வந்திருக்கிறான். நாள் முழுவதும் வேலை செய்து பெற்ற தானியத்தைக் கள்ளுக்கடையில் அழுதுவிட்டு, வீட்டுக்கு வெறுங்கையுடன் வந்திருக்கிறான். வீட்டிலே கூழுக்குத் தானியம் இல்லை. குடிவெறியில் இதன் பொருட்டு மனைவியைப் போட்டு அடிக்கிறான். குழந்தைக்கும் இந்தக் கதியே. இன்னுமொரு காட்சியைப் பார்!'' என்றாள் அன்னை.

உடனே பஞ்சமர் சேரி மறைந்ததும் குடியானவர் வசிக்கும் தெரு ஒன்று தோன்றியது. இங்கும் ஆபாசங்களுக்குக் குறைவில்லை. ஒவ்வொரு வீட்டு வாயிலிலும் கூரைமுனையில் வேப்பிலைக் கொத்து ஒன்று செருகியிருந்தது. எங்கும் அழுகுரல் கேட்டது. தெருவின் மத்தியில் இருந்த ஒரு வீட்டின் உள்ளே என் பார்வை சென்றது. பெண்ணொருத்தி அடுப்பினருகில் உட்கார்ந்து கம்பங்கூழ் காய்ச்சிக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றிலும் ஐந்தாறு குழந்தைகள், ''அம்மா கஞ்சி! அம்மா கஞ்சி!'' என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தன. குழந்தைகள் மீது ஆடையென்பது அணுவளவுமில்லை. குளிரால் விறைத்து கொண்டிருந்தன. ஒரு மூலையில் தள்ளாத கிழவன் ஒருவன் படுத்து இருமிக் கொண்டிருந்தான். மற்றொரு புறத்தில் இளம் பெண் ஒருத்தி படுத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு வைசூரி போட்டிருப்பதாக அவள் உடம்பில் இருந்த கொப்புளங்களால் தெரிந்தது. அப்போது நடுத்தர வயதுடைய மனிதன் ஒருவன் வெளியிலிருந்து வீட்டுக்குள் வந்து சுவர் ஓரமாக உட்கார்ந்தான் ''தெய்வமே!'' என்று கூறிப் பெருமூச்சு விட்டான். மூலையில் படுத்திருந்த கிழவன் ''மகனே, போன சங்கதி என்னவாயிற்று?'' என்று கேட்டான், 'காரியம் ஆகவில்லை. எஜமான் நிச்சயமாக இல்லையென்று சொல்லி விட்டார். அவர்கள் வீட்டுக்கே நெல் போதும் போதாதாயிருக்கிறதாம்'' என்றான் வந்தவன். கூழ் காய்ச்சிக் கொண்டிருந்த பெண், ''ஐயோ! தைபிறக்கும் வரை இன்னும் மூன்று மாதப் பொழுது போக வேண்டுமே! இந்தக் குழந்தைகள் என்னைப் பிடுங்கித் தின்கின்றனவே'' என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

அன்னை கூறுவாள்: — ''மைந்தா, இவர்கள் வீட்டில் மிகுந்திருந்த கம்பை இன்று கடைசியாகக் கூழ் காய்ச்சி விட்டார்கள். அந்தக் கூழ் இவர்கள் எல்லாருக்கும் கால்

வயிற்றுக்குக் கூடக் காணாது. இந்நிலைமையில் இவர்கள் வீட்டில் வைசூரி போட்டிருக்கிறது. இனி, மற்றொரு காட்சியைப் பார்?'' என்றாள்.

அக் காட்சி மறைந்தது. இப்பொழுது என் கண் முன் காணப்பட்டது ஒரு நகரம். எங்கு பார்த்தாலும் ஆலைகளின் புகை போக்கிகள் காணப்பட்டன. சுத்த ஆகாயம் என்பதை எந்நாளும் காணாத ஒரு குறுகிய சந்து. எச்சில் இலைகளும் சாக்கடைக் கும்பியும் மற்றும் ஆபாசங்களும் அங்கு நிறைந்து காணப்பட்டன. இச்சந்தில் குகை போன்ற இருளடர்ந்த ஒரு வீட்டிற்குள் என பார்வை சென்றது. அங்கே வெறுந்தரையில் பூரண கர்ப்பவதியாகக் காணப்பட்ட ஒரு பெண்மணி படுத்திருந்தாள். பக்கத்திலே ஓர் ஆடவன் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். ஒரு மூலையில் சுமார் ஒன்றரை வயதுள்ள குழந்தை கிடந்தது. அது குழந்தையன்று; குழந்தையின் உடல். ஏனெனில் அவ்வுடலினின்றும் உயிர் பிரிந்து, சில மணி நேரம் ஆகியிருத்தல் வேண்டும்.

''தாயே! போதும், போதும். இந்தக் கோரக் காட்சியை என்னால் சகிக்க முடியவில்லை'' என்று கூறி நான் கண்ணை மூடிக்கொண்டேன்.

அப்போது அம் மாதரசி கூறுவாள்: — ''குழந்தாய்! உண்மை தெரியாத வண்ணம் கண்களை மூடிக்கொள்ளாதே, நன்றாகப் பார்த்துத் தெரிந்து கொள். இதோ இந்தப் பெண் மரணாவஸ்தையில் இருக்கிறாள். அவள் பூரண கர்ப்பிணி. ஆனால், சில தினங்களுக்கு முன்வரை ஆலையில் வேலை செய்து கொண்டிருந்தாள். அதன் பயனாகவே அவள் சுகப்பிரசவம் ஆவதற்கின்றி உயிர்விடப் போகிறாள். அதோ பிணமாகக் கிடக்கிறதே அந்தக் குழந்தை. ஆலையில் வேலை செய்யப் போகும்போது அழாமலிருப்பதற்கென்று அவள் அதற்கு அபினி ஊட்டி வந்தாள். இனிமேல் அக் குழந்தை, என்றும் யாருக்கும் அழுது தொந்தரவைக் கொடாது! பக்கத்திலிருந்து புலம்பி அழுபவன் அவள் கணவன். அவனும் ஆலைத் தொழிலாளி. பாவம்! அவன் சோகக் கடலில் மூழ்கியிருக்கிறான். என்ன செய்வதென்று புரியாமல் புலம்புகிறான். இதுவரை நீ பார்த்த மூன்று காட்சிகளும் உனக்குப் பரிதாபத்தை விளைவிக்கின்றனவல்

லவா? ஆயினும் மைந்தா, விஸ்தாரமான இப்பரத கண்டம் முழுவதிலும் இத்தகைய பரிதாபக் காட்சிகளே எங்கெங்கும் நிறைந்திருக்கின்றன. அடுத்தாற்போல் கொஞ்சம் சந்தோஷகரமான இன்னொரு காட்சியைப் பார்.

நீண்ட நாளாய் மழை பெய்யாமல் காய்ந்து தீய்ந்து போனது போல் காணப்பட்ட ஒரு பிரதேசத்தின் நடுவே பனை ஓலை வேயப்பட்ட கூரைகளையுடைய சில குச்சுகள் தென்பட்டன. அக் குச்சுகளில் ஒன்றினுள்ளே என் பார்வை சென்றது. அங்கே இரண்டு பெண்மணிகளும் ஐந்து அல்லது ஆறு பிராயமுடைய ஒரு சிறுவனும் இருந்தனர். பெண்மணிகளுள் ஒருத்தி, கிழவி. அவள் கூடை ஒன்றைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, வெளியே புறப்பட ஆயத்தமாயிருந்தாள். சுமார் 25 வயதுடைய மற்றொரு பெண் இராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டிருந்தாள். அக் குழந்தை அவளுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு, ''அம்மா! அம்மா, பசிக்கிறது'' என்று அழுதுகொண்டிருந்தான். அப் பெண்மணி, ''என் கண்ணே! ஆயாள் நூல் எடுத்துக் கொண்டு போகிறாள்; இன்னும் சற்று நேரத்தில் கேழ்வரகு வாங்கிகொண்டு வருவாள்; வந்ததும், கூழ் காய்ச்சித் தருகிறேன். அப்பா அழாதே!'' என்று சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

அன்னை பாரதி கூறுவாள்: — ''மைந்தா இந்தப் பிரதேசத்தில் சில ஆண்டுகளாக மழையின்மையால் மக்கள் சொல்லொணா வறுமைக்குள்ளாகித் தவித்துக் கொண்டிருந்தனர். இந்த இளம் பெண்ணின் கணவன் இரண்டாண்டுகளுக்கு முன்பு மலாய் நாட்டுக்கு ஓடிவிட்டான். அந்தப் பெண்ணின் தாயார் அக்கிழவி. இவ்விரண்டு மாதர்களும் இச்சிறுவனும் திக்கற்றவர்களாயினர். இந்நிலைமையில் சென்ற ஆண்டில் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் சில தொண்டர்கள் வந்து கதர் உற்பத்திச்சாலை ஒன்றை ஏற்படுத்தினார்கள். அநாதைகளான இந்தப் பெண்கள் இப்போது நூல் நூற்றுப் பிழைத்து வருகிறார்கள். துன்ப இருள் சூழ்ந்திருந்த இவர்கள் குடிசையில் இராட்டினம் என்னும் காமதேனு இன்ப ஒளியின் ஒரு கிரணத்தைப் புகுத்தியிருக்கிறது. அந்தக் கிழவி சென்ற வாரத்தில் நூற்ற நூலை எடுத்துக்கொண்டு கதர் உற்பத்திச் சாலைக்குச் செல்கிறாள். அவள் வரும் போது புதிய பஞ்சும் பாக்கிக் கூலியைக்

கொண்டு தானியமும் வாங்கி வருவாள். அவள் வந்த பின்னர்தான் அந்த வீட்டில் சாப்பாடு. ஆனால், குழந்தாய்! இந்த நாட்டிலே இவ்வாறு வறுமை இருள் குடி கொண்ட குடிசைகள் லட்சக்கணக்காக இருக்கின்றன. இவற்றில் மிகச் சிலவற்றிற்கு மட்டுமே இராட்டினம் இதுவரை ஒளி தந்திருக்கிறது. ஏனெனில் பலவகையிலும் தாழ்வடைந்திருக்கும் என் மக்கள் தங்கள் சொந்த நன்மையெது வென்பதையும் உணர்ந்து கொள்ளல் அரிதாயிருக்கிறது. இது காறும் மைந்தா, இந்நாட்டில் மிகப் பெரும்பான்மையோரான ஏழை எளியவர்களின் நிலையை விளக்கும் காட்சிகள் சில காட்டினேன். இனி, மற்றவர்களின் நிலைமையையும் நீ பார்த்துத் தெரிந்து கொள்.''

இப்படி அன்னை கூறியதும், மேற்சொன்ன காட்சி மறைந்தது. கிராமத்தின் மத்தியில் ஒரு பெரிய மச்சு வீடு காணப்பட்டது. அதனுள்ளே கூடத்தில் சுமார் 40 வயதுள்ள ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்தால் பெரிய மனிதர் என்று தோன்றியது. ஆனால், அவர் தலையில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு மடியில் கிடந்த ஒரு காகிதத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஆழ்ந்த சிந்தனையில் இருப்பவராகக் காணப்பட்டார். அடிக்கடி பெரு மூச்சு விட்டார்.

அப்போது அன்னை கூறுவாள்: — ''குழந்தாய், இவர் இவ்வூரில் பரம்பரையாக வந்த பெரிய மனிதர் பூஸ்திதி நிரம்ப உள்ள மிராசுதாரர். ஆனால் இவருடைய ஆஸ்தியின் விலை மதிப்பில் பாதி அளவுக்கு இவருக்குக் கடன் இருக்கிறது. கையில் மூலதனமில்லாததால் விவசாயம் திருப்திகரமாக நடைபெறுவதில்லை. வரவர விளைவு குறைந்து வருகிறது. இவ்வருஷத்தில் இவருக்கு நெல் விற்று வந்த தொகை நிலவரிக்குத் தான் சரியாக இருந்தது. ஆனால், நாலாவது கிஸ்திக்காக வைத்திருந்த தொகையைக் கடன்காரர் வந்து பிடிவாதம் செய்து வட்டிக்காக வாங்கிக் கொண்டு போய் விட்டார். இப்போது கிஸ்திக்காகப் பணங் கட்ட வகை தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார். இந்தத் தொந்தரவுகளைப் பொறுக்காமல் நிலத்தை விற்றுக் கடன் அடைத்து விடலாமென்று யோசிகிறார். ஆனால், பூர்வீகமான நிலத்தை விற்கவும் மனம் வரவில்லை. எவ்வளவு கடன் இருக்கிறது. எவ்வளவு நிலம் விற்க

வேண்டும் என்று கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இனி அடுத்த காட்சியைப் பார்.''

மூன்றடுக்கு மெத்தை வீடு. அதில் நன்கு அலங்கரிக்கப் பட்ட விஸ்தாரமான ஒரு ஹாலில் சுமார் 35 வயதுடைய ஒரு கம்பீர புருஷர் நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவர் ஆங்கில நடையுடை பாவனைகளைக் கொண்டவராகத் தோன்றிற்று. கையில் ஒரு பத்திரிகையை விரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அதிகக் கோபமடைந்தவராக காணப்பட் டார். கண்கள் சிவந்திருந்தது; மீசை துடித்தது; சற்று நேரம் பார்த்துவிட்டுப் பத்திரிகையைக் கிழித்துக் கீழே கசக்கி எறிந்தார்.

''மைந்தா, இவர் வீரமறவர் குலத்தில் தோன்றிய ஜமீன்தார். இவரது முன்னோர்கள் செய்துள்ள வீரதீரச் செயல்களையெல்லாம் செய்வதெனில், இப்போது நேர மில்லை. இன்று இவரது நேரமெல்லாம் வேலைக் காரர் களை விரட்டி மிரட்டுவதுடன் சரி. அரசாங்கத் தாரிடமிருந்து ஒரு பெரிய பட்டம் பெறுவதற்கென்று, விருந்துகளிலும் அரசியல் கட்சிகளுக்குப் பண உதவி புரிவதிலும் பிறவற்றி லுமாகச் சுமார் 2 லட்சம் ரூபாய் வரை கடன் வாங்கிச் செலவு செய்தார். ஆயினும் எதிர் பார்த்தபடி ''ராஜா'' அல்லது 'ஸர்' பட்டம் ஒன்றும் அல்லாமல், கேவலம் ''ராவ்பகதூர்'' பட்டம்தான் இவருக்கு அளிக்கப்பட்டிருக்கி றது. பத்திரிகையில் இவ் விவரத்தைக் கண்டதும் அவருக்கு ஏமாற்றமும் கோபமும் உண்டாயிருக்கின்றன'' என்று அன்னை கூறினாள்.

ஒரு பெரிய நகரத்தின் மத்தியில் இருந்த ஒரு சாதாரண வீதியில் சாதாரணமான வீடு ஒன்று அடுத்தாற்போல் என் கண்முன் தோன்றியது. இரண்டு மூன்று குடும்பங்கள் அவ் வீட்டில் வசித்தபடியால் ஜனக்கூட்டம் அதிகமாயிருந்தது. ஓர் அறையில் கதவைச் சாத்தித் தாளிட்டுக் கொண்டு தம்பதிபோல் காணப்பட்ட ஒரு ஆடவனும் ஒரு ஸ்திரியும் முகவாட்டத்துடன் உட்கார்ந்திருந்தனர். அந்தப் பெண்மணி கண்ணீர் விட்டுக் கொண்டே தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாள்.

''குழந்தாய், இதோ இந்த இளைஞன் பி.ஏ பட்டம் பெற்றவன். மாதம் 50 ரூபாய் சம்பளத்தில் உத்தியோகத்தில் அமர்ந்துள்ளான். இவன் பெற்றோர் தங்களுக்கிருந்த சொற்ப பிதுரார்ஜித நிலத்தையும் விற்றுச் செலவு செய்து இவனைப் படிக்க வைத்தார்கள். எனவே, சொத்துக் கொஞ்சமும் இல்லை. குடும்பம் தாயாரும் குழந்தைகளும் உள்பட மொத்தம் ஐந்து பேர் கொண்டது. 50 ரூபாயைக் கொண்டு கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தனர். துரதிர்ஷ்ட வசமாகச் சென்ற மாதத்தில் இவன் மனைவிக்கு நோய் வந்துவிட்டது. மலே ரியா சுரத்தினால் நிரம்பக் கஷ்டப்பட்டாள். வைத்தியரை அழைத்து வந்த காட்டியதிலும், மற்றச் செலவுமாக சுமார் 25 ரூபாய் தொலைந்து போயிற்று. எனவே, இம் மாதத்தில் 15-க்குள் அரிசி முதலிய எல்லாச் சாமான்களும் ஆகிவிட் டன. வேறு வழியின்றி அடகு வைத்து கடன் வாங்கி வருவதற்காக மனைவியின் நகையையும் கேட்டான். அவள் பதில் கூறாது சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாளாயினும், தன்னை அறியாமல் துக்கம் பொங்கிக் கண்ணீர் விடுகிறாள். இதைக் கண்டதும் கணவன் மனமுறிந்து நிற்கிறான்'' என்று கூறினாள் அன்னை.

''தாயே! இத்துயரக் காட்சிகள் போதும்! போதும்! பாரத நாட்டில் பிறந்த எவருக்கும், அவர் எந்த வகுப்பை, எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும், வாழ்க்கை பெரும்பாலும் துன்பமாகவே இருக்கின்றதென்பதை அறிந்து கொண்டேன், போதும் போதும்!'' என்று கூறினேன்.

''ஆயினும், மைந்தா! என் மக்களான உன் சகோதரர்கள் இன்னும் விழித்துக் கொண்டார்களில்லையே, என் செய் வேன்? பெற்ற தாயை மறந்து, தங்களுடைய சொந்த நலத்தையும் மறந்து, ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதிலும், வகுப்புப் பூசல்களை வளர்ப்பதிலும் ஈடு பட்டிருக்கிறார்களே! தங்களில் ஒரு பெரும் பகுதியாரைத் ''தீண்டத் தகாதவர்'' என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்களே? என் வயிற்றில் பிறந்த மக்களுக்குள் இத்தகைய வேற்றுமை கள் வளர்வதைக் காண்பதற்கு என்ன தீவினைகள் செய் தேன்? குழந்தாய்! இன்னும் இரண்டே காட்சிகளை மட்டும் நீ பார்த்தல் அவசியம்'' என்று அவள் கூறி முடிப்பதற்குள், ஒரு விசாலமான சபா மண்டபம் என் முன் தோன்றியது. அங்கு சுமார் இருபது இருபத்தைந்து வெள்ளைக்காரர்கள் உணவு அருந்திக் கொண்டிருந்தனர். சாராயவகைகள் தாராள மாக வழங்கப்பட்டன. அவர்கள் அனைவரும் குதூகலத்தில்

ஆழ்ந்திருந்தனர் என்பதை அவர்கள் முகங்கள் நன்கு காட்டின. ஏறக்குறைய எல்லாரும் பக்கத்தில் சமாசாரப் பத்திரிகை வைத்துக்கொண்டு அடிக்கடி எடுத்துப் பார்த்து மனம் பூரித்தனர்.

''மைந்தா! நான் யாருக்குத் தொண்டு செய்து தற்போது வாழ்கிறேனோ அந்த ஆங்கில அரசியின் புதல்வர்கள் இவர்கள். இவர்களில் வியாபாரிகள் உண்டு. பத்திரிகாசிரி யர்கள் உண்டு. எனது மக்களாகிய ஹிந்து முஸ்லிம்கள் எங்கோ ஓரிடத்தில் ஒருவரையொருவர் தாக்கிக் கலகம் விளைவித்தார்கள் என்னும் செய்தி இன்று பத்திரிகையில் வந்திருக்கிறது. அச் செய்திதான் இவர்களுக்குள் இவ்வளவு குதூகலம் அளித்திருக்கிறது. பாரத மக்களுள் சாதிப் பூசல், வகுப்புச் சண்டை உள்ள வரை நமது வாழ்விற்குக் குறைவில்லையென அவர்கள் இரும்பூ தெய்தி இருக்கின்ற னர். இனி, குழந்தாய்! கடைசியாக உன்னால் என்றும் மறக்க வொண்ணாத காட்சியைக் காண்பாயாக''

இவ்வாறு அன்னை கூறியதும், இயற்கை எழிலும் இணையற்ற அமைதியும் குடிகொண்ட ஒரு காட்சி என் கண்முன்னே தோன்றியது. விசாலமான ஆறு ஒன்றின் கரையோரமாகப் பளிங்கு போன்ற தெள்ளிய நீர் மணலை அரித்து ஓடிக்கொண்டிருந்தது. அந்தக் கரை மீது செழித்து வளர்ந்திருந்த பூஞ்செடிகளுக்கிடையே குடில்கள் போன்ற சிறு சிறு கட்டிடங்கள் காணப்பட்டன. ஆற்றின் எதிர்க்கரை யில் வானத்தை அளாவிய புகை போக்கிகள் நிரம்ப உள்ள பெரியதொரு நகரம் காணப்பட்டது. சபர்மதி ஆசிரமத்தை பற்றி நான் படித்திருந்தது உடனே நினைவுக்கு வந்தது. ஓ! காந்தியடிகளின் புனித வாசஸ்தலம் இது என்பதை உணர்ந்தேன். அக் குடில்களுக்கு நடுவில் இருந்த குடில் ஒன்றினுள் என்பார்வை சென்றது! ஆம்! ஆம்! உலகம் போற்றும் உத்தம புருஷரே அவர். படங்களில் அவரை அடிக்கடி பார்த்திருக்கிறேன். சென்னைக்கு வந்திருந்த போது ஒரு முறை நேரிலும் தரிசித்திருக்கிறேன்.

ஆனால், படங்களிலும் நேரில் பார்த்தபோதும் காணப் படாத ஓர் அற்புத ஜோதி அவருடைய முகத்தில் அப்போது விளங்குவதைக் கண்டேன். அந்த ஜோதியின் பிரபை அவரது சிரசைச் சுற்றி ஒரு மின்னொளி வட்டாரமாகத் திகழ்ந்து கொண்டிருந்தது. அடிகள் அப்போது இராட்டினத்

தில் நூல் நூற்றுக் கொண்டிருந்தார். ஓ! இதென்ன புதுமை! முதலில் காணப்படாத அற்புத ஒளி வடிவமான 'சில உருவங்கள் அந்த அறையில் இப்போது தோன்றுகின்றன. அவ்வுருவங்கள் வடிவத்தில் மனிதரை' ஒத்திருப்பினும் அவை பரு உடல்களான உருவங்களல்ல; அவர்கள் தேவர் கள்! அவர்களனைவரும் பயபக்தியுடன் அங்கு நின்றனர். சிலர் மகாத்மாவை வலம் வந்தனர். சிலர் அவரை அடிபணிந்தனர். இப்போது கூரையின் வழியாகச் சில புதிய உருவங்கள் கீழிறங்கி வருவதைப் பார்த்தேன். அவ்வுருவங்க ளும், அங்கிருந்த தேவர்களின் உருவங்களை ஒத்திருந்தன வாயினும் அவைபோல் ஒளி வடிவமாயிராமல் கருநிறங் கொண்டவையாயிருந்தன. ஆனால், அவை கீழிறங்கி மகாத் மாவை மூன்று முறை வலம் வந்து வணங்கியதும், கருமை நீங்கப் பெற்று மற்றத் தேவர்களைப் போன்ற ஒளி வடிவம் பெறுதலைக் கண்டேன். இந்த தெய்வீகக் காட்சியினால் பரவசமடைந்த என் செவியில் அன்னையின் மொழிகள் இன்ன முதமெனப் பாய்ந்தன.

''குழந்தாய் என் போன்ற நாட்டரசிகள் பலர் சீருஞ் சிறப்புமுற்று விளங்குவதாய் முன்னம் கூறினேன். ஆனால், இதோ இந்த உத்தமப் புதல்வனை ஈன்றெடுத்த ஓர் அம்சத்தில் உலகில் எனக்கு இணையானவர் எவருமில ரென்று இறுமாந்துள்ளேன். இன்றும் சரி, என்றும் சரி, இப்பூவுலகில் மனிதவுடல் தரித்து வந்த மகான்களில் இவருக்கிணையாகச் சொல்லக் கூடியவர் எவருமில்லை. குழந்தாய், நான் அளித்த சூட்சும திருஷ்டியின் துணை கொண்டு விண்ணவர்களும் அவரைத் தேடி வந்து தூய்மை பெற்றுப் போவதைப் பார்க்கிறாயல்லவா? அதோ கருநிறமு டையவர்களாய் வருகிறார்களே, அவர்கள் விண்ணுலகில் தீய எண்ணங்களுக்கிடங் கொடுத்ததினால் பாவிகளாய் போனவர்கள். அவர்கள் இம் மகாத்மாவிடம் வந்து, அவருடைய தரிசனத்தின் மகிமையினால் தங்கள் பாவந் தீர்ந்து தூய்மையடைந்து மீண்டும் ஒளி வடிவம் பெற்றுத் திரும்பிச் செல்கின்றனர். அத்தகைய மகாபுருஷன், மைந்தா! அதோ கண்ணீர் விடுவதைப் பார்.

மகாத்மாவின் தேஜோமயமான வதனத்தில் கண்ணீர் பெருகி ஓடுவதைக் கண்டேன். என் உள்ளம் உருகி விட்டது: என் கண்களிலும் நீர் பொங்கி வழிந்தது.

'கோடிக்கணக்கான தம் ஏழைச் சகோதரர்களின் துன்பங்களை எண்ணி எண்ணி அவர் கண்ணீர் பெருக்குகிறார். ஆயினும், அவர் நம்பிக்கையிழந்து விடவில்லை. அவர் முகத்தில் குடிகொண்டுள்ள புன்னகை ஆண்டவன் அருளில் அவருக்குள்ள அழியா நம்பிக்கையைப் புலப்படுத்துகிறது'' என்றாள் அன்னை.

அந்த அற்புதக் காட்சி மறைந்தது. நான் அக்கணமே அன்னையின் பாதக் கமலங்களில் விழுந்து, ''தாயே உன் பொற்றிருவடிகள் மீதாணை! உன் மக்களின் துன்பங்களை நீக்கி உன்னை மீண்டும் முன்போல் உலகத்துக்கு ஓர் ஒப்பற்ற அரசியாய் வீற்றிருக்கச் செய்யும் முயற்சியில் என் உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்வேன். அதுவரை ஊன் வேண்டேன்; உறக்கம் வேண்டேன்'' என்று மனங்குழைந்து கூறினேன்.

''மைந்தா, நீ கூறுவது சத்தியமா?''

''சத்தியம், சத்தியம், முக்காலும் சத்தியம்.''

''இனி என்றும் கதர் ஆடை தவிர வேறு துணி அணிவதில்லையென்று பிரதிக்ஞை செய்வாயா?''

''அவ்வாறே பிரதிக்ஞை செய்கிறேன்.''

''இந்நாட்டில் உன் ஏழைச் சகோதரர்களின் குடியைக் கெடுக்கும் குடித் தீமையை ஒழிக்கக் கங்கணம் கட்டிக் கொள்வாயா?''

''அவ்வாறே செய்வேன்.''

''சாதி ஒற்றுமை, சமய ஒற்றுமையை நிலை நாட்டவும் தீண்டாமையைத் தொலைக்கவும் முயல்வாயா?''

''முயல்வேன்.''

''மற்ற எல்லா நியாயமான வழிகளிலும் முயன்று உன் அன்னையின் அடிமைத் தளைகளை உடைத்தெறிவதாக பிரதிக்ஞை செய்வாயா?''

''உன் பாதங்களின் மேல் ஆணையாக அவ்வாறே பிரதிக்ஞை செய்கிறேன்.''

இவ்வாறு அந்த வெண்ணிலவிலே, மலைச் சிகரத்திலே பாரதத் தாயின் முன்னிலையிலே நான் பிரதிக்ஞை செய்து

வாய் மூடவில்லை; அதற்குள் ''கிண், கிண், கிண்'' என்ற மணிச் சத்தம் எங்கேயோ வெகுதூரத்திலிருந்து மந்த மாருதத்துடன் கலந்து வந்து என் செவிகளில் ஒலித்தது.

''ஐயோ, என்ன அநியாயம்! உட்கார்ந்தபடி தூங்குகிறீர்களே! மணி பத்து அடித்து விட்டதே! ரயில் வந்து விடுமே'' என்று என் மனைவி கூச்சல் போடும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன். கடிகாரம் கிண் என்று பத்தாம் முறையாக அடித்து மீண்டும் வழக்கம்போல் டக், டக் சத்தம் செய்யத் தொடங்கிற்று. 10-05க்கு ரயில். அந்த வண்டி தவறிவிட்டால் அன்று ஆபீஸ் கிடையாது. சாப்பிட்டு விட்டு வந்து நாற்காலியில் உட்கார்ந்து சட்டை போட்டுக் கொள்ள ஆரம்பித்தேன். உண்ட களைப்பினால் அப்படியே உறங்கிக் கொண்டிருந்து விட்டேன். அவசர அவசரமாக கோட், அங்கவஸ்திரம், கழுத்துச் சுருக்கு, தோல் அரைக்கச்சை எல்லாவற்றையும் எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு, பிரம்பையும், குல்லாவையும் ஒரு கையிலும், மனைவி கொடுத்த சிற்றுண்டிப் பொட்டலத்தையும், சூடாறாத பாத்திரத்தில் காப்பியையும் மற்றொரு கையிலும் எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடினேன். ரயிலில் உட்கார்ந்து சரியாக உடை தரித்துக் கொண்டேன்.

அன்று சம்பள தினம். தீபாவளி இன்னும் இரண்டு நாள் கழிந்ததும் வரவிருந்தது. எனவே, அன்று மாலை வீடு திரும்பியபோது கீழ்க்கண்ட சாமான்களை வாங்கிக் கொண்டு போனேன். எனக்கு உடுத்திக் கொள்ள ஒரு பீஸ் 1803ஆம் நம்பர் மல்; இரண்டு ஷர்ட்டுக்கு இங்கிலீஷ் ட்வில், இரண்டு ஷர்ட்டுக்கு நயமான பட்டு; கோட்டுக்கு அல்பாகா துணி; விதம்விதமான அரை டஜன் கழுத்துச் சுருக்குகள்; குழந்தைகளுக்குப் பாவாடை; சட்டைக்குச் சீனத்துப்பட்டு, இங்கிலீஷ் சீட்டி; பிளானல் முதலியன; ஐந்து ரூபாய்க்கு பட்டாசுக்கட்டு மத்தாப்பு தினுசுகள்; இவற்றை வைத்து எடுத்துக் கொண்டு போவதற்குப் பளபளவென்று ஜொலித்துக் கொண்டிருந்த புது தினுசு பிரயாணப் பெட்டி; ஹார்லிக்ஸ் மாபுட்டி; ஊதல் வாத்தியங்கள், மற்றும் சில்லறைச் சாமான்கள். ஸ்டேஷனில் பஞ்சமச் சீனன் நின்று கொண்டிருந்தான். அவனைச் சாமான்களை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு வரச் செய்தேன். 'தண்ணி' போடுவதற்காக அவனுக்கு இரண்டணாக் கொடுத்தேன். ''ஐயோ, பறைய

னுக்கு அவ்வளவு கிட்டப் போய்விட்டீர்களே, ஸ்நானம் செய்தால் தான் சாதம் போடுவேன்'' என்றாள், என் வாழ்க்கைத் துணைவி. வெந்நீர் போடச் சொல்லி முழுகி னேன். நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் கண்ட கனவுநி னைவுக்கு வந்து கொஞ்சம் உறுத்தியது... 'சீச்சீ இனிமேல் பத்திரிகை படிக்கக் கூடாது. உழவுக்கும் அக்னி ஹோத்திரத் திற்கும் பொருந்துமா? நமது உத்தியோகமெங்கே? பாரத மாதாவும் மகாத்மா காந்தியுமெங்கே?'' என்று முணு முணுத்துக் கொண்டேன்.

★ ★ ★